வரு.75 இல. 18 ★

www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමන්ජරී

24 பக்கங்கள் 100/-

2023 மே 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

May 07 Sunday, 2023







## 03ஆம் மன்னராக முடிசூடினார் சார்ள்ஸ்

**நேற்று லண்டனில் கோலாகல வைபவம்**



இங்கிலாந்தின் 03ஆம் மன்னராக சார்ள்ஸ் நேற்று உத்தியோகபூர்வமாக முடிசூடினார். எலிசபெத் மகாராணியார் காலமான 08 மாதங்களுக்குப் பிறகு முடிசூட்டு விழா நேற்று நடைபெற்றது. பிரிட்டன் முழுவதும் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் முடிசூட்டு விழா நிகழ்வு நடைபெற்றது.

70 ஆண்டுகளின் பின் இந்த பிரிட்டிஷ் அரசர் முடிசூட்டு விழா நடந்துள்ளது. மன்னர் சார்ள்ஸின் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிசூட்டு விழா நிகழ்வை உலகம் முழுவதும்

06

## நாட்டின் நிதியியல் செயற்பாடுகள் விரைவில் முன்னேற்றத்தை காண்பிக்கும்

**ADB கூட்டத்தொடரில் அமைச்சர் அலி சப்ரி உரை**



வெகுவிரைவில் இலங்கையின் நிதியியல் செயற்பாடுகள் முன்னேற்றத்தைக் காண்பிக்கும் என்றும், பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படும் என்றும் நம்புகின்றோமென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாம் கடந்தகால அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொண்டிருப்பதுடன், மிகவும் கடினமான மறுசீரமைப்புக்களை மேற்கொண்டுவருகின்றோம். துடிப்பானதும், மீளெழக்கூடிய தன்மையுடையதுமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றோம். எனவே, நாட்டின்

06

வேட்பு மனு தாக்கல் செய்த

## அரச ஊழியர் செவ்வாய் முதல் மீண்டும் கடமைக்கு

**நாளை திங்கள் சுற்றுநிருபம் வெளிவரும்**



உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்த அரச ஊழியர் எதிர்வரும் செவ்வாய்கிழமை முதல் மீண்டும் சேவையில் இணைக்கப்படவுள்ளனர். அவர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்த தொகுதியில் இல்லாமல் வேறு தொகுதியில் பணியாற்ற

06

## தமிழ் மக்களது தீர்வு விடயத்தில் மிகுந்த அக்கறையுடன் உள்ளேன்

**லண்டனில் தமிழ் புத்திஜீவிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி**



தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தாம் அக்கறையுடன் இருப்பதாக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் புத்திஜீவிகளுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து மன்னருடைய முடி சூட்டு விழாவுக்கு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் புத்திஜீவிகள் இரவு விருந்து வழங்கினர்.

இதன்போது தமிழ் புத்திஜீவிகள் மத்தியில் கருத்தைப் பகிர்ந்து கொண்ட போது, தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் நாம் கரிசனையாகச் செயல்படுகிறோம். அரசியல் தீர்வு விடயங்களை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தமிழ் கட்சிகளும்

06

வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கு

# குறைந்த வட்டியில் ரூ. 20 இலட்சம் கடன்

**அரச, வர்த்தக வங்கிகளூடாக வழங்க ஏற்பாடு**



வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் சென்றுள்ள இலங்கையருக்கு மிகக் குறைந்த வட்டியில் 20 இலட்சம் ரூபா வரையான கடன் வசதியை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுமார் 04 வீத வட்டியில் இந்த 20 இலட்சம் ரூபா கடன் வசதியை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவையில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். எனவே, இந்த கடன்

06

- 04 வீத வட்டியில் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை இணங்கியதாக அமைச்சர் மனுஷ தெரிவிப்பு



லண்டனில் (5) நடைபெற்ற பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு வாழ்த்துகளை கூறியதுடன் சுமுகமாக கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். ஜனாதிபதியின் பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவும் இதில் கலந்து கொண்டார்.

சம்பிரதாயத்தின் படியே ஆளுநர் நியமனம்

## 5 மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள்

ஜனாதிபதி ஒருவர் விலகிய பின்னர் புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டால் ஆளுநர்களை நீக்குவதும் பிரதமர் ஒருவர் விலகினால் அமைச்சரவை நீக்கப்படுவதும் வழமையான நடைமுறையே என ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் தற்போதைய ஜனாதிபதி பதவியேற்றபின்னர் சம்பிரதாயத்தின் படி ஆளுநர்கள் இராஜினாமாச் செய்யாததால் அவர்கள் இராஜினாமா செய்யும் வரை ஜனாதிபதி சிலகாலம் காத்திருந்ததாகவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

06

## சார்ள்ஸ் மன்னரின் தலைமையில் லண்டனில் பொதுநலவாய தலைவர்களின் மாநாடு

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க கலந்துகொண்டனர்**

**கானா, ருவண்டா ஜனாதிபதிகளுடனும் பேச்சு**

மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் பங்கேற்புடன் (05) லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு வாழ்த்துகளை கூறிய ஜனாதிபதி, அவருடன் சுமுகமாக கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு, இச் சந்திப்பில் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார். இம்மாநாட்டில் இளையோரின் பங்களிப்பை ஊக்குவிக்கும்

06

## கடலோர பகுதிகளில் பலத்த காற்று வீசும்

**பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுப்பு**



நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை மற்றும் கடலோர பகுதிகளில் பலத்த காற்று வீச வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி, நேற்றைய தினம் (06) மேற்கு, சப்பிரகமுவ, வட மேற்கு மற்றும்

06

## எங்கள் கருத்து

### பணிப்பெண்கள் பாதுகாப்புக்கு உரிய உத்தரவாதம் அவசியம்!

எமது நாட்டுப் பெண்கள் தொழில்வாய்ப்புக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதில் அனுகூலங்களும் உள்ளன, பிரதிகூலங்களும் உள்ளன. இலங்கைப் பெண்கள் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண் வேலைவாய்ப்புக்காகவே செல்கின்றனர். பலர் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட முகவர்கள் ஊடாக, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியத்தில் தங்களைப் பதிவு செய்து விட்டுச் செல்கின்றனர். ஆனால் சிலரோ, போலி முகவர்கள் ஊடாக பணியகத்தில் தங்களைப் பதிவு செய்யாமல் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு சட்டபூர்வமான வழியில் தொழில்வாய்ப்புக்காகச் செல்கின்றவர்களுக்கு ஓரளவு பாதுகாப்பு உத்தரவாதம் இருக்கின்றது. ஆனால் போலி முகவர்கள் ஊடாகச் செல்வோர் அந்நாடுகளில் துன்பங்களை எதிர்கொள்கின்ற போது, அவர்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாமல் போகின்றது. ஆகவே எமது நாட்டுப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில்வாய்ப்புக்காகச் செல்வதற்கு முயற்சிக்கின்ற போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது நல்லது.

சவூதி போன்ற நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் சென்று துன்பங்களில் அகப்பட்டுக் கொண்ட பலர் வெறுங்கையுடன் நாடு திரும்பிய சம்பவங்கள் ஏராளம் நடந்துள்ளன. அங்கு அவர்கள் சந்தித்துள்ள இன்னல்கள் தொடர்பாக ஊடகங்களில் ஆதாரங்களுடன் ஏராளமாக செய்திகள் வெளிவந்துள்ளன.

06

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

## SLPP திருத்த யோசனைகளை நீதி அமைச்சரிடம் முன்வைக்கும்



உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பான யோசனைகளை எதிர்வரும் வாரம் நீதி அமைச்சரிடம் முன்வைப்போம். நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும்

06

## நாட்டில் மேலும் 13 பேருக்கு கொரோனா தொற்று

**கடந்த 24 மணி நேரத்தில் பதிவு**



நாட்டில் கொரோனா தொற்று உறுதியான மேலும் 13 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின்

06

## யாழ். தையிட்டி போராட்டம் சிங்களவருக்கு எதிரானதல்ல

**பௌத்தர்களுக்கும் எதிரானதல்ல**



"யாழ். தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் தமிழரின் இருப்புக்கான போராட்டமே தவிர பௌத்த மக்களுக்கோ சிங்கள மக்களுக்கோ எதிரான போராட்டமல்ல" என சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (06) கருத்து தெரிவிக்கையிலேயே

06

## அமெரிக்காவில் நடந்த அபூர்வ சத்திர சிகிச்சை

**கருவிலிருந்த சிசுவை காப்பாற்றிய டாக்டர்கள்**



அமெரிக்க மருத்துவ குழுவினர் கருவிலிருந்த சிசுவின் மூளையில் அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்துள்ளனர். வயிற்றில் கரு உருவாகி 34 வாரங்கள் நிறைவடைந்ததுடன் சிசுவின் வளர்ச்சி எப்படி உள்ளது என்பதை அறிய தாயொருவர் பாஸ்டன்

06

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றவர்கள் கைது

**மன்னார் கடற்பகுதியில் மடக்கிப்பிடிப்பு**



சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற ஒரு குடும்பத்தினரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மன்னார், இஸ்மோக்கன் துறை முனைக்கு அருகில் வைத்து

06

ஹப்புத்தளையில் வீடொன்றின் மீது விழுந்து

## விபத்தில் சிக்கிய டீசல் பௌஸர்



ஹற்றன் சுழற்சி நிருபர்

**பெருமளவு லீற்றர் டீசல் கசிவு**

ஹப்புத்தளை–பத்கொட பகுதியில், நேற்று அதிகாலை 33,000 லீற்றர் டீசலுடன் எரிபொருள் பௌஸரொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. நேற்று அதிகாலை 2.30 மணியளவில், இந்த விபத்து

06

## டெங்கு, எலிக்காய்ச்சல், கொவிட் 19, இன்புளுவென்ஸா:

# காய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட அறிகுறிகளுடன் பல நோய்கள்



## மக்கள் முன்பாக உள்ள பொறுப்பு

**இன்றைய காலகட்டத்தில் காய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட பல நோய்கள் நாட்டில் காணப்படுகின்றன. அதனை மருத்துவர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தோடு காய்ச்சலுடன் கூடிய நோய்களுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனைப் பரவலாக அவதானிக்கவும் முடிகிறது. குறிப்பாக வைத்தியசாலைகளுக்கும் மருத்துவக் கிளினிக்குகளுக்கும் சிகிச்சை பெற வருகின்ற காய்ச்சலுடன் கூடிய நோயாளர்கள் நல்ல சான்றாகும். அதனால் மருத்துவர்களின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.**

மருத்துவர்களின் கருத்துப்படி, டெங்கு, எலிக்காய்ச்சல், இன்புளுவென்ஸா ஏ, பி, கொவிட் 19 தொற்று போன்ற காய்ச்சலை பிரதான நோயறிகுறியாகக் கொண்ட பல நோய்கள் நாட்டில் காணப்படுவது தெளிவாகிறது. டெங்கு மற்றும் கொவிட் 19 தொற்று என்பவற்றின் தாக்கங்களும் பாதிப்புகளும் அவற்றில் பிறழ்வுகள் ஏற்பட்டுள்ளனவா? என்ற சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளன.



பொதுவாக மழைக்காலநிலையுடன் சேர்த்து டெங்கு மற்றும் எலிக் காய்ச்சல் தீவிரமடைவது வழமை. ஆனால் இம்முறை மழைக் காலநிலைக்கு முன்பே நாட்டின் சில பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது மழைக் காலநிலை ஆரம்பமாகியுள்ளது. இது இந்நோய்க்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிகையை மேலும் அதிகரிக்கவே வழிவகை செய்யும். இதற்கு டெங்கு தீவிரமடைவது குறித்த கடந்த கால அனுபவங்கள் நல்ல எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன.

### டெங்கு வைரஸில் பிறழ்வா?

அதேநேரம் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் தரவுகளின்படி, இவ்வருடத்தின் (2023) முதல் நான்கு மாதங்களிலும் சுமார் 30 ஆயிரம் பேர் நாடெங்கிலும் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களாவர். இக்காலப்பகுதியில் 15 பேர் இந்நோயினால் மரணமடைந்துமுள்ளனர். இந்தத் தரவுகள் மழைக் காலம் ஆரம்பமாகும் முன்பே நாட்டின் பல பிரதேசங்களிலும் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததை காணக்கூடியதாக உள்ளது.


டொக்டர் ருவன் விஜயமுனி

ஆனால் டெங்கு முற்றிலும் தவிர்த்துக் கொள்ளக்கூடியதொரு நோய். மழைநீர் தேங்கும் இடங்களில் பல்கிப் பெருகும் பண்பைக் கொண்டுள்ள நுளம்புகளால் தான் டெங்கு வைரஸ் காவிப் பரப்பப்படுகிறது.


டொக்டர் தீபால் பெரேரா

அவ்வாறான இடங்களை ஒழுங்குமுறையாக அப்புறப்படுத்தி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருந்தால் இவ்வின நுளம்புகள் பெருக வாய்ப்பு இராது. அதன் விளைவாக டெங்கு வைரஸ் காவிப்பரப்பப்படுவது பெரிதும் வீழ்ச்சி அடைந்துவிடும். அதனால் டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகள் சுற்றாடலில் பெருக முடியாதபடி கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனமும் அக்கறையும் செலுத்த வேண்டும். அதற்கான பொறுப்பு மக்கள் முன்பாகவே உள்ளது.

அதேநேரம் இவ்வைரஸ் காய்ச்சலுக்கு உள்ளானால் ஆரம்ப கட்டத்திலேயே உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளும் போது நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளவும் முடியும். அதற்கான சிகிச்சை வசதிகளும் இருக்கவே செய்கின்றன.

என்றாலும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிணநீர், ஒவ்வாமை மற்றும் மூலக்கூற்றியல் பேராசிரியர் சந்திம ஜீவேந்திர, 'டெங்கு வைரஸில் புதிய பிறழ்வு அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக இந்நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கை எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்க முடியும்' என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபையின் பிரதம மருத்துவ அதிகாரி டொக்டர் ருவன் விஜயமுனி, 'சுமார் 12 வருடங்களின் பின்னர் டெங்கு வைரஸ் நோயின் மூன்றாம் வகைத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நுண்ணுயிர் பரவியுள்ளமை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அந்நுண்ணுயிரின் தாக்கத்தை எதிர்கொள்ளக் கூடிய நோய் எதிர்ப்புச்சக்தி எமது உடலில் இல்லாதுள்ளது. அதனால் இந்நோய்க்கு ஆரம்ப கட்டத்திலேயே உரிய சிகிச்சை பெற்றுக் கொள்வதுஅவசியம்'என்றுவலியுறுத்தியுள்ளார்.

வைரஸானது காலத்திற்கு காலம் திரிபடையக்கூடிய பண்பைக் கொண்டுள்ளது. அந்த வகையில் டெங்கு வைரஸிலும் திரிபு ஏற்பட்டிருக்கலாம். அதனையே பேராசிரியர் சந்திம ஜீவேந்திர மற்றும் டொக்டர் விஜேமுனி ஆகியோரின் கருத்துக்கள் தெரிவிக்கின்றன. அண்மையில்


உபுல் ரோஹண

உலகில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய கொவிட் 19 வைரஸ் அவ்வப்போது திரிபுகளுக்கு உள்ளாகி பெரும் அழிவுகளையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியமை தெரிந்ததே. அவ்வாறான பாதிப்புக்களை டெங்கின் திரிபும் ஏற்படுத்துமா? என்ற ஐயமும் ஏற்படவே செய்திருக்கின்றது.

### தற்போதைய காய்ச்சல்

இவை இவ்வாறிருக்க இந்தியா, இந்தோனேசியா, வியட்நாம், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் கடந்த


பேராசிரியர் சந்திம ஜீவேந்திர

இரண்டொரு வாரங்களாக மீண்டும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையிலும் கூட கடந்த சில தினங்களாக இத்தகைய அதிகரிப்பை அவதானிக்க முடிகிறது. இங்கு கடந்த வார முற்பகுதியில் இருவர் உயிரிழந்துமுள்ளனர்.

இவ்வாறான சூழலில், இலங்கை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் டொக்டர் வின்யா ஆரியரட்ன, 'தற்போது பரவி வரும் காய்ச்சல் கொவிட் 19 வைரஸின் புதிய பிறழ்வாகக்கூட இருக்கலாம். இந்நோயின் தன்மை அதுதான். புதிய பிறழ்வுகள் உருவாகி வருகின்றன. அவற்றைப் பற்றி நமக்கு நல்ல புரிதல் இல்லை. அவை தொடர்பில் ஆய்வு செய்து அறிக்கை பெற சிறிது காலம் எடுக்கும். அது வரைக்கும் இந்நோய் குறிப்பிடத்தக்க அளவிலானோரைப் பாதிக்கவே செய்யும்' என்றுள்ளார்.

'குறிப்பாக இன்புளுவென்ஸா போன்று இது பரவுவதால், அவற்றை கொவிட் 19 தொற்று நோயிலிருந்து வேறுபடுத்துவது கடினம், எனவே கொவிட் 19 தொற்று காலத்தில் பின்பற்றிய அதே சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் பின்பற்ற வேண்டும். அதாவது முகக்கவசம் சரியாக அணிவதோடு அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் பின்பற்றத் தவறக்கூடாது' என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### தொற்று தவிர்ப்பின் முக்கியத்துவம்

இதேவேளை நாட்டின் பல பிரதேசங்களிலும் பரவிவரும் காய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட நோயறிகுறிகளைக் கருத்தில் கொண்டுள்ள மருத்துவர்கள், முகக் கவசம் அணிதல், கைகழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட தொற்று நோய்த் தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்களைக் கடைபிடிக்குமாறு மக்களைக் கேட்டுள்ளனர். பலாங்கொடை உள்ளிட்ட பல பிரதேசங்களில் இவ்வாறான அறிவுரைகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சுகாதார அமைச்சு, வெசாக் பண்டிகைக் காலத்தில் கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான



டொக்பர் வின்யா ஆரியரட்ன

அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைபிடிக்குமாறு மக்களைக் கேட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹணவும் இவ்வாறான வேண்டுகோளை விடுத்துள்ளார், அவ்வேண்டுகோளில், 'தற்போது நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கொவிட் 19 தொற்றாளர்கள் தினமும் அடையாளம் காணப்படுகின்றனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)


மர்லின் மரிக்கார்




## பாடகராகவும் இசை ஆசிரியராகவும் இசையமைப்பாளராகவும் திகழ்ந்தவர்

# கலாபூஷணம் எம்.எஸ்.செல்வராஜா மாஸ்டர்

**இலங்கையின் தமிழ், சிங்கள மெல்லிசை, சாய் பஜன், பொப்பிசை, திரையிசை என பல துறை சார் பாடகராகவும் இசை ஆசிரியருமாகவும் இசையமைப்பாளராகவும் திகழ்ந்தவர் கலாபூஷணம் எம்.எஸ்.செல்வராஜா மாஸ்டர். இவருக்கு 85 வயது. இவர் கடந்த 5 ஆம் திகதி காலமானார். மருத்துவனையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையிலேயே இவர் காலமாகியுள்ளார். இவரது பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று (07) வரை கொழும்பு, பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்படுமென்பதுடன், இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இவரது இறுதி ஊர்வலம் நடைபெற்று, பொரளை இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படவுள்ளது.**



இலங்கையில் முன்னணி இசையமைப்பாளராக விளங்கிய இவர், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பல மெல்லிசைப் பாடல்களுக்கு இசையமைத்துள்ளார். 'அவள் ஒரு ஜீவநதி' என்ற இலங்கையின் தமிழ்த் திரைப்படத்துக்கும் 'கேசர சிங்ஹயோ' என்ற சிங்களத் திரைப்படத்துக்கும் இவர் இசையமைத்துள்ளார்.

தமிழ் மெல்லிசைப் பாடல்களின் வளர்ச்சிக்கு எம்.எஸ். செல்வராஜா வழங்கிய பங்களிப்பு வியந்து குறிப்பிடத்தக்கது.

ஈழத்து மெல்லிசை இலங்கை வானொலியில் வளரத் தொடங்கிய ஆரம்பகட்டங்களில் சில பாடல்கள் முக்கியத்துவம் பெற்று விளங்கின. அந்தப் பாடல்களுக்கு இசைமைத்தவர்களில் எம்.எஸ். செல்வராஜாவும் ஒருவர். ,

கொழும்பு மாநகரில் உள்ள மருதானையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இசையமைப்பாளர் எம். எஸ். செல்வராஜா. இவர் மருதநாயகம்பிள்ளை சுப்பிரமணியம் பார்வதி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். .

இவருடன் கூடப்பிறந்தவர்கள் ஒன்பது பேர். ஒன்பது பேர் கொண்ட குடும்பத்தின் மூத்த மகன் இவர். பெற்றோர்கள் இவருக்கிட்ட பெயர் வடிவேல். தந்தை ஒரு வர்த்தகர் என்பதால் குடும்பம் கஷ்டமில்லாமல் வாழ்ந்தது. மருதானை சென்ரல் கொலேஜ் என்று அறியப்பட்டிருந்த 'சங்கராஜ மாவத்தை வித்தியாலயத்தில் கனிஷ்ட மற்றும் சிரேஷ்டப் பிரிவு வகுப்புக்களில் ஆங்கிலவழிக் கல்வியில் எஸ்.எஸ்.சி வரை படித்து அரச பரீட்சையில் சித்தியடைந்தவர். இசைத்துறை பயிற்சியிலும், பரீட்சையிலும் நல்ல பெறுபேறுகளுடன் சித்தி அடைந்தார்.


செல்வராஜின் தந்தை நல்ல குரல்வளம் கொண்டவர். பஜனை, கீர்த்தனைகளை ஒரு பக்தியுடன் பாடுவார். தபேலா, ஹார்மோனியம், டோளக் போன்ற வாத்தியக் கருவிகளை வாசிக்கக் கூடியவராக அவர் திகழ்ந்தார். இவரது தாயாரும் இசைஞானம் கொண்ட ஒருவர். அவர் மென்டலின் என்ற இசை கருவியை வாசிப்பார். இதனால் செல்வராஜா மாஸ்டருக்கு இந்த இசை ஞானம் மாணவ பருவ காலத்திலேயே வந்து விட்டது.

பாடசாலையில் நடைபெறும் கூட்டங்களிலும் விழாக்களிலும் இவரது பாடல்கள் ஒலித்து வந்தது. இவருடைய குரலிலே ஒரு இனிமையும், ஏதோ ஒரு இனம்புரியாத திறமையும் இருப்பதை ஆசிரியர்கள் உணர்ந்தார்கள்.

இவருடைய தந்தையிடம், பையனுக்கு பாட்டு சொல்லிக் கொடுக்கும்படி அடிக்கடி சொல்வார்களாம். இவரது வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு வாத்திய இசைக்கருவிகள் பழுது பார்க்கும் கடை இருந்ததாம். வரிசையாக நிறையவே கடைகள் இருக்கும் அந்த மருதானை வீதியில் இதுவும் ஒரு கடை. அதன் உரிமையாளர் தர்மசேனா என்னும் சிங்களவர். இவரது தந்தையின் நெருக்கமான நண்பர்.

'இவருடைய வீட்டுக்கருகே இருந்த அந்தக் கடை இவரை ஆட்கொண்டுள்ளது. பழுது பார்ப்பதற்காக வந்து கிடந்த வாத்தியக் கருவிகளும் திருத்தி முடித்து கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த வாத்தியக் கருவிகளும் இந்த கடைக்குள் இருந்தன. இவருக்கு எட்டொன்பது வயதாக இருந்தபோது தர்மசேன மாமாவின் கடை இவரை ஆட்கொண்டது. டோலக், சர்பினா, தபேலா, மெண்டலின் என்று இருந்த அனைத்து வாத்தியக் கருவிகளையும் இவரது கைகள் தீட்டிப் பார்க்கும். அந்த வாத்தியக் கருவிகள் எழுப்பும் இசையின் ஒலி அவரை குதூகலிக்கச் செய்தன. அந்த வாத்தியக்கருவிகளைத் தட்டுவதிலும், அமுக்கிப் பார்ப்பதிலும் இவருக்கு அலாதி பிரியம். அதில் எழும் ஒலியில் ஏதோ ஒரு விசேடம் இருப்பதைத் தான் உணர்வதாகவும் அவர் அடிக்கடி கூறியுள்ளார். இந்த பையனின் கைகளில் ஒரு தாளலயம், ஒரு ஸ்ருதி இருக்கிறது.

அவனை இசைக் கல்லூரியில் சேர்த்துப் படிப்பியுங்கள்' என்று கடைக்காரர் அவரது தந்தையிடம் வலியுறுத்தியுள்ளார். அவரது அப்பாவும் அதை செவிமடுத்து செயல்படுத்தத் தொடங்கினார். சாஸ்திர சங்கீத வித்வான் ஒருவரை அமர்த்தி, அவருக்கு சங்கீதம் பயிற்றுவித்தார். ஒரு ஹார்மோனியப் பெட்டியையும் வாங்கிக் கொடுத்து ஊக்குவித்துள்ளார். அவர் தூவிய விதை பெரிதாக வளர்ந்து வேர் விட்டு கிளைப் பரப்பி விருட்சமாகியது.


கே.ஈஸ்வரலிங்கம்

# லண்டன் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க






















## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
"வாழ்க்கையை மாற்றியமைக்கும் கற்றல் அனுபவத்திற்காக"



கட்டண அடிப்படையில் / கட்டணமின்றி தினவரவு மாணவர்களுக்கான பட்டப்படிப்பு கற்கை நெறிகள் 2023 / 2024 (முழுநேரம்)

**கட்டண அடிப்படையில் / கட்டணமின்றி பட்டப்படிப்பை தொடர்வதற்கு பொருத்தமான தகைமையுடைய பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - இரத்மலானையில் வழங்கப்படுகின்ற கற்கை நெறிகள்

| பட்டப்படிப்பு கற்கை நெறி (கட்டண அடிப்படையில்) | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைப் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி உபாய கற்கை மற்றும் சர்வதேச உறவுகள் பட்டம் | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| **பொறியியல் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி பொறியியல் பட்டம் (சிறப்பு)<br>• Aeronautical Engineering<br>• Biomedical Engineering<br>• Civil Engineering<br>• Electrical & Electronics Engineering<br>• Electronics & Telecommunication Engineering<br>• Mechanical Engineering<br>• Mechatronics Engineering<br>• Naval Architecture & Marine Engineering<br>• Building Services Engineering<br>Pathway programme (2+2) with the University of Massey, New Zealand for Bachelor of Engineering (Hons) Degree Majoring in Electronics and Computer Engineering or Mechatronics Engineering after evaluation of two years of the KDU programme. (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) | 04 வருடங்கள் | கணிதம் |
| **சட்டப்பிரிவு** | | |
| சட்டமாணிப்பட்டம் | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/* வணிகம் அல்லது கலை (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| **முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி முகாமைத்துவ மற்றும் தொழிநுட்பவியல் பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல்/கணிதம் |
| விஞ்ஞானமாணி முறைசார் செயற்பாட்டு வழங்கல் முகாமைத்துவ பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/ கணிதம்/வணிகம் |
| விஞ்ஞானமாணி சமூக விஞ்ஞானப் பட்டம் | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| விஞ்ஞானமாணி தரவு அறிவியல் தொடர்பாடல் பிரயோகப்பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல்/கணிதம்/வணிகம்/ தொழிநுட்பம் / *கலை பிரிவு (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| பிற மொழிகளைப் பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL) | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| **கணனி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி கணனி பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | கணிதம் / அல்லது *வேறு (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி மென்பொருள் பொறியியல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் / அல்லது *வேறு (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி கணனி பொறியியல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் / அல்லது *வேறு (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி தரவு அறிவியல் மற்றும் வணிகப்பகுப்பாய்வு (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் |

| பட்டப்படிப்பு கற்கை நெறி | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்** | | |
| தாதிய விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) (கட்டண/கட்டணமின்றி) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் |
| இயன் மருத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| கதிர் வீச்சியியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| கதிர் வீச்சு சிகிச்சை விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| மருந்தகவியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| **தொழிநுட்ப பீடம்** | | |
| கட்டிட சேவை தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம் அல்லது தொழிநுட்பவியல்* (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| கட்டுமான தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம் அல்லது தொழிநுட்பவியல்* (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| உயிர் மருத்துவ உபகரணங்கள் அமைப்பு தொடர்பான தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம் அல்லது தொழிநுட்பவியல்* (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| **குற்றவியல் நீதி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி குற்றவியல் பட்டம் (சிறப்பு) | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம் அல்லது கலைப்பிரிவு |

**சூரியவெவ தெற்கு வளாகத்தில் நடைபெறும் கற்கை நெறிகள்**

| பட்டப்படிப்பு கற்கை நெறி (கட்டண அடிப்படையில்) | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **சூழலியல் மற்றும் விண்வெளி அறிவியல் பீடம்** | | |
| வாஸ்த்து விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 05 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/வணிகம் அல்லது கலைப்பிரிவு (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி அளவியல் விஞ்ஞான பட்டம் (சிறப்பு) (ACCREDITED BY IQSSL) Pathway programme [2+2] with the Western Sydney University, Australia for the Bachelor of Construction Management (Honours) degree | 04 வருடங்கள் | கணிதம் அல்லது வேறு (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி மதிப்பீட்டு ஆய்வு பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் அல்லது வேறு (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பப் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| **கணனி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பப் பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| விஞ்ஞானமாணி தகவல் முறைமையியல் பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| **தொழிநுட்ப பீடம்** | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம்/உயிரியல் விஞ்ஞானம்*/தொழிநுட்பம் (*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |

- 2021 அல்லது 2022 இல் க.பொ.த உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். *நிபந்தனைகளுக்கு உட்பட்டது
- 2022, 2023 இல் கேம்பிரிட்ஜ் மற்றும் எடெக்சல் உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

Z புள்ளி (Z Score) 1.8 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட பொறியியல் விஞ்ஞானமாணி, கட்டிடக்கலையியல் மற்றும் தொழிநுட்பமாணி பட்டப் படிப்பை தொடரும் மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்கப்படும். *நிபந்தனைகளுக்கு உட்பட்டது



- தெற்கு வளாகம் சூரியவெவயில் பதிவுசெய்யப்பட்ட மாணவ மாணவியர்களுக்கான தங்குமிட தங்குமிடம் நியாயமான விலையில் வழங்கப்படும்.

**மடிக்கணனிக்கான காசோலை**

i5 LKR 125,000 | i7 LKR 175,000 *நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**கற்கைநெறி கட்டணங்களுக்கான வங்கிக் கடன் வசதிகள் செய்து தரப்படும்.**

https://kdu.ac.lk

2023 மே 31 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

பதிவாளர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,
இரத்மலானை, 10390, இலங்கை.

தொலைபேசி : +0112635039, 0112632028, 0112635268, 0112638656 நீடிப்பு : 459, 460
மின்னஞ்சல் : kdudayscholar@kdu.ac.lk

# கிழக்கின் தலைவிதியை நாங்களே தீர்மானிப்போம்

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்



**உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை அரைவாசியாக குறைக்க வேண்டுமாக இருந்தால் இரண்டு வட்டாரங்களை ஒன்றாக இணைக்க வேண்டும். இதனால் முரண்பாடுகள் அதிகரிக்கும் என்கிறார், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன். எனினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்த வேண்டும் என தனது கட்சியின் நிலைப்பாட்டை அவர் விளக்கினார். அவர் தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி வருமாறு...**

நேர்காணல்:
**வ. சக்திவேல்...**

**கே: உள்ளூராட்சிசபை தேர்தல்களுக்கு முன்னர் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்னர் பலராலும் முன்வைக்கப்பட்டுவந்தது. கிழக்கில் அது பெரும் பிரச்சினையாகவே இருக்கின்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இடம்பெறுமானால் அதன் நிலை எவ்வாறு இருக்கும்?**

பதில்: உறுப்பினர்களை அரைவாசியாக குறைக்க வேண்டுமாக இருந்தால் தற்போதைய தேர்தல் முறைமையில் வட்டாரமும், விகிதாசாரமும் அமைந்திருக்கின்றது. அரைவாசிக் குறைப்புக்கு இரண்டு வட்டாரங்களை ஒன்றாக இணைக்க வேண்டும். இதனால் முரண்பாடுகள் அதிகரிக்கும். பல சமூகங்கள் நிறைந்து வாழும் இடங்கள், ஏற்கனவே எல்லைகளில் பிரச்சினையிருக்கும் இடங்கள், இரட்டைத் தொகுதிகள் போன்றவற்றிலெல்லாம் கணிசமான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனை அண்மையில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாடினோம். பாராளுமன்றத்தில் கொண்டு வந்து சட்டமாக்கும் தறுவாயில் இதுபற்றி ஆழமாக பார்க்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது. எனினும் ஏதேனும் காரணங்களை முன்வைத்து உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்தாமல் விடுவதைத் தவிர்த்து அத்தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நிலைப்பாடு.

**கே: மட்டுமாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவராக கிழக்கில் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுப்பதில் எதிர்கொள்ளும் சிரமங்கள்?**

பதில் : மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமல்லாமல் நாடு முழுவதிலும் அபிவிருத்தி என்பது தடைப்பட்டிருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம், தற்போது நாட்டில் மெல்ல மெல்ல பொருட்களின் விலையிறக்கம், பொருளாதார வளர்ச்சி, உற்பத்தி அதிகரிப்பு, என ஒரு சுமுகமான சூழலை எட்டியிருக்கின்றது. இந்நிலையில் நாங்களும். பிரதேசமட்டம் மற்றும் மாவட்ட மட்டங்களில் அபிவிருத்திக்குழுக் கூட்டங்களை நடாத்தி குளங்கள், வாய்க்கால்கள், வீதிக்கட்டமைப்பு, நவீன மயப்படுத்தப்படக்கூடிய வேலைத்திட்டங்கள் என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்கி வேலைத்திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம். மீன்பிடியை விருத்தி செய்வது தொடர்பிலும் நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

எனினும் மக்களுக்கு விரைவான உட்கட்டுமான அபிவிருத்திகளை ஏற்படுத்தவேண்டியிருக்கின்றது. அது கடினமானது. இதனை மெல்ல மெல்லத்தான் செய்ய முடியும். அடுத்த வருடத்தில்தான் நாம் விரைவான அபிவிருத்தியை எதிர்பார்க்கின்றோம்.

அதுபோல் கூட்டங்களை நடத்துவதில் நடைமுறைப் பிரச்சினைகள் இருக்கின்றன. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கூட்டத்தில் கலந்து கொள்ளும்போது ஜனநாயகப் பண்புகளோடு நடந்து கொள்ள வேண்டும். நான் கூட்டத்திற்கு தலைவராக இருக்கின்றபோது ஜனநாயகம் என்ற போர்வையில் அனாகரிகமாக வார்த்தைகளால் வன்முறைகளைச் செய்கின்றார். தான் மாத்திரம் தான் விஷயங்களை முன்வைக்க வேண்டும், என உரத்துக் குரல் எழுப்பி சங்கடத்தை ஏற்படுத்துகின்றார். நிகழ்ச்சி நிரலைத் தவிர்த்து அவரது விடயங்களை முன்னுரிமைப் படுத்துவற்கு முனைகின்றார். இது ஒரு சங்கடமான நிலைமையாகும். மட்டக்களப்பில் மாத்திரமே இந்த நிலைமை உள்ளது, வயது குறைந்த பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், நடைமுறை ஒழுங்குகளையும், சம்பிரதாயங்களையும், விளங்கிக் கொள்கிறார் இல்லையே என நான் தனிப்பட்ட முறையில் கவலையடைகின்றேன்.

மண்டூர் குருமண்வெளி, குருக்கள்மடம் அம்பிளாந்துறை, ஆகிய இடங்களில் படகுச் சேவைகளுக்கு நிதி அறவீடு செய்வது தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது. மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் என்ற ரீதியில் நாம் பல வேலைத்திட்டங்களை மாவட்ட ரீதியில் மேற்கொண்டு வருகின்றோம். தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைக்கு மத்தியில் இந்த நீர் வழிப்போக்குவரத்தின் செலவு, படகுகளின் திருத்தவேலைகள் என்பன அதிகரித்துள்ளன. இதற்காக மாகாணங்களுக்கு நிதியை பங்கீடு செய்கின்ற நிதிச் சேவை ஆணைக்குழு கிழக்கு மாகாண ஆளுனருக்கு வழங்கிய ஆலோசனையின் பெயரில் குறித்த படகுப் போக்குவரத்தை தொடர்ந்து இலவசமாக இல்லாமல் குறிப்பிட்ட அளவு நிதி அறவீடு செய்யுமாறு குறிப்பிட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆளுநருக்கு உள்ளது. அதனை ஆளுநர் நடைமுறைப்படுத்த முனையும் போது நாம் அதற்கு தடை போட முடியாது. அதனையும் ஒழுங்குபடுத்தப்பட்ட வரையறைக்குள்தான் நாம் மேற்கொள்ள முடியும். முற்றாக இது தொடர்பில் மறு பரிசீலனை செய்யுமாறு எழுத்து மூலமாக நாம் கேட்கமுடியும். இதற்கு நாம் இணங்கினோம் பா.உ சாணக்கியன் இதனை உடனடியாக நிறுத்துமாறு கோருகின்றார். அவர் இதனை ஒரு அரசியலாகப் பார்க்கிறார். அடிப்படையில் சிலவிடயங்களை அணுகுவதில் அவர் தடுமாறுகின்றார்.

1978இல் மட்டக்களப்பு சூறாவளித் தாக்கத்தால் பாதிக்கப்பட்டபோது அப்போது உள்ளூராட்சி மன்ற அமைச்சராக இருந்த பிரேமதாஸ மட்டக்களப்புக்கு வந்து பார்வையிட்டு கூட்டம் ஒன்றை நடாத்தினார். அப்போது தமிழரசுக் கட்சியின் பா.உ இருந்த இராஜதுரை அதில் கலந்து கொண்டதற்காக அவரை கட்சியிலிருந்து வெளியேற்றியது தமிழரசுக் கட்சி. எனவே அழிந்து போயிருந்த மட்டக்களப்பை கட்டியெழுப்ப வேண்டும் என்ற கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக அவர் அக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இயலாமையாகும். இவ்வாறான கட்சியைச் சேர்ந்தவர்கள் தற்போது அனைத்தையும் மறந்து அபிவிருத்திக்குழுக் கூட்டத்திற்கு வந்து வேடிக்கையாக நடக்கின்றார்கள்.

**கே: அபிவிருத்திக்குழுத்தலைவராக தமிழ்தேசியக்கூட்டமைப்பினர் குறிப்பாக சாணக்கியன் உங்கள் மீதுமுன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில் : பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடாக அரசியலுக்கு வந்தார். பின்னர் அக்கட்சி ஊடாக தேர்தலில் வெற்றி பெற முடியாது என நினைத்து தமிழரசுக் கட்சியில் இணைந்து மக்களை உசுப்பேற்றி தனது பாட்டனாரைப்போல வெற்றி பெறலாம் என நினைத்து செயற்படுகின்றார். தற்போது எம்மை மக்களிடமிருந்து தனிமைப் படுத்த வேண்டும் என ஆசைப்படுகின்றார். எமது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மக்களிடம் ஒரு தவிர்க்க முடியாத கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியுடன் சேர்ந்து நிர்வாக ரீதியான எழுச்சியையும், எமது கட்சி உருவாக்கி விட்டால் அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடையும் கட்சியாக தமிழரசுக் கட்சி இருக்கும். அதில் பாதிக்கப்படப்போகிறவர் பா.உ. சாணக்கியனும்தான். எம்மைத் தோற்கடிப்பதற்காக அவர் ஆக்கிரோஷமாக முனைகின்றார். இதுதான் இங்கிருக்கின்ற அரசியல்.

**கே: இனப்பிரச்சினைக்கான தீர்வாக இணைந்த வடக்கு கிழக்கில் சுயாட்சியென்பது வடக்கு அரசியல்தலைவர்கள் முன்வைக்கும் தீர்வாக இருக்கின்றது. கிழக்கு மக்களின் விருப்பமும் அதுவாகத்தான் இருக்குமா?**

பதில் : இலங்கை அரசியல் வரலாற்றில் தாங்கள் நினைப்பதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வடக்கு அரசியல் தலைவர்கள் நினைக்கிறார்கள். அரசியல் முடிவுகள் அனைத்தும் யாழ் மண்ணிலிருக்கின்ற சில தலைவர்களால் எடுக்கப்பட்ட முடிவுகள்தான். தமிழ் காங்கிரஸ், தனித் தமிழ் பிரகடனம், ஏனைய இயக்கங்கள், போன்றனவெல்லாம் நாங்கள் மட்டும்தான் என்கின்ற திமிர் பிடித்த அதிகார வர்க்கத்தினுடைய பிடியிலேயே இருந்திருக்கின்றது. அவை சாதாரணமான மக்களுக்கு வெற்றிகரமான திட்டங்களைப் பெற்றுக் கொடுக்கவில்லை. முரண்பாடுகளையும், வலிகளையும்தான் ஏற்படுத்தியிருந்தது. விசேடமாக 1976 இற்குப் பின்னர் சகோதரப் படுகொலையாக எமது இனத்தையே அழித்துச் சென்றிருக்கின்றது. அதன் கடைசி அழிவுதான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட அழிவாகும். அதன் பின்னர்தான் எமது த.ம.வி.பு கட்சி கிழக்கில் உருவானது.

கிழக்கு, கிழக்காக இருக்க வேண்டும் என்பது எமது கொள்கை. கிழக்கின் தலைவிதியை நாங்களே தீர்மானித்துக் கொள்வோம். வடக்கிலே இருந்து வந்து யாரும் இங்கு வந்து ஆதிக்கம் செலுத்த முடியாது உங்களுக்கிருக்கின்ற பிரச்சனைகளை நீங்களே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். முடிந்தல் கிழக்கு மாகாணத்துக்கு பங்களிப்புக்களைச் செய்யுங்கள். வடக்கின் அரசியலை கிழக்கில் திணிக்க வேண்டாம். கிழக்கு மூன்று இன மக்களும், இணைந்து வாழுகின்ற மாகாண மாகும். எனவே கல்வி, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் தனியான அதிகாரப் பகிர்வின் தேவையையும் நாங்கள் உணர்ந்திருக்கின்றோம்.

பிரபாகரன் மரணிப்பதற்கு முன்னர் நாங்கள் மிகப் பெரிய சவாலை ஏற்று கிழக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்றோம். அதனூடாக முடிந்தவரையில் இலக்குகளை அடைவதற்கு முயற்சி எடுத்தோம். அதில் எதிர்பார்த்த வெற்றியை அடையா விட்டாலும் ஓரளவு வெற்றியடைந்துள்ளோம். எமது கட்சி கிழக்கில் ஒரு தீர்மானம் எடுக்கும் கட்சியாக வளர்ந்து நிற்கும்.

**கே: கடந்த பொதுத் தேர்தலில் பாரிய மக்கள்சக்தியொன்று உங்கள் பின்னே நின்றது. தற்போதைய பொருளாதாரச்சூழல், அரசியல்தளம்பல்நிலை போன்றவற்றால் உங்களுக்கான ஆதரவுத்தளம் எவ்வாறிருப்பதாக எண்ணுகின்றீர்கள்?**

பதில் : மக்கள் மத்தியிலிருந்த எழுச்சி, நல்லாட்சியின் பலவீனம், சகோதர அரசியல்வாதிகளின் அட்டூழியங்களின் காரணமாக மக்கள் மத்தியிலிருந்த ஆத்திரம், கிழக்கு மாகாண சபையினுடைய பலவீனம், ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான நிகழ்வுகள் அனைத்தையும் வைத்துக் கொண்டு எம்மை விரைவாக வளர்த்தெடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. கொவிற் தொற்று, நாட்டின் அரசியல் ஸ்திரமற்ற நிலை போன்றவற்றால் எமது கட்சியும் சரிவைச் சந்தித்தது. ஆனால் அது பாதகமான நிலையைத் தோற்றுவிக்கவில்லை. அடுத்து வரும் காலங்களில் சில மாற்றங்களைச் செய்து கொடுப்போம் என்கின்ற நம்பிக்கையின் ஊடாக மக்களை அணிதிரட்டி கடந்த முறையையும்விட எதிர்காலத்தில் தேர்தல் வந்தால் ஒரு பிரமண்டமான வெற்றியை நாம் அடைவோம்.

**கே: நாட்டின்உணவுத் தன்னிறைவுமுயற்சியில்கிழக்கின்வகிபாகம்எவ்வாறுஅமையமுடியும்?**

பதில் : கிழக்கு மாகாணம் உணவில் தன்னிறைவு அடையவில்லை என சிலர் தெரிவிக்கின்றார்கள். அது உண்மையில் தவறு, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளிலுள்ளவர்கள் இள்குள்ள மக்களின் நிலைமையைப் பரீட்சித்துப் பார்க்க முடியாது. கிராமத்து மக்கள் மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றார்கள். இருந்த போதும் நாடு என்ற ரீதியில் சுகாதாரம், கல்வி மேம்பாடு, போன்றவற்றில் நாங்கள் இன்னும் வளரவில்லை. இதற்கு எமது நீண்டகாலப் பிரச்சினைகள், உள்ளிட்ட பல விடயங்கள் தாக்கம் செலுத்தியிருக்கின்றன. தற்போது நாங்கள் பிரச்சினைகளை இனம் கண்டு மெல்ல மெல்ல வளர்ந்து வந்திருக்கின்றோம். உணவு உற்பத்தியினுடைய அதிகரிப்பு, உணவு பதப்படுத்தல், ஏற்றுமதி, தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், போன்ற பலவற்றை நாம் இனம் கண்டுள்ளோம். இவற்றை விரைவு படுத்துகின்றபோது உற்பத்தித் துறையிலும் ஏற்றுமதித் துறையிலும், பாரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

**கே: புதிய பயங்கரவாத சட்டம்பற்றி– என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : உலகத்தின் அமைதிக்கு பயங்கரவாதம் சவாலாகும். பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை கைது செய்து தண்டனை வழங்காவிட்டால் தீவிரத்தன்மை கூடிவிடும். தற்போதுள்ள சட்டம் இலங்கையில் 1979ஆம் ஆண்டு தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்கக் கொண்டு வரப்பட்ட சட்டமாகும். அப்போது எனக்கு 3 வயது. பின்னர் 40 வயதில் அந்தச் சட்டத்தால் நானே சிறைக்குச் சென்றேன். அது எவ்வளவு கொடுமையான சட்டம் என்பதை நான் அறிவேன். ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்குப் பின்னர் வேறுவிதமான உலக பயங்கரவாதம் எமது நாட்டுக்குள் ஊடுருவக்கூடிய சந்தர்ப்பம் எற்பட்டது. ஆகையால் தற்போதிருக்கின்ற சவாலைக் கட்டுப்படுத்த, மக்களைப் பாதுகாத்து நிருவாகத்தைக் கொண்டு செல்லக்கூடிய ஒரு சட்டமறு சீரமைப்பு அவசியமாகிறது. ஆனால் அவ்வாறான சட்டங்களில் மக்களும், வெகுஜென ஊடகங்களும் அஞ்சுகின்ற ஜனநாயக விரோத தன்மை குறித்த அச்சத்தை நீக்க வேண்டும். நாட்டை முடக்குகின்ற பயங்கரவாதத்துக்கான பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்காத வண்ணம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்று அவசியமாகின்றது. இதனை மிகக் கவனமாக அரசாங்கம் மேற்கொள்ளும் போது பாராளுமன்றத்தில் நாங்கள் ஆதரவளிப்போம்.

**கே: தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

பதில் : தமிழரசுக் கட்சி உதயமான காலத்திலிருந்து சிங்களவன் வாறான், சிங்களவன் வாறான், என கதைத்தவர்கள் சிங்கள மக்களைத் திருமணம் செய்ததுதான் வரலாறு. இது ஒரு அச்சமூட்டும் நிலைமையாகும். இத்தோடு சேர்த்து தொல்பொருளை இணைக்க முடியாது. தொல்பொருளைப் பாதுகாப்பது அந்த அந்த மாவட்டத்துக்கான விடயமாகும். மகாவலி குடியேற்றத்தில் தமிழர்களுக்குரிய உரித்தை சரியாக பயன்படுத்தி எமது கணி அற்ற மக்களுக்கு பெற்றுக் கொடுத்து நீர்ப்பாசனத்தை வழங்கி உற்பத்தியை மேம்படுத்தினால் மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள். அதுபோல மேய்ச்சல் தரை விடயத்தையும் தீர்ப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் எடுத்திருக்கின்றோம்.

**வடக்கிலே இருந்து வந்து யாரும் இங்கு ஆதிக்கம் செலுத்த முடியாது**



**எமது கட்சி கிழக்கில் தீர்மானகர சக்தியாக வளர்ந்து நிற்கும்**

# முன்பள்ளி மழலைகளின் கல்வித் தேவைகள்

## கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இன்று கூட்டம்



முன்பள்ளி மழலைகளின் கல்வித் தேவைகள் பற்றிய கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 இற்கு ஆனந்தபுரம் கிழக்கில் உள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

சவிரி பூலோகராஜா (அதிபர், கிளிநொச்சி மத்திய கல்லூரி) மங்கலவிளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார். கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் இறைவணக்கம் இசைப்பர்.

கந்தசாமி முருகவேள் (கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர், கல்விக் குழுமம்) வரவேற்புரை வழங்குவார். தலைமையுரையை நாகலிங்கம் வேதநாயகன் (தலைவர், கல்விக் குழுமம், முன்னாள் யாழ் அரசாங்க அதிபர்) ஆற்றுவார்.

'ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழிப் பயிற்சிகள்' என்ற தலைப்பில் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்) உரையாற்றுவார்.

'Attitudes of the Secondary school students towards the writing skills in English Language' என்ற தலைப்பில் திருமதி வைத்திலிங்கம் (Master Trainer, Zonal Education Office, Valikamam) உரையாற்றுவார்.

'பாடசாலைக் கல்வி முறைகளில் அதிகரித்துவரும் சமமின்மைகள்' என்ற தலைப்பில் பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி (முன்னாள் பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்) உரை நிகழ்த்துவார்.

சுப்ரமணியம் பரமானந்தம் (பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), சந்திரமௌலீசன் லலீசன் (அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை), வேல் நந்தகுமார் (துணை ஆசிரியர், கல்விச்சுடர், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை), அருள் உமாமகேஸ்வரன் (செயலாளர், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. வட மாகாணம்), தம்பிராசா குருகுலராஜா (முன்னாள் கல்வி அமைச்சர் வட மாகாணம்) வைத்திய கலாநிதி T. சத்தியமூர்த்தி (பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை) உட்பட பலரும் கருத்துரைகளை வழங்குவர்.

கூட்டத்தில் சமுகமளிக்க விரும்புவோர் 0776 320 996 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.



## அரசியல் அரங்கம்

அர்ஜுன்

# கட்சி அரசியலுக்குரிய வேளையல்ல இது!



**'நாட்டை முன்னேற்றுவதற்கான அரசியலே தற்பொழுது அவசியம். அதனைவிடுத்து கட்சிரீதியான அரசியலுக்கான நேரம் இதுவல்ல' என்று பௌத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அவர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் மூலம் மக்களை அடக்குவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: பயங்கரவாதத்தினால் கடந்த 50 வருடங்களில் பல தடவை நாம் சிதறடிக்கப்பட்டுள்ளோம் என்பது எனது கருத்து. தெற்காக இருந்தாலும், வடக்காக இருந்தாலும் பயங்கரவாதம் பயங்கரவாதமே, அதை நசுக்க வேண்டும். இதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அவசியமானது. நாம் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். கடந்த காலத்திலிருந்து அனுபவத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். நல்லிணக்கச் செயற்பாடு அதிக விளைவை ஏற்படுத்தவில்லை. புதிய நிகழ்ச்சி நிரல்களையும் வழிகளையும் நாம் சிந்திக்க வேண்டும்.

**கே: பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், ஒளிபரப்பு அதிகாரசபைச் சட்டமூலம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் என்பவற்றைத் தோற்கடிக்கும் நோக்கில் எதிர்க்கட்சி ஒரு கூட்டணியை உருவாக்கியுள்ளது. இது அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துமா?**

பதில்: இது எனக்குச் சந்தேகமே, ஏனென்றால் முதலில் அவர்கள் அதைத் தோற்கடிக்க வேண்டும். அவர்களின் இந்த நிலைப்பாடு எந்தளவுக்கு முற்போக்கானது என்று எனக்குத் தெரியவில்லை. தற்போதைய நிலைவரப்படி, நாம் ஒரு கட்சியாக அன்றி, தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும். இன்றைய அரசியல் என்பது நாட்டை அபிவிருத்தி செய்வதே தவிர, கட்சி அரசியல் அல்ல. எனவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த ஒற்றுமையற்ற மனநிலையில் இருந்து வெளியேற வேண்டும். இப்போதைய நிலையில் ஒப்பிட்டுப் பார்த்தால், கடந்த ஆண்டை விட நாம் மோசமாக இருக்கிறோம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்ததையும், அத்தியாவசியப் பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்திருந்ததையும் மறந்து விட முடியாது. அவையெல்லாம் எமக்கு நன்கு நினைவில் உள்ளன. இப்போது இந்த நிலைமைகள் முற்றாக மாறி விட்டன. இன்றைய முன்னேற்றம் குறித்து எதிர்க்கட்சிகள் மகிழ்ச்சியடையவில்லை என்பதால், அவர்கள் நாட்டின் வளர்ச்சி செயல்முறையை சீர்குலைக்க முயற்சிகளை எடுக்கின்றனர். அதனால்தான் அவர்கள் போலியான காரணங்களைச் சொல்லி அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்காமல் இழுத்தடித்து வருகின்றனர். சொந்த நலன் கொண்ட அரசியலை விட நாடே பிரதானமானது என்பதை அவர்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் கீழ் அரசாங்கம் இலாபம் ஈட்டும் அரசாங்க நிறுவனங்களையும் விற்பனை செய்வதாக எதிர்க்கட்சி விமர்சித்து வருகிறது. இலாபகரமான அரசாங்க நிறுவனங்களை விற்கும் நடவடிக்கையுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா?**

பதில்: இல்லை. நான் உடன்படவில்லை. அரசாங்க நிறுவனங்கள் முறையாக நிர்வகிக்கப்பட வேண்டும். அரசாங்கம் வணிகம் செய்வதிலிருந்து வெளியேற வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். நாம் ஒரு மாற்றுத் தெரிவாக இருந்தாலும், மற்றைய போட்டியாளர்களை நாம் அடக்கக் கூடாது. நாம் ஒன்றாக இருக்கலாம். ஆனால் நாம் ஒரு ஏகபோகத்தை உருவாக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. எனவே, நாம் ஒரு கண்காணிப்பு நிறுவனமாக இருக்க வேண்டும் மற்றும் விடயங்களை நிர்வகிக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அப்படித்தான் நம் மக்களுக்கு உதவ முடியும். குறிப்பாக சேவைகளை வழங்குவதற்காக நாம் இன்னும் அதிகமாக வசதிகளை உருவாக்க வேண்டும்.

**கே: உங்கள் கருத்துப்படி, சர்வதேச நாணய நிதியம் வகுத்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமா அல்லது அவற்றில் சில விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று நினைக்கிறீர்களா?**

பதில்: எப்படியும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். நாங்கள் இறையாண்மை கொண்ட நாடு. நிச்சயமாக, கடந்த காலத்தில் நடந்தவற்றால் நாங்கள் இப்போது மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றோம். பொருளாதார ரீதியாகவும், வரலாற்றில் முதல் தடவையாகவும் நாம் வங்குரோத்து நிலையை அறிவித்துள்ளோம். நாம் நம் மக்களையும், நம் நாட்டையும் வீழ்த்தக் கூடாது. நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

**கே: சில அரசியல்வாதிகள் தேசிய அரசாங்கத்தை அமைக்கும் யோசனையை முன்வைத்துள்ளனர். இந்த விடயத்தில் முன்னேற்றம் என்ன?**



பதில்: நாங்கள் ஏற்கனவே தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளோம். அமைச்சரவையில் பல கட்சிகள் உள்ளன, மற்றவர்களும் பங்கேற்க வேண்டும். நாங்கள் எங்கள் அமைச்சுப் பதவிகளை வழங்கத் தயாராக இருக்கிறோம். மற்றவர்கள் வந்தால் எனது அமைச்சுப் பதவியை நான் கைவிடத் தயாராக இருக்கின்றேன். பெரிய அளவிலான அமைச்சரவைகள் நாட்டுக்கு உதவவில்லை. எனவே, தற்போது நான் வகிக்கும் அமைச்சுப் பொறுப்பை இராஜினாமா செய்துவிட்டு நாட்டுக்கு ஆதரவாக வருவோருக்கு வாய்ப்பு வழங்கத் தயாராக உள்ளேன்.

**கே: பல்வேறு மதக் குழுக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்வேறு சக்திகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தவிருப்பதாக மௌலவி ஒருவர் பொய்யான தகவலை வழங்கியமையைக் குறிப்பிடலாம். இதுபோன்ற முயற்சிகளைத் தடுக்கவும், மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை?**

பதில்: உண்மையில் இவை சில ஊடகங்கள் மற்றும் சில அரசியல்வாதிகளால் உருவாக்கப்படுகின்ற விடயங்களாகும். கொழும்பில் சிங்களவர்கள் 35 சதவீதத்திற்கும் குறைவானவர்கள் என்றும் பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் என்றும் நான் நினைக்கிறேன். இது நல்லிணக்கம் இல்லையா? அரசியல்வாதிகள், அடிப்படைவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆனால், மக்கள் இவற்றைக் கவனத்தில் கொள்வதில்லை. அவர்கள் மிகவும் திறந்த மனதுடையவர்கள். அரசியல்வாதிகள் மற்றும் அடிப்படைவாதிகளே தேவையற்ற குழப்பங்களுக்குக் காரணமாக இருக்கின்றனர். எனவே, சமீப காலங்களில் நாம் சந்தித்த பேரழிவுகள் எதுவும் எதிர்காலத்தில் இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

எவ்வாறாயினும், அதனால்தான் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைக்கு வர வேண்டும். இது பயங்கரவாதத்திற்கு மட்டுமல்ல, பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் மக்களுக்கும் என்று நான் நம்புகிறேன். அந்தப் பகுதியும் புதிய சட்டமூலத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

எல்லோரும் மிகவும் அமைதியான வாழ்க்கையை விரும்புகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் என்ற போர்வையில் குற்றச்சாட்டுகள் மற்றும் அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் யாராவது அதை சீர்குலைக்கிறார்கள் என்றால், அது நாகரிகம் என்று நான் நினைக்கவில்லை.

இது மிகவும் நாகரிகமற்றது. சமீபகாலமாக நான் பாராளுமன்றத்தில் அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த போது அவர்கள் மற்றவர்களை இனவாதிகள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆனால் அந்த குறிப்பிட்ட அறிக்கையே இனவாதத்திற்கு ஒப்பானது என்று யாராவது கூறினால், சபாநாயகர், துணை சபாநாயகர் அல்லது அவைத்தலைவர் அதை கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறார். அப்படி இருக்கக் கூடாது. அனைத்து உறுப்பினர்களும் நாட்டிற்கு சேவை செய்வதற்காக பாராளுமன்றத்திற்குள் நுழைந்துள்ளனர், தங்கள் மத அல்லது பிற நம்பிக்கைகளுக்கு சேவை செய்ய அல்ல. அதுதான் கட்சி அரசியல். நாம் ஒரே நாடாக சிந்திக்க வேண்டும்.

**பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு வர வேண்டும். இது பயங்கரவாதத்திற்கு மட்டுமல்ல, பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் மக்களுக்கும் ஏற்புடையதாகும்**

**தெற்காக இருந்தாலும், வடக்காக இருந்தாலும் பயங்கரவாதம் பயங்கரவாதமே! அதை நசுக்க வேண்டும். இதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். கடந்த காலத்திலிருந்து அனுபவத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு தற்போது மீண்டெழுந்து கொண்டு வருவது குறித்து எதிர்க்கட்சிகள் மகிழ்ச்சியடையவில்லை. அதனால் அவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கான செயற்பாடுகளை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் போலியான காரணங்களைச் சொல்லி அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்காமல் இழுத்தடித்து வருகின்றனர்**



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொறகொட

# மக்களின் குரலுக்கு செவிமடுக்கும் தலைவராக பிரதமர் நரேந்திர மோடி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மாதத்திற்கு ஒரு முறை இந்திய மக்களுக்காக உரையாற்றும் விசேட நிகழ்ச்சி ஒன்றுண்டு. 'Mann Ki Baat' என இந்த வானொலி நிகழ்ச்சிக்கு பெயரிடப்பட்டுள்ளது. இந்திய தேசிய வானொலியில் ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சியை இந்திய மக்கள் மிகவும் ஆர்வத்துடன் செவிமடுக்கின்றார்கள் எனக் குறிப்பிட வேண்டும். நூறாவது வானொலி நிகழ்ச்சி உலகம் பூராவும் ஒலிபரப்பப்பட்டதோடு, கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமையகத்தில் நேரடியாக அதனை செவிமடுக்க ஏற்பாடு செய்திருந்தமை விசேட சந்தர்ப்பமாகும்.

மக்களின் வாக்குகளால் அதிகாரத்துக்கு வரும் தலைவர்கள், தாங்கள் பதவிக்கு வந்த பின்னர் அதிகாரத்துக்கு வர உதவிய மக்களிடமிருந்து தூரமாகி விடுகின்றார்கள். இது ஜனநாயக நாடுகளில் சாதாரணமாகக் காணக்கூடிய ஒரு அம்சமாகும்.

இந்தத் தூரம் நன்மையைப் போல் தீமையையும் செய்கின்றது. இந்தியாவின் நிர்வாகக் கட்டமைப்பின்படி அவ்வாறான விலகல் இல்லை. பிரதமர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார். நாளாந்த நடவடிக்கைகள் காரணமாக மக்களை சந்திக்கும் சந்தர்ப்பம் குறைவு என அறிந்த பிரதம நரேந்திர மோடி, பொதுமக்களுடனான தொடர்பை தொடர்ந்து பேணுவதற்காக பொது மக்களுடன் கலந்துரையாட வானொலியை தெரிவு செய்தார்.

2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியின் போது அவர் தனது கருத்தை மக்களிடம் முன்வைக்கின்றார். அதன் பின்னர் அந்நாட்டின் தேசிய தொலைக்காட்சியும் இந்த நிகழ்ச்சிக்கு இணையாக ஒளிபரப்பை ஆரம்பித்தது. பிரதமர் மோடி ஒன்பது வருடங்களாக மக்களுக்கு உரையாற்றி வந்துள்ளார்.

தொழில்நுட்பம், விவசாயம்,பொருளாதாரம், சமூக மற்றும் அரசியல் போன்ற துறைகளில் கருத்துக்களை முன்வைத்து அதன் மூலம் சமூகத்தில் பல மட்டத்தைச் சேர்ந்தவர்களினதும் கவனத்தை ஈர்க்க அவரது உரையினால் முடிந்துள்ளது. உலககெங்குமுள்ள ஜனநாயக நாடுகளின் மக்கள் இந்த முயற்சியைப் பாராட்டுகிறார்கள். அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் நியூஜெர்சி போன்ற பிராந்தியங்கள் இந்தியப் பிரதமரின் வானொலி நிகழ்ச்சியைப் பாராட்டி தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. நல்லாட்சியை நடத்துவதற்கு மக்களுடன் மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் மிகவும் முக்கியமானது என்பது இங்கு தெரியவந்துள்ள விடயமாகும்.

நாடுபூராவும் ஒரே சமயத்தில் அதிகளவானோரை சென்றடையக் கூடிய ஊடகமாக வானொலி உள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் 'மன் கீ பாத்' அதாவது 'மனதின் குரல்' நிகழ்ச்சி தொடர்பாக நூலொன்று வெளியிடப்பட்டது. இந்தியாவின் பிரபல ஊடக ஆய்வு நிறுவனம் இந்த வானொலி நிகழ்ச்சியைப் பற்றி விசேட ஆய்வு ஒன்றை நடத்தியது. முக்கிய ஆறு நகரங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி மக்கள் தொகையில் நூற்றுக்கு 66 சதவீதமான மக்கள் இந்நிகழ்ச்சியைக் கேட்பதற்கு ஆவலாக உள்ளதாக தெரியவந்துள்ளது. அவர்களில் அதிகளவானோர் குஜராத், பீஹார் மற்றும் மத்திய பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு நரேந்திர மோடி மக்கள் உணரக் கூடிய விடயங்கள் குறித்து மிகவும் இலகுவாக கலந்துரையாடுகின்றார். சில சந்தர்ப்பங்களில் நிகழ்ச்சியை செவிமடுப்பவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்கள் நிகழ்ச்சியுடன் இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியாவின் பல பிரதேசங்களிலும் வசிக்கும் புலமைப் பரிசில்களை வென்ற மாணவ அணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

அவர்களின் குடும்பப் பின்னணி மற்றும் கல்வியை நிறைவு செய்த பின்னர் எதிர்கால எதிர்பார்ப்பு குறித்து கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் முடிவில் பிள்ளைகளுக்கு மகத்தான வரவேற்பு கிடைத்தது. இன்னொரு சந்தர்ப்பத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட கிராமத்தவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை பிரதமர் நடத்தினார்.பிரச்சினையின் தோற்றத்தை அவர் அறிந்து கொண்டதோடு, இந்தப் பிரச்சினையில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து மக்களுக்கு கவனமாக சொல்லிக் கொடுத்தார்.

நீர் தொடர்பாக நிலவுகின்ற பிரச்சினை எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடிய நெருக்கடி பற்றிய விடயங்களை அவர் குறிப்பிட்டதோடு, நீர்த் தட்டுப்பாட்டை தீர்க்கும் முறை பற்றியும் புரிந்துணர்வை ஏற்படுத்தினார். இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர் அந்நாளில் மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளூர் புரட்சியை பற்றிய விபரங்களையும் ஞாபகப்படுத்தினார். அதனைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு பாதுகாப்பு வழங்கி சமாதானத்தை உருவாக்கிய விதம் குறித்து தெளிவுபடுத்தியதோடு, அதற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்ட இந்திய பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு நன்றியும் தெரிவித்தார்.

சமூக ஊடகப் பாவனை மிகவும் பிரபலம் அடைந்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி சமூக ஊடகங்களில் தனது தொடர்பாடலை மேற்கொண்டு வருவதோடு, அவர் தனது அமைச்சுக் குழுவினரையும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த ஊக்குவித்து வருகின்றார். அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் மக்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கு தயக்கமின்றி பதிலளிக்க வேண்டுமென அவர் உத்தரவிட்டுள்ளார். தேசியப் பிரச்சினையில் சாதாரண நாட்டு மக்கள் உணரக் கூடியதாக ஆஜராகுவது அரச தலைவர் ஒருவரின் முதிர்ச்சியைக் காட்டுகின்றது. தனது செவிமடுப்பாளர்களுக்காக ஆஜராவது பக்குவமான கொள்கையாகும்.

மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக அரசியல் தலைவர்கள் மக்களுடன் மேற்கொள்ளும் தொடர்பாடல் செயல்களின் போது பாரிய பொறுப்புடன் செயல்பட வேண்டும். மக்கள் தலைவர்கள் மக்களின் விருப்பத்தை பாதுகாக்க வேண்டும். தற்போதுள்ள தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடக கட்டமைப்பிற்குள் மக்களுடன் கலந்துரையாடலை நடத்துவது இலகுவல்ல. எந்தவொரு மக்கள் தலைவருக்கும் பிரபல்யம் கிடைப்பது குறுகிய காலமே. மக்கள் விலகும் போது சரிவு ஏற்படும்.

வாக்காளர்களைச் சந்திக்க மாதத்தில் இரண்டு மூன்று மணித்தியாலங்களை ஒதுக்குவது மிகவும் நல்லது. அவர்களுக்கு செவிமடுப்பது இன்றைய அரசியல்வாதிகளுக்கு உள்ள சிரமமான விடயமாக உள்ளது. இலங்கையிலும் அரசியல் தலைவர்கள் பொதுமக்களுடன் மேற்கொள்ளும் தொடர்பாடல்களை புதிய மாதிரிக்குள் உள்ளடக்க வேண்டியுள்ளது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# இ.வாகன வருவாய் உரிம பத்திரம் இனி அனைத்து மாகாணங்களிலும்

## Online இல் விரைவாகப் பெற திட்டம் விரைவில்

அனைத்து மாகாணங்களுக்கும் வாகன வருமான அனுமதிப்பத்திரத்தை ஒன்லைனில் விரைவாக பெற்றுக்கொள்ளும் வசதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் மற்றும் மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இவாகன வருமான உரிமம் திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம், புதிய வாகன வருமான உரிமத்தைப் பெறுவதுடன், தற்போதுள்ள வருமான உரிமத்தை புதுப்பிக்கும் வசதியும் கொண்டு உள்ளது.

திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மற்றும் ஒன்லைன் முறையின் மூலம் உரிமத்தைப் பெறுவதற்கான நிதிக் கொடுப்பனவுகளை கிரெடிட் கார்ட் மூலம் செலுத்தலாம்.

மின்னஞ்சல் முகவரி மூலம் மக்கள் தொடர்புடைய தற்காலிக உரிமத்தைப் பெறுவர். நிரந்தர உரிமம் சில நாட்களில் பதிவு அஞ்சல் மூலம் கிடைக்க பெறும். மக்கள் இந்த வசதியை நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இது *Lanka Government Network* மற்றும் *Lanka Government Cloud* ஆகியவற்றின் உட்கட்டமைப்பு அமைப்புகளால் இயக்கப்படுகிறது.

வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை வினைத்திறனாக்கும் நோக்கில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் வசதிகள் சேர்க்கப்படவுள்ளதுடன், எந்தவொரு மாகாணத்திலும் வாகனம் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தால், எந்தவொரு பிரதேச செயலக அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சார்ள்ஸ் மன்னரின் தலைமையில்...

வகையிலான கல்வி மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு பொதுநலவாய அமைப்பு விரிவான திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் வலியுறுத்தினார்.

டிஜிட்டல் மயமாக்கலினூடாக தொடர்பாடல்களை வலுப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி கோரினார்.

இம்மாநாட்டுக்கு இணையாக இடம்பெற்ற *'Fireside Chat'* நிகழ்வில் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

*'Fireside Chat'* நிகழ்வு, பொதுநலவாய மாநாட்டுக்கமைவான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடும் மேடையாகும்.

இதன் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கானா நாட்டு ஜனாதிபதி நானா எட்டோ அக்குபோ எட்டோ (*Nana Addo Dankwa AkufoAddo*) யும் லண்டனில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கை மற்றும் கானாவுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

அதனையடுத்து ருவண்டா ஜனாதிபதி பவுல் ககமே (*Paul Kagame*) வையும் (05) சந்தித்து ஜனாதிபதி, கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கை மற்றும் ருவண்டா நாடுகளுக்கிடையிலான உறவுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டதோடு, விஷேடமாக விவசாயம் மற்றும் சுகாதார துறை சார்ந்த முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

இரு நாடுகளுக்கிடையிலும் விஜயம் மேற்கொண்டு இரு நாட்டு அமைச்சர்களுக்கிடையிலான சந்திப்பை அடுத்த கட்டமாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இலங்கை மற்றும் ருவண்டாவுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இயற்கை அனர்த்தங்களின் போதான துரித நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான பயிற்சிகளை வழங்க இலங்கை பாதுகாப்பு படைகளின் ஒத்துழைப்பை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன்பாடு தெரிவித்தார்.

லண்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன மற்றும் சர்வதேச அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்கள் இச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

# 2023ஆம் கல்வியாண்டுக்கான புதிய மாணவர்கள் அனுமதி

மக்கொனை அஹதிய்யாப் பாடசாலையின் 2023ஆம் கல்வியாண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வரவேற்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை (20230507) காலை. 08.30 மணிக்கு அல்ஹஸனியா மஹா வித்தியாலய பிரதான மண்டபத்தில் அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் ஐ.எம். எம். உவைஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாகவும், பிரதான பேச்சாளராகவும் விஞ்ஞான ஆசிரிய ஆலோசகரும், தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளருமான எம்.என். முஹம்மத் ஆசிரியர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக செயலாளர் ஜிப்ரியா இப்றாஹிம் தெரிவித்தார்.

## அரச ஊழியர் செவ்வாய் முதல்...

முடியுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கையை தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக அனுப்ப இராஜாங்க அமைச்சரின் செயலாளர் உத்தரவிட்டுள்ளார். இந்த அரச ஊழியர்களுக்கு அவர்களின் அடிப்படை சம்பளத்துடன் சேர்த்து சகல கொடுப்பனவுகளும் வழங்கப்படுமென இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

## நாட்டில் மேலும் 13 பேருக்கு...

தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த 24 மணி நேரத்தில் அடையாளம் காணப்பட்டதாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, இது வரையில் நாட்டில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6,72,207 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்றைய தினம் கொரோனா மரணங்கள் எதுவும் பதிவாகவில்லையெனவும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## SLPP திருத்த யோசனைகளை...

சட்டமூலங்களுக்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க போவதில்லையென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் பெரும்பாலான விடயங்கள் அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் உறுப்புரைகளுக்கும், ஜனநாயக கொள்கைக்கும் எதிரானதாக உள்ளது. ஆகவே இந்த சட்டமூலம் முழுமையாக திருத்தம் செய்யப்பட வேண்டும்.

திருத்தமில்லாமல் சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எதிராக வாக்களிப்போமென ஜனாதிபதி, நீதி அமைச்சர் ஆகியோரிடம் வலியுறுத்தினோம்.

அத்துடன் இந்த சட்டமூலத்துக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்புகள் வெளியாகியுள்ளன.

ஆகவே சட்டமூலத்தை பரிசீலனை செய்ய மீளாய்வு குழு ஒன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானது என்பதை நீதியமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

சட்டமூலம் தொடர்பில் பொது மக்கள்,அரசியல் தரப்பினரிமிருந்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமூலம் தொடர்பான எமது யோசனைகளை எதிர்வரும் வாரம் நீதியமைச்சரிடம் முன்வைப்போம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் சட்டமூலங்களுக்கும்,செயற்பாடுகளுக்கும் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க போவதில்லைதொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் கடந்த மே தின கூட்டத்தில் வெளியிடப்பட்ட யோசனைகளை செயற்படுத்துவது தொடர்பில் தொழில் அமைச்சருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம் என்றார்.

## தமிழ் மக்களது தீர்வு விடயத்தில்...

அரசாங்கத்தோடு இணைந்து ஒத்துழைப்புக்களை வழங்க முன்வருகிறார்கள் என நினைக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் கட்சிகளுடனான சந்திப்பு எதிர்வரும் வாரங்களில் நடைபெற உள்ளதால், இதன்போது தமிழ் மக்களின் அரசியல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் விரிவாக கலந்துரையாட உள்ளதாக புத்திஜீவிகள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## யாழ். தையிட்டி போராட்டம்...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

“தையிட்டி பகுதியில் அனுமதியின்றி கட்டப்பட்டிருக்கும் விகாரைக்கு எதிராக தமிழர் முன்னெடுக்கும் போராட்டம், அவர்களின் வாழ்வுரிமைக்கானது.

மாறாக இந்த போராட்டம் பௌத்த மதம் அல்லது சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமல்ல.

எங்களுடைய போராட்டத்தின் நியாயத்தையும் நேர்மைத்தன்மையையும் சகோதர சிங்கள மக்கள் விளங்கிக்கொண்டு இந்த பௌத்த பேரினவாத அரசை இத்தகைய கட்டுமானங்களை அகற்றுமாறு அழுத்தம் கொடுப்பார்களாக இருந்தால் அது இந்த போராட்டத்தின் அடுத்தகட்ட பரிணாமமாக அமையும்“ என்றார்.

## 5 மாகாணங்களுக்கு...

எனவே சில மாகாணங்களின் ஆளுநர்களுக்கு இராஜினாமாச் செய்யுமாறு ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

இதில் வடமேல் மாகாணம், வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம்,ஊவா மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் என்பன அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இராஜினாமா செய்த பின்னர் புதிய ஆளுநர்கள் நியமனம் பிரிட்டனிலிருந்து ஜனாதிபதி நாடு திரும்பியதும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சட்டவிரோதமாக வெளிநாடு...

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆண்கள் நால்வரையும் இரண்டு பெண்களுளையும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க கடற்படையினர் ஏற்பாடு செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 07 மற்றும் 14 வயதுடைய இரண்டு சிறுவர்களும் 16 வயதுடைய சிறுமியொருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பகுதியைச் சேர்ந்த 38 வயது படகின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளனர்.

## அமெரிக்காவில் நடந்த...

குழந்தைகள் வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக சென்றுள்ளார்.

இதன்போது வைத்தியர்கள் மேற்கொண்ட பரிசோதனையில் மூளையிலிருந்து இதயத்துக்கு இரத்தத்தை எடுத்து செல்லும் இரத்த நாளம் சிசுவுக்கு சரியாக வளர்ச்சி அடையாமல் இருப்பது தெரிய வந்துள்ளது.

இது வீனஸ் ஆப் கேலன் என்ற குறைபாடாகும். இந்த குறைபாட்டினால் இரத்த ஓட்டத்தை மெதுவாக்கும். இரத்தம் நுண் குழாய்களுடன் நேரடியாக இணைவதற்கு பதிலாக நேரடியாக நரம்புகளுடன் இணையும்.

இதன் காரணமாக நரம்புகளுக்குள் அதிக இரத்த அழுத்தத்தை உருவாக்கும். நரம்புகளில் இந்த கூடுதல் இரத்த அழுத்தம் ஏற்படும் போது பல பிரச்சினைகள் உருவாகுமென தெரிவித்துள்ளனர்.

மேலும் இதயம் செயல் இழப்பு மற்றும் மூளை பாதிப்பு ஏற்பட்டு உயிர் இழக்கும் அபாயமும் ஏற்படும்.

மிகவும் அரிய வகை நோயான இந்த குறைபாட்டை அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்ய டேரன் ஆர்பாக் தலைமையிலான மருத்துவ குழுவினர் மிகவும் சவாலான இந்த மூளை அறுவை சிகிச்சையை ஒரு ஊசி மூலம் வெற்றிகரமாக செய்துள்ளனர். 24 வயதுடைய தாயொருவரின் சிசுவுக்கே 03 மணிநேரம் இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகில் முதல் முறையாக இந்த அறுவை சிகிச்சையினை அமெரிக்க மருத்துவ குழுவினர் செய்து சாதனை படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எங்கள் கருத்து...

# பணிப்பெண்கள் பாதுகாப்புக்கு உரிய உத்தரவாதம் அவசியம்!

உறுதியளி க்கப்பட்டவாறு சம்பளம் வழங்கப்படாமை, உடல்ரீதியான துன்புறுத்தல்கள், பாலியல் ரீதியான உபத்திரவங்கள், ஓய்வும் உறக்கமும் இன்றி நாள் முழுக்க வேலை செய்யுமாறு பலவந்தப்படுத்தப்படல், போலியான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி மிரட்டுதல் போன்ற பலவிதமான துன்பங்களை தாங்கள் சந்தித்ததாக அங்கிருந்து இடைநடுவில் திரும்பி வந்த பெண்கள் பலர் கூறியதை ஊடகங்களில் நாம் பார்த்துள்ளோம்.

உடலில் இரும்பு ஆணிகள் ஏற்றப்பட்ட நிலையில் இலங்கைப் பெண் ஒருவர் நாடு திரும்பிய பரிதாபத்தையும் நாம் அறிந்துள்ளோம். இவை தவிர அந்நாடுகளில் சிக்கலில் அகப்பட்டுக் கொண்ட பெண்கள் பலர் அங்குள்ள இலங்கைத் தூதரகங்களில் தஞ்சமடைந்த சம்பவங்களும் உள்ளன.

குடும்ப வறுமையைத் தீர்த்துக் கொள்வதற்காக பல இடங்களிலும் கடன்பட்டு மத்திய கிழக்குக்குச் செல்கின்ற எமது பெண்கள், இவ்விதமான துன்பங்களை எதிர்கொள்கின்ற போது, அவர்களது கனவுகளே நிறைவேறாமல் போகின்றன. பணத்தையும் இழந்து, உடல் உபாதைகளையும் எதிர்கொண்டு அவர்களின் எதிர்காலமே இருளடைகின்றது.

மத்திய கிழக்குக்கு தொழில்வாய்ப்புக்காகச் செல்கின்ற அனைத்துப் பெண்களுக்கும் இவ்விதமான கொடுமை நேருவதில்லை. பணிப்பெண்கள் பலர் உரிய வேதனம் பெற்று தங்களது குடும்ப வறுமையைப் போக்கிக் கொண்டுமுள்ளனர். மேலும் பலர் இருளுக்குள் தள்ளி விடப்பட்டுள்ளனர். வீட்டின் எஜமானர்களின் நடத்தையிலேயே அப்பெண்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது எனலாம்.

இலங்கைப் பணிப்பெண்கள் பலர் அனுபவிக்கின்ற துன்பங்களின் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் மற்றொரு செய்தியொன்று ஊடகங்களில் வெளியாகியிருக்கின்றது. மஹியங்கனையைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் சவூதி அரேபியாவுக்கு பணிப்பெண் தொழிலுக்காகச் சென்று பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்கொண்ட பின்னர் கடந்த புதன்கிழமை நாடு திரும்பியிருக்கின்றார்.

மஹியங்கனை, தம்பனை, குருகும்புர கிராமத்தைச் சேர்ந்த 24 வயதுடைய அந்தப் பெண் குடும்ப வறுமை காரணமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் மூலம் சவூதி சென்று பணிப்பெண்ணாக பணிபுரிந்துள்ளார். அவர் நாடு திரும்பியதையடுத்து கூறுகின்ற அனுபவங்கள் உள்ளத்தை உருக்குகின்றன.

நீண்ட நேரம் வேலைசெய்யுமாறு பலவந்தப்படுத்தப்பட்டதாகவும், தலைமுடியைப் பிடித்து இழுத்து தரையில் தள்ளிவிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ள அவர், பாலியல் ரீதியில் இம்சைகளை எதிர்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பெண்ணின் துன்பங்கள் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துவதுடன், இலங்கைப் பணிப்பெண்கள் எதிர்காலத்தில் பூரண பாதுகாப்புடன் மத்திய கிழக்கில் தொழில் புரிவதற்கான உத்தரவாதம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதேசமயம் குடும்பப் பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்வதனால், அக்குடும்பங்களில் உருவெடுக்கின்ற சமூக சீரழிகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

## விபத்தில் சிக்கிய....

இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பிலிருந்து, 33 ஆயிரம் லீற்றர் டீசலுடன் ஹப்புத்தளை நோக்கிப் பயணித்த எரிபொருள் பௌசர், வீதியை விட்டுவிலகி அருகிலுள்ள வீடொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, காயமடைந்த பௌசரின் உதவியாளர் பங்கட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்து காரணமாக வீட்டுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் வீட்டிலுள்ளவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தினால், பௌசரிலிருந்து டீசல் கசிவு ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து டீசல் வெளியேறுவதாகவும், பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் அதனை பாத்திரங்களில் நிரப்பிச் செல்வதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கடலோர பகுதிகளில்...

தென் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அவ்வப்போது மழை பெய்யும். அத்துடன், சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கு மேல் கடும் மழை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் குறிப்பாக மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பில் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசுவதுடன் காற்றின் வேகம் மணிக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும். பேருவளையிலிருந்து காலி மற்றும் மாத்தறையூடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணிக்கு 4050 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாகப் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கு போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## குறைந்த வட்டியில்...

திட்டத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் இருப்பவர் அல்லது வெளிநாட்டு வேலைவாய்பை நிறைவு செய்து நாடு திரும்பிய பின்னர் நாட்டுக்குள் தொழில் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவராக இருக்க வேண்டும் என்பதே இக்கடன் வசதியை பெறுவதற்கான அடிப்படை தகுதி என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சுமார் 04 வீத மிகக் குறைந்த வட்டியில் இந்தக்கடன் வசதியை பெற்றுக் கொடுக்கும் போது அரச மற்றும் வர்த்தக வங்கிகளுக்கு பிரச்சினை ஏற்படாதவாறு கடன் வழங்கும் திட்டம நடைமுறைப்படுத்தப்படும். வங்கிகளூடாக இந்தக் கடன் வசதியை பெற்றுக் கொடுக்கும் போது 22 வீத வட்டி அறவிடப்படும். என்றாலும் வெளிநாட்டு வேலைவாய்பிலுள்ள அல்லது நாடு திரும்பி தொழிற்துறையில் ஈடுப்பட்டுள்ளவர்களுக்கு 04 வீத வட்டியிலேயே கடன் வசதி பெற்றுகொடுக்கப்படும். வங்கிக்கு இழக்க நேரிடும் 18 வீத வட்டியை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் குவைத் நட்டஈட்டு நிதியத்திலிருந்துபெற்றுக் கொடுக்கப்படுமென்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

குவைத் நட்ட ஈட்டு நிதியத்துக்குரிய 500 கோடி ரூபா வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொறுப்பில் இருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர்,வெளிநாட்டு வேலை வாய்பை பெற்றுச் சென்றுள்ள வர்களுக்கு எதிர்காலத்தில் உச்ச அளவில் நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படுமென்றும் இக்கடன் திட்டத்துக்கு மேலதிகமாக பல நிவாரணத் திட்டங்களை செயற்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் சென்றுள்ளவர்களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்களது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக உறுதிச் சீட்டு (*voucher*) முறையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் இது தொடர்பில் பிரதேச செயலாளர் அலுவலகங்களிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக தேவையான தரவுகள் பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுச் சென்றுள்ளவர்களின் பிள்ளைகளுக்கு பிரபல பாடசாலைகளில் அனுமதியை பெற்றுக்கொடுப்பதற்கான கோட்டா முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான திட்டமொன்றும் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாயணக்கார தெரிவித்தார்.

## நாட்டின் நிதியியல் செயற்பாடுகள்...

பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படுமென நம்புவதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தென்கொரியாவின் இன்ஸியான் நகரில் கடந்த 02 05 ஆம் திகதிவரை நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56 ஆவது வருடாந்தக்கூட்டத்தில் பங்கேற்ற வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வியாழக்கிழமை (04) நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர்களின் கூட்டத்தில் இலங்கையில் சார்பில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது: கொவிட் 19 பெருந்தொற்று, அனைத்து நாடுகளையும் பல்வேறு சவால்களுக்கு உட்படுத்தியிருக்கின்றது. அதனையடுத்து நடைமுறைப்படுத்தப்பட்ட இறுக்கமான நாணயக்கொள்கையின் விளைவாகக் கடந்த காலங்களில் பொருளாதார வளர்ச்சி தொடர்பான குறிகாட்டிகள் மந்தகரமான நிலையிலேயே உள்ளன.

நிதியியல் இடைவெளி மற்றும் கையிருப்பின் அளவு என்பனவும் பாதகமான மட்டத்திலேயே காணப்படுகின்றன.

எனவே இந்நெருக்கடிகளால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் இப்பொருளாதார சவால்களை உரியவாறு கையாள்வதற்கு அவசியமான வழிகாட்டல்களை ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேசக் கட்டமைப்புக்கள் வழங்கவேண்டியது அவசியம் என்று கருதுகின்றேன். அதேவேளை கொவிட் 19 பெருந்தொற்றினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவும் நோக்கில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி அதன் சொந்த நிதியிலிருந்து 20.5 பில்லியன் டொலர்களை ஒதுக்கீடு செய்தமையைப் பெரிதும் பாராட்டுகின்றேன். கடந்த ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் கூட்டத் தொடருக்கு நான் தலைமைதாங்கிய வேளையில், இலங்கை எதிர்பாராத மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்தது.

உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்கள், கொவிட் 19 பெருந்தொற்று மற்றும் உக்ரேன் ரஷ்யப் போர் என்பனவும் அந்நெருக்கடிக்குக் காரணமாக அமைந்திருந்தன.

அப்போது ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளடங்கலாகப் பல்வேறு இருதரப்பு மற்றும் பல்தரப்புப் பங்காளிகள் எமக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு முன்வந்தனர்.

இருப்பினும் தற்போது நாம் மிகமோசமான நெருக்கடியிலிருந்து ஓரளவுக்கு மீண்டிருக்கின்றோம். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடந்த 10 12 மாதங்களாக மிகவும் கடினமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். அதன் பயனாக இப்போது பணவீக்கம் படிப்படியாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. ஆனாலும் தற்போது நாம் அடைந்திருக்கின்ற முன்னேற்றங்களைக்கொண்டு திருப்தியடைந்துவிடமுடியாது என்பதை அறிவோம். இந்த முன்னேற்றங்களைத் தொடர்ந்து பேணுவதே எம்மத்தியிலுள்ள சவாலாக இருக்கின்றதென்றும் தெரிவித்தார்.

நாம் கடந்தகால அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டிருப்பதுடன், மிகவும் கடினமான மறுசீரமைப்புக்களை முன்னெடுத்துவருகின்றோம்.

துடிப்பானதும், மீளெழக்கூடிய தன்மையுடையதுமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், நுண்பாகப்பொருளாதார சவால்களை உரியவாறு கையாள்வதற்கும் அவசியமான அடிப்படைகளைக் கட்டியெழுப்பியிருப்பதுடன் முறையான பொருளாதார மறுசீரமைப்புச்செயற்திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின்கீழ் சுமார் 03 பில்லியன் டொலர் கடனுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டமையை அதன் ஓரங்கமாகக் குறிப்பிடமுடியும்.

அதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கு அமைவாக உரியவாறான கடன்மறுசீரமைப்புச் செயன்முறையை முன்னெடுப்பதற்கான கடப்பாட்டை நாம் கொண்டிருக்கின்றோம். எனவே கடன் சுமைக்கு முகம் கொடுத்திருக்கும் இலங்கையின் மீட்சிக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வகையில் பொதுவானதோர் கடன்சலுகை வழங்கல் திட்டத்துக்கு இணங்குமாறு அனைத்துத்தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் வெகுவிரைவில் நாட்டின் நிதியியல் செயற்பாடுகள் முன்னேற்றத்தைக் காண்பிக்கும் என்றும், பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படும் என்றும் நம்புகின்றோம்.

மறுபுறம் அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளும்போது எழக்கூடிய நிதிசார் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான நிதியியல் உதவிகளை எமது இருதரப்பு மற்றும் பல்தரப்புப் பங்காளிகள் வழங்க முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

## 03ஆம் மன்னராக முடிசூடினார் சார்ள்ஸ்...

மில்லியன் கணக்கானோர் கண்டு ரசித்தனர். பிரிட்டன் நேரப்படி நேற்று முற்பகல் 11 மணிக்கு முடிசூட்டு நிகழ்வு ஆரம்பமானது.

முடிசூட்டு ஆபரணங்களில் முதன்மையானதான முடி மன்னர் சார்ல்ஸின் தலையில் சூட்டப்பட்டது. இந்த மகுடம் இதற்கு முன் 1953ஆம் ஆண்டு இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவில் அவருக்கு சூட்டப்பட்டது. தங்கத்தால் ஆன அந்த மகுடத்தில், உலகின் ஆக விலையுயர்ந்த மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. அதன் எடை சுமார் 02 கிலோ.

மன்னர் சார்ல்ஸும் கமிலாவும் வெஸ்ட்மின்ஸ்டர் அபேவுக்குச் (*Westminster Abbey*) செல்ல ஒரு குதிரை வண்டியையும் திரும்புவதற்கு மற்றொரு வண்டியையும் பயன்படுத்தினர். திரும்பும் வண்டி பாரம்பரிய தங்க முலாம் பூசப்பட்டதாக காணப்பட்டது.

1300ஆம் ஆண்டு முதலாம் எட்வர்ட் மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்ட 02 மீட்டர் உயரம் கொண்ட அரியணையில் மன்னர் சார்ள்ஸ் அமர்ந்தார். இது பிரிட்டனின் ஆகப் பழமையான அரியணை என கூறப்படுகின்றது.



# IMF யிடம் கேட்காமல் அதன் அனுமதி இல்லாமல் எதனையும் செய்ய முடியாது

## பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்

**முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் எதிர்கால திட்டங்கள் யாவை?**

இந்த அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத் திட்டங்களும், எதிர்கால திட்டங்களும் எமக்கு மிகத் தெளிவானதாகும். எமது முக்கிய நோக்கம் அந்தச் செயற்பாடுகளைத் தடுத்து எமது நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பதற்கு ஏற்றவாறான சூழ்நிலையினை உருவாக்கிக் கொடுப்பதாகும். இந்த அரசாங்கம் அராஜகத்தை நோக்கி நகர்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இது சர்வாதிகார அரசை நோக்கிய நகர்வாகும். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இயற்றும் முயற்சி வெற்றி பெற்றால், எந்த ஒரு தொழிற்சங்கங்களுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் ஜனநாயக வேலைத்திட்டங்களை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காது, இவை அனைத்தும் பயங்கரவாதச் செயற்பாடுகள் என்று முத்திரை குத்தப்படும். அதற்கு மிகவும் பரந்த வரையறை உள்ளது. அந்தச் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி, அவற்றுக்கு வழங்கப்படும் தண்டனை இருபது வருட சிறைத் தண்டனையாகும். அதன் ஆறாவது பிரிவின் கீழ் ஊடகவியலாளர்கள் ஏதேனும் சம்பவம் தொடர்பில் புகைப்படம் அல்லது அறிக்கை எழுதினால், ஒத்துழைப்பு வழங்கியதாகக் கருதப்பட்டு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிப்பதற்கான வாய்ப்புள்ளது. இதற்கு காரணம், IMF ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த முயலும் போது, கண்டிப்பாக பாரியதொரு எதிர்ப்பு கிளம்பும். அதை எதிர்கொள்ளவே இவர்கள் இந்த நிபந்தனைகளை போடுகிறார்கள். உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க மாட்டோம் என்று அரசாங்கம் முதலில் கூறியது, ஆனால் இப்போது அதைச் செய்யத் தயாராகி வருவதாக அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. இவற்றுக்கு எதிராக நிச்சயம் மக்கள் திரள்வார்கள் என்பது அரசுக்கு தெரியும். இங்கு மேற்கொள்ளப்படுவது அடக்குமுறையாகும். அடக்குமுறைக்கான சட்டங்களே உருவாக்கப்படுகின்றது.

**நிதி நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்ற தீர்வுகளை முன்வைத்த சர்வதேச நிறுவனங்களிலிருந்து பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்ய நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவின் உறுப்பினர் என்ற ரீதியில் அதற்கு சிபார்சினை வழங்கி, அதன் பிரகாரம் பிரான்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளுக்கு அமைவாக IMF உடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு பாராளுமன்றத்தில் ஆதரவாக வாக்களிக்காமை ஆச்சரியமளிப்பதாக சிலர் கருத்து தெரிவிக்கின்றனர். இவ்வாறு செய்ததற்கு என்ன காரணம்?**

IMFக்குச் செல்வது அல்லது செல்லாதது அல்ல. சென்றதன் பின்னர் IMF உடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுத்துச் செல்லும் முறைகள் மற்றும் அணுகுமுறைகள் தான் தொடர்பான எனது எதிர்ப்பாகும். IMF உடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும்போது எமது நாட்டின் தேவை மற்றும் எமது நாட்டின் நிலை தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது தோல்வியடைந்துவிடும் என்று அரசுக்கு பெரும் பயமிருந்தது. எனவே IMF யிடமிருந்து வரும் யோனைகளுக்கு அரசாங்கம் இணங்கியது. வெற்றிகரமான பேச்சுக்களை மேற்கொள்ளுவது இவ்வாறல்ல. கடைசியில் நிதி அமைச்சுக்கு, திறைசேரிக்கு எந்த பொறுப்பும் இருக்கவில்லை. வட்டி விகிதங்கள் அனைவரையும் பாதிக்கின்றது. வட்டி வீதத்திற்கு அழுத்தங்களை மேற்கொள்வதற்கு மத்திய வங்கிக்கோ அல்லது திறைசேரிக்கோ அதிகாரமில்லை. IMF யிடம் கேட்காமல் அதன் அனுமதி இல்லாமல் எதனையும் செய்ய முடியாது. நிதிக் கொள்கை தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு எமக்குச் சுதந்திரமில்லை. இந்த IMF அறிக்கையின் சில விடயங்கள் தொடர்பில் தினம் தினம், மாதத்திற்கு மாதம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இவை எல்லாம் கடுமையான நடவடிக்கைகள் அல்ல.

இந்த பேச்சுவார்த்தைகள் மிகவும் தவறான முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. சில நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் வெற்றிகரமாக பேச்சுவார்த்தை நடத்திய நாடுகள் இதனை விடவும் இணக்கப்பாட்டிற்கு அமைய துணிச்சலான முறையில் செயல்படுகின்றன. இந்த விஷயங்களில் உடன்படலாமா வேண்டாமா எனப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும். இதுதான் இந்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை. மின் கட்டணத்தை இவ்வாறு உயர்த்தும்போது, 25 சதவீதமானோருக்கு கட்டணம் செலுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது. இது போன்ற விடயங்களை முன்வைத்து சமூக நீதிக்கு ஏற்ப சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை தயாரிப்பது அவசியம். இந்த உண்மைகளை முன்வைத்தால், இந்த IMF முயற்சி தோல்வியடையும் என்று அரசாங்கம் பயந்தது.

**அவ்வாறாயின் மிகவும் பொருத்தமான நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவில் ஏன் நீங்கள் உறுப்பினராகச் செயற்பட்டீர்கள்?**

அந்த குழுவிற்கும் IMF பேச்சுவார்த்தைக்கும் இடையில் தொடர்புகளில்லை. அந்த குழு IMF அனுமதி கிடைத்ததும் எதற்கு இணங்குவது, எதற்கு உடன்படுவதில்லை என்பதைத் தீர்மானிக்கவில்லையே. ஆலோசனை சபையாக ABC நியமிப்பது என்ற விடயம் மட்டுமே குழுவில் கலந்துரையாடப்பட்டது. இந்த விடயத்தை குழப்புவதற்கான திட்டத்துடன் முன்வைக்கப்பட்ட வாதமே இது. இதில் நேர்மை இல்லை.

**இது உங்கள் அரசியல் குழுவிற்கு மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு குறுகிய அரசியல் நோக்கமாக இருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள்?**

இந்த நடவடிக்கைகளை நாங்கள் அரசியல் தந்திரமாக அல்லாமல், நமது நாட்டு மக்களின் வாழ்வுரிமை குறித்த அக்கறையின் காரணமாகவே மேற்கொண்டோம். இந்த வகையில் மக்களால் கட்டணத்தைச் செலுத்த முடியாது. மின்சாரக் கட்டணம் முன்னூற்று ஐம்பது சதவிகிதம் அதிகரிக்கும் போது, அதை மக்கள் எப்படித் தாங்குவார்கள்? குறுகிய அரசியல் நோக்கத்திற்காக நாம் இவற்றைச் செய்யவில்லை. குறைந்த வருமானம் பெறுபவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பாதுகாக்க நாங்கள் செயற்படுகின்றோம். குறுகிய கால இலக்கை அடைவதற்கான எந்தத் தேவையும் எமக்கில்லை.

**பொது வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று கூடியுள்ளது. இதன் நோக்கம் என்ன?**

எதிர்க்கட்சியினுள் பல்வேறு சித்தாந்தங்கள் உள்ளன. கருத்து பிரச்சினை அல்ல. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்குப் புறம்பாக வேறு அதிகார சபையினை உருவாக்கி, சமூக ஊடகங்களைக் கூட கட்டுப்படுத்துவதற்கு ஆயத்தமாகின்றார்கள். இதனை நாம் எதிர்க்கின்றோம். நாம் இவ்வாறான விடயங்களுக்கு எதிராகச் செயற்படுவதோடு, பெரியளவிலான ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு எதிராகவும் செயல்படுகிறோம். எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து எமது நாட்டிற்கு 6.4 பில்லியன் அமெரிக்க டாலர்களை பெற முடியும். இது கடனல்ல. IMF கடனை விட இரண்டு மடங்கு இதிலிருந்து கிடைக்கும். IMF யிடமிருந்து கிடைப்பது கடனாகும். அதனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். இதற்கு 24 மாதங்கள் இருந்தது வழக்கு தொடர்வதற்கு. இப்போது 23 மாதங்கள் கடந்துள்ளது. இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு எதாவது காரணங்கள் இருக்கின்றனவா. இதைப் பற்றித் தேடிப் பார்க்க வேண்டியுள்ளது. இந்த வழக்கை முழுவதுமாக இலங்கையில் சமுத்திரவியல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை தொடர வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது. இது இலங்கையின் கடல் எல்லைக்குள் இடம்பெற்ற நிகழ்வாகும். எமது நாட்டிற்கு இந்த இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை அவசியமாகும். IMF நிதியைப் பெறுவதற்கு மக்களுக்குப் பாதிப்பான நிபந்தனைகளுக்கு உடன்பட வேண்டியுள்ளது. Express Pearl இன் மூலம் கிடைக்கும் பணத்திற்கு எந்த ஒரு நிபந்தனைகளும் இல்லை. எமக்குரிய பணத்தை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து நாடு எதிர்நோக்கும் இந்த இக்கட்டான நிலை தொடர்பில் செயற்பட வேண்டும். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில், முறைகேடுகளைத் தடுப்பதற்காக முனைப்புடன் செயல்படுவதற்கே எதிர்க்கட்சியான நாம் இருக்கின்றோம்.

**எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டுள்ளமையின் நோக்கம் எதிர்காலத்தில் கூட்டணி அமைப்பது என்பதே பலரது கருத்தாக உள்ளது. எனினும் இந்த கூட்டணியில் உள்ள சில கட்சிகள் உங்களுக்கு எதிரான அரசியல் சித்தாந்தங்களைக் கொண்டுள்ள கட்சிகள்தானே?**

இன்னும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. இப்போதைக்கு எமக்குள்ள பணி மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும். அது கட்சியினால் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். அரசாங்கத்தின் சில விடயங்கள் தொடர்பாகவே நாம் இந்த கூட்டணியை உருவாக்கினோம். உதாரணமாக, உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைக் குழுவுக்கு அழைப்பது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை எடுத்துக் கொண்டால் பாரிய சிக்கல்கள் உள்ளன. அவ்வாறாயின், வேறு எந்தப் பிரச்சினைக்காகவும் சுயாதீனமான நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு எமது குடிமக்கள் எவருக்கும் வாய்ப்பில்லை. அதாவது, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நாடாளுமன்றக் குழுவின் முன் அழைக்கப்படும் போது அவர்களிடம் குறுக்கு விசாரணை செய்யலாம். அதேபோன்று நீதிமன்றச் செயற்பாடுகள் தொடர்பில் உத்தரவு வழங்குவதற்கும் வாய்ப்புள்ளது. அது இந்நாட்டின் நீதிமன்றத்தில் கைவைக்கும் செயலாகும். எனவே இதை நியாயப்படுத்த முடியாது. அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டின்படி, பாராளுமன்றத்துக்கு செயற்பாடுகள் உள்ளன. நீதித்துறைக்கும் செயற்பாடுகள் உள்ளன. பாராளுமன்றத்தை ஆக்கிரமிக்க முயன்றால், உச்ச நீதிமன்றத்தின் விடயங்களில் சுதந்திரத்தை இழக்க நேரிடும். இதற்கு எதிராகவே நாங்கள் முன்வந்துள்ளோம். எவ்வாறான கருத்தைக் கொண்டிருந்தாலும் அரசியல் ரீதியாக அனைவரும் எதிர்க்கட்சிகளாக முழுமையாக ஒன்றுபடுவார்கள்.

**எதிர்வரும் தேர்தலில் கூட்டணி ஒன்று அமைக்கப்படுமா?**

அப்படி ஒரு பிரச்சினை இப்போது எழவில்லை. இன்னும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. இப்போதைக்கு மக்களின் சுதந்திரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. தேர்தலின் போது எவ்வாறு கூட்டணி அமைப்பது? மற்றும் என்ன செய்வது என்ற விடயங்கள் குறித்து பின்னர் கவனம் செலுத்தப்படும்.

**புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு பதிலாக மாற்று வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறும் எதிர்க்கட்சிகளின் திட்டம் என்ன?**

இது தொடர்பில் எனது தலைமையில் எதிர்க்கட்சி ஒரு குழுவை நியமித்துள்ளது. நாம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிரானவர்கள். தற்போதுள்ள சட்டத்திற்கும் நாம் எதிரானவர்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நாங்கள் விரும்பவில்லை. இது பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் ஆபத்தானது. எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் அரசியல் கட்சிகள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளன. இது தொடர்பில் சிறந்த தீர்வு குறித்து ஆழமாக விவாதிப்பதற்காகவே எதிர்க்கட்சித் தலைவரினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. தற்போது நாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வை எட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

**IMF தொடர்பில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

நாம் அதற்கு எதிராக வாக்களித்தோம். என்றாலும் அது நிறைவேற்றப்பட்டுள்ளது. நிறைவேற்றப்பட்டது என்பதால் எதிர்கால அரசாங்கத்திற்கு அந்த ஷரத்துக்கள் தொடர்பில் பேச முடியாது என்பதல்ல.

சுபத்ரா தேசப்பிரிய
தமிழில் எம்.எஸ். முஸப்பிர்



# நாட்டின் எதிர்காலத்தை பற்றி சிந்தித்தே நான் ஆதரவாக வாக்களித்தேன்

## கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எச். எம். பௌசி

**ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்கள் கட்சியின் நிலைப்பாட்டிற்கு அப்பால் சென்று சர்வதேச நாணய நிதியம் தொடர்பான வாக்கெடுப்பில் அதற்கு ஆதரவாக ஏன் வாக்களித்தீர்கள்?**

கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்படவில்லையே. சபையிலிருந்து வெளியேறுவது என்பது நிலைப்பாட்டை அறிவிப்பதல்லவே. சபையிலிருந்து வெளிநடப்புச் செய்வது என்பது விருப்பத்தைத் தெரிவிப்பதைப் போன்ற ஒன்றாகும். உண்மையிலேயே அவர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தது வெட்கத்தினாலாகும் என்றே எனக்கு விளங்குகின்றது.

ஒரே நேரத்தில் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்த முடியாததால் அவ்வாறு செய்ததாகவே நாட்டு மக்கள் பார்த்தனர். எதிர்ப்பதானால் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் சபையில் அமர்ந்து எதிர்க்க வேண்டும். இல்லையென்றால் ஆதரவளிக்க வேண்டும். அப்படியும் இல்லையென்றால் சபையில் இருந்து கொண்டே இது இரண்டையும் செய்யாமல் வாக்களிப்பிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டும். அவர்கள் வெளியேறிச் சென்றது விருப்பத்துக்கு நேரடியாகவே உடன்பட முடியாததனாலாகும். அவர்கள் எதிர்த்திருந்தால் கட்சியின் கருத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் நானும் கண்டிப்பாக எதிராக வாக்களித்திருப்பேன்.

**எனினும் கட்சியைச் சேர்ந்த அனைவரும் வெளியேறிச் சென்றார்கள். ஏற்கனவே அவர்கள் கலந்துரையாடியிருந்ததாகவும் தெரிய வருகின்றதே?**

அப்படியான கதையும் உள்ளது. நான் அந்த சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளவில்லை. அப்படியாயின் எனக்கு அறிவித்திருக்க வேண்டும். சபையிலிருந்து வெளியேறுவதாக என்னிடத்தில் ஒருவரும் கூறவில்லை.

**ஏன் நீங்கள் ஆதரவாக வாக்களித்தீர்கள்?**

இந்த நேரத்தில், நாட்டினை கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவது மட்டுமே உள்ளது. இது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். எமது கட்சியில் அவ்வப்போது பேசப்படும் விடயம், இதற்கான ஒரே தீர்வு சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெறுவது மட்டுமே என்பதாகும். அந்த தீர்மானத்தின்படி நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்தே நான் ஆதரவாக வாக்களித்தேன். .

**அவர்கள் வாக்களிக்காமல் தவிர்த்ததைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

அவர்கள் வெட்கத்தினாலேயே அவ்வாறு செய்திருப்பார்கள் என நினைக்கிறேன். அதேபோன்று நாம் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் சரியான நேரத்தில் மக்களைப் பற்றிச் சிந்தித்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்காகவேதான் நாம் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றோம். அவ்வாறு மக்கள் பிரதிநிதிகளாக நாம் தவிர்ந்து கொள்வது என்பது மக்கள் விருப்பத்திற்கு மாறு செய்வதாகும். இதேநேரம் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என எமது கட்சியின் தலைவர்தானே கூறினார். எமது கட்சியின் தலைவர் கடந்த நாட்களில் "முதலில் நானே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் எனக் கூறினேன்" எனக் கூறி வந்தார். அவ்வாறு கூறிவிட்டு கடைசியில் சபையிலிருந்து வெளியேறியது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது

**உங்களுக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளதே...?**

என்னிடம் எவரும் உத்தியோகபூர்வமாக இதுவரை இது பற்றி தெரிவிக்கவில்லை. அங்கிருந்தும், இங்கிருந்தும் தகவல்கள் வருகின்றன. தொலைக்காட்சியில் பார்த்தேன். எனினும் எனக்கு அதுபற்றி எதுவும் தெரியாது. இந்நாட்களில் எனக்குக் கொஞ்சம் உடல் நலக் குறைவாக உள்ளது. எங்கும் செல்ல முடியாதுள்ளது. என்னைச் சந்திக்க வருபவர்களையும் வரையறுத்துள்ளேன்.

**சில வேளை நீங்கள் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**

அதற்கு நாட்டில் நீதிமன்றம் உள்ளதுதானே. நாம் சட்டத்தினால் அதனைப் பார்த்துக் கொள்வோம்.

**உண்மையிலேயே நாட்டைப் பற்றிச் சிந்தித்தே நடந்து கொண்டீர்களா? அல்லது.....?**

ஆமாம். உண்மையிலேயே நாட்டைப் பற்றிச் சிந்தித்து நான் இந்த தீர்மானத்தை மேற்கொண்டேன். கட்சி என்ற வகையில் நியாயமான காரணங்களுடன் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருந்தால், கட்சியின் கருத்தாக அதற்கு நான் இணங்கிப் போயிருப்பேன். எனினும் நாடு இந்த சந்தர்ப்பத்தில் முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உள்ள வேறு வழிகள் என்ன? குறைந்தது ஒரு வழியையாவது முன்வைக்க வேண்டும்தானே? வழிகள் எதுவுமில்லாமல் தற்போதைக்கு உள்ள ஒரே வழியையும் உதறிவிட்டு மீண்டும் வரிசை யுகத்தினை ஏற்படுத்த பங்களிப்புச் செய்வதற்கு என்னால் முடியாது. நான் பல வருடங்களாக கொழும்பு மாவட்டத்தில் தேர்தல்களில் கூடிய வாக்குகளுடன் வெற்றி பெற்றவன். எனது அரசியலில் கட்சி, நிறம், இனம், மத பேதங்கள் இல்லை. எந்த ஒரு தரப்பினருக்கும் அதிகமாக உதவி செய்திருப்பதாக எப்போதாவது எனக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் வந்திருக்கின்றதா? என்னிடம் மக்கள் சந்திப்புக்கு என நாட்கள் இல்லை. எல்லா நாளும் மக்கள் சந்திப்பு நாட்களே. நான் இருந்தால் எந்த நேரத்திலும் என்னைச் சந்திக்க முடியும். என் தொலைபேசி எல்லா நேரமும் செயலில்தான் இருக்கும். இதனை ஊடகவியலாளர் என்ற வகையில் நீங்கள் அறிவீர்கள். நான் உண்மையான மக்கள் பிரதிநிதி. எதிர்கால பரம்பரையினருக்கு நாம் நாட்டை மீதப்படுத்த வேண்டும்.

**உங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கொன்று உள்ளது. இந்த வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்து அந்த வழக்கிலிருந்து தப்புவதற்கு முயற்சிக்கின்றீர்கள் எனக் கூறினால்....?**

வழக்கிலிருந்து நான் தப்ப வேண்டும் என்றிருந்தால் இதற்கு முன்னரே என்னால் அந்த தீர்மானத்தை எடுத்திருக்க முடியுமே. வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எவ்வளவு காலம்? அதேபோன்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகி எவ்வளவு காலம்? அந்த நாட்களிலேயே, நான் அப்படி செயற்பட்டிருக்கலாமே. அடுத்தது தவறு செய்யாத நான் ஏன் பயப்பட வேண்டும்?

**நீங்கள் ஆரம்பத்திலேயே ஸ்ரீல.சு.கட்சி உறுப்பினர். தற்போது ஐக்கிய மக்கள் சக்தி. இவ்வாறு ஆதரவாக வாக்களித்தமை மற்றொரு கட்சி தாவுவதற்கான முயற்சியா?**

இதுவரைக்கும் என்னிடம் அவ்வாறான எந்த நிலைப்பாடும் இல்லை. நான் அரசனைப் போன்று இருந்தவன். அவ்வாறான கட்சியின் அமைச்சுப் பதவியைப் போட்டுவிட்டுத்தான் மக்களுக்காக இந்தக் கட்சியோடு இணைந்தேன்.

**மக்களைப்பற்றி சிந்தித்தே அவ்வாறு வந்ததாக நீங்கள் கூறுகின்றீர்கள். அவ்வாறு வந்த நீங்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக நினைக்கிறீர்களா?**

நிச்சயமாக இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் பலவீனமானது என்பதை இப்போது மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். பலவீனமான தலைமையை மக்கள் விரும்பவில்லை. மக்கள் செல்வாக்கு மேலும் மேலும் குறைந்து வருகிறது.

**தனிப்பட்ட ரீதியில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

இப்போது செய்யும் வேலைகளைப் பார்க்கும் போது ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைமை இல்லையே. நான் முன்னர் கூறியதைப் போல, அமைச்சுப் பதவி உள்ளிட்ட அனைத்தையும் கைவிட்டு விட்டே இக்கட்சியோடு இணைந்தேன். எனினும் கட்சியின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்து திருப்தி அடைய முடியாதுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் முஜிபுர் ரஹ்மானை உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளராக போடக் கூடாது என்று சொன்னவன் நான். ஏனெனில் தேர்தல் எந்த வகையிலேனும் ஒத்திவைக்கப்பட்டால் அது முஜிபுர் ரஹ்மானின் அரசியலையே பாதிக்கும் என்பதனாலாகும். வேறொருவரை நிறுத்துங்கள் என்றேன். ஏனெனில் முஜிபுர் ரஹ்மான் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறிய பின்னர், அந்த இடத்திற்கு வருவதற்கான அனைத்து வாய்ப்புகளும் எனக்கே இருந்தது. ஆனால் நான் அப்படி நடந்து கொள்ளவில்லை. அவரை மேயர் வேட்பாளராகப் போட வேண்டாம் என்றேன். கடைசியில் என்ன நடந்தது? அவருக்கு கழுத்தறுபட்டது போன்ற நிலை. அனுபவத்தில், நல்லெண்ணத்தில் சொல்வதை ஏற்காத தலைமையின் கீழ் எப்படி பணியாற்ற முடியும்?

**நீங்கள் கூறும் நல்ல தலைமைத்துவம் தற்போதைய ஜனாதிபதியிடம் உள்ளதா?**

நிச்சயமாக அவர் ஒரு சிறந்த தலைவர். அவருக்கு கிடைத்த முதல் சந்தர்ப்பம் இது என்றே நான் பார்க்கின்றேன். அதாவது மற்றைய எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர் இரண்டாமவராகவே இருந்தார். கிடைத்த முதலாவது சந்தர்ப்பத்திலேயே அவர் கூடியளவுக்கு நாட்டைப் பற்றிச் சிந்தித்துச் செயற்படுகின்றார்.

**எரிபொருள் வரிசை இருந்தது. கேஸ் வரிசை இருந்தது, ஒரு நாளைக்கு பத்து மணிக்கும் மேல் மின்துண்டிப்பு இருந்தது. அவ்வாறான நிலை இப்போது இல்லாமல் போயுள்ளது. இவை ஜனாதிபதியின் முயற்சியே எனக் கூறினால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?**

நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன். அவர் வந்திருக்காவிட்டால் இன்னமும் அந்த நிலைகள் தொடர்ந்திருக்கும். தனது தொலை நோக்கினைப் பயன்படுத்திய தலைவராகவே நான் அவரைக் காண்கின்றேன். முதலில் செய்ய வேண்டியது நாட்டைப் பற்றிச் சிந்திப்பதேயாகும்.

**ஐக்கிய மக்கள் சக்தி இன்று அதிகாரத்தில் இருந்திருந்தால் இந்த நிலையில் நாடு இருந்திருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

முடிவுகளைப் பார்ப்பதற்கு முதலில் நாட்டைப் பொறுப்பெடுத்திருக்க வேண்டுமே. நாட்டை ஆட்சி செய்வதற்குரிய தொலைநோக்கு பார்வை இல்லாததால், அதை செய்ய முடியாது என்பதால் அவர்கள் அதை ஏற்கவில்லை.

**சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவது மிக ஆபத்தான பூதத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டதைப் போன்று எதிர்க்கட்சியின் சிலர் பார்க்கின்றார்கள். உண்மையிலேயே உங்கள் நிலைப்பாடு என்ன?**

உலகின் பெரும்பாலான நாடுகள் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுள்ளன. எம்மால் அப்படி எதையும் காண முடியவில்லையே. வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான முறைகளை உருவாக்குவதற்கு எமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதற்காக சர்வதேச நாணய நிதியத்தைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை. தேவை எங்களுக்கேயாகும். அவர்கள் கடன் வழங்கினார்கள். நாட்டைக் கட்டியெழுப்பும் அதேவேளை கடனைத் திருப்பிச் செலுத்தும் முறைகளை நாம் உருவாக்க வேண்டும். அடுத்தது மக்கள் விடுதலை முன்னணியைத் தவிர மற்றைய அனைவரும் சர்வதேச நாணய நிதியத்தில் கடன் பெற வேண்டும் என்றே கூறினார்கள். இப்போது ஏன் இந்த இரட்டை வேடம்?

**இந்த கடன் தொகை ஏழு வருடங்களின் பின்னர் இரட்டிப்பாகும் என்று கூறப்படுகிறது. அது உங்களுக்குத் தெரியுமா?**

அவ்வாறு எதுவும் இடம்பெறுவதாகத் தெரியவில்லையே. மற்றது தற்போது நாட்டின் பணவீக்கம் வெகுவாக குறைந்துள்ளது. இன்னும் ஒரு வருடத்தில் நாட்டின் பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன்.

**இந்த நேரத்தில் எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

இந்த நேரத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை. நாடு அதல பாதாளத்தில் விழுந்துள்ள நேரம் இது. முதலில் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். தேர்தலை நடாத்துவதற்கு நாடு இருக்க வேண்டுமே. அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பிய பின் பிரிந்து தனியாகப் போட்டியிடலாம். அந்த நேரத்தில் மக்கள் சரியானவர்களை தேர்ந்தெடுப்பார்கள்.

தாரக விக்ரமசேகர
தமிழில் எம்.எஸ். முஸப்பிர்

**தீர்வு விடயங்களை எதிர்க்கட்சிகளே குழப்பி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியிருப்பதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது. ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஆரம்பித்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் இடைநடுவில் கைவிடப்பட்டமை தொடர்பில் ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.**

# ஒத்துழைப்பு வழங்குவதாக காண்பித்தாலும் இணக்கப்பாட்டுக்கு வருவதில் தயக்கம்!

இந்த முயற்சிகளுக்குத் தமிழ்க் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குவது போன்று காண்பித்தாலும், எதிர்க்கட்சியினருக்கு வேண்டிய வகையிலேயே அவர்கள் நடந்து கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பெப்ரவரி 04 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வொன்றைக் காணும் நோக்கில் ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தார். 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை கடந்த டிசம்பரில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியிருந்த ஜனாதிபதி, நீண்டகாலம் புரையோடிப் போயுள்ள தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தயார் என்றும், இதற்கு சர்வகட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இதற்கு அமைய சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது. 'இந்த நாட்டில் நிலவும் பிரச்சினையைத் தீர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அது இனப்பிரச்சினை என அழைக்கப்பட்டாலும் சரி, வேறு பெயரில் அழைக்கப்பட்டாலும் சரி அது எமக்கு முக்கியமில்லை. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க நாம் விரும்புகிறோம். இதற்குத் தீர்வு காணவும், பாராளுமன்றத்தில் உடன்பாட்டை எட்டுவதற்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுகூடியுள்ளன' என முதலாவது கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

அது மாத்திரமன்றி, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய முழுமையான அதிகாரப் பகிர்வுக்குத் தான் தயார் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இருந்தபோதும் இவ்விடயத்தில் தென்னிலங்கைக் கட்சிகள் சில தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தன.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மூன்று முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தியிருந்தனர். ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது, காணி அபகரிப்பை நிறுத்துவது, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர்விவகாரம்ஆகியவிடயங்களை நிறைவேற்று அதிகாரமே நேரில் கையாண்டு குறுகிய காலத்துக்குள் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப் பட்டது.

இதன் தொடர்ச்சியாக தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியை பல தடவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்த போதும், சர்வகட்சி மாநாடு இடைநடுவில் கைவிடப்பட்டது. தமது தரப்பில் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்ற ஜனாதிபதி தவறியதாகத் தமிழ்க் கட்சிகள் சார்பில் கூறப்பட்டது.







## எதிர்க்கட்சியின் நிகழ்ச்சிநிரலுக்கு இசைவாக தமிழ்க்கட்சிகள் செயற்படுவதாக சந்தேகம்!

## தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு தமிழ்த் தரப்புகளிடமிருந்து இதயபூர்வமான ஒத்துழைப்பு இன்னுமில்லை!

இவ்வாறான பின்னணியிலேயே தீர்வு விடயத்தை எதிர்க் கட்சிகள் குழப்புவதாக ஜனாதிபதி சாடியுள்ளார். தேசிய இணக்கப்பாட்டுப் பணிகளுக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கினால் சர்வகட்சி மாநாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் நாடு எதிர் கொண்டுள்ள சவால்களை நிவர்த்தி செய்ய முயற்சிகள் எடுக்கப்படும், மறுபக்கத்தில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் முக்கியமானது என்பதை ஜனாதிபதி பல தடவை வலியுறுத்தியிருந்தார். இது விடயத்தில் அவர் தொடர்ந்தும் உறுதியான நிலைப்பாட்டில் இருந்து வருகின்றார் என்பது அவருடைய செயற்பாடுகளிலிருந்து தெரியவருகிறது.

இந்த முயற்சிகளுக்கு எதிர்க் கட்சிகளும் தமது ஒத்தழைப்பை வழங்குவது அவசியமானதாகும். நாடு தற்பொழுது முகங்கொடுத்துள்ள நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டைப் பற்றி சிந்தித்தே பொதுவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதனை விடுத்து அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட விருப்புவெறுப்புக் களை முன்னிலைப்படுத்தியும் அரசியல் செய்வது காலத்துக்குப் பொருத்தமானதாக அமையாது என்பதை எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், தற்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை அரசியல் பேச்சுவார்த்தைகளின் ஊடாகத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியிலிருந்தாலும், அவருடைய எண்ணக்கருக்களை நிறைவேற்றுவதற்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

எனவே, இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜனாதிபதியும் உறுதியான நிலைப்பாட்டில் இருப்பதால் முற்போக்கான அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசுக்கு எடுத்துச் சொல்லி அதன் ஊடாக தீர்வினைப் பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

அதனை விடுத்து ஹர்த்தால் போன்ற நடவடிக்கைகளால் மக்களைத் தேவையற்ற விதத்தில் உருவேற்றியும், அப்பாவி மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிப்படையச் செய்தும் தமது அரசியல் செல்வாக்கை நிரூபிக்க முயற்சிப்பதைத் தமிழ் அரசியல் கட்சிகள் கைவிட வேண்டும்.

மறுபக்கத்தில், இனங்களுக்கிடையில் வேண்டுமென்றே முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலும் சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக வடக்கு, கிழக்கில் இந்துக்களின் பாரம்பரிய இடங்களில் பௌத்த சின்னங்கள் நிறுவப்படுகின்றமை, தமிழர்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை போன்ற செயற்பாடுகள் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைப்பதாக அமைவதாக தமிழ்த்தரப்பினால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இவை தொடர்பில் அரசாங்கம் அக்கறை காண்பித்து அவ்வாறான சக்திகளை அடையாளம் கண்டு ஆரம்பத்திலேயே அவற்றை அகற்ற வேண்டும். இல்லையெனில் கடந்த காலங்களைப் போன்று இனவாத, மதவாத அடிப்படைவாத செயற்பாடுகளால் நாடு மீண்டும் மோசமானதொரு நிலைக்குச் செல்வதற்கே வாய்ப்புகள் அதிகம்.

இனஒற்றுமையை சீர்குலைக்கும் சில விஷம செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் அடையாளம் காணப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டியதும் அவசியம். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நோன்பு நாட்களில் பள்ளிவாசல்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப் போவதாகப் போலியான வதந்திகள் பரப்பப் பட்டு, தேவையற்ற குழப்பம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது.

இதுபோன்ற விஷமத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். இவ்வாறான முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டு இனங்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும். நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்திருக்கும் நிலையில் இனரீதியில் ஏற்படக் கூடிய குழப்பம் நிலைமைகளை மென்மேலும் சிக்கலாக்குமே தவிர, தீர்வாக அமையப் போவதில்லை. இவ்வாறு குழப்பம் விளைவிக்க முயற்சிக்கும் சக்திகள் யாராக இருந்தாலும் அவை தடுக்கப்பட வேண்டும் என்பதுதான் ஐக்கியத்தை விரும்பும் மக்களின் குரலாக உள்ளது.

**பி.ஹர்ஷன்...**

---

**இந்திய பொருளாதாரத்தின் அடிப்படை அம்சங்களை வலுப்படுத்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் பல்வேறு முயற்சிகளை உலகநாடுகள் பாராட்டுகின்றன. உலகநாடுகள் இந்தியாவை சந்தேகக்கண் கொண்டு பார்த்த நிலைமை இன்று முற்றிலும் மாற்றமடைந்துள்ளது. இன்று உலகுக்கே மு–ன்னுதாரண நாடாக இந்தியா மாறியுள்ளது. உலக பொருளாதார வளர்ச்சிக்கான நம்பிக்கை மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது.**

# உலக நாடுகளின் பாராட்டைப் பெற்றுள்ள இந்தியாவின் துரித பொருளாதார வளர்ச்சி

துணிச்சல், தெளிவு மற்றும் நம்பிக்கையுடன் கொள்கை முடிவுகளை மேற்கொண்டு, அதனை அமுல்படுத்துவதில் அரசாங்கம் தீவிரமாக செயலாற்றி வருவதே இந்த வெற்றிக்கான காரணம் ஆகும்.

இந்தியாவில் பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி இதுவரை இல்லாத வகையில் அதிகரித்துள்ளது. வரிச்சுமை குறைக்கப்பட்ட போதிலும், உயர்ந்து வரும் வரி வசூலிப்பானது இந்தியாவின் வேகமான வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

2023_24 இல் வரிவசூல் 200 சதவீதம் உயர்ந்து, ரூபா 33 இலட்சம் கோடியை எட்டும் என்ற நம்பிக்கை உள்ளது. வரி செலுத்துவது என்பது தேசக்கட்டமைப்புடன் நேரடித் தொடர்புடைய கடமையாகும். மக்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளதற்குச் சான்றாக அவர்கள் செலுத்தும் வரியும் கணிசமாக அதிகரித்து வருகிறது.

நாடு அதிகபட்ச பலனை அடைவதற்கு அரசைப் போலவே தனியார் துறையும் தங்களது முதலீடுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொருளாதார வல்லநர்கள் கூறுகின்றார்கள். திறமை, உள்கட்டமைப்பு மற்றும் புதிய கண்டுபிடிப்புகளின் வாயிலாக இந்தியாவின் நிதி அமைப்பு முறையை உச்சத்துக்கு கொண்டு செல்ல முடியும் என்கிறார்கள் அவர்கள்.

இந்தியா வடிவமைத்த தொழில்நுட்பங்கள் இன்று உலக நாடுகளுக்கு முன்மாதிரியை ஏற்படுத்தியுள்ளன.

மனித வரலாற்றில் மிகப்பெரிய செல்வமிக்க பொருளாதார நாடாக இருந்த இந்திய தேசம் 1947 ஆம் ஆண்டு காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுபட்டபோது ஆங்கிலேயர்களால் சுரண்டப்பட்டு மிகவும் ஏழ்மையான நாடாக மாறியிருந்தது. அவ்வாறான நிலையிலிருந்து இன்றுவரையிலான 76 ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் தேசம் அடைந்திருக்கும் வளர்ச்சி மகத்தானதாகும்.

கடந்த 75 ஆண்டுகளில் இந்தியா அடைந்திருக்கும் பொருளாதார, சமூக வளர்ச்சி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்குள் அடியெடுத்து வைத்த போது உலக அளவிலான ஜி.டி.பியில் இந்தியாவின் பங்கு 27 சதவீதமாக இருந்ததால், இந்தியாவைத் 'தங்கப் பறவை' என்றே அழைத்தனர். அந்த செல்வச் செழிப்பே காலனி ஆதிக்கத்துக்கும், அந்நிய நாட்டுப் படையெடுப்புகளுக்கும் வழிவகுத்தது. பிரிட்டிஷாரின் மகுடத்தில் விலையுயர்ந்த மாணிக்கமாக இந்தியா ஜொலித்துக் கொண்டிருந்தது.





ஆனால், அவர்கள் நாட்டை விட்டு வெளியேறும்போது உலக உற்பத்தியில் இந்தியாவின் பங்கு வெறும் மூன்று சதவீதமாகக் குறைந்திருந்தது. அந்த அளவுக்கு அவர்களாலும் மற்றவர்களாலும் இந்தியா சுரண்டப்பட்டிருந்தது.

## சவால்களை வெற்றிகொள்ளும் சிறந்த கொள்கைத் திட்டமிடல்

காலனியாதிக்கம் இந்தியாவுக்கு ஒரு பேரழிவாக இருந்தது. ஏனெனில், காலனியாதிக்கத்துக்கு முன்பு நன்கு வளர்ச்சியுற்றிருந்த இந்திய தொழில்களான ஆடை உற்பத்தி, கப்பல் கட்டுதல், இரும்பு உற்பத்தி போன்ற பல தொழில்கள் ஆங்கிலேயர்களின் வருகையால் சீரழிந்தன.

ஆனால், ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அடியெடுத்து வைத்தவுடன் அவர்களுடைய பொருட்களுக்கான சந்தையை விரிவுபடுத்தும் நோக்கத்தில் இந்தியாவில் பிரபலமாக இருந்த தொழில்களுக்கு எல்லாம் பாதிப்பு ஏற்படுத்தினர். அனைத்து மூலப்பொருட்களையும் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நாடாக இந்தியா தள்ளப்பட்டதுடன், இந்தக் மூலப் பொருட்களைக் கொண்டு அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை அதிக விலைக்கு இறக்குமதி செய்யும் நிலைக்கு இந்தியா மாறியது.

அதற்குப் பின்னர் கடந்த 75 ஆண்டுகளில் பொருளாதார ரீதியில் இந்தியா பல மடங்கு வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. கொவிட் தொற்று சவாலை எதிர்கொண்ட போதிலும், இந்தியா பொருளாதாரத்தில் வீழ்ந்து விடவில்லை.

கொவிட் பெருந்தொற்றால் கடந்த நூற்றாண்டுகளில் முதன்முறையாக 2020_21 ஆம் நிதியாண்டில் பொருளாதாரம் 7.4 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சி அடைந்தது. இருப்பினும் 2021_22 ஆம் ஆண்டு அந்த வீழ்ச்சியில் இருந்து மீண்டெழுந்தது. இனி வரும் ஆண்டு களிலும் இந்தியாவின் வளர்ச்சிப் போக்கு தொடரும் என்று நம்பப்படுகிறது.

மனிதவள மேம்பாட்டைப் பொறுத்தவரையில், ஆரோக்கியத்திலும் கல்வியிலும் இந்தியா தொடர்ந்து மேம்பாடு அடைந்து வருகிறது. 1981 ஆம் ஆண்டு வயது வந்தவர்களின் படிப்பறிவு சதவீதம் 40 ஆக இருந்தது. ஆனால், 2011ஆம் ஆண்டு இது சுமார் 75 சதவீதத்தைத் தொட்டிருக்கிறது. இது போல, இந்தியர்களின் ஆயுட்காலமும் 40 ஆண்டுகளிலிருந்து 70 ஆண்டுகள் என்கின்ற அளவுக்கு கடந்த 59 ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது. இது போல, குழந்தை இறப்பு, தாய்மார்கள் இறப்பு சதவீதமும் வெகுவாகக் குறைந்திருக்கிறது.

உள்கட்டமைப்பிலும், நிதி சார்ந்த துறையிலும் இந்தியா நன்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)

**எஸ்.சாரங்கன்...**




**கொவிட் தொற்றுநோய் சூழல் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக தொழிலாளர் தினத்தை முன்னிட்ட மேதினக் கூட்டங்கள் நடத்தப்படாத நிலையில், கடந்த திங்கட்கிழமை நாட்டின் அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டவாறு மேதினக் கூட்டங்களை நடத்தியிருந்தன.**



## '2048 வெல்வோம்' என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினத்தின் கருப்பொருள்

# மக்களின் ஆதரவைப் பரிசோதிக்கும் களமாக இம்முறை மேதினக் கூட்டங்கள்!

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றிருந்தது. பொதுஜன பெரமுனவின் மேதினக் கூட்டம் பொரளை கம்பல் மைதானத்திலும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டம் மாளிகாவத்தை பி.டி. சிறிசேன மைதானத்திலும், தேசிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டம் விகாரமாதேவி பூங்கா முன்றலிலும், விமல் வீரவன்ச உள்ளிட்டவர்களின் உத்தரலங்கா சபாகயவின் மேதினக் கூட்டம் ஹைட்பார்க்கிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் கண்டி மத்திய சந்தை முன்றலிலும், டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸின் மேதினக் கூட்டம் கண்டியிலும் நடைபெற்றிருந்தன.

நாடு தற்பொழுது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார சவால்கள் குறித்த தமது அரசியல் நிலைப்பாடுகளையே அனைத்துக் கட்சிகளும் தத்தமது மேதினக் கூட்டங்களில் வெளியிட்டிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாகக் கலந்து கொண்டிருக்காத போதிலும், மெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியிருந்தார். '2048 வெல்வோம்' என்ற தொனிப்பொருளின் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை முன்னெடுத்துச் செல்ல எண்ணியுள்ளோம். நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமாயின், நாம் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். முதலாவது நாட்டில் உள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இதுகுறித்து பேச்சு நடத்தி வருகிறோம். இந்த வருட இறுதிக்குள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது. பெரும்பான்மை சிங்கள மக்களையும், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். இரண்டாவது இந்த நாட்டில் அரசியல், பொருளாதார முறைமையில் மாற்றம் வேண்டும் என்று இளைஞர்கள் கோருகின்றனர். நாம் இதனை செவிமடுக்க வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக பல கட்டங்களாக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கும், மேற்பார்வைக் குழுவுக்கும் தலா ஐந்து இளைஞர்களை நியமிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்தப் பணிகளை மேமாதத்தில் பாராளுமன்றத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம். கரு ஜயசூரிய அவர்களின் ஆலோசனைக்கமைய மக்கள் சபைகளை உருவாக்குவதற்காக அதற்கான சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். நாம் அனைவரும் உடன்பாட்டுடன் புதிய பொருளாதார முறைமையை ஏற்படுத்துவோம். புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவோம்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு கூறியிருந்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி உறுதியான நிலைப்பாட்டில் உள்ளார் என்பது இதன் மூலம் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தப்பட்டுள்ளது. நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டுமாயின் நிச்சயமாக ஸ்திரமான அரசியல் சூழல் அவசியம். இதற்கு இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வொன்று காணப்படுவது இன்றியமையாததாகும். நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள முயற்சிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஐ.தே.கவின் தலைவர்கள் பலரும் அங்கு வலியுறுத்தியிருந்தனர்.

இதேவேளை, 69 இலட்சம் பேருக்கு வழங்கிய ஆணையை நிறைவேற்றத் தவறியமையை ஏற்றுக் கொள்வதாக பொதுஜன பெரமுனவின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

'கொவிட்19 தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பல காரணங்களால் எங்களுக்குக் கிடைத்த ஆணையை நிறைவேற்ற முடியாமல் போனது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். சில தவறான முடிவுகளும் இந்த நிலைமையை மோசமாகப் பாதித்தன. நாம் எங்கே தவறு செய்தோம் என்பது இப்போது புரிகிறது. எங்களிடம் போதுமான அனுபவங்கள் உள்ளன, இது எங்கள் முன்னோக்கிய பயணத்தில் எங்களுக்குப் பெரும் பலமாக இருக்கும்.

தொற்றுநோய் மற்றும் போர்ச்சூழ் நிலைகள் போன்ற பல நெருக்கடியான காலங்களில் நாடு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் பொருளாதாரம் மிகவும் பலவீனமாக இருந்தது. எனினும் யுத்தத்தில் வெற்றி பெற்று நாட்டை அபிவிருத்தி செய்ய முடிந்தது. கொவிட் தொற்றுநோயின் போது கூட, தடுப்பூசி செயற்பாட்டில் நாங்கள் மிகவும் வெற்றிகரமாக இருந்தோம். மீண்டும் மக்களின் ஆதரவுடன் பலமான நிலைக்கு வர முடியும் என்ற நம்பிக்கை உள்ளது' என்றும் அவர் கூறியிருந்தார்.



## நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ஐ.தே.கவின் தலைவர்கள் வலியுறுத்தல்




சம்யுக்தன்

இக்கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். பொதுஜன பெரமுன தொடர்பில் மக்கள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கள் காணப்பட்ட போதிலும், மேதினக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டிருந்தமையைக் காணக்கூடியதாகவிருந்தது. மறுபக்கத்தில் எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டங்களிலும் மக்கள் கூட்டத்தைக் காணக்கூடியதாகவிருந்தது. மாளிகாவத்தையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டத்தில் அதன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். இருந்தபோதும், மயந்த திசாநாயக்க மற்றும் ராஜித சேனாரத்ன போன்ற சிலரின் பிரசன்னத்தைக் காண முடியாதிருந்தது. ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி அரசாங்கத்தில் இணைவதற்கு ராஜித சேனாரத்ன தயாராக இருப்பதாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அவர் இம்மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை.










## நாடு முன்னோக்கிப் பயணிப்பதாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம் என்பதை தொழிலாளர் தினத்தில் வலியுறுத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

இங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிடுகையில், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதுள்ள உடன்படிக்கைகளுக்கு பதிலாக புதிய ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

'ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ், தற்போதுள்ள ஒப்பந்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டு சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படும். நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய உடன்படிக்கை மேற்கொள்ளப்படும். நாம் ஆட்சிக்கு வந்தால், வங்கி அமைப்பு அல்லது பங்குச் சந்தை ஒருபோதும் மூடப்படாது, மேலும் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் இந்த நிறுவனங்கள் மேலும் பலப்படுத்தப்படும். அபிவிருத்திச் செயற்பாடுகளில் கடினமான தீர்மானங்களை எடுக்கவேண்டும். ஆனால் மக்களை ஒடுக்கும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்பட மாட்டாது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.





மேதினக் கூட்டங்களின் போது தமது பேரணியால் கவனத்தை ஈர்க்கும் ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் விகாரமாதேவி பூங்கா முன்றலில் நடைபெற்றிருந்தது. கடந்த சில மாதங்களாக நாட்டின் பல்வேறு பகுதிளுக்குச் சென்று கூட்டங்களை நடத்தி தம்மைத் தேர்தலுக்குத் தயார்ப்படுத்தி வரும் இவர்கள், இம்மேதினக் கூட்டத்தையும் தேர்தலுக்கான உத்தியாக வழமைபோன்று பயன்படுத்தியிருந்தனர்.

மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி தேர்தலொன்றுக்குச் செல்லத் தாம் தயாராக இருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க இங்கு கூறியிருந்தார். மக்களின் ஒத்துழைப்புடன் ஜே.வி.பி அதிகாரத்தைக் கைப்பற்றும் என்றும், ஊழல் அற்ற நிர்வாகமொன்றையே நாட்டு மக்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியிருந்தார். வழமைபோன்று அரசாங்கத்தை எதிர்க்கும் கோஷங்களைக் கொண்டதாக அவர்களின் மேதினக் கூட்டம் அமைந்திருந்தது.

இவற்றுக்கும் அப்பால், அரசாங்கத்தின் பங்காளிகளாக இருந்து தற்பொழுது பிரிந்து நின்று செயற்படும் சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ச உள்ளிட்டோர் உருவாக்கியுள்ள உத்தரலங்கா சபாகாய, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் மேதினக் கூட்டங்களிலும் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களே பெரும்பாலும் முன்வைக்கப்பட்டன. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பெரும்பாலான கட்சிகள் மக்கள் மத்தியில் தமக்கிருக்கும் செல்வாக்கைச் பரிசோதிப்பதற்கான ஒரு தளமாக மேதினக் கூட்டங்களைப் பயன்படுத்தியிருந்தன.

# சாக்கடை நீரினை பருகும் 600 குடும்பங்கள்



கே.சுந்தரலிங்கம்

**ஹற்றன் ரொத்தஸ் கொலனியில் பல வருடங்களாக சுத்தமான நீர் இன்றி மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதனால் பல நோய்களுக்கும் உள்ளாகி வருவதாக தெரிவிக்கின்றனர். சுத்தமான குடி நீரை பெற்றுக் கொள்வது மனித உரிமைகளில் ஒன்றாகும். ரொத்தஸ் கொலனி மக்களுக்கு மனித உரிமைகளில் ஒன்று மறுக்கப்பட்டுள்ளது. இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வர்ணிக்கப்படும் இந்திய வம்சாவளி மக்கள் வாழும் பல பகுதிகளில் இவ்வாறான மனித உரிமை மீறல்களும் அவலங்களும் 200 வருடங்களை கடந்த நிலையிலும் தொடரத்தான் செய்கிறது.**

ஹற்றனிலிருந்து சுமார் 1.5 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது ரொத்தஸ் கொலனி.இங்கு வாழும் சுமார் 600 குடும்பங்கள் கடந்த 20 வருட காலமாக சுத்தமான குடிநீர் இன்றி சாக்கடை நீரினை குடிப்பதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

## ஹற்றன் ரொத்தஸ் கொலனியில் 20 வருட காலமாக சுத்தமான குடிநீரின்றி தவிக்கும் மக்கள்

இந்த குடிநீர் விடயம் குறித்து மலையக அரசியல் தலைவர்கள்



முதல் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் வரை தெளிவுபடுத்தப்பட்ட போதிலும் அவர்களுக்கு இது வரை எந்த வித தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. தேர்தல் காலங்களில் இந்த விடயத்திற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைப்பதாக தெரிவித்து வாக்குகளை பெற்றுச் செல்வதாகவும் ஆனால் பின்னர் இந்த பக்கமே வருவதும் இல்லை எமது பிரச்சினையை கண்டு கொள்வதுமில்லை என்கின்றனர் மக்கள்.

குறித்த குடிநீரினை நாளாந்தம் பருகுவதன் காரணமாக பலர் நோய்களால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வயோதிபர்கள் சிறுவர்கள் அடிக்கடி வயிற்று வலி, வாந்தி மற்றும் ஏனைய நோய்கள் காரணமாக மருந்துகள் எடுத்து வருவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த பிரதேசத்திற்கு சுத்தமான குடிநீர் பெற்றுக்கொடுக்காததன் காரணமாக இங்கு வாழும் மக்கள் குளிப்பதற்கு பயன்படுத்தும் நீரினை குடிப்பதற்கும் பயன்படுத்துகின்றனர். ஹற்றன், ஆரியகம மற்றும் ஆஞ்சநேயர் ஆலய பகுதியில் வசிக்கும் மக்களால் பயன்படுத்தப்பட்டு விடுவிக்கப்படும் கழிவு நீர் கலப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

சுத்தமான குடிநீரினை பெற்றுக் கொள்வதற்காக மலையகத்தில் உள்ள



அரசியல் தலைவர்களிடம் பல தடைவைகள் தெரிவித்த போதிலும் இது வரை தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரி

## சிறுவர், வயோதிபர்களுக்கு அடிக்கடி வாந்தி மற்றும் வயிற்று வலி ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்

விக்கின்றனர்.

இந்த நீர் குடிப்பதற்கு உகந்ததா? என்று பிரதேச செயலகத்தில் பரிசோதனை செய்து பார்த்த போது, குடிப்பதற்கு உகந்ததில்லை என சுகாதார பிரிவினர் தெரிவித்தாகவும் வேறு வழியின்று இந்த நீரினை குடித்து வருவதாகவும் பலர் கவலையுடன் தெரிவித்தனர்.

ரொத்தஸ் கொலனிக்கு குடிநீரினை பெற்றுக்கொள்வதற்காக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடம் சென்று பேசிய போது அதற்கு கோடிக்கணக்கில் செலவிட வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இந்த பிரதேசத்தின் குடிநீர் விடயம் குறித்து தற்போது உள்ள நீர் பாசன அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையில் இருப்பதாகவும் அதிக பணம் செலவிடா விட்டாலும் இருக்கும் நீரினை சுத்தப்படுத்தி பெற்றுக்கொடுத்தாலே போதுமானதாக இருக்கும் என சிலர் தெரிவித்தனர்.

எது எவ்வாறான போதிலும் நீர் வளம் நிறைந்த மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் சுத்தமான குடிநீர் இன்றி கஷ்டப்படு



வது மிகவும் வெட்கப்பட வேண்டிய விடயம் என சிங்கள மொழி சகோதரர் ஒருவர் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

# ஆபத்தான பயணங்கள்!

# தீர்வுக்காக காத்திருக்கும் மக்கள்

ஆ.ரமேஸ்

**மத்திய மலைநாட்டில் பெருந்தோட்ட பகுதிகளில் இருந்து பிரதான பாதைக்கோ அல்லது நகரங்களுக்கு செல்லும் வீதிகள் 200 வருடங்கள் கடந்த நிலையில் போக்குவரத்துக்கு உகந்த நிலையில் இல்லை. இதனால் பயணிகள் இடையூறுகளுக்கும் அசௌகரியங்களுக்கும் தினம் முகம் கொடுப்பதோடு உயிராபத்தையும் ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.**



முறையான பராமரிப்பை இழந்துள்ள பிரதான வீதிகள் பலவற்றில் நடந்து கூட செல்ல முடியாமல் உள்ளது. சில வீதிகள் நிர்மாணிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை திருத்தப்படவில்லை. பராமரிப்பு செய்வதில் ஏற்பட்டுள்ள தட்டிக் கழிப்பும் இந்த நிலைக்கு காரணமாகும்.வீதி அபிவிருத்தி அதிகார சபையால் (RDA) பராமரிக்கப்படும் வீதிகள் கூட கடந்த மூன்று வருடங்களாக பாராமரிப்பு செய்யப்படாமல் இருக்கிறது.

இதனால் பகுதியளவில் உடைந்த வீதிகள் பல மலையக பிரதேசங்களில் அடிக்கடி ஏற்படுகின்ற காலநிலை மாற்றத்தினால் பெய்யும் கடும் மழையில் பாதைகள் வெள்ளத்தில் அரிக்கப்பட்டு பாரிய குழிகள் தோன்றி குண்டும் குழிகளாக காட்சியளிக்கிறது.



கொரோனா முடக்கம், பொருளாதார நெருக்கடியால் வீதி புனரமைப்புக்கோ. திருத்தம் செய்வதற்கோ பணம் ஒதுக்கீடு செய்ய முடியாததால் வீதி திருத்தப்பணிகள் முடக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுவதை ஏற்றுக் கொள்ளலாம் ஆனால் அது கடந்த சில காலமாகும். தோட்டங்களில் உள்ள பாதைகள் சில 200 வருடங்களாக குண்டும் குழியுமாகவே காணப்படுகிறது. இவற்றுக்கு யார் பொறுப்பு கூறுவது?.



ஆனால் நகரத்திற்கு நகரம் செல்லும் வீதிகள் தொழிநுட்ப அறிவுக்கேற்ப செப்பனிடும் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேசத்திற்கு உட்பட்ட ஹய்பொரஸ்ட் மெரிகோல்ட் தோட்ட சந்தியிலிருந்து மாசா மேல் பிரிவு மற்றும் கீழ் பிரிவு, கெட்டயாபத்தனை, மத்துரட்ட வழியாக பதியபெலல்ல நகர் வரை நான்கு அபாய முடக்குகளை கொண்ட 13 கிலோ மீட்டர் தூர பயணிகள் போக்குவரத்து பிரதான வீதியாகும்.

இந்த வீதியின் ஊடாக மத்துரட்ட, பதியபெலல்ல, ரிகலகஸ்கடை, ஹங்குராங்கெத்த, தலவத்ஓயா வழியாக கண்டி வரை உள்ள பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள், வங்கிகள், பிரதான வைத்தியசாலைகள் என பல இடங்களுக்கு ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் பயணிக்கின்றனர்.

அதேநேரத்தில் ஹைபொரஸ்ட், கோனக்கலை, கோனப்பிட்டிய, ருக்வூட் ஆகிய பிரதேசங்களில் காணப்படும் தோட்டப்பகுதி பாடசாலைகள், தோட்டங்கள் ஆகியவற்றுக்கு பயணிக்கும் ஆசிரியர்கள்,பொது மக்கள் இவ் வீதியையே பயன்படுத்துகின்றனர்.



மேலும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம் மற்றும் கந்தப்பளை ஆகிய நகரில் இருந்து கண்டிக்கு மரக்கறி வகைகளை இலகுவாக குறுகிய நேரத்தில் கொண்டு செல்ல ஏதுவாக மெரிகோல்ட் தோட்ட சந்தியிலிருந்து பதியபெலல்ல நகர் பிரதான வீதி வரை செல்லும் வீதி பயனுள்ளதாக காணப்படுகிறது.

இந்த நிலையில் மெரிகோல்ட் தோட்ட சந்தியில் இருந்து மத்துரட்ட பொலிஸ் நிலையம் வழியாக பதியபெலல்ல வரை பள்ளத்தை கடந்து செல்லும் இந்த இலகுவான ஒற்றை வழி பிரதான வீதி தோட்டப் பகுதி மற்றும் கிராமங்களை ஊடறுத்து செல்கிறது.

இவ்வாறு செல்லும் இப் பிரதான வீதியில் மத்துரட்ட நகரின் பொலிஸ் நிலையம் வரை வாகன போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பராமரிக்கப்படாத நிலையில் ஆங்காங்கே உடைந்து குண்டும் குழியுமாகவுள்ளது. மழைக்காலங்களில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வீதியில் பதியபெல்ல ஊடாக ஹங்குராங்கெத்த வரை இலங்கை போக்குவரத்து சபைக்குரிய ஹங்குராங்கெத்த பஸ் டிப்போவுக்கு சொந்தமான ஒரே ஒரு பஸ் மாத்திரம் தினமும் காலை 5.45க்கும் மாலை 05 மணிக்கும் பயணத்தில் ஈடுப்படுகிறது. இந்த ஒரே ஒரு பஸ்ஸை நம்பியே பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச திணைக்கள பணியாளர்கள், வைத்தியசாலை, வங்கிகள் மற்றும் நகரில் அன்றாட தொழிலுக்கு செல்வோர் பயணிக்கின்றனர்.

மெரிகோல்ட் தோட்ட சந்தியிலிருந்து பதியபெலல நகரம் வரை பயணிக்கும் வீதியில் உயிரை பணயம் வைத்தே செல்வதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ் வீதியில் நான்கு பிரதான வளைவுகள் காணப்படுகிறது. இவ் வளைவுகளை கடக்க வாகன ஓட்டுனர்கள் படும் பாடு கவலைக்குரிய விடயமாகும்.

ஒரே பஸ் என்பதால் மாணவர்கள் மிதிபலகையில் ஆபத்தான நிலையில் பயணிக்கின்றனர். இவ்வீதியில் வேறு ஒரு வாகனம் வந்துவிட்டால் அதற்கு இடம் கொடுக்க சாரதிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகுகின்றனர். அந்த வேளையில் பயணிகள், மாணவர்கள் வீதிக்கு இறங்கி உதவுவதும், வளைவுகளில் பஸ்ஸை திருப்பும் வரை இவர்கள் வீதியின் சிறிதளவு தூரத்தை நடந்து பயணிக்கும் நிலையும் உள்ளது.

இதற்கு தீர்வை பெற்றுத் தருமாறு மக்கள் அதிகாரத்திலுள்ள அனைவருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக கூறுகின்றனர்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற சித்திரை வசந்தம்






**வெல்லாவெளி தினகரன் நிருபர் க.விஜயரெத்தினம், கல்லடி குறூப் நிருபர் உ.உதயகாந்**

தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை பொலிஸ், இலங்கை இராணுவம், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து நடாத்திய சித்திரை வசந்தம் (2023) ஞாயிற்றுக்கிழமை (30) மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும், மாலை நேர இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

அத்தோடு உள்ளூர் வியாபார முயற்சியாளர்களின் கண்காட்சியும், விற்பனையும் வெபர் விளையாட்டு மைதானத்தில் பிரதம அதிதிகளினால் திறந்துவைக்கப்பட்டது.

இதில் பாரம்பரிய உணவுக் கூடங்கள் மற்றும் உள்ளூர் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் விற்பனை கூடங்கள் என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன.



யாழ்ப்பாணம் கந்தரோடைகிராம மக்களின் குடியிருப்பில் தண்ணீர் வசதி இல்லாத குறையைத் தீர்க்கும் நோக்குடன் குளாய்க் கிணறொன்று அமைக்கப்பட்டது. கனடாவை சேர்ந்த மிட்லான் மல்ரி மீடியா நிறுவன ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் இக்குழாய்க்கிணறு அமைக்கப்பட்டுள்ளதுடன் யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் யாழ் மாவட்ட தேசோதய தலைவருமான சமூகஜோதி லயன் கலாநிதி நாகலிங்கம் தனேந்திரனால் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது. (படம்: வேலணை குறூப் நிருபர்)



வத்தளை, மாபொல, பங்களாவத்தை அருள்மிகு ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் முதலாவது வருஷாபிஷேகம் கடந்த 30 ஆம் திகதி காலை நடைபெற்ற கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகியது. அன்று மாலை மாரியம்மன் ஆலய திருவிழாவும் நடைபெற்றது.

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777438169 கண்டியில் ஹோட்டல், தோட்டம், வீடு, வெற்றுக் காணி, வியாபார ஸ்தலம் கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும். 0777282147. 022944

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

டிஜிட்டல் சந்தைப்படுத்தல் நிறைவேற்று அலுவலர் (கொழும்பு) முகநூலில் LinkedIn/ Instagram/ டுவிட்டர் இன்னும் பலவற்றில் அனுவத்துடன் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் சான்றிதழுடன் அனுபவம். சரக்கு விற்பனை நிறைவேற்று அலுவலர் (ஜாஎல மற்றும் போபிட்டிய) afa.wexp@yahoo.com 026596

### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

3PL வெயார்ஹவுசிங் சப்ளை செயின் மனேஜ்மென்ட் கம்பனியின் கொழும்பு மற்றும் ஜாஎலவில் பதவி வெற்றிடங்கள். உதவி கணக்காளர் (ஜாஎல மற்றும் கொழும்பு) VAT/ SVAT & RAMIS SYSTEM & lashing with Auditors - இரண்டு பதவி வெற்றிடங்கள் a fq.wexp@yahoo.com 026597

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கனரக வாகன சாரதிகள் தேவை. ஹோமாகம, பனாகொட, கைத்தொழில் பேட்டையில், தொழிற்சாலைக்கு அனுபமுள்ள டிலிவரி லொறி சாரதிகள் தேவை. தங்குமிட வசதியுடன் சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அழையுங்கள் 0778869803 027003

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

குக் (ரைஸ் அண்ட் கரி) இருவர், குக் (ரொட்டி பாஸ்) இருவர், வெயிட்டர் (ஆண் / பெண்), பேன்ட்ரி பாஸ் மற்றும்ஹெல்பர்கள் தேவை. தங்குமிடம் உள்ளது. அம்பலங்கொடை.0758155126/ 0704044447 027126

திறமையான பேக்கரி பாஸ்மார்கள் தேவை (போரனை வேலை/ அவன் வேலை மற்றும் பேஸ்ட்ரி வேலை தெரிந்தவர்களாக இருத்தல்வேண்டும்) சம்பளம் 2750/, 2250/, திறமையான சோர்ட் ஈட்ஸ் பாஸ்மார்கள் தேவை. சம்பளம் 3000/ , 3500 / (நாளொன்றுக்கு ) சமுதா பேக்கரி, கனேமுல்ல. 070 1421928 027127

### 325 தொழில்துறை பொது

கொழும்பில் ஹாட்வெயார் ஸ்தாபனத்திற்கு கீழ் காணும் வெற்றிடங்களுக்கு ஆண்/ பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். 1) கணனி பிளகிளாக் ஆண்/ பெண் 2) கூலி வேலை ஆட்கள் 3) பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் 4) Store Keeper ஆண்/ பெண் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். THAHIRS (PVT) LTD, NO. 5, QUARRY ROAD, - COLOMBO-12 026717

மனேஜர் தேவை, கொழும்பில் இருக்கும் பிரதான பள்ளிவாசலுக்கு மனேஜர் தேவை. மூன்று பாஷைகளில் தேர்ச்சி பெற்றவராகவும் கொம்பியூட்டர் உபயோகிப்பதில் ஓரளவு. அனுபவம் உள்ளவராகவும் 45 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். 0772444338 இந்த நம்பருக்கு உங்கள் CVஐ அனுப்பிவைக்கவும். 026406

0718653781 பாதுகாப்பு வெற்றிடம் தொட்டலங்க, நீர்கொழும்பு, சீதுவ, வத்தளை, ஏக்கல, எஹலியகொட, கிதுல்கல, ஹொரணகோணபொல, அங்குலான, நுவரெலியா கண்டி, மாத்தளை, கட்டுகுருந்த, களுத்துறை, மத்துகம கொட்டாவ, ரத்மலான, ரனால, பத்தரமுல்ல, நாராஹேன்பிட்ட, வெள்ளவத்தை, தெஹிவளை, பாணந்துறை 0704545051 ஹொரண 071 8379981, கொழும்பு 0718653780 ராஜகிரிய 071 2125238 வத்தளை 071 8653779 மொறட்டுவை. 070 6991637 அலுவலகம் 071 86 5 3778 076 09 8 122, 070 6655331 026892

07 1 8653 781, 071 8653778 நட்சத்திர தர ஹோட்டலுக்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் துரித ஆட்சேர்ப்பு உணவு, இலவசம் (12 மணி நேரம்) இற்கு 1 , 750/ , 1450/ கொழும்பு. 071 8 653780 அலுவலகம் 070 6655331 026890

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

அதிவேக பிரவேசம் கஹதுடுவவுக்கு அருகில் அமைந்துள்ள 130 பேர்ச் உடன் விற்பனைக்கு. விவசாய அல்லது வேறு வியாபார விடயங்களுக்கு பொருத்தமான மிகவும் சிறந்த மேட்டுக் காணியாகும். அழையுங்கள் 0714406122, 0706126677 027073

தெஹிவளை 9.5 பேர்ச் வீடு விற்பனைக்கு. 7 படுக்கையறைகள், 5 குளியலறைகள், 2 ஓய்வறைகள், 2 பென்றிகள், பிரத்தியேக வழி முதலாம் மாடிக்கு ரூப் டொப், டெராசோ, பென்றி, பார்க்கிங் அதிகூடிய குடியிருப்புப் பிரதேசம். உண்மையான கொள்வனவாளர்கள் மட்டும். தரகர்கள் வேண்டாம். அழையுங்கள்/ வட்ஸ்அப் 071 369 3999. 023257

### 624 வீடு சொத்து அநுராதபுரம் மாவட்டம் விற்பனைக்கு

எப்பாவல பொலிஸ் அதிகார பிரதேசத்தில் கட்டியாவகொட காணி 3 1/2 ஏக்கர். தென்னங்காணி விற்பனைக்கு. நீர், மின்சார, வசதிகள் உண்டு. பிரதான வீதிக்கு முகப்பாக வர்த்தக நடவடிக்கைளுக்கு பொருத்தமானது. 0713962468 025322

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்

classified@lakehouse.lk

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

JOB

Best way to fulfil your Future Dreams
classified@lakehouse.lk
Piyumi - 0112 429 383 | 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
Sunday Observer Marriage Proposals

தினகரன் வாரமஞ்சரி

BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067







தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்

classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 / ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com

4 Acres with House For Sale in Peradeniya

On Galaha road 4 km from Peradeniya University and Hospital. 20 min to Kandy. Peaceful environment. Scenic view. Includes 1960's bungalow, 6 levelled sites, 3- Phase electricity, and pipe borne water. Stable ground. Rear boundary on Mowbray Road. Clear deeds, Rs. 300,000/- per perch. Cash buyers only. No brokers

Contact Owner on Property9280@gmail.com 0766 271 100

EXCELLENT OPPORTUNITY
HIGHEST PRICE FOR YOUR GOLD
HOME VISITED FOR PURCHASING
Rolex, Omega, Swiss, Branded Watches, Diamond Jewellery, 21K, 18K, 14K, 12K Jewellery Items & Silver, Old Notes, Antique Furniture
Maximum price for Silver spoons and forks imported from Italy(Arjanthu)
Reg. No WLL 5244
RELIABILITY ASSURED
WE BUY PAWNED GOLD JEWELLERY ITEMS
0777 077 333, 0776 562 382

BEACH HOTEL FOR IMMEDIATE SALE



20 Rooms Polhena Beach Matara
0740 966 221

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியற்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# கடன் மறுசீரமைப்பில் காத்திருக்கும் மிகக் கடினமான இலக்குகள்

## வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க முன்னரே உள்நாட்டுக்கடன்களை மறுசீரமைக்க வேண்டும்

**சர்வதேச நாணய நிதியம் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு விரிவாக்கப்பட்ட கடன் வசதியை வழங்கிய பின்னர் எல்லாம் சுபமாக முடிந்துவிட்டதாக நம்பிக்கொண்டிருக்–கின்றனர். ஆனால் இனிமேல் தான் மிகக் கடினமான இலக்குகள் காத்–திருக்கின்றன. இலங்கை பெற்றுள்ள கடன்சுமையைக் குறைக்கும் நோக்கில் கடன் மறுசீரமைப்புப்பற்றி இனித்தான் கடன்வழங்கியுள்ளவர்களுடன் பேச–வேண்டும் என்கிறார்கள். இதுவரை வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு பற்றியே கவனம் செலுத்தப்படும் என்று கூறிவந்த அரசாங்கம் இப்போது உள்நாட்டுக் கடன்களையும் மறுசீர–மைக்க வேண்டும் என்கிறது. அதுவும் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்–பது குறித்த பேச்சுக்களுக்கு முன்னரே உள்நாட்டுக்கடன்களை மறுசீரமைப்பது பற்றிய முடிவுக்கு வரவேண்டும் என்றும் தற்போது கூறப்படுகிறது.**

சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கையின்படி இலங்கை செலுத்த வேண்டியுள்ள மொத்தக்கடன்கள் 83.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 128 சதவீதமாகும். இது 2021 ஆம் ஆண்டு 112 சதவீதமாக இருந்தது. 2027 ஆகும் போது அதனை 95 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அதற்கு ஒன்றில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மிகத் துரிதமாக அதிகரிக்க வேண்டும். அல்லது வெளிநின்ற கடனில் கணிசமான ஒரு பகுதி வெட்டிக் குறைக்கப்பட வேண்டும். 2022இல் 7.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2023 இல் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் என்றும் 2024இல் இருந்தது நேர்கணியமான ஒரு வளர்ச்சி பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் அந்த வளர்ச்சி மிகக் குறைவாகவே இருக்கும். எனவே கடன் மறுசீரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாத ஒரு விடயமாக மாறியுள்ளது.

இலங்கையின் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களாகிய 83.5 பில்லியன் டொலர்களில் 49.6 சதவீதம் அல்லது 41.4 பில்லியன் டொலர்கள் வெளிநாட்டுக் கடன்களாகும் 50.4 சதவீதம் அல்லது 42.1 பில்லியன் டொலர்கள் உள்நாட்டுக் கடன்களாகும். ஆகவே மொத்தக் கடன்சுமையில் பாதிக்கு மேல் உள்நாட்டில் இருந்து பெறப்பட்ட நிலையில் அதனைத் தவிர்த்து கடன் மறுசீரமைப்பைச் செய்ய முடியாத நிலையில் இலங்கை உள்ளது. கடன் மறுசீரமைப்பின் போது நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நிபந்தனையாகும். ஆகவே உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு இன்றி தாங்கள் வழங்கியுள்ள கடன்களை மாத்திரம் மறுசிரமைப்புச் செய்ய முனைவதை வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.






உண்மையில் கடன் மறுசீரமைப்பு என்றால் என்ன? அது எப்போது தேவைப்படுகிறது? கடனைப் பெற்றவர் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத நிலையில் உள்ளபோது அவர் அதனை மீளச் செலுத்தும் வண்ணம் அவர் மீளச் செலுத்த வேண்டியுள்ள கடன்களில் மாற்றங்களைச் செய்ய முனைவதே கடன் மறுசீரமைப்பு என்பதன் மூலம் நடைபெறுவதாகும்.

ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில் அதன் கடன் நிலைபேறுடைய தன்மையை மீள உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். அரசாங்கத்தின் பாதீட்டுக்குத் தேவையான நிதியை முகாமை செய்வதும் பெறகடனை மீளச் செலுத்தும் கடன் சேவையினை முகாமை செய்யத் தக்க மட்டத்தில் வைத்துக்கொள்வதும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பாக அரச கடன்களில் சதவீதத்தைக் குறைப்பதும் கடன் மறுசீரமைப்பின் நோக்கங்களாகும். கடன் மறுசீரமைப்பில் ஒரு அரசாங்கம் பெற்றுள்ள எல்லாக் கடன்களும் உள்ளடக்கப்படவேண்டும் என்ற கட்டாயமில்லை. எவற்றை அதில் உள்ளடக்க வேண்டும் என்பதை கடன் பெற்றவரும் கடன் கொடுத்தவரும் சேர்ந்தே இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். எவற்றை உள்ளடக்கவேண்டும் என்று தீர்மானித்த பின்னர் கடன் மறுசீரமைப்பினை மேற்கொள்வதற்கான மூன்று வகைகள் உள்ளன.

முதலாவது வகை பெற்றுள்ள கடனின் முகப்பெறுமதியைக் குறைப்பதாகும் அதாவது அரசாங்கம் பெற்றுள்ள கடனின் பெறுமதியில் ஒரு பகுதியைக் குறைப்பதாகும். தமிழில் சிலர் இதனை முடிவெட்டுவது என்று அபத்தமாக நேரடி மொழிபெயர்ப்புச் செய்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. இரண்டாவது கடன் முதிர்வுகால நீட்சியை வழங்குவது ஆகும். உதாரணமாக ஐந்து வருட முதிர்வு காலத்தைக் கொண்ட ஒரு கடனை பத்து வருடத்தில் செலுத்தி முடிக்க ஒத்துக்கொள்ளல்.

இதன் போது கடனின் முகப்பெறுமதியிலோ அல்லது கடனின் வட்டிவீதத்திலோ மாற்றங்கள் இருக்காது. செலுத்தப்படும் காலப்பகுதி மட்டுமே நீடிக்கப்படும். மூன்றாவது பெற்றகடனை மீளக்கட்டமைப்புச் செய்தல் என்றும் கூறுவர்.

இதன்படி பெற்றகடனின் முகப்பெறுமதியும் கடன் மீளச் செலுத்தப்படும் காலப்பகுதியும் மாறாதிருக்க கடன் கட்டமைப்பை மாற்றியமைத்து கடனின் தேறிய நிகழ்காலப் பெறுமதியை சீராக்குவதன் மூலம் கடன் பெற்றவருக்கு நிவாரணம் பெற்றுத்தர முயற்சிப்பதாகும். இந்த மூன்று வழிகளில் முதலாவது வகை தீவிரமான கடன் மறுசீரமைப்பாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் கடன் பெற்றவருக்கு உச்சபட்ச நிவாரணம் கிடைக்கும் அதேவேளை கடன் கொடுத்தவர் தனது நன்மையில் கணிசமான இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். ஆனால் இந்த மூன்று முறைகளும் தனித்தனியே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில்லை. கலந்தும் நடைமுறைப்படுத்தப்படலாம் ஆக இவை எதிர்வரும் காலங்களில் இலங்கையில் பேசுபொருள்களாக மாறும் என்பது தெரிகிறது.

இதில் உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பு அதனால் இலங்கையின் வங்கிகளிலும் அரசாங்கத்தின் கடன் பத்திரங்களிலும் வைப்புக்களையும், முதலீடுகளையும் செய்துள்ளவர்களின் நலன்கள் தொடர்பிலான அச்சங்கள் மற்றும் இலங்கையில் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் வட்டிவீத வீழ்ச்சி அதனால் வங்கித் துறையில் ஏற்படப்போகும் அழுத்தங்கள், அத்துடன் அரசாங்கக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்துள்ள ஊழியர் சேமலாப நிதியம். ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றின் அங்கத்தவர்களின் எதிர்கால நலன்கள் பற்றிய அச்சங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

வங்கிகளில் வைப்புச் செய்துள்ள வைப்பாளர்களோ அல்லது ஊழியர் சேமலாபநிதி போன்றவற்றின் அங்கத்தவர்களோ வீணாக அச்சமடையத் தேவையில்லை என்கின்றன அதுதொடர்பில் கருத்துச் சொல்ல வல்ல அரச நிறுவனங்களும் அரசாங்கத்துடன் நெருக்கமாகச் செயற்படுவரும் ஆய்வு நிறுவனங்களும். அவற்றை நம்புவதும் நம்பாததும் அவரவர் கற்றலின் அடிப்படையில் அவரவர் விருப்பம்.

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# வீழ்ச்சியை நோக்கி நகர்கிறதா அமெரிக்கா?

**சர்வதேச அரசியலில் அண்–மைக்காலமாக அமெரிக்கா–வின் பேரரசுவாதம் முடிவுக்கு வருவதாக ஆய்வுகளும் கருத்துகளும் உரையாடப்படுகிறது. அதிலும் அமெ–ரிக்கப் பொருளியல் பேராசிரியர் றிச்சட் வேல்ப் , அமெரிக்காவின் அத்தியாயம் சரிவடைவதாக விவாதித்து வருகிறார். அமெரிக்கப் பேரரசின் வீழ்ச்சி மட்டுமல்–லாது சீனாவின் எழுச்சியையும் முதன்–மைப்படுத்தி வருகிறார். றிச்சட் வேல்ப் விவாதம் முழுமையாக பொருளாதாரம் சார்ந்ததாக அமைந்தாலும் அரசியல் பொருளாதாரமாக உரையாடும் அனை–வரும் அமெரிக்காவின் யுகம் முடிவுக்கு வருவதாக கருத்துரைக்கின்றனர். அமெரிக்காவின் கடற்படைத் தளபதியும் அமெரிக்க கடற்படை உருவாக்கத்திற்கு வழிகோலியவருமான தயார் மாகன் 21ஆம் நூற்றாண்டு ஆசிய நூற்றாண்டு எனக் குறிப்பிட்டதை நோக்கி றிச்சட் வேல்ப் தனது கருத்துக்களை குவி–வடைச் செய்கின்றார். இக்கட்டுரையும் அமெரிக்கப் பேரரசுவாதம் சரிவடைகிறதா என்பதை தேடுவதாக அமையவுள்ளது.**

முதலாவது றிச்சட் வேல்ப் முன்வைக்கும் கருத்துக்களை நோக்குவது பொருத்தமானது. அதாவது றிச்சட் வேல்ப் நான்கு விடயங்களை முதன்மைப்படுத்துகிறார். ஒன்று, முதலாளித்துவம் நவதாராளவாதத்திலிருந்தும் பூகோளவாதத்திலிருந்தும் தேசியவாத முதலாளித்துவத்திற்கு மாறுகிறது என்கிறார். அதாவது மேற்கு ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் ஆசியா மற்றும் தென்பூகோளத்திற்கு முதலாளித்துவத்தின் மையம் மாறுவதும் பெரும்பாலான நாடுகளில் ஆழமாகிவரும் பொருளாதார சமத்துவமின்மையும் இதற்குள் அடங்குவன என்கிறார். இரண்டு, தனியார் மற்றும் அரச முதலாளித்துவம் மற்றும் முதலாளித்துவம் எதிர் சோஸலிஸம் மற்றும் அரசு தனியார் சேர்ந்த கலப்பு முதலாளித்துவம் என்ற கோட்பாடுகள் முடிவுக்கு வருவதாக குறிப்பிடுகின்றார். மூன்று, அமெரிக்கப் பேரரசின் உச்சக்கட்ட சரிவு. நான்கு, புதிய முதலாளித்துவத்தின் எழுச்சி. அதாவது பல்லின உலகம் அல்லது முதலாளித்துவ பணியாளர் பணியிட அமைப்புக்களை, தனியார் மற்றும் பொது ஜனநாயக முறைமையில் இயங்கும் தொழிலாளர் கூட்டுறவு அமைப்புக்களுடன் மாற்றும் புதிய முதலாளித்துவ அமைப்பின் உருவாக்கம் என்கிறார்.

இன்னோர் தளத்தில் ரஷ்ய உக்ரைன் போருக்கு அமெரிக்க வழங்கிவரும் ஆதரவு தவறானது என்கிறார். அது வெறும் ரஷ்யாவின் GDP இன் அளவை வைத்துக் கொண்டு திட்டமிடப்பட்ட போர் எனக் குறிப்பிடுகிறார். ரஷ்யா வேகமாக சரிந்துவிடும் என்ற கணக்கு அமெரிக்காவிடம் இருந்ததாகவும் ஆனால் ரஷ்யா புதிய நண்பர்களைக் கொண்ட அணியாக தன்னை மாற்றிக் கொண்டு தக்கவைத்துள்ளது. எனக்குறிப்பிடுகிறார்.

அது மட்டுமல்ல ஐரோப்பாவுக்குள் எழுந்துள்ள அமெரிக்காவுக்கு எதிரான முரண்பாடும் இத்தகைய போரின் இன்னோர் விளைவு எனக்குறிப்பிடும் றிச்சட் வேல்ப் ஐரோப்பிய முதலாளித்துவம் இடம்மாற இதுவொரு காரணம் என்கிறார்.

சீனாவின் பொருளாதார வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும் றிச்சட் வேல்ப் அதன் GDP அமெரிக்காவைவிட அதிகமானது எனவும் அது தென் பூகோள நாடுகளின் பொருளாதார உறவின் மூலம் பலமானதாக வைத்துள்ளது என்கிறார். புதிய எழுச்சி பெறும் முதலாளித்துவத்திற்கு சீனாவே பின்புலமாகவுள்ளது எனக் குறிபிடும் வேல்ப் சீனாவே அடுத்த பேரரசு எனவும் விவாதிக்கின்றார்.

சீனாவின் அரசியல் நகர்வையும் சுட்டிக்காட்டும் றிச்சர்ட் மிக மோசமான விரோதியாக விளங்கிய ஈரானையும் சவுதி அரேபியாவையும் நட்பு நாடுகளாக மாற்றியதில் சீனாவின் பங்கு உலகளாவிய அரசியலில் ஈடுபாட்டை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது என்பதை காட்டுகிறது என்கிறார். இதற்கு வலுச்சேர்க்கும் விதத்திலுள்ள புறவயமான காரணிகளை புரிவது அவசியமானது.

முதலாவது, பென்டகன் கசிவு எனக் குறிப்பிடப்படும் அமெரிக்காவின் இராணுவ ரகசியங்கள்




வெளியான விடயம் கவனத்திற்குரியது. குறிப்பாக உலகப் பெருவல்லரசின் இராணுவ இரகசியங்கள் உலக நாடுகளைப் பற்றிய தகவல்கள் தனது நட்பு நாடுகளில் அமெரிக்கா மேற்கொள்ளும் ஆபத்தான கண்காணிப்புக்கள் மற்றும் ரஷ்ய, உக்ரைன் போரில் நேட்டோ நாடுகளின் விசேட இராணுவப் பிரிவுகளின் பெயரில் நிகழும் படைக்குவிப்பு போன்ற விடயங்கள் அதிக நெருக்கடியை அமெரிக்காவுக்கு ஏற்படுத்தியுள்ளது. இதுவொரு பேரரசின் சரிவுக்குரிய அடையாளமாகவே தென்படுகிறது. ஆனால் கடந்த காலங்களில் விக்கிலீக்ஸ் கசிவு ஏற்பட்ட போதும் இவ்வாறான உரையாடல்களே மேலோங்கியிருந்தன. ஆனால் அமெரிக்காவின் இருப்பு தளர்ந்து போகவில்லை என்றே கூறவேண்டும். காரணம் அமெரிக்கா என்பது தனியான பேரரசாக இல்லாது முதலாளித்துவத்தின் பேரரசாக அல்லது ஏகாதிபத்தியத்தின் பேரரசாக விளங்குவதாகும். தற்போது தென் கொரியா அமெரிக்காவால் கண்காணிக்கப்படுகிறதென்ற பென்டகன் கசிவு வெளியான பின்பும் இரு நாட்டுக்குமான உறவு பலமானதாகவே உள்ளது. அதன் பின்னரே இருநாட்டுக்குமான அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிகள் தென் கொரியாவில் நிறுத்தப்பட்டு, வோசிங்டன் உடன்பாடு எட்டப்பட்டமை கவனிக்கத்தக்கது.

இரண்டு, அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சி பற்றியது. குறிப்பாக அமெரிக்காவின் வங்கிகளின் வீழ்ச்சியும் டொலரின் வீழ்ச்சியும் அமெரிக்கப் பொருளாதாரத்தை நெருக்கடிக்கு உட்படுத்துவதாக வேல்ப் குறிப்பிடுகின்றார். 2023 இல் மட்டும் மூன்று வங்கிகள் சரிவடைந்துள்ளன. Fist Republic Bank, Signature Bank, Silicon Bank என்பன மார்ச், மே மாதகாலப் பகுதியில் வீழ்ச்சி கண்டுள்ளன. ஆனால் இத்தகைய அனுபவத்தை அமெரிக்கா 1873 ஆண்டு முதல் எதிர்கொண்டு வருவதாக தகவல்கள் உண்டு. 2008ஆம் ஆண்டு அமெரிக்கா பாரிய வீழ்ச்சியை எதிர் கொண்டிருந்தது. அத்தகைய நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வந்ததுடன் உலகளாவிய அரசியல் இருப்பையும் அமெரிக்கா பாதுகாத்துக் கொண்டது என்பது முக்கியமான விடயமாகும்.

மூன்றாவது, அமெரிக்க டொலருக்கு எதிரான உலகளாவிய நாணயங்களின் கூட்டு வலுவான நெருக்கடியை அமெரிக்காவுக்கு ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. அதில் இந்தியா, ரஷ்யா, சீன மற்றும் பிறிக்ஸ் நாடுகள் ஒன்றிணைந்திருப்பதும் புதிய நாணயத்தில் வர்த்தக செய்முறை நிகழ்வதற்கு முனைவதும் டொலருக்கு ஆபத்தானதாகவே உள்ளது. இந்தியா பல நாடுகளுடன் தனது ரூபாயிலேயே வர்த்தகம் செய்ய ஆரம்பித்துள்ளதாக தகவல் உண்டு. இது டொலருக்கு பெரும் ஆபத்தாகவே அமைய வாய்ப்புள்ளது. காரணம் உலகளாவிய பொருளாதாரமானது சந்தையிலும் வர்த்தகத்திலுமே தங்கியுள்ளது. அமெரிக்க வர்த்தகம் முழுமையாக டொலர் மூலம் எழுச்சியடைந்ததே. அதிலும் சந்தை வலுவைக் கொண்ட இந்தியா சீனா பிறேசில் உட்பட்ட தென்பூகோள நாடுகளது சந்தையே அமெரிக்கப் பொருளாதாரமாக விளங்கியது. இதற்கு ஏற்பட்ட நெருக்கடியாகவே பிறிக்ஸ்ன் புதிய நாணயம் அமைய வாய்ப்புள்ளது. அது மட்டுமன்றி மேற்காசியா முழுமையாக அமெரிக்காவை விட்டு விலகுவதாகவே தெரிகிறது. எண்ணெய்வள நாடுகளது நடவடிக்கை அமெரிக்காவுக்கு பொருளாதார ரீதியிலான ஆபத்தை தருவதோடு அரசியல் இராணுவ பரிமாணத்தில் அதிக ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதாகவே உள்ளது.

நான்காவது, கடந்த காலங்களில் அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியின் போதெல்லாம் இந்தியா, சீனாவின் ஒத்துழைப்பு பலமானதாக அமைந்திருந்தது. அது மட்டுமன்றி அமெரிக்காவுக்கு சோவியத்யூனியனது வீழ்ச்சிக்கு பின்னர் உலகளாவிய ரீதியில் தலைமைதாங்கும் வலுவுள்ள நாடு எதுவும் இருக்கவில்லை. ஆனால் தற்போது சீனா, ரஷ்யா, இந்தியா என பல நாடுகள் அத்தகைய சக்திகளாக எழுச்சியடைந்துள்ளன. அதனால் றிச்சர்ட் வேல்ப்பின் விவாதத்தை இலகுவில் வீசிவிட முடியாது. இதுவே அவர் அமெரிக்காவின் உச்சக்கட்ட வீழ்ச்சி என விவாதிக்க காரணமாக அமையலாம். தற்போது எழுந்துள்ள தாக்குதல் கூட்டுத்தன்மை பொருந்தியது. இதில்' மேற்கு ஐரோப்பாவுக்குள்ளும் அமெரிக்காவுக்கு எதிரான விவாதம் எழுந்துள்ளது.

எனவே அமெரிக்கா Grate Space கொண்ட தேசமாக இல்லாதுவிட்டாலும் தேசிய அரசாகவும் நாடாகவும் விளங்கும் பேரரசாகும்.

அதாவது அத்திலாந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களால் சூழப்பட்ட அதேநேரம் அமெரிக்காவுக்கு சமதையான வலுவுடைய எந்த நாடும் இல்லாத கண்டத்திலே அமெரிக்கா அமைந்துள்ளது. அமெரிக்காவுக்கு அதன் அரசியல் புவியியலும் பாதுகாப்பானது. புவிசார் அரசியலும் பாதுகாப்பானது. விரைவில் வீழ்ந்துவிடும் என கருதுவது கடினமானது.

அமெரிக்கப் பேரரசு பற்றிய விவாதங்களை 1919 களிலேயே இருதயநிலக் கோட்பாட்டின் முன்னோடி மைக்கின்டர் முன்வைத்துள்ளார். மைக்கின்டரின் சாரம்சம் அமெரிக்காவை இலகுவில் தோற்கடிக்கப்படக் கூடிய பேரரரசாகக் கொள்ள முடியாது என்பதாகும்.

# பிரிட்டிஷ் மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா

## இங்கிலாந்தின் பழைமையையும் பெருமையையும் வெளிப்படுத்திய இந்நூற்றாண்டின் கண்கவர் விழா



### சூட்டப்படும் புனித எட்வர்ட் கிரீடம்

படத்தில் காணப்படும் இக் கிரீடமே மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் தலையில் சூட்டப்பட்டது. 1661ஆம் ஆண்டு இரண்டாம் சார்ள்ஸுக்காக இம்முடி உருவாக்கப்பட்டது. ஒலிவர் குரொம்வெல் தன் குடியரசு ஆட்சிக் காலத்தில் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இங்கிலாந்தின் எங்லோ – செக்ஸன் மன்னரான எட்வர்ட்டினால் உருவாக்கப்பட்ட கிரீடத்தை உருக்கி விட்டதாலேயே மற்றொரு கிரீடத்தை உருவாக்க வேண்டியதாயிற்று.

இதை உருவாக்கியவர் அரச கொல்லரான ரொபர்ட் வைனர். இது 2.07 கிலோ எடை கொண்டது. ஐந்து இறாத்தல். எனவே இதை தலையில் சூடிக் கொண்டிருக்க முடியாது. இம்முடி இறுதியாக 1953ம் ஆண்டு எலிசபெத் மகாராணியாரின் சிரசில் சூட்டப்பட்டது.



### முடி சூட்டப்படுவதற்கான நாற்காலி

புனித ஜோர்ஜ் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த இருக்கையின் வயது 715. வெஸ்ட் மின்ஸ்டர் தேவாலயத்தின் உயர்ந்த பீடத்துக்கு எதிரே இந்த நாற்காலி வைக்கப்பட்டிருந்தது. முடி சூட்டப்படுவதற்காக மட்டுமே இது பயன்படுத்தப்படுகிறது. முதலாம் எட்வர்ட் மன்னரின் கட்டளைப்படி 6 அடி 9 அங்குலம் உயரம் கொண்ட ஓக் மரத்திலான இந்த இருக்கை அமைக்கப்பட்டது. 1308 முதல் இது பாவனையில் உள்ளது.

இரண்டாம் உலக மாக யுத்தத்தின் போது விமானக் குண்டு வீச்சில் இருந்து பாதுகாப்பதற்காக இந் நாற்காலி குளோசெஸ்டர் தேவாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. பிரிட்டிஷ் அரச பாரம்பரியத்தில் இந்த இருக்கை முக்கிய இடத்தை வகிக்கிறது.



உலகில் இன்றைக்கும் சில நாடுகளில் மன்னராட்சி நடைபெறுகிறது. சில நாடுகளில் வைபவ ரீதியான மன்னர்கள் உள்ளனர். இங்கிலாந்து அரச குடும்பத்துக்கும் நேரடி அரசியல் அதிகாரம் கிடையாது. ஆனால் இங்கிலாந்து மக்கள் அரச குடும்பத்தை, தமது பழைமையின் பொற்காலத்தைக் காப்பாற்றும் ஒரு முயற்சியாக தமது வரிப்பணத்தை செலவிட்டு வருகின்றனர்.

1953ம் ஆண்டு வெகு விமரிசையாக நடைபெற்ற இரண்டாம் எலிஸபெத் மகாராணியாரின் முடிசூட்டு விழாவின் பின்னர் இடம்பெறும் கோலாகல விழாவாக இது கருதப்படுகிறது. 1945இல் இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த எட்டாவது ஆண்டில் எலிஸபெத் முடிசூடிக் கொண்டார். பேரழிவு யுத்தத்தின் பின்னரும் பிரிட்டன் வலுவாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது என்பதை மிகப் பெரும் சாம்ராஜ்ஜியமாக விரித்திருந்த பிரிட்டனுக்கு வெளிப்படுத்த வேண்டிய அவசியமும் அப்போது இருந்தது.

மன்னர் முடிசூட்டு விழாக்கள் ஏனைய நாடுகளிலும் நடைபெறுகின்ற போதிலும் பிரிட்டிஷ் அரச குடும்பத்து நிகழ்வுகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் அவற்றுக்கு கொடுக்கப்படுவதில்லை. இவற்றில் பின்பற்றப்படும் பழைமை, பாரம்பரியம், கண்கவர் கலாசார நடைமுறைகள் மற்றும் வேறெங்கும் பார்க்க முடியாத பிரமாண்டம் என்பன உலக மக்களை ஈர்ப்பதற்கான பிரதான காரணங்கள். அரசர் கால திரைப்படங்களை உருவாக்குபவர்களுக்கும் பிரிட்டிஷ் அரச குடும்ப விசேஷங்கள் தான் தீனி போடுகின்றன!

எலிசபெத்தின் முடிசூட்டு விழாவை பத்திரிகை செய்தியாகவும் கறுப்பு வெள்ளை பத்திரிகை புகைப்படங்களாகவுமே அன்று பார்க்க முடிந்தது.

நேற்றைய நிகழ்வை உலகெங்கும் பலகோடி மக்கள் நேரடியாகவே பார்க்க முடிந்தது. கடந்த வருடம் ஒரு அரசியின் இறுதிக் கிரியைகள் எவ்வாறு நடைபெறும் என்பதைப் பார்த்தோம்.

நேற்றைய நிகழ்வுக்காக மிகப்பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இங்கிலாந்தில் குறிப்பாக லண்டனில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எட்டாயிரம் ஆயுதப் படையினர் லண்டனில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்த முடிசூட்டு விழாவை இம்முறை அடக்கியே வாசித்திருக்கிறார்கள். மிகப் பிரமாண்டத்தை மன்னர் விரும்பவில்லை. மேலும் இது அரசு செலவாக மக்கள் வரிப்பணத்தில் நடத்தப்படும் விழா. 203 நாடுகளில் இருந்து 2,200 தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. அரசு உத்தியோகபூர்வமான தகவல் தராவிட்டாலும் இவ் விழாவுக்கு 100 மில்லியன் பவுண் செலவாகியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1953 எலிசபெத் முடிசூட்டு விழாவுக்கு இன்றைய மதிப்பில் 46 மில்லியன் பவுண்கள் செலவிடப்பட்டதாம்.

பொருளாதார பிரச்சினைகளில் சிக்கியிருக்கும் ஆங்கிலேயர்கள் மத்தியில் ஏன் ஆடம்பர முடிசூட்டு விழாவுக்கு எமது வரிப்பணத்தை செலவு செய்ய வேண்டும் என்ற எதிர்ப்பும் உள்ளது. 51 சதவீதமானோர் தமது வரிப்பணம் இவ்வகையில் செலவு செய்யப்படுவதை விரும்பவில்லையாம்.

சார்ள்ஸ் மன்னர் பெரும் பணக்காரர். அவரது தனிப்பட்ட சொத்து மதிப்பு 1.8 பில்லியன் பவுண்களாக இருக்கையில் தனது முடிசூட்டு விழாவுக்கு எங்களிடமிருந்து ஏன் பணத்தை எதிர்பார்க்கிறார் என்ற கோபக் கனலையும் லண்டனில் காண முடிகிறது.

மன்னர் கோலாகலமாக முடிசூடிக் கொண்டார். இதனால் எங்களுக்கு என்ன இலாபம்? என்று இளைய தலைமுறை கேட்கிறது!

### முதல் இரண்டு சார்ள்ஸ் மன்னர்கள் யார், யார்?





ஆறாம் ஜேம்சுக்கு மகனாகப் பிறந்தவர் முதலாம் சார்ள்ஸ். 1600இல் ஸ்கொட்லாந்தில் பிறந்த இவர் 1625இல் மன்னராக முடிசூடினார். இவரது மன்னராட்சி பிரச்சினைக்குரியதாக இருந்தது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கும் இவருக்கும் இடையே பிரச்சினைகள் தொடர்ந்தன. பாராளுமன்ற அனுமதி இல்லாமல் இவர் தன்னிச்சையாக முடிவுகள் எடுத்தார். பிரான்சை சேர்ந்த ஹென்றியெட்டா மரியாவை திருமணம் செய்தார். இவர் ஒரு கத்தோலிக்கர் என்பதால் எதிர்ப்பு அதிகரித்தது. ஒரு கட்டத்தில் ஸ்கொட்லாந்து மற்றும் பிரிட்டிஷ் பாராளுமன்றங்களுடன் இவர் சண்டை செய்ய வேண்டியிருந்தது. ஆங்கில சிவில் யுத்தம் என இது அழைக்கப்படுகிறது. யுத்தத்தில் தோல்வியுற்ற 1645 இல் தப்பிச் சென்ற இவரை 47 இல் கைது செய்து சதி செய்த குற்றச்சாட்டில் விசாரிக்கப்பட்டார். 1649 ஜனவரியில் மரண தண்டனை வழங்கப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டார். வின்சர் மாளிகையின் புனித ஜோர்ஜ் ஆலயத்தில் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இவருக்குப் பின் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு குடியரசு ஆட்சி குரொம்வெல் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**இரண்டாம் சார்ள்ஸ் : (1630 – 1685)**

பொதுநலவாய இங்கிலாந்து என்ற இடைக்கால அரசை அமைத்த குரொம்வெல்லுடன் 1651ம் ஆண்டு யுத்தம் செய்த இவர் தோல்வியுற்று பிரான்சுக்கு தப்பிச் சென்றார். 1658 இல் ஒலிவர் குரொம்வெல் இறந்ததும் முடியாட்சியை ஏற்படுத்துவதற்காக லண்டன் திரும்பினார். 1660இல் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவரது ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேய – டச்சுப் போர் நடைபெற்றது. இதற்கு பிரான்சின் உதவியைப் பெறுவதற்காக 14ஆம் லூயி மன்னருடன் இரகசிய ஒப்பந்தம் செய்தார். பின்னொரு நாளில் கத்தோலிக்கனாக மதம் மாறுவேன் என்பதே நிபந்தனை. சார்ள்சின் சகோதரரும் முடிக்குரியவருமான ஜேம்ஸ் ஒரு கத்தோலிக்கர் என்பது தெரியவர, அது பெரும் பிரச்சினையானது. சார்ள்சையும் ஜேம்சையும் படுகொலை செய்ய சதித்திட்டங்களும் தீட்டப்பட்டன. 1681இல் பாராளுமன்றத்தைக் கலைத்து 1685 பெப்ரவரி 6ம் திகதி அவர் மரணமடையும் வரை தனியாட்சி நடத்தினார் இரண்டாம் சார்ள்ஸ் மன்னர். இவர் ஆட்சிக் காலத்தில் நாடு வழமைக்கு திரும்பியது. இவரது மனைவி கெத்தரினுக்கு பிள்ளைப் பாக்கியம் இல்லை. எனினும் வேறு உறவுகள் மூலம் மன்னருக்கு 12 குழந்தைகள் இருந்தனர். லூயி மன்னருக்கு முன்னர் அளித்த வாக்குறுதியின் பிரகாரம் கத்தோலிக்கராக மதம் மாறிய பின்னரேயே மரணமடைந்தார். இவருக்கு பின்னர் இரண்டாம் ஜேம்ஸ் மன்னரானார்.

### சார்ள்ஸ் பிலிப் ஆர்தர் ஜோர்ஜ்

பிரிட்டிஷ் மற்றும் அயர்லாந்து மன்னராகவும் பொதுநலவாய அமைப்பின் தலைவராகவும் நேற்று பதவியேற்றுக் கொண்ட மூன்றாம் சார்ள்ஸ் மன்னர், பக்கிங்ஹம் மாளிகையில் 1948 நவம்பர் 14ம் திகதி பிலிப் கோமகனுக்கும் எலிசபெத் மகாராணிக்கும் மூத்த மகனாகப் பிறந்தார். அவருக்கு ஆன் என ஒரு தங்கை. இரண்டு தம்பிமார், அன்றூ மற்றும் எட்வர்ட். முழுப்பெயர் சார்ள்ஸ் பிலிப் ஆர்தர் ஜோர்ஜ். தற்போது வயது 74. பார்க்க வயதான தோற்றம் கொண்டிருந்தாலும் நேர்த்தியான ஜீன்களை கொண்டவர் என்ற வகையில் 90 வயதை நிச்சயம் தாண்டுவார் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இவருக்கு மூன்று வயதான போதே அடுத்த மன்னர் முடிக்குரிய இளவரசர் இவரே எனத் தீர்மானிக்கப்பட்டு விட்டது. ஒக்ஸ்போர்ட் ரினிட்டியில் கல்வி கற்கும் போதே 1958ம் ஆண்டு வேள்ஸ் இளவரசர் என்ற ஸ்கொட்லாந்தை பிரதிநித்துவம் செய்யும் பட்டம்



இவருக்கு வழங்கப்பட்டது. தொல்லியல், மானுடவியல் கற்ற இவர் வரலாற்றில் பட்டம் பெற்றார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கட்டட வடிவமைத்தல் என்பன இவருக்கு நெருக்கமான விடயங்கள். அறிவாற்றல் மிக்க இவர் எதைப்பற்றியும் ஆழமாகப் பேசக்கூடியவர். கமிலா விவகாரத்தைத் தவிர, வேறு எந்த சர்ச்சையிலும் சிக்காதவர். 1969இல் இவருக்கு அரச சின்னங்கள் வழங்கப்பட்டன. அரச வழக்கப்படி குதிரையேற்றம், விமானப்படை பயிற்சி, இராணுவ பயிற்சி, கடற்படை பயிற்சிகள் வழங்கப்பட்டன. சிறந்த போலோ விளையாட்டு வீரர். நவீன கட்டட வடிவமைப்பு பற்றி வெளிப்படையாக பேசக் கூடியவர்.

மூத்த மகன் என்ற வகையில் அன்னையுடன் நெருங்கிப் பழகி அரச பாரம்பரியங்கள், அரச வரலாறு, அரச நெளிவு சுழிவுகளை துறைபோகக் கற்றவர். பிரிட்டிஷ் அரசராக விளங்குவதற்கான எல்லா தகுதிகளையும் கொண்டவர். முதிர்ந்த 74ஆவது வயதில் அரசராக முடிசூடும் முதல் நபரும் இவர்தான்.

வேள்ஸ் இளவரசர் என்ற பட்டம் தற்போது மூத்த மகன் வில்லியமுக்கு சூட்டப்பட்டுள்ளது. அடுத்த மன்னராக முடிசூடப் போகிறவர் இளவரசர் வில்லியம். இவருக்கு ஜோர்ஜ், சார்லட், லூயிஸ் என மூன்று பிள்ளைகள். வில்லியத்தின் பின்னர் இவர்களே சிம்மாசனத்துக்கான வாரிசுகள். அரச குடும்பத்தில் இருந்து விலகிச் சென்ற ஹெரியும் கூட, அவர் அமெரிக்காவில் வசித்தாலும் முடிக்குரிய வரிசையில் அவரும் இருக்கவே செய்கிறார். மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் இயற்கை பாதுகாப்பு பற்றி நிறைய பேசியிருக்கிறார். "எமக்கும் இயற்கை உலகத்துக்கும் இடையிலான சம நிலைமையும் உறவுகளையும் மற்றும் ஒழுங்குமுறைகளையும் நாம் அறிந்து கொள்வோமானால் நீண்ட காலம் நின்று பிடிக்கக் கூடிய எதிர்காலத்தைக் கட்டி எழுப்பலாம்" என்பது மன்னரின் கூற்று.

அருள் சத்தியநாதன்

### கமிலா சார்ள்ஸ்



மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவில் அவர் மனைவி கமிலாவுக்கு இங்கிலாந்தின் ராணி என்ற உத்தியோகபூர்வ பட்டம் அளிக்கப்பட்டது. பிரிட்டிஷ் மக்களால் ஒரு சமயம் பெருமளவில் வெறுக்கப்பட்ட ஒரு பெண்மணியாக கமிலாவைக் குறிப்பிடலாம். காரணம், இளவரசி டயானாவை அவர்கள் மிகவும் நேசித்ததும் அவருக்கு போட்டியாக கமிலா வந்ததும்தான். 1947 ஜுலை 17ம் திகதி லண்டனில் பிறந்த இவரது இயற்பெயர் கமிலா ரோஸ்மேரி ஷான்ட். செல்வந்த, உயர் மட்ட தொடர்புகள் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் அரச குடும்பத்தவர் அல்ல. புரூஸ்ஷான்ட் என்பது அப்பா பெயர். அம்மா ரொசலின் கியூபிட். அப்பா கெவல்ரி என அழைக்கப்படும் குதிரைப் படைப் பிரிவில் அதிகாரியாக பணியாற்றியவர். சுவிஸ் நாட்டில் தன் கல்வியை தொடர்ந்தவர். அவருக்கு 1970ஆம் ஆண்டு முதல் அதாவது கமிலாவுக்கு 23 வயதாகும் போதிருந்தே 22 வயதான 'பொடியன்' சார்ள்ஸை நன்கு தெரியும்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

### ஜோ பைடன் ஏன் கலந்து கொள்ளவில்லை?



நேற்று வெகு விமரிசையாக நடைபெற்று முடிந்த மூன்றாவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் உலக நாடுகளின், தலைவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டார்கள். பிரிட்டிஷ் அரச குடும்பத்து விசேஷங்களில் கலந்து கொள்வது ஒரு பாக்கியம் என்றே பல நாட்டுத் தலைவர்கள், அன்றும் இன்றும் கருதி வந்துள்ளார்கள். பொதுநலவாய அமைப்பில் 56 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அதன் தலைவர் இங்கிலாந்து இராணி அல்லது மன்னராகவே இருப்பார். ஒரு பெரும் பொறுப்பை மன்னர் ஏற்றிருக்கிறார். 1981ஆம் ஆண்டு சார்ள்ஸ் டயானா திருமணம் மிகப்பெரும் பிரிட்டிஷ் விழா போல நடைபெற்ற போது உலகத் தலைவர்கள் பலரும் அதில் பெருமையுடன் கலந்து கொண்டார்கள். இலங்கையில் இருந்து அழைக்கப்பட்டவர் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன. பெறுமதிமிக்க இரத்தினக்கல்லை பரிசாக அவர் எடுத்துச் சென்றிருந்தார். அப்போது பிரதமராக விளங்கிய ஆர்.பிரேமதாசவுக்கு அழைப்பிதழ் இல்லை. எனினும் வேறு காரணத்துக்காக லண்டன் சென்றிருந்த அவர் அத்திருமணத்தில் கலந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றார்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

### வெஸ்ட்மின்ஸ்டர் அபே எனப்படும் இந்த ஆலயம்



வெஸ்ட்மின்ஸ்டர் அபே எனப்படும் இந்த ஆலயம் 900 வருடம் பழமைமிக்கது. 960ம் ஆண்டில் 12 பௌடிக்டைன் துறவிகள் இங்கே வந்து ஒரு துறவு மடாலயம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அவ்வாறே டைபேர்ன் ஆற்றோரமாக ஒரு மடாலயம் அமைக்கப்பட்டது.

எட்வர்ட் மன்னர் இம் மடாலயத்தை ஒரு ஆலயமாக அமைத்தார். பின்னர் புனிதராக அறிவிக்கப்பட்ட இவரது சடலம் பிரதான பீடத்துக்கு பின்புறமாக அடக்கம் செய்யப்பட்டது. 1060இல் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. 1245இல் மூன்றாம் ஹென்றி மன்னர் இன்றைய வடிவில் இதை புதுப்பித்தார். 1559 இல் இந்த ஆலயம் நேரடியாக மன்னரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இது ஒரு கோவிலோ, பேராலயமோ அல்லது அங்கிளிக்கன் மத நிர்வாகத்துக்கு உட்பட்டதோ அல்ல. இது மன்னருக்கும் அவர் குடும்பத்துக்குமானது. லண்டனின் மேற்கே அமைந்திருப்பதால் வெஸ்ட் மின்ஸ்டர் என்று பெயர். கிழக்கே ஒரு ஈஸ்ட் மின்ஸ்டர் தேவாலயமும் உள்ளதாலும் இதற்கு 'வெஸ்ட்' என்ற காரணப் பெயர் வந்தது. 'அபே' என்றால் அடக்கப்படும் இடம் எனப் பொருள்படும். இங்கே 3,300 மரித்தோர் அடக்கப்பட்டுள்ளனர். 18 அரசர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். 39 அரச முடிசூட்டு வைபவங்கள் இங்கேயே இடம்பெற்றுள்ளன. 40வது முடிசூட்டும் வைபவம் நேற்று இங்கே நடைபெற்றது. 1066 இல் வில்லியம் மன்னருக்கு நடைபெற்ற முடிசூட்டு வைபவமே இங்கு இடம்பெற்ற முதலாவது அரச முடிசூட்டு வைபவமாகும்.

இங்கே இதுவரை 17 அரச திருமணங்கள் நடைபெற்றுள்ளன. இறுதியாக நடைபெற்ற திருமணம், 2011இல் வில்லியம் இளவரசருக்கும் கேட் மிடில்டனுக்கும் நடந்ததாகும். 450 வருடங்களுக்கு முன்னரேயே இங்கே அடக்கம் செய்யப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டது. வெஸ்ட் மின்ஸ்டரின் நீளம் 530 அடிகள். உட்புறம் 32 ஆயிரம் சதுர அடி விஸ்தீரணம் கொண்டது.

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com



## கனவுகளோடு காத்திருக்கும் விடைத்தாள்கள்

காத்தான்குடி எம்.ஐ.அப்துல் நஸார்

உயர்தரப் பரீட்சை முடிவுற்று நெடுநாட்கள்
உதவியின்றி கிடக்கின்றன விடைத்தாள்கள்
பயனற்று போகமுன் அவற்றை திருத்திடுங்கள்
பழிசொல்லும் எதிர்காலம் மனதில் இருத்திடுங்கள்

உளமாற்றம் இல்லையென்றால் உயர்ந்திடவே முடியாது
உடும்புப் பிடிவாதத்தால் மதிப்பேதும் கிடையாது
வளமான எதிர்காலம் மாணாக்கருக்குக் கிடைக்காது
வஞ்சிக்கப்பட்டோர் ஏக்கங்கள் யாரையும் விட்டுவிடாது

குவிந்திருக்கும் மாணவரின் வானுயரக் கனவுகள்
குழிகளுக்குள் புதைத்திடாதீர் அத்தனையும் உணர்வுகள்
செவியேற்றுப் பணிசெய்தால் மாற்றத்தை உணர்வீர்கள்
செங்கம்பளங்கள் காத்திருக்கின்றன நீங்களே வீரர்கள்

பதின்மவயதில் காணும் தவறான முன்மாதிரி
பலதலைமுறைகள் தொடரும் அதுவே தலைவிதி
முதிராச் சிந்தனைகளில் நஞ்சேற்றல் தவறானவழி
முன்னோக்கிச் செல்வதற்கு தடைகளை ஒழி

கண்ணீர் நிறைந்த பிரார்த்தனைகள் நாள்தோறும் நீளும்
கற்றதன்பலனை பார்த்திடவே மனமெல்லாம் ஏங்கும்
கண்ணியமான ஆசான்கள் அறிவுக்கரங்களின் ஸ்பரிசத்திற்காய்
கனவுகளோடு காத்திருக்கும் திருத்தப்படாத விடைத்தாள்கள்

## பெறுமானம்...?

ஈழத்து நூன்
ஒன்று
ஒன்றாக இருக்கும் வரை
அதன் பெறுமானம்
ஒன்று தான்
இணையாக ஒன்று
அது ஒன்றாகவே...

ஆயிரம் பூஜ்ஜியங்கள்
குவிந்தாலும்
அது பூஜ்ஜியம் மட்டுமே
பெறுமதி அற்றதே
பூஜ்ஜியமல்லாத
ஒன்று இணையும் வரை
அது பூஜ்ஜியம் தான்...

ஒன்றோடு ஒரு பூஜ்ஜியம்
இணைந்தால் பத்தாகிவிடும்
அடுத்தடுத்து பூஜ்ஜியங்கள்
இணைய நூறாய் ஆயிரமாய்
தொடர்ந்த வண்ணம்
பெறுமானம் கூடும்...

ஆக, பெறுமானம் எதற்கு
ஒன்றுக்காக – அல்ல
பூஜ்ஜியத்துக்காக!
தனித்து நின்றால்
எல்லாமே பூஜ்ஜியம்தான்
இணைப்பொன்றே
பெறுமானமாய்...!



## கௌதம புத்தர்

ரதிதேவி, மானிப்பாய்

நான்குவித மாந்தர்களை
நேர் கண்டு
நாட்டை விட்டுக் காட்டினுள்ளே
புகுந்த சித்தார்த்தன்
கண்டெடுத்தான் வான் ஒளியைத்
தன்னுள்ளே
கடந்துவிட்டான் ஏழ் கடலைக்
கண்ணுள்ளே

நான்குவித மாந்தர்களை
முதல் முறை கண்டு
நடுங்கி நின்றவனின்
மனம் எழுந்த வினா
நதிக்கரையில் மரத்தடியில் மலராகி
வையம் மகிழ்ந்திடவே
இதழ் விரித்த தழல் ஆனதே

ஓர் இரவில்
அரண்மனையைக் கடந்துவிட்டான்
பேர்உலகின் பெருவெளியில்
மறைந்துவிட்டான்
ஞானம் தேடி பல குருவை அடைந்துவிட்டான்
இருந்தும் தீரவில்லை துன்பம் என்று
நீங்கிச் சென்றான்

உடலை வருத்தி
பருக்கை சோற்றில் நிறுத்தி
நாட்கள் நீட்டித்தான்
நிம்மதி நிலைக்கவில்லை

மரத்தொடு மரமாய் ஒன்றிப் போனான்
காற்றே கதி கொண்ட நதியாக
வீசும் அளவு வலுவிழந்தான்
ஏனோ இன்னும் கிடைக்கவில்லை
வீணோ இந்த மூவிரண்டு ஆண்டு
முயற்சிகள் யாவும்

ஒரு சிறுமி கொடுத்த
ஒரு பிடி சோற்றில்
கண் திறந்தான்
நடுவழி அறிந்தான்
அரண்மனை சுகங்கள்
ஒரு முனையாம்
உடலை உருக்கிடும் யோகங்கள்
மறு முனையாம்
நடுவில் ஒரு வழி இவன் அறிந்தான்
நட்ட விதையாய்
விளைந்தெழும் வரை விலகான்

அடைந்தான் அர்த்தம் சித்தார்த்தன்
அன்று முதலோ இவன் பெயர் புத்தன்
வேதத்தின் பிழைகள் அனைத்தும் திருத்தி
புது ஞானத்தை வழங்க
புவியில் நிலைத்தான்
தர்மயுத்தத்தை கண்ணனும்
நிகழ்திய காரணம்
அதுவே தர்மத்தை இவனும்
உரைத்ததன் காரணம்



## சாத்தியமாகிறது...

வ.வடிவழகையன்
காரைநகர்

காக்கைகுருவியெங்கள் ஜாதியென்று
ஒரேநொடியில்
எல்லா ஜீவன்களோடும்
சமத்துவமாக முடிகிறது

தொட்டிக்குள்ளிருந்து
துள்ளிப்பாயும் மீனாட்டம்
அண்டம் தாண்டியும்
எகிறிக்குதிக்க இயல்கிறது

பூக்களைக் காணுகையில்
வண்டாயும்
வண்டுக்கூட்டங்களுக்கிடையே
மகரந்தமாயும்
கூடுவிட்டுக் கூடுபாயும்
வித்தை கைகூடுகிறது

நட்சத்திரமண்டலத்துள்
நானுமொருவனாயும்
நானொருவனே
பால்வீதியின் சொந்தக்காரனாயும்

மலர்கள் கிடைக்கிறபோது
வனங்களோடு பேசவும்
வனங்களுக்கிடையே நின்று
மலர்களோடு ஸ்பரிசிக்கவும்

நிலவை சுற்றிவளைத்து
அணைத்துக்கொள்ளவும்
உலகோடு
சுற்றிவராமலேயே
பிணைத்துக்கொள்ளவும்
முடியுமாயிருக்கிறது

வானவில்லைத் தொட்டுத்தொட்டு
ஓவியம் வரையவும்
ஓவியங்களுக்குள்ளேயே
வானவில்லைக் கண்டடையவும்

உலகை இரண்டுவரிக்குள்
அடக்கி வைக்கவும்
அணுவைப் பிளந்து
அதற்குள் கவிதைசெய்யவும்

குடையை அப்பால்வீசிவிட்டு
மழையை ரசிக்கவும்
குடைக்குள்ளேயே
மழையை ருசிக்கவும்

மேகங்களோடு பிறரறியாமல்
ஸ்நேகம் செய்யவும்
மோகத்தைக்கூட பிறரறிய
வரிகளால் நெய்யவும்கூட
சாத்தியமாகிறது

சிலவேளைகளில்
கடவுளோடு கதைபேசவும்
கதைகளுக்குள்ளேயே
கடவுளைத் தரிசிக்கவும்கூட
முடிந்திருக்கிறது

கவிஞனாய் இருக்கிறபோது ....

## நாளை உலகம் அழிந்து விட்டால்...?

நல்லதும் நன்மையும் இழந்து
நன்நெறி வழிகள் மறந்து
கள்ளமும் கபடமும் உறைந்து
கலங்கித் தவிக்கும் உலகமிது
நாளை அழிந்து போயின்
நல்லதாய் இருக்கும் நமக்கு

பாசமும் நேசமும் மறந்து
பணமே உயிரெனப் பறந்து
வேசம் கொண்டே யாவரும்
வெட்டியாய் வாழும் உலகமிது
நாளை அழிந்து போயின்
நல்லதாய் இருக்கும் நமக்கு

ஒழுக்கம் உயர்வு தருமெனும்
உயர்வழி யறியா மாந்தர்
தலக்கனமாய் வாழ்ந்து நிதம்
தரம் கெட்டுப்போன உலமிது
நாளை அழிந்து போயின்
நல்லதாய் இருக்கும் நமக்கு

மேதகு மனு குலம்
மேவிடும் வினை களதால்
உதிரம் கொட்டி உறைந்து
உப்பிப் பருத்த உலகமிது
நாளை அழிந்து போயின்
நல்லதாய் இருக்கும் நமக்கு

வேற்றுமை யுடுத்தி யாவரும்
விருப்புடன் வாழும் செய்கை
வேருடன் தரை வீழ்ந்து
வேறொரு யுகம் ஆகிடவே

## உங்களுக்காக வாழுங்கள்

இணுவில் வாகீசன்



பிறர் என்ன நினைப்பார்கள் என்று எண்ணி
உங்கள் சந்தோசங்களை
தொலைக்க வேண்டாம்
உங்களுக்காக வாழுங்கள்

நீங்கள் எண்ணும் வாழ்வை வாழாது
பிறரின் விருப்பிற்காக வாழவேண்டாம்
பிறர் மனம் மகிழ வேண்டாமா என்றெண்ணி
உங்கள் மனங்களை துயரத்தில் வீழ்த்தாதீர்

உங்கள் மரணத்தின் பின் உங்களைப் பற்றி
யாரும் சிந்திக்கப்போவதில்லை
நீங்கள் விட்டுச்சென்றவற்றில்
பெறுமதியானவற்றை பற்றியே சிந்திப்பார்கள்

## கார்காலப் புலர்வுகள்

வேலணையூர்
ரஜிந்தன்

பூமித்தாயின் பசுமை ஆடைகள்
களவாடப்பட்டிருக்கின்றன
நவீனத்து மனிதர்களால்!

கட்டடங்களுக்குள்ளும்
அடுக்கு மாடிகளுக்குள்ளும்
சிறை வைக்கப்பட்டிருக்கிறாள்
இயற்கை அன்னை!

சுயநல மனிதத்தின்பால்
பல்லுயிர்கள் வாழ்விழந்து
காணாமல் போயிருக்கின்றன!

நாகரீக வளர்ச்சியின் சிகரத்திலின்று
வைரஸ் செடிகள் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன!

வாழத்தகாத அவனியையே
வடிவமைத்துக்கொண்டிருக்கின்றன
அதிகாரத்தின் கரங்கள்!

பழமைகள் மறந்ததினால்
புதுமைகள் கூட இன்று
பயனற்றுப் போயிருக்கின்றன!

கதிரவன் வரவுகளிற் கூட
இருளோடு தான்
போராடுகிறது தற்கால வையம்!

மனித எண்ணங்கள் துளிர்க்கும்
ஆரோக்கிய விருட்சத்துக்காய்
காத்திருக்கிறது காலம்!

கார்காலப் புலர்வுகள் எல்லாம்
புதிய மாற்றத்திற்கான
அறைகூவல்களே!

## வண்ணத்துப் பூச்சியாகலாம்...

மெய்யன் நடராஜ்

மனதை ஒரு குடையாக்கி மடித்து வை
என்றாவது வரலாம் உனக்கான மழைக்காலம்

எதிர்பார்ப்புகளை
கருங்கல்லாக்கிப் போட்டுவை
சந்தர்ப்பங்கள் அதை
சிலையாகச் செதுக்கி வைக்கலாம்

முயற்சிகளை ஒரு விதையாகப் புதைத்து வை
முன்னேற்றங்கள் ஒரு மரமாக வளரலாம்.

நம்பிக்கையை ஒரு மலையாக
நிறுத்தி வை
கனவுகள் அதில் ஊற்றெடுக்கும்
நதியாகப் பாயலாம்

இலட்சியத்தை
ஒரு உடும்பாகப் பிடித்து வை
வெற்றி உன் மைதானத்தில்
விளையாட்டுப் பந்தாகலாம்

வாழ்வை ஒரு பூந்தோப்பாய் மாற்றி வை
நீயே ஒரு வண்ணத்துப் பூச்சியாகிப் பறக்கலாம்

## இறுமாப்பின்றி அமைதியாய்...

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

இங்கிதங்கள் பல
இடர்நீங்கக் இயம்பி
சங்கதிகள் எல்லாம்
சாற்றும் ஆழம்

அறிவின் தாகம்
ஆற்றும் கருமம்
ஏற்றும் ஞானம்
இதயத்தில் கமழும்

ஆராய்ந்து தெளிவு
சீராய்ந்த செறிவு
மானிட விடிவு
மகத்துவத்தின் சின்னம்

வித்தைகளின் சேர்க்கை
விந்தைகளின் சொர்க்கம்
சிந்தை துலக்கிடும்
சீரிய சேவை

வலியார் எளியார்
வித்தியாசம் இல்லை

தனிமையில் துணையாகும்
தருவின் பிள்ளைகள்

எண்ணற்ற ஏந்தல்களை
இறப்பினும் புகழாரம்
இறுமாப்பின்றி அமைதியாய்
உவந்திடும் பனுவலே

காற்றை விடவும்
கடிவேகம் வேண்டு
புத்தகத்தைப் புரட்ட
பூர்வாங்கமாய் விரும்பு

கறையாவும் துடைக்க
நிறைவான கருவி
கறையான் அரித்திடும்
குறையை அழித்திடு

அழகான தோட்டம்
அவனியின் பூக்கள்
நுகர்ந்தே திளைப்போம்
நேத்திரங்களால் சுகிப்போம்

கடந்த வாரத் தொடர்ச்சி



# "குரு பார்க்க கோடி நன்மை"

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷ ராசியில் குரு சஞ்சரிப்பதால் ஏற்படப்போகும் மாற்றங்கள்

**(2023 ஏப்ரல் 22 முதல் 2024 மே 1ம் திகதி) மேஷ ராசியில் இருந்து குருவானவர் 5ம் பார்வையாக சிம்மத்தையும் 7ம் பார்வையாக துலாத்தினையும் 9ம் பார்வையாக தனுசு ராசியையும் பார்க்கிறார்.**

### துலாம்

குரு 7 ம் இடமான மேஷத்தில் இருக்கப்போகிறது. துலா ராசிக்கு குரு பார்வை இருப்பதால் ஏராளமான நன்மை கிடைக்கும். திருமணம், ஆரோக்கியம், வியாபாரம் போன்றவை நன்றாக இருக்கும். மிகத் தூய்மையான சுவையான ஆரோக்கியமான உணவு அருந்துவீர்கள். வியாதி மறைந்துவிடும். சௌக்கியமாக இருப்பீர்கள். எனவே இது மனத் தைரியத்தை கொடுக்கும். எடுத்த காரியத்தை திறம்பட செய்வீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் இடம்பெறும். குடும்பத்தில் திருமண நிகழ்வு இடம் பெறும். கல்வி நிலையில் இருப்பவர்கள் நன்றாக படித்து உயர் நிலை அடைவர். நல்ல மதிப்பெண் கிடைக்கும். திருமணத்தை தள்ளிப் போட வேண்டாம். வெளிநாட்டு வாய்ப்பு கிட்டும். திருமணம் முடித்துவிட்டு வெளிநாடு செல்வது நல்லது. 7ல் உள்ள குரு 3,11 இடங்களை பார்ப்பது நல்லது. ஆகவே அனைத்தும் நல்லதாகவே நடைபெறும். உத்தியோக மாற்றம் கிடைத்தால் நல்ல மாற்றமாகவே கிடைக்கும் எனவே மாற்றத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

### விருச்சிகம்

விருச்சிக ராசிக்கு குரு நன்மை செய்யும் கிரகமாகும். அது இப்போது 6ல் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. 6ல் குரு ஊரில் பகை. மற்றும் சனி, கேது சேர்ந்து இருப்பதால் கடுமையான வார்த்தைகள் பேசி மற்றவர்களை நோகடிப்பீர்கள். தன்னை பற்றி சுய பரிசோதனை செய்யாது மற்றவர்களை பற்றி பேசி கொண்டிருப்பீர்கள். மறைவு ஸ்தானத்தில் குரு வருவதால் பெரும்பாலும் நல்லது அல்ல. அனைவருடனும் நன்றாக பழக முயற்சியுங்கள். எதிரிகளின் வளர்ச்சி அதிகரிக்கும். 2ம் இடத்தினை பார்ப்பதால் பொருளாதாரம் வளர்ச்சி தரும். கொடுக்கல் வாங்கல் சீராகும். கையிருப்பு இருந்துகொண்டே இருக்கும். வியாபார ரீதியான பணம் சீராக இருக்கும். வியாபாரத்தில் வளர்ச்சி காணப்படும். பணப் பரிவர்த்தனை பற்றிக் கவலைப்பட தேவையில்லை. மேலும் குரு 10ம் இடத்தைப் பார்ப்பதால் தொழில் மற்றும் வருமானம் நன்றாக இருக்கும். குடும்ப வாழ்கை நன்றாக இருக்கும். அயன சயன ஸ்தானத்தை குரு பார்ப்பதால் குடும்ப வாழ்கை நிம்மதியடையும். ஆனால் யாரையும் விரோதிகளாக்கிக் கொள்ள வேண்டாம். சுமுகமாக பழகிகொள்ளுங்கள். ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

### தனுசு

தனுசு ராசிக்கு அதிபதியே குரு தான். இந்த குரு இப்போது ஐந்தாம் இடத்திற்கு வருவது நன்மை. அஞ்சில குரு கெஞ்சினாலும் கிடைக்காது என்று சொல்வார்கள். மிக அற்புதமான யோகம். தனுசு ராசி அன்பர்கள் கடந்த காலங்களில் ஏழரைச் சனியினால் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். அவற்றை எல்லாம் போக்கும் விதமாக குரு பகவான் 5ம் இடத்தில் அமர்ந்துகொண்டு நன்மை செய்யப் போகிறார். மற்றும் 9ம் பார்வையாக குரு பார்க்கவிருக்கிறது. மிகப்பெரிய நன்மைகள் எல்லாம் நடைபெறப் போகின்றன. குருவருள் கிடைக்கும். குரு கடாட்சம் கிடைக்கும். ஆரோக்கியத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்படும். பொருளாதாரத்தில் கணிசமான வளர்ச்சி ஏற்படும். மேஷத்தில் இருந்து 9ம்,11ம் இடங்களை பார்க்கிறது. மற்றும் உங்கள் ராசியையும் பார்க்கிறது. இது மிகப்பெரிய யோகம். வாழ்க்கையில் என்ன எல்லாம் நடக்க வேண்டியுள்ளதோ அது அத்தனையும் நடக்கும். திருமண வயதில் இருந்தால் திருமணம் நடைபெறும். வேலை கிடைக்காமல் இருந்தால் வேலை கிடைக்கும். சொந்த வீடு கட்டாமல் இருந்தால் சொந்த வீடு கட்டுவீர்கள். வியாதி துன்பப் படுத்தி கொண்டிருந்தால் வியாதி குணமாகும். கடன் பிரச்சினையில் இருந்தீர்கள் என்றால் கடன் பிரச்சினை தீரும். உங்களுக்கு பிடித்த மாதிரியான மண வாழ்க்கை அமையும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஒன்பதாம் ஸ்தானமான பாக்கியஸ்தானத்தை குரு பார்த்துக் கொண்டிருப்பதால் பூர்வீக சொத்துக்கள் ஏதேனும் வர வேண்டி இருந்தால் அது வந்து விடும். சட்ட ரீதியாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய சொத்தின் பங்கு இப்போது வந்து சேரும். நிச்சயமாக உங்களுக்கு ஒரு சொந்த வீடு அமையும். நீங்கள் சொந்த வீடு வாங்குவதாக இருந்தால் தெற்கு வாசல் வீடு வாங்குவது நன்மை தரும். வியாபாரம் நல்ல முன்னேற்றம் தரும். பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும். 11ம் இடமான லாப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பணம் வந்து கொண்டே இருக்கும். அதில் எந்தவித தடையோ தாமதமோ இருக்காது. மகிழ்ச்சியான நல்ல நிகழ்ச்சிகளில் நீங்கள் கலந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும். வாழ்க்கையில் நடைபெற வேண்டிய நல்ல விஷயங்கள் எல்லாம் இப்போது நடைபெறும். இந்த டிசம்பர் மாதம் 20ம் திகதி ஏழரை சனி முடிகிறது. எனவே மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வெற்றிகரமாக உங்கள் பணிகளை செய்து முடிப்பீர்கள். ஆரோக்கியமாக இருப்பீர்கள். இந்த சோபகிருது வருடமும் உங்களுக்கு நன்றாக இருக்கிறது .




### மகரம்

பொதுவாக மகரத்துக்கு நன்மை செய்யும் கிரகங்களில் குரு அமையாது. 3ம் இடத்திலிருந்து 4ம் இடத்திற்கு குரு வந்துள்ளது. மூன்றாம் இடத்தில் ஆட்சி பெற்று இருந்த குரு இப்போது பகைவீடான நான்காம் இடத்திற்கு வந்துள்ளது. அது பெரிய நன்மை செய்யுமா என்று கேட்டால் செய்ய வாய்ப்பில்லை. தீமை செய்யுமா என்று கேட்டாலும் இல்லை. மறைவு ஸ்தானத்திற்கு அதிபதியானவர்கள் கேந்திர ஸ்தானத்திற்கு வரும்போது பெரும் நன்மை செய்யுமா என்று கேட்டால் செய்யாது. ஆனால் அதன் பார்வை நன்மை செய்யும். 10ம் இடத்தை குரு பார்ப்பதனால் தொழிலில் பெரும் முன்னேற்றம் ஏற்படும். ஏழரை சனியால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் சற்று குறையும். உங்கள் உயர் அதிகாரிகள் மாற்றம் அடைவார்கள். ஆனால் நீங்கள் பாதுகாப்பாக அப்படியே இருப்பீர்கள். உங்களுக்கு ஏதும் ஏமாற்றங்கள் கிடைக்காது. உங்கள் தொழில் ஓரளவு சுமாராக போய்க் கொண்டிருக்கும். அலுவலகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் எல்லாம் உங்களை பாதிக்காது. பழைய பாக்கிகள் வசூல் ஆகும். பூர்வீக சொத்து சம்பந்தமான வழக்குகள் இருந்தால் அது தற்போது தொடரப்படும். அதன் தீர்ப்பு உங்களுக்கு சாதகமாக வரும். எதிர்பாராத நன்மைகள் நடைபெறும். நோய்கள் விலகும். உங்களுக்கு வரவிருந்த ஆபத்து ஓடிவிடும். தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய்விடும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வீட்டில் உள்ள அனைவரும் ஒற்றுமையாக இருந்து சுப நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய நேரம் இது. எதிர்பாராத தொகை கைக்கு வந்து சேரும். கட்டிடம் கட்டுவதற்கு தேவையான பொருட்களை விற்பனை செய்பவர்கள், தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் வியாபாரம் செய்பவர்களுக்கெல்லாம் இப்போது நல்ல நேரம். வாழ்க்கைத் தரம் நன்றாக இருக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்பம் அமைதியாக இருக்கும். சனி இரண்டாம் இடத்திற்கு சென்றுவிட்டு மீண்டும் ராசிக்குள் வருகிறது. சனி நேர் பாதையில் வரும் போது நன்மை செய்யும் வக்கிரகதியில் செல்லும் போது நன்மை செய்யாது. ராசி அதிபதி ராசியை கடக்கும் போது தீமை செய்யாது. ஆனால் வக்கிரத்தில் வரும்போது ஆரோக்கியத்தைச் சீண்டி பார்க்கும். உடற்பயிற்சி செய்து கொண்டிருங்கள். உணவுக் கட்டுப்பாட்டில் இருங்கள். ஜூன் 27 சனி வக்கிரம் அடைகின்றது. ஆகவே ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் சற்று கவனமாக இருங்கள். பண விஷயத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். நிறைய பணம் வரும் நிறைய செலவாகும். உத்தியோகத்தில் அசைக்க முடியாத இஸ்திர தன்மை ஏற்படும்.

### கும்பம்

உங்கள் ராசிக்கு குருவின் பார்வையை வைத்து மட்டுமே பலனை சொல்ல முடியும். குரு மூன்றாம் இடத்தில் சஞ்சரித்துள்ளது. அது அவ்வளவு சிறப்பித்து சொல்ல கூடிய இடம் அல்ல. கும்பத்திற்கு குரு பெரிய யோகத்தை கொடுக்குமா என்று கேட்டால் இல்லை. 7,9,11ம் இடங்களை குரு பார்க்கிறது. ஏழாம் இடம் என்பது புகழை கொடுக்கும் இடம். குடும்ப வாழ்க்கை பற்றி சொல்லும் இடம். எனவே புகழோடு நன்றாக இருப்பீர்கள். வாழ்க்கைத் துணை நன்றாக இருக்கும். வாழ்க்கை நன்றாக அமையும். திருமணம் செய்யலாம். ராசியை சனி கடந்து கொண்டிருக்கும்போதும் வக்கிரத்தில் செல்லும்போதும் திருமணம் செய்ய வேண்டாம். நேர் கதியில் செல்லும் போது திருமணம் செய்யலாம். வேலை நிமித்தமாக கணவன் மனைவி இருவரும் ஒரேயிடத்தில் வாழக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். ஏழரைச் சனி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 9ம் இடமான துலாமை பார்ப்பதால் எல்லாவிதமான பாக்கியங்களும் கிடைக்கும். வாழ்க்கையில் கிடைக்க வேண்டிய நல்ல விடயங்கள் அனைத்துமே கிடைக்கும். நீங்கள் எதைப் பெறுவதற்கு தகுதியானவர்களோ அது கிடைக்கும். பாக்கியஸ்தானம் வலுப்பெறுவதால் தந்தைக்கு நன்மை. முன்னோர்கள் சம்பாதித்த அசையா சொத்துக்கள் உங்களுக்கு கிடைக்கும். தந்தை வழி உறவினர்களுடன் நல்லிணக்கம் ஏற்படும். பதவிகள் கிடைக்கும். உங்களை அலட்சியம் செய்தவர்கள் உதாசீனப்படுத்தியவர்கள் தற்போது உங்களை பார்த்து நடுங்கும் அளவிற்கு பதவி அமையும். பெரும்பாலும் அதிகார பதவி கிடைக்கும். உங்கள் வியாபார ஸ்தலத்தில் அதிக தொல்லைகள் ஏற்படும். ஆனால் வியாபாரம் நன்றாக ஏறிக்கொண்டே போகும். அரசு உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றம் காணப்படும். மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். புத்திசாதுரியம் அதிகரிக்கும்.

### மீனம்

உங்கள் ராசிக்கு இரண்டில் குரு சஞ்சரித்துள்ளார். குருவுக்கு சொந்த வீடு மீனம். தன்னிடத்திலிருந்து மேஷத்திற்கு இப்போது நகர்ந்துவிட்டது. மேஷம் பகை வீடுகளில் ஒன்று. மேஷத்துக்கு செவ்வாய் நட்புக் கிரகம். எனவே செல்வாக்கை கொடுக்கும். பேச்சுத் திறமையை கொடுக்கும். கல்வி முன்னேற்றத்தை கொடுக்கும். கடன் பிரச்சினையிலிருந்து தீர்வை கொடுக்கும். ஆரோக்கியத்தில் முன்னேற்றத்தை கொடுக்கும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். கடன் பிரச்சினைகள் ஏதேனும் இருந்தால் அதனை தற்போது திருப்பிக் கொடுத்து விடுவீர்கள். ஏழரை சனி டிசம்பர் மாதத்தில் ஆரம்பமாகிறது. ஏழரைச் சனி உங்களை பாதிக்காது. ராசி அதிபதி ராசியிலிருந்து இரண்டாம் இடத்திற்கு சென்றது ஒரு விதத்தில் நன்மைதான். 6,8 ஆகிய இடங்களை குரு பார்க்கப் போகிறது. எனவே கடன் பிரச்சினை இருக்காது. நெருக்கடிகள் இல்லாமல் இருப்பீர்கள். பழைய சொத்துக்களை விற்று பூமியில் முதலீடு செய்ய முன் வருவீர்கள். சொந்த வீடு வாங்குவீர்கள். பழைய கடனை அடைத்து விட்டு புதிய கடன் வாங்குவீர்கள். 8ம் இடத்தை குரு பார்ப்பதால் ஆபத்துக்கள் நேரும். ஆனால் அதனை குரு தடுத்துவிடும். பயணம் மேற்கொள்ளும் போது பத்திரமாக வீடு வந்து சேருவீர்கள். பெண்களுக்கு மாங்கல்யம் ஸ்தானம். கணவருக்கு ஆயுள் நீடிப்பு காலம். 10ம் இடத்தை குரு பார்ப்பதால் தொழில் முன்னேற்றம் மிகப்பெரிய அளவில் இருக்கும். வாக்கு ஸ்தானம் நன்றாக இருக்கும். நீங்கள் ஒன்றைச் சொன்னால் அதை செய்வதற்கு மற்றவர்கள் தயாராக இருப்பார்கள். செல்வாக்கு அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் தொழிலில் புதிய கிளைகள் தொடங்கலாம். தொழில் மிகச் சிறப்பாக இருக்கும் .

# 40,000 ரூபாவுக்கு விற்பனையான பசளை தற்போது 10,000 ரூபாவுக்கு

## அரசுக்கு நன்றி தெரிவிக்கும் விவசாயிகள்



நான் இம்முறை பெரும்போகத்தில் 5 ஏக்கர் வேளாண்மை செய்தேன் .

5 ஏக்கருக்கும் 70 மூடை நெல்தான் விளைச்சலானது. இம்முறை வேளாண்மைச் செய்கையில் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளேன். ஒரு மூடை விதை நெல்லை 10,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்துதான் விதைத்தேன், ஆனாலும் தற்போது இடைத்தரகர்களும், பொலன்னறுவை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மொத்த வியாபாரிகளும், அறுவடை செய்யப்படும் வயல்களுக்கே நேரில் வந்து ஒருமூடை நெல்லை 4100 ரூபாவிற்கு கொள்வனவு செய்து வருகின்றார்கள். கடன்பட்டும், அடவு வைத்தும் வேளாண்மை செய்த விவசாயிகளாகிய நாங்கள் என்ன செய்தவதெனத் தெரியாது காலடிக்கே வரும் வியாபாரிகளுக்கு உடன் அறுவடை செய்த பச்சை நெல்லை விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். ஜனாதிபதியின் அறிவித்தலுக்கு அமைய அரசாங்கம் ஒரு கிலோ நெல்லை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்தது. இது எம்மைப் பொறுத்தளவில் ஓரளவுக்கு திருப்திகரமானதாக அமைந்தாலும், ஒரு கிலோவுக்கு 100 ரூபா எனப்படும் அரசின் விலை போதாது. எதிர்வரும் சிறுபோக அறுவடையிலாவது ஒரு கிலோ நெல்லை குறைந்தது 120 ரூபாவிற்கு மேலாவது எம்மிடமிருந்து கொள்வனவு செய்யும் பட்சத்தில்தான் எமது நட்டத்திலிருந்து ஓரளவுக்குகேனும் நாம் மீண்டு வர முடியும். என மட்டக்களப்பு மாவட்டம் திக்கோடை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பரமானந்தம் தெரிவித்தார்.

40,000 ரூபாகொடுத்து வாங்கிய யூரியாவை 10,000 ரூபாவுக்கு வழங்கியதற்குஅரசாங்கத்துக்குநன்றிகள்.

ஒரு ஏக்கர் வயல் எமது பிரதேசத்தில் குத்தகை 15,000 ரூபா குத்தகைக்கும் , ஒரு ஏக்கர் அறுவடை செய்வதற்கு இயந்திரத்திற்கான கூலி 10,000 ரூபா தொடக்கம் 15,000 வரைக்கும் செலவாகின்றது. இதனைவிட கிருமிநாசினிகள், மற்றும் களைநாசினிகள், பசளைகள் போன்றவற்றை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்கின்றோம். இரவு பகலாக காட்டு யானைகளால் மிகவும் பாதிக்கப்படுகின்றோம், “விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான் பிறர் சோற்றில் கை வைக்க முடியும்” ஆகவே விவசாயிகளாகிய எம்மை அரசாங்கம் கவனத்திலெடுக்க வேண்டும். கடந்த வருடம் தந்த சேதன உரத்தை இவ்வருடமும் எமக்கு வழங்கியமையால் இந்த வருட பெரும்போகத்தில் பெரிதும் நட்டமடைந்துள்ளோம் எனினும் நாங்கள் 40000 ரூபா கொடுத்து ஒரு அந்தர் யூரியா வாங்கினோம் தற்போது அரசாங்கம் அதனை 10000 ரூபாவுக்கு வழங்கியுள்ளது. அதற்காக அரசாங்கத்துக்கு நன்றி கூறுகின்றோம் அதுபோல குறைந்தது ஒரு கிலோ நெல்லை 120 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்ய வேண்டும். அடுத்த போகத்தில் ஏனைய பசளைகளையும் அரசு தந்துதவ வேண்டும். என நெல்லிக்காடு கிராமத்தைச் சேர்ந்தவிவசாயியான அ.அருச்சுனன் தெரிவிக்கின்றார்.

**களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்**

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் தோறும் பிரதேச செயலாளர்களின் தலைமையில் நெல் கொள்வனவு செய்யும் திட்டத்தின் பிரகாரம் பிரதேச விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமநல பெரும்பாக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் மேற்பார்வையில் நெல் கொள்வனவு செய்யப்பட்டு, பின்னர் அதனைக் குற்றி அரிசியாக்கி தலா 10 கிலோ வீதம் வறிய மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்திற்காக இந்நெல் கொள்வனவிற்கு 9.52 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

வழக்கமாக நெல் அறுவடைக்காலம் ஆரம்பித்து விட்டால் காட்டுயானைகளின் தாக்கங்களும், வான்மழை பொழியவும் தொடங்கிவிடும், அது போன்று இம்முறை பெரும்போகத்திலும், விதிவிலக்கல்லாமல் அறுவடை ஆரம்பித்த அக்காலத்தில் காட்டுயானைகளின் தாக்கம் உக்கிரமடைந்திருந்தது. உரிய உரம் மற்றும் கிருமிநாசினிகள் இன்மையால் தமது வாழ்வாதாரமான வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக முறையிட்டுள்ள விவசாயிகள் மத்தியில் காட்டுயானைகளின் தாக்கங்களும், இயற்கையின் தாக்கங்களும், மேலும் இழப்புகளுக்கே இட்டுச் சென்றதுள்ளதாக விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர். எனவே வயல்களைச் சூழ்ந்துள்ள பற்றைக்காடுகளில் தங்கியுள்ள காட்டுயானைகளை அப்புறப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தாமதிக்கக் கூடாது எனவும் விவசாயிகள் கவலை தெரிவிப்பதோடு, கடந்த பெரும்போகத்தில் நட்டமடைந்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீடுகளை வழங்கவும், ஒரு கிலோ நெல்லுக்கான நிர்ணயிக்கப்பட்ட விலை உயர்த்தப்படும் பட்சத்தில் தமது வாழ்வாதாரமும் மிளிரும் என வும் விவசாயிகள் எதிர் பார்க்கின்றனர்.



**(வ.சக்திவேல்)**



# பெண் தலைமைத்துவ குடும்பங்களில் சிறார்களின் கல்வி

நாட்டின் சமகால பொருளாதார நெருக்கடி நலிவடைந்த மக்கள் பலரின் வாழ்க்கையிலும் வெகுவாகத் தாக்கம் செலுத்தியுள்ள நிலையில், பாடசாலை செல்கின்ற பிள்ளைகளின் கல்விச் செலவை ஈடு செய்ய முடியாத நிலையில் திண்டாடும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி அளப்பரியது.

எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர்காலத்தில் தமது பிள்ளைகள் எதிர்கொள்ளக் கூடாது என்ற மனப்பாங்குடன் பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ள பெண்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

வடக்கு கிழக்கில் பல்வேறு குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக அதிக பாதிப்புகளையும், பொருளாதார நெருக்குதல்களையும் எதிர் கொண்ட சமூகமாகவும் பெண் தலைமைத்துவ குடும்பங்களே காணப்படுகின்றன. தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என அனைவரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழ்நிலைகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அவர்களைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சுமார் 54 ஆயிரத்து 532 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளதாக வடமாகாண மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதிலுமுள்ள ஏனைய மாகாணத்தின் பாதிப்புக்கள் வடக்கு, கிழக்கை விடக் குறைவானதே.

‘நான் கணவனை பிரிந்து வாழ்ந்து வருகின்றேன். எனக்கு பாடசாலைக்குச் செல்லும் 4 பிள்ளைகள் உள்ளனர். பிள்ளைகளுக்கு நாள் ஒன்றுக்கு குறைந்தது 800 ரூபாய் வரை தேவைப்படுகிறது என்கிறார் முல்லைத் தீவு முள்ளியவளையைச் சேர்ந்த வினோதா. அவருக்கு வயது 46.

‘பிள்ளைகளின் கல்விக்காகவும், குடும்ப செலவீனங்களுக்காகவும் கூலி வேலை செய்து வருகிறேன். கிடைக்கிற நாளாந்த வருமானம் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதல்ல. வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டால், பிள்ளைகளின் கல்விச் செலவையும் இதர தேவைகளையும் ஈடு செய்து கொள்வேன். இதன் மூலம் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை தங்கு தடையின்றி முன்னெடுக்க என்னால் முடியும். நாங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை எமது பிள்ளைகள் எதிர் நோக்கக் கூடாது. அதற்காக அவர்கள் சிறப்பாக கற்க வேண்டும்’ என்று வினோதா எதிர்பார்ப்புக்களை பகிர்கிறார்.

முல்லைத்தீவு கரும்புள்ளியானில் வாழும் கோகுலன் சுகந்திக்கு மூன்று பிள்ளைகள். மூவரும் பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர்.

‘அப்பியாசக் கொப்பிகளின் விலை ஏற்றத்தால் கொப்பிகளை வேண்ட சவால்களை சந்தித்தோம். கடந்த காலங்களில் குறைந்த விலையில் தேவையான அப்பியாச கொப்பிகளை வேண்ட முடிந்தது. தற்போதைய சூழ்நிலையில் ஒரு அப்பியாசக் கொப்பியை வேண்ட 200 ரூபாய் தேவைப்படுகிறது. ஒரு பிள்ளைக்கு ஒரு தவணைக்கு அப்பியாசக் கொப்பியை கொள்வனவு செய்ய சுமார் 6500 ரூபாய் வரை தேவைப்படுகிறது என கூறினார் கோகுலன் சுகந்தி.

விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகிறேன். பிள்ளைகளின் கல்விச் செலவு, குடும்பச் செலவு என்பவற்றை ஈடு செய்ய முடியாத நிலையில் நாளாந்தம் பொழுதைக் கழிக்கின்றோம்‘ என விரக்தியோடு கூறினாள் அனுதீபா

கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்டு, தனது மகளின் கற்றல் செயற்பாடுகளையும் குடும்ப செலவினங்களையும் பேணி வந்த கரும்புள்ளியானைச் சேர்ந்த அனுதீபா, தனது கால்நடைகளில் 4 மாடுகள் நோயால் இறந்து விட்ட நிலையில், 3 மாடுகளை மாத்திரம் தற்போது வளர்த்தவாறு, குடும்ப செலவுக்கும் பிள்ளையின் கல்விச் செலவுக்கும் இடையே போராடி வருகின்றார்.

**மன்னார்**
**எஸ்.றொசேரியன் லெம்பேட்**

(17 ஆம் பக்கம் பார்க்க)



# இதுவும் ஓர் உதயம்

கடலலைகள் மீண்டும் மீண்டும் கரையை நோக்கி மோதி சத்தம் எழுப்பிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியை இமை கொட்டாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சங்கர் அங்கேயே அமர்ந்திருந்தான். தாரணி சொன்ன வார்த்தைகள் கடலலைகள் போல் அவன் மனக்கடலில் மீண்டும் மீண்டும் மோதிக் கொண்டிருந்தன. "உன்ன உயிருக்குயிரா காதலிக்கிறேன் அதுவும் நாலு வருஷ காலமா காதலிக்கிறேன் என் காதலைக்கூட யாரும் தடுக்கல என்னோட எந்த ஆசைக்கும் எங்க வீட்டில தடை போட்டதில்ல ஆனா காதல் காதல்னு இனியும் நான் ஒரு மரக்கட்டைய போய் காதல் பண்ணுறதில்ல அர்த்தமில்லை."

"என்ன தாரணி நீ சொல்லுற" "பிறகென்ன எதுக்கும் ஒரு அளவு இருக்கில்ல என்னை லவ் பண்ணுறதா மட்டும் சொல்றீங்க, என்னால உங்க உயிரைக்கூட விட்டுடுறதா சொல்றீங்க, இதுவரைக்கும் எனக்காக ஒரு சதமாவது செலவு பண்ணி இருப்பீர்களா, எட்லீஸ்ட் ஒரு கைக்குட்டையாவது வாங்கிக் கொடுக்க உங்ககிட்ட வசதி இருக்கா.... அப்பப்ப உங்க செலவுக்குக்கூட நான் தானே பணம் கொடுக்கிறேன், ஒவ்வொருத்தனும் தன் காதலிக்காக என்னென்னவோ செய்யிறான், ஒருத்தன் தன் காதலிக்காக தாஜ்மஹாலையே கட்டி வச்சிருக்கான்".

"போதும் போதும் நிறுத்து, இப்போ என்னை என்னத்தா செய்யச் சொல்லுற"..... ''வேற என்னவாம், நாம ரெண்டு பேரும் இப்படியே இப்படியே இன்னும் எவ்வளவு காலத்துக்கு தான் காதலர்களாக இருக்கிறது எனக்கு கீழ் ரெண்டு தங்கச்சிங்க கல்யாண வயசுல இருக்கிறாங்க இல்ல, என் கல்யாணம் முடிஞ்சா தானே அவங்க கல்யாணம் நடக்கும்.

"இப்ப மட்டும் என்னா.... உன்னைய கட்டிக்க முடியாதுன்னா சொல்லுறேன்". "அதுக்கொன்னும் கொறச்சல் இல்ல... ஆமா, என்னை கட்டிக்கிட்டா ஏகப்பட்ட சொத்துக்கு மாப்பிள்ளையா ஆகிடுவீங்க இல்ல, இனிமே அதெல்லாம் முடியாது, பெருசா படிப்பெல்லாம் பாஸ் பண்ணி இருக்கேன்னு சொல்றீங்களே ஒரு வேலைய பிடிச்சுக்க முடியல்ல, வேலை வெட்டி இல்லாத உங்களுக்கெல்லாம் காதல் தேவை தானா?"

"தாரணி.... வார்த்தைகளை அளந்து பேசு" "போதும் போதும் இனி உங்களோட நான் பேச தயார் இல்ல, உங்களை லவ் பண்ணுறதில்ல அர்த்தம் இல்ல இன்னையோட என்னை மறந்திடுங்க, குட்பை", அவள் வேகமாக போய்க் கொண்டிருந்தாள். அவள் போவதையே பார்த்துவிட்டு, என்ன செய்வதென்று தெரியாது கடற்கரையில் வந்து அமர்ந்தவன் இன்னும் அங்கேயே அமர்ந்திருக்கிறான். அவன் தான் இன்ன செய்வான்? அவன் வாழ்க்கையில் விதி போராட்டம் நடத்துகிறதே.

சின்ன வயதிலேயே தாயை இழந்தான். அவன் பிறந்து இரண்டாம் வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் போது அவன் தாய் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டு மரணத்தை தழுவிக் கொண்டாள். இளமையின் துடிப்பால் அவன் தந்தை மறுமணம் செய்துகொண்டார். அதன் பிறகு அவன் வாழ்க்கை சிற்றன்னையின் கையில் அடங்கிப் போனது. அவன் பட்ட இன்னல்கள், கொடுமைகள், துன்புறுத்தல்கள் அப்பப்பா ஏராளம்... அவை எவற்றையுமே அவன் அப்பா கண்டு கொள்ளவே இல்லை. கண்டும் காணாததுமாக விலகிப் போய்விடுவார். இத்தனைக்கு மத்தியிலும் பாடசாலைக் கல்வியையும் தொடர்ந்தான்.

காலச்சக்கரம் தன்பாட்டில் ஓடிக் கொண்டிருந்தது. ஒருவாறு அவன் உயர்தரக் கலைப் பிரிவில் காலடி எடுத்து வைத்திருந்தான். இங்கு தான் அவனுக்கு தாரணியின் நட்பு கிடைத்தது. ஆரம்பத்தில் சாதாரண நட்பாக மலர்ந்து, நாளடைவில் காதலாக கனிந்தது. வாழ்க்கையில் தனக்கென்று அன்பு காட்ட இதுவரை யாருமே கிடைக்கவில்லையாதலால் தாரணியின் அன்பு அவனுக்கு ஆறுதலை தந்தது. அவளும் இவனின் கஷ்டத்தை நன்கு உணர்ந்து உதவி, ஒத்தாசைகள் புரிந்து வந்தாள். ஒருவாறு உயர்தரப் பரீட்சையும் நடைபெற்று, நல்ல பெறுபேறுகளையும் பெற்று பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்த போதுதான் அவன் அப்பா கூறிய வார்த்தை அவன் தலையில் இடி விழுந்தது போலிருந்தது..... "நீ படிச்சது போதும்.... இனி தொழில் ஒன்ன தேடு" அவர் அப்படிச் சொன்னதற்கும் காரணம் இருந்தது. சிற்றன்னையின் மூத்தப்பிள்ளை உயர்தரத்திலும் இளைய பிள்ளை சாதாரண தரத்திலும் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அன்றிலிருந்து வீட்டில் உணவு மட்டுமே மூன்று வேளை கிடைத்தது. அவன் தனது சான்றிதழ்களையெல்லாம் ஒரு கோர்வையில் கோர்த்துக் கொண்டு தொழில் தேடி அலைந்தான். அவ்வப்போது அவனுக்கு பணம் தேவைப்படும் போதெல்லாம் தாரணியிடம் வாய்விட்டுக் கேட்டு வாங்கிக் கொண்டான். ஒரு பக்கம் வெக்கமாக இருந்தாலும் அவனுக்கு வேறு வழி தெரியவில்லை. தாரணியும் மறுக்காமல் கொடுத்து அவனை சந்தோஷப்படுத்தினாள். அவள் சங்கர் மீது வைத்திருந்த அளவற்ற காதலே அதற்குக் காரணமாகும் என்றாவது ஒரு நாள் அவன் தன்னை மனைவியாக்கிக் கொண்டு வாழ வைக்கப் போகிறவன் தானே என்று அவள் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் வைத்திருந்தாள்.

நாட்கள் வேகமாக ஓடி வருடம் இரண்டை எட்டிப்பிடித்து விட்டிருந்தது. ஆனால் சங்கருக்கு இன்னும் தொழில் கிடைத்தபாடில்லை. அவன் பல மாடிப்படிகளில் ஏறி ஏறி வெறுத்துப் போய் இருந்தான். வீட்டிலும் அவனுக்கு இருந்த கொஞ்ச சலுகைகளும் முற்றாக நிறுத்தப்பட்டு விட்டிருந்தது. முழுச் சாப்பாட்டில் அரைப்பங்கே அவனுக்கு கிடைத்தது. அதைவிட அவனுக்கென்றிருந்த தாரணியும் பொறுமை இழந்து இப்படி பொரிந்து தள்ளிவிட்டுப் போய்விட்டாள். மாலைப் பொழுது மங்கிப்போய் இருள் சூழும் போதுதான் சிந்தனைகள் களைய கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்பதையும் தாண்டி விட்டிருந்தது. 'இவ்வளவு நேரம் இருந்து விட்டோமே.... வீட்டில் விளக்குகள் அணைக்கப்பட்டு இருக்குமே... என்ன செய்யப் போகிறோம்' என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டு விரைவாக நடந்தான். கால்கள் பின்னியது, கண்கள் மருண்டன. ஒருவாறு வந்து சேர்ந்தவன் வீட்டுக் கதவைத் தட்டினான். கதவைத் திறந்தவள் சிற்றன்னை அவள் மகுத்தில் எள்ளு தூவினால் பொரிந்து தள்ளிவிடும் போல் கடுகடுப்பு காணப்பட்டது.

உள்ளே நுழைந்து உடையை மாற்றிக்கொண்டு கை, கால்களை அலம்பிக் கொண்டும் உணவருந்த சாப்பாட்டு மேசைக்கு வந்தான். அவனுக்கென பரிமாறப்பட்டு மூடியிருந்த உணவை திறந்து பார்த்தான். சில்லென்று இருந்தது. சாப்பிடவும் மனமில்லை. இருந்தும் பிசைந்து ஒருவாறு வாயில் வைக்க எடுத்தபோது அவன் அப்பா உள்ளே நுழைந்தார்.

"இப்பத்தா வந்தீங்களோ... தொரைக்கு அப்படி என்னா தலைபோற வேலை.... ஆடி அசைஞ்சி ராத்திரி பத்து மணிக்கு மேல வீட்டுக்கு வர்ற? உன்ன பாத்துகிட்டு நாங்க தூங்காம முழிச்சிருக்கணுமா....? வேலை தான் தேடிக்க முடியல்ல.... அஞ்சு சதத்துக்கு உபயோகமில்லை.... உன்னை செலவு பண்ணி படிக்கவச்சதுக்கு ஒரு மாட்டை வாங்கி வளர்த்திருந்தாலும் பிரயோசனமா இருந்திருக்கும்... உன்னப்போல மத்த ஆம்பிளைங்கள பாரு இனிமே என்னால பொறுக்க முடியாது, தலைக்கு மேல உசந்துட்ட. வயசும் இருபத்தைஞ்சு ஆகுது.... இதுக்கு மேலையும் ஒரு ஆம்பளைய வீட்டுல வைச்சு சோறு போட முடியுமா?" கையிலெடுத்த ஒரு பிடி சோற்றை மட்டும் வேண்டா வெறுப்பாக விழுங்கிவிட்டு கையைக் கழுவினான். 'ரோஷம் சாப்பாட்டுல மட்டும் இருந்தா போதுமா மத்த வேலைகளிலும் இருக்கணும்.... தெரிஞ்சுதா".

அப்பாவின் வார்த்தைகள் அவன் இதயத்தை ஈட்டியால் துளைப்பது போலிருந்தது அவனுக்கு அதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாதவனாய் தன் அறைக்குள் நுழைந்து கதவை தாளிட்டுக் கொண்டான். மனத்தின் கனத்த பாரத்தோடு கட்டிலில் சாய்ந்தான். அவனுக்கு பசியோ உறக்கமோ அப்போதைக்கு இருக்கவில்லை. 'இனி என்ன செய்யப் போகிறோம்' என்ற நினைப்பே அவன் மனதை அரித்துக் கொண்டிருந்தது.

அப்பாவின் வார்த்தைகள் அவனுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணவில்லை. அவர் மேல் கோபப்படவும் முடியாது. அவருக்கு எப்போதுமே அவன் மேல் வெறுப்பு. அம்மா மட்டும் இருந்திருந்தால் இந்த நிலமை வந்திருக்குமா.... அவன் அம்மாவை நினைத்து கண்ணீர் வடித்தான். இருந்தாலும் இன்னும் எத்தனை காலம்தான் வீட்டுக்குப் பாரமாக இருப்பது பல வேலைகளுக்கு விண்ணப்பித்து நேர்முகத் தேர்வுக்கும் போய் வருகிறான் தான்.... இருந்தாலும் அவனுக்கு இன்னும் பொருத்தமான நேரம் வரவில்லை போலும்.

என்னைவிட குறைவாகப் படித்த சுந்தர் கச்சேரியில் குமாஸ்தாவாக வேலை செய்கிறானே அது எப்படி? என்னைவிட மிகக் குறைவான பெறுபேற்றைப் பெற்ற சேகர் தபாற்கந்தோரில் வேலை செய்கிறானே அது எப்படி? இப்படி தன்னோடு படித்த, தெரிந்த நண்பர்களோடு எல்லாம் தன்னை ஒப்பிட்டுப் பார்த்தான். இதைவிட சாதாரண வேலைக்கு போனால் கௌரவக்குறைவு, படிப்புக்கு தகுந்தது இல்லையே, மனம் இடம் கொடுக்காது, இரண்டும் கெட்டான் நிலையில் பரிதவிப்பு.

இதெல்லாம் இப்படி இருக்க இந்த உலகில் அவனுக்கு என்றிருந்த ஒரே ஒரு ஜீவன், அவனை நன்கு புரிந்து கொண்டவள்.... உயிருக்குயிராய் பழகிய தாரணி, அவளே அவனை வெறுத்து ஒதுக்கி, கைவிட்டு விட்டுப் போய்விட்டாளே.... நான் தரித்திரம் பிடித்தவன். அதிஸ்டம் கிட்டாதவன். அவன் தன்னைத்தானே கடிந்து கொண்டான்.

தாரணியையும் குறைசொல்ல முடியாது அவனுக்கு பணம் தேவைப்படும் போதெல்லாம் 'முடியாது' என்று சொல்லாமல் கொடுத்து உதவியவள்... அவன் வாழ்க்கையில் எத்தனையோ உதவிகள் செய்தவள் அவளும் சராசரி மனிதப் பிறவிதானே.... அவன் தாரணி மீது ஆத்திரப்படவில்லை, மாறாக அனுதாபப்பட்டான். மனசு வெறுத்தப்போனது. ஆத்திரமும் அழுகையும் பொத்துக்கொண்டு வந்தது. இதயமே வெடித்துவிடும் போலிருந்தது. இனி யாருக்கும் பாரமாக இருக்கக்கூடாது, வாழத் தெரியாதவனுக்கு ஒரு வாழ்க்கை தேவை தானா? எதற்காக வாழவேண்டும்? யாருக்காக வாழவேண்டும்? அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

இனிமேல் இந்த வீட்டில் இருப்பது உசிதமல்ல. நாளை விடியலில் வெளியேறிவிட வேண்டும். அதே வினாடியில் தனக் கென அந்த வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் ஓர் பெட்டியில் அடுக்கினான். ஓர் வெள்ளைக் காகிதத்தை எடுத்து அதில்.....

"அன்புமிக்க அப்பாவுக்கு, தாங்கள் கூறிய வார்த்தைகளை தப்பாக எடுத்துக்கொள்ளவில்லை. தாரக மந்திரமாக எடுத்துக்கொண்டேன். இதுவரை என்னை வளர்த்து ஆளாக்கிய உங்களுக்கு நன்றி கூறுவதோடு, என்றும் கடமை பட்டிருக்கிறேன். இனியும் உங்களுக்கு பாரமாக இருக்க விரும்பவில்லை, இன்று வீட்டை விட்டுப் போகிறேன், நான் எங்கே போகிறேன், என்ன செய்யப் போகிறேன், என்று யோசிக்காதீர்கள் அது எனக்கே தெரியாது, ஒருவேளை வாழ்க்கையில் உயர்ந்து விட்டேனென்றால் நிச்சயம் முதலில் உங்களையே வந்து சந்திப்பேன்... விடை பெறுகிறேன்" என்று எழுதி மேசை மீது வைத்தான். அதிகாலை விடியும் வரை கொட்டக் கொட்ட விழித்திருந்தான்.

சுவரில் தொங்கிய கடிகாரம் ஐந்து முறை அலாம் அடித்து ஓய்ந்தது. கட்டிலை விட்டெழுந்தவன் ஓசை படாமல் குளியலறைக்குப் போய் முகம் கழுவிக் கொண்டு வந்து தன்னை தயார்செய்து கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தான். இருள் விலகி விடியற்காலைப் பொழுது புலர ஆரம்பித்திருந்தது. அவன் வாழ்விலும் இருள் விலகாதா என்ற எதிர்பார்ப்போடு வீதி நெடுக நடக்கத் தொடங்கினான். கண்போன போக்கில் கால்கள் நடந்தன.

அவன் மனதில் எவ்வித சலனமும் இப்போது இருக்கவில்லை. வந்த வீதியைக் கடந்து பிரதான வீதியில் காலடி எடுத்து வைத்தவனை.... "தம்பீ... தம்பீ கொஞ்சம் நில்லு, எனக்கு சின்ன உதவி பண்ண முடியுமா?" என்ற ஒரு குரல் தடுக்க நிமிர்ந்து பார்த்தான். பக்கத்தில் உயர்ரக கார் ஒன்று நின்றிருந்தது. நாகரிக உடையணிந்து கம்பீர தோற்றத்தில் நடுத்தர வயதுடைய மனிதர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் அருகில் சென்று 'என்ன' என்றான். 'இந்தக் கார் மக்கர் பண்ணுது, விடியற்காலையல்லவா எஞ்சின் சூடாகல்ல, ஸ்டார்ட் பண்ண முடியல்ல... கொஞ்சம் தள்ள முடியுமா ஸ்டார்ட் பண்ணிக்கிறேன்" அவன் எதைப் பற்றியும் யோசிக்கவில்லை, உதவி தானே உடனே செயல்பட்டான். அடுத்த வினாடி கார் ஸ்டார்ட் ஆனது. வெரி வெரி தேங்ஸ் தம்பி... ஆமா நீ எங்க போகணும், ஏறிக்கொள் கொண்டு போய் விடுகிறேன்" என்றார் அம்மனிதர்.

"என்னை ரெயில் தண்டவாளத்தில கொண்டு போய் விட்டுடுங்க" அவன் சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டவர் "ஏன் தம்பி அங்கேயா வேலை செய்கிறாய்" என்றார். "வேலை, வேலை" அவன் நெற்றியில் அடித்துக் கொண்டான். "இல்லை சார் தண்டவாளத்தில் என் தலையை வைக்கப் போறேன்" அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ந்துபோன அந்த மனிதர் "ஏம்பா அப்படிச் சொல்லுற.... உனக்கு என்ன நடந்தது.... தயங்காம சொல்லு..... சொல்லு சொல்லு" என்று ஒருவித பரிவோடு கேட்டார் அவர். சங்கருக்கு நா தழுதழுத்தது. கண்களில் நீர் திரையிட்டது. "என்னை உன் தகப்பன் மாதிரி நினைச்சுக்க, ஏங்கிட்ட சொல்லுப்பா.... இந்த காலையில எனக்கு உதவி பண்ணின உனக்கு நான் உதவி பண்ண மாட்டேனா... என்ன.... உனக்கு பணம் வேணுமா" என்று தன் மணி பர்ஷை திறந்தார். "இல்லை சார்... நான் இனிமேலும் இந்த உலகத்துக்கு பாரமாக இருக்கக் கூடாது... நான் தற்கொலை செஞ்சிக்கணும்" அவன் கண்ணீர் ததும்ப கூறியதைக் கேட்டு அவன் முதுகில் தடவிக்கொடுத்தவாறு காரில் அவனை ஏற்றிக்கொண்டார் அந்தப் பெரியவர்.


அவரை அவன் ஆச்சரியமாகப் பார்த்தான். காரை செலுத்திக் கொண்டே "இப்ப சொல்லுப்பா" என்று அன்பு பொங்க அவர் கெஞ்சலாக கேட்கும் போது அவனால் அதற்கு மேலும் இருக்க முடியவில்லை. அவன் கதை முடியவும் அந்தக் கார் பெரியதொரு தொழிற்சாலைக்கு முன் நிற்கவும் சரியாக இருந்தது. கூர்க்க நெலிந்து வளைந்து கொண்டு வாயிற் கதவைத் திறக்கவும், ஏனையோர் மரியாதையோடு வணக்கம் செலுத்துவதில் இருந்தும் அவர் தான் இந்த தொழிற்சாலையின் அதிபதி என்பதை சங்கர் புரிந்து கொண்டான். காரை விட்டு, இறங்கியவர் அவனையும் அழைத்துக்கொண்டு அலுவலகத்துக்குள் நுழைந்தார். அவருக்கென போடப்பட்டிருந்த விஷேட கதிரையில் அமர்ந்துகொண்டு அவனையும் அமரும்படி சொன்னார். ஆச்சரியத்தோடு அவனும் அமர்ந்து கொண்டான். மேசையில் உள்ள பெல்லைத் தட்டினார். உடனே பியோன் ஓடி வந்தான். மெனேஜரிடம் ஆங்கிலத்தில் ஏதோ கூறினார். மறுகணம் மெனேஜர் சங்கரை கூட்டிச்சென்றார். அவனுக்கு கணப்பொழுதில் சிறு நேர்முகப் பரீட்சையொன்று நடந்தது. மெனேஜர் மீண்டும் அதிபதியின் அலுவலகத்துக்குள் நுழைந்தார். இருவரும் ஏதேதோ ஆங்கிலத்தில் பேசிக்கொண்டார்கள். சற்று நேரத்தில் சில கோர்வைகளைத் தூக்கிக்கொண்டு புன்முறுவலுடன் வந்த மெனேஜர் "மிஸ்டர் சங்கர்....உங்களை இந்த தொழிற்சாலைக்கு ஒரு முகாமைத்துவ அதிகாரியாக நியமித்திருக்கிறார் எங்கள் அதிபதி... நல்வாழ்த்துக்கள்" என்று கையைக் குலுக்கி நியமனக்கடிதத்தை கையளித்தபோது அவன் மின்சாரத்தால் தாக்கப்பட்டது போல் பிரமித்துப் போய் நின்றான். "வாங்க ஸேர்... உங்கள் ஆசனத்தில் அமருங்கள்" என்று அவனுக்குரிய அலுவலகத்துக்குள் கூட்டிச்சென்றார். அவன் அந்த அறையைச் சுற்றிப் பார்த்தான். மேசை மேல் பலவிதமான கோர்வைகள், தொலைபேசி, கணனி, அழைப்பு மணி... இன்னும் இத்தியாதி இத்தியாதி அவனுக்கென போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமரக்கூட அவனுக்கு அச்சமாக இருந்தது. ஆண்டவனே இது என்ன கனவா அல்லது நினைவா? அவனில் ஏற்பட்ட வியப்பு இன்னும் களைந்தபாடில்லை. அவன் சிந்தனைகள் எங்கோ பறந்தன. டெலிபோன் மணி ஒலிக்க சுயநினைவுக்கு மீண்டவன் கைகள் நடுங்க ரிஸீவரை எடுத்தவன் அதிபதியின் குரல் கேட்டு முகம் மலர்ந்தான்.

"என்னப்பா.... இது போதுமா.... இன்னும் வேணுமா" அவன் உடனே அதிபதியின் இருக்கையை நோக்கி ஓடினான். அதிபதி அவனைப் பார்த்து "எப்படிய்பா... எல்லாம் திருப்திதானே" என்று முறுவலித்தார். அப்படி அவன் அவரின் கால்களை கட்டிப் பிடித்துக் கொண்டு முகம் புதைத்தான், கண்ணீர் அவர் கால்களை ஈரப்படுத்தியது. "ஏம்பா அழுற..... சந்தோஷமா இரு" என்று அவனை தழுவிக் கொண்டார். "சரி, வா போவோம்" அவனையும் கூட்டிக்கொண்டு அவரின் காரில் ஏறினார். காரி ஜெட் வேகத்தில் பறந்து சென்று பிரமாண்டமான ஓர் வீட்டில் நின்றது. காரை விட்டிறங்கி அழைப்பு மணியை அழுத்த கதவு திறந்தது. மேல்நாட்டுப் பாணியில் கட்டை உடை அணிந்த இளம் பெண்ணொருத்தி நின்றிருந்தாள்.

"வாப்பா சங்கர்.... இதுதான் என் வீடு, இனி இது உன் வீடு மாதிரி.... நீ இங்கேயே தங்கிக்கலாம். இவள் என் ஒரே புத்திரி ஷீலா.... செல்லப்பிள்ளை, சுட்டிப் பெண், இவளுக்கு வயது மூன்று இருக்கும் போதே என் மனைவி என்னையும், இந்தக் குழந்தையையும், ஏன் இந்த உலகத்தையும் விட்டே போயிட்டா.... நாங்க கூட உன்ன மாதிரி அனாதை போலத் தான்" அவர் கண்கள் கலங்கின. "இனி அப்படிச் சொல்லாதீங்க ஸார்... உங்களுக்கு ஒரு பாதுகாவலனா நான் இருப்பேன்.... இனி நீங்க கண்கலங்கவே கூடாது" அவன் அவரின் கண்ணீரைத் துடைத்துவிட்டான். "பாதுகாவலனா... ஏன்.... எனக்கு ஒரு மகனா இருக்கமாட்டியா" அவர் பேச்சைக்கேட்ட அவன் 'ஐயா' என்று அவரை கட்டி ணைத்துக்கொண்டான்.

பசறையூர்
**ஏ.எஸ். பாலச்சந்திரன்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 68



திரு/திருமதி.செல்வி ..................................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..................................................

..................................................

..................................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 68
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 68

**இடமிருந்து வலம்**

1. இந்த வாரத்தில் வரும் பௌத்த மதத்துக்குரிய பெருநாள்
3. திருமணமான பெண்ணின் பெயருக்கு முன்னால் இடப்படுவது
7. பாதத்தின் பின் பகுதி
8. புகையிலையிலிருந்து தயாரிக்கப்படுவது (குழம்பியுள்ளது)
9. நெற்றித் திலகம் (குழம்பிவிட்டது)
10. பள்ளம், குழி
11. நாட்காட்டியில் காணப்படுவது
13. உயிர்களுக்கு இரங்கும் பண்பு (குழம்பியுள்ளது)
16. ஒரு பொருளின் மிகச் சிறிய பகுதி (குழம்பியுள்ளது)
18. நூலில் உள்ள ஒரு விஷயத்தை உரக்கப்ப படித்தல் (குழம்பியுள்ளது)
20. கடல்வழிப் பயணம் செய்ய உதவுவது (குழம்பியுள்ளது)
21பொருளாதார வசதியற்ற நிலை (திரும்பியுள்ளது)
23. வயல் (திரும்பியுள்ளது)
24. கற்பித்த ஆசிரியர் குழம்பிவிட்டார்

**மேலிருந்து கீழ்**

1. சன்மானம்
2. குலம்
3. களவு (குழம்பியுள்ளது)
4. அத்தாட்சி
5. ஓர் உறவுமுறை
6. சற்று மேடாகத் தெரியும் சிறுபகுதி
9. பொட்டலம்
12. குதிரையின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சாதனம்
14. ஒரு கருமத்தை நிறைவேற்றுவதற்கான உதவி அல்லது ஆதரவு (தலைகீழ்)
15. அழகு குலைந்து விட்டது
17. தீயகுணமுடையவன்
18. பறவை
19. கோபம் (குழம்பியுள்ளது)
21. இதுவும் ஒரு வகைப் பயிர்
22. ஒரு நீர்நிலை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 67

### விடைகள்

**இடமிருந்துவலம்**

| | |
|---|---|
| 1. மகாவலி | 16. ஆதனம் |
| 5. சாபம் | 19. சமநிலை |
| 8. துருக்கி | 22. காரம் |
| 9. கதவு | 23. மந்தரை |
| 10. கீதம் | 24. கவி |
| 12. காவி | 25. விதை |
| 13. இல்லம் | 26. முகாம் |

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 1. மருதம் | 14. இதம் |
| 2. காது | 15. தாமரை |
| 3. வக்கீல் | 17. கானகம் |
| 4. லிகிதம் | 18. விகாரம் |
| 5. சாவு | 19. சமர் |
| 6. பதவி | 20. நிந்தை |
| 7. காகம் | 21. தலைவி |
| 11. ஆலம் | |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 67

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 500.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **பி. குணசேகரன்** | **ஏ.ஆர். பாத்தீமா ரீஸா** | **ஏ.டபிள்யூ. எம். நியாஸ்** |
| திருஞானசம்பந்தர் குருகுலம் | 175/ 1 ஏ.ஏல் முனவ்வரா வீதி, | ஏ 29/5 சமித்தியா வீதி, |
| களுவாஞ்சிக்குடி | அக்கறைப்பற்று 04 | மாவனல்லை |

### பாராட்டு பெறுவோர்

**1. சி. லவனாதன்**
பதுளை

**2. எப். ரஷ்பா**
தர்கா நகர்

**3. அனுராதா பாக்கியநாதன்**
கொழும்பு 06

**4. எஸ். செல்வராஜா**
பதுளை

**5. மல்லிகாதேவி பத்மநாதன்**
பசறை

**6. எஸ். தவநாயகி,**
மட்டக்களப்பு

**7. தி. நிராஜினி**
காரைதீவு

**8. எஸ். கனகரெட்ணம்**
திருகோணமலை

**9. ஸாகிரா பானு லியாவுத்தீன்**
புத்தளம்

**10. எம்.ஏ. ஆயிஷா**
செய்னப்

## பெண் தலைமைத்துவ... (15 ஆம் பக்கத் தொடர்)

குடும்ப பாரத்தைச் சுமப்பதற்காக கிராமத்தில் கூலி வேலைகளுக்கும் அனுதீபா செல்கின்றபோதும் வாழ்க்கைச் செலவு மும்மடங்காக அதிகரித்ததால், கூலியாகக் கிடைக்கும் வருமானத்தில் குடும்ப செலவுகளை ஈடுகட்ட முடியாதவளாக, சுய தொழில் வாய்ப்பொன்று அமையப்பெற்றால், பிள்ளையின் கல்விச் செலவையும் ஈடு செய்து முன்னேற முடியும் என்பது அவளது எதிர்பார்ப்பாக உள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2 ஆம் வருடத்தில் கல்வி கற்று வரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தீபனுக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர்.

ஒரு சகோதரி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகிறார். மற்றைய சகோதரி சாதாரண தரம் படித்து வருகிறார். மூவரது கல்விச் செலவும் கால் நடையின் மூலம் கிடைக்கும் வருமானத்தை மையப்படுத்தியே அமைந்துள்ளது. அதனை வைத்தே படிப்பு உள்ளடங்கலாக இதர தேவைகளையும் ஓரளவேனும் பூர்த்தி செய்து கொள்கின்றனர். தனது தாயினால் குடும்பச் செலவை சமாளிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும், சகோதரி உயர் கல்வியை கைவிட நேரும் நிலையில் உள்ளதாகவும் தமது குடும்பத்தின் எதிர்காலத்தை நினைத்து விரக்தி அடைகின்றார்.

வவுனியா சலலிஹினிகம பகுதியைச் சேர்ந்த எச்.எம்.சோபாலிக, கணவனை இழந்த நிலையில், 3 பிள்ளைகளோடு வறுமையில் வாடுகிறார். 'வயல் மற்றும் தோட்ட வேலைக்கு சென்று பணம் சம்பாதிக்கிறேன். தற்போது மின்சார கட்டணம் அதிகரித்துள்ளது. தோட்டத்திற்கு கிணற்றில் இருந்து தண்ணீர் இறைக்க வேண்டும். இதனால் அதிக மின்சாரம் விரயமாகிறது. அதிக மின் கட்டணத்தை செலுத்த வேண்டும். தோட்டச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவர்களுக்கான உணவு, பாடசாலைக்கான செலவீனங்களை செய்ய முடியாத நிலையில் இருக்கின்றேன், எனக் கவலை கொள்கிறார் யூ.சுவரன லதா.

வட மாகாணத்தில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள பெண் முயற்சியாளர்கள் குறித்து மாகாண தொழில்துறை திணைக்கள பணிப்பாளர் வனஜா செல்வரட்ணத்தை தொடர்பு கொண்டபோது,

'வடக்கில் தற்போது வரை 3514 பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண் முயற்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர். பலர் பதிவு இன்றியும் தன்னிச்சையாக இயங்கக் கூடும் என அவர் தெரிவித்தார். ஏனையவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

வடக்கு. கிழக்கு பகுதிகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் நடவடிக்கைகளுக்கு உதவி வரும் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடேவிடம் வினவியபோது.

'கொரோனா பரவலைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்த நிலையில் காணப்பட்டது. இதனால் பொருட்களின் விலை அதிகரித்தது, பாதிக்கப்படுவது பெண் தலைமைத்துவ குடும்பங்களும் குறித்த குடும்பத்தில் உள்ள மாணவர்களுமே. பிள்ளைகளுக்கான உணவு மற்றும் பாடசாலை கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்ய என பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்கின்றனர். பாடசாலை அதிக காலம் மூடப்பட்ட மையினால் அவற்றை மீள பெற்றுக்கொள்ள அவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் அதிக அளவில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மெசிடோ நிறுவனம் வடக்கு கிழக்கு உள்ளடங்களாக நாட்டில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் சுய தொழில் முயற்சியை ஊக்கப்படுத்தி வருகிறது.

கருவாடு பதனிடுதல், சவர்க்கார உற்பத்தி, வீட்டுத் தோட்டம் சேதனப் பசளையைப் பயன்படுத்தி நஞ்சற்ற நெல் உற்பத்தி, கோழி வளர்ப்பு உள்ளிட்ட சுயதொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகிறோம்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அடையாளப் படுத்தப்பட்டால் அவர்கள் பெண்கள் குழுக்கள் ஊடாக அவர்களுக்கு பொருளாதாரத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் தற்சார்பு பொருளாதார சுயதொழில் நடவடிக்கையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்' என்றார்.

எனவே இவ்வாறான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரச அரச சார்பற்ற அமைப்புக்களும் கைகொடுக்க வேண்டும். என்பதே பாதிக்கப்பட்ட மக்களினதும், குறிப்பாக கல்விக்காக ஏங்குகின்ற மாணவர்களினதும் எதிர் பார்ப்பாகவும் அமைந்துள்ளது.

IDM Nations Campus
Since 1981

**IDM NATIONS CAMPUS (PVT) LTD**

**சிறப்பு பொது அறிவிப்பு**

**IDM வர்த்தக முத்திரை மற்றும் வர்த்தகப் பெயரை சட்டவிரோதமாக பயன்படுத்தியமைக்காக I.D.M. Achievers International Campus Pvt Ltd ற்கு வணிக உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.**

IDM வர்த்தக முத்திரை, IDM வர்த்தகப் பெயர் மற்றும், அல்லது idm.edu இணையதள முகவரியினூடாக அறிவுசார் சொத்துரிமைகளை மீறல் தொடர்பில் No.CHC/09/2023 IP ஐக் கொண்ட வழக்கில் மணிமாறன் மகேஸ்வரன் மற்றும் I.D.M Achievers International Campus Pvt Ltd ஆகியோருக்கு எதிராக கொழும்பிலுள்ள வணிக உயர் நீதிமன்றம் தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. மேற்கூறிய உத்தரவுகள் 2023 மே 02, இலிருந்து 2023 மே 16 வரை நீடிக்கப்பட்டுள்ளன.

I.D.M Achievers International Campus Pvt Ltd ஐ IDM நிறுவனங்களில் ஒன்றாகப் பிரதிநிதித்துவப்படுத்தியதாகவும், IDM Colombo Campus (Dehiwala), IDM Kandy Campus, IDM Jaffna Campus, IDM Batticaloa Campus, IDM Eastern Campus, IDM City Campus Ja-ela, IDM City Campus Moratuwa என்ற பெயரில் மோசடியாக கிளைகளைத் திறந்ததாகவும் வாதியின் வர்த்தகப்பெயர் மற்றும்/அல்லது வர்த்தக முத்திரையைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் மேற்படி வணிகங்களை விளம்பரப்படுத்தியுள்ளதாகவும் IDM Nations Campus Pvt Ltd (வாதி) குற்றம் சாட்டி அதன் விண்ணப்பத்தை முன்வைத்துள்ளது.

மேலும், மணிமாறன் மகேஸ்வரன் மற்றும் I.D.M Achievers அவர்களது முகவர்கள் மற்றும்/அல்லது அவர்களது ஊழியர்கள் மற்றும்/அல்லது அவர்களது பணியாளர்கள் மற்றும்/அல்லது அவர்களது பிரதிநிதிகள் மற்றும்/அல்லது, இணையத்தள பெயர்கள் மற்றும்/அல்லது விளம்பர தயாரிப்புகள், "I.D.M" மற்றும் அல்லது "IDM" என்ற பெயர் மற்றும்/அல்லது கடிதங்கள் உட்பட எந்தவொரு வணிக அடையாளங்களையும் பயன்படுத்த நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

முகாமைத்துவம்
IDM Nations Campus (Pvt) Ltd.

**HEAD OFFICE - BAMBALAPITIYA**
No. 15, Lauries Place,
Duplication Road, Colombo 04.

**SENATE OFFICE - WELLAWATTE**
No. 16, 42nd Lane, Wellawatte,
Colombo 06.

மேலதிக விளக்கங்களுக்கு
**0112 361 801**

## ஜோ பைடன் ஏன்... (13 ஆம் பக்கத் தொடர்)

உலகத் தலைவர்களே பிரிட்டிஷ் அரச குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்ள எப்போதும் கிடைக்கும் வாய்ப்பு என எதிர்பார்த்திருக்க அமெரிக்க அதிபர்கள் எந்தவொரு மன்னர் அபிஷேக வைபவங்களிலும் கலந்து கொண்டதாக வரலாறே கிடையாது!

81 ஜூலை 29ம் திகதி சார்ள்ஸ் டயானா திருமணம் நடைபெற்றபோது அமெரிக்க அதிபரான ரொனால்ட் றேகன் அதில் கலந்து கொள்ளவில்லை. தன் மனைவி நன்ஸியையே திருமணத்துக்கு அனுப்பி வைத்தார். அதற்கு காரணமாக, 29ம் திகதிக்கு முன்னதாக கனடா ஓட்டோவாவில் ஒரு நிதி தொடர்பான மாநாடு நடக்கவிருந்ததால் திருமணத்தில் கலந்து கொள்ள முடியவில்லை என்று கூறப்பட்டது.

ரொனால்ட் றேகன் 1981 ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். ஜூலை 29 சார்ள்ஸ் _ டயானா திருமணம் நடைபெற்றது. தன் முதல் கடல் தாண்டிய ஐரோப்பிய விஜயம் வெறுமனே ஒரு திருமணத்துக்கானதாக – அரசியல் முக்கியத்துவம் அற்றதாக இருந்துவிடக்கூடாது என்றும் அவர் கருதியிருக்கக்கூடும் என்றும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் அப்போது தெரிவித்திருந்தன.

அந்திலாந்து சமுத்திரத்துக்கு குறுக்கே விமானப் பயணங்கள் 1939ம் ஆண்டிலேயே ஆரம்பமாகின. அதற்கு முன்னரான இங்கிலாந்து மன்னர் முடிசூட்டு வைபவங்களுக்கு சீற்றம் மிக்க அத்திலாந்தை கப்பலிலேயே கடக்க வேண்டியிருந்தது. இந்த பலநாள் பிடிக்கும் சவாலான பயணத்துக்கு முகம் கொடுக்க அமெரிக்க ஜனாதிபதிகள் தயாராக இருக்கவில்லை.

1838 ஜூன் 28ம் திகதி விக்டோரியா முடிசூடிக் கொண்ட போது இங்கிலாந்து உலகின் மிகப்பெரிய வல்லரசு. விக்டோரியா இன்றளவும் பேசப்படும் மகாராணி. ஆனால் அழைப்பு விடுத்தும் அப்போது அமெரிக்க அதிபராக விளங்கிய மார்டின் வான் பியூரன் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ளவில்லை.

இரண்டாம் உலகப்போரின் போது நேசநாட்டுப் படைகளின் கூட்டுத் தலைவராக விளங்கிய ஐசநோவர், லண்டனில் தங்கியிருந்தார். ஐரோப்பாவில் கால் பதிக்கும் ஒரு தீவிர முயற்சியாக பிரெஞ்சு நோர்மன்டி கடற்கரையில் நேசநாட்டுப் படைகளைத் தரையிறக்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தவர் ஐசநோவர். அச் சமயத்தில் அவர் ஆறாம் ஜோர்ஜ் மன்னருடனும் மகள் எலிசபெத்துடனும் நெருங்கிப் பழகினார். போர் முடிந்ததும் 1953 ஜனவரி 20ம் திகதி அவர் அமெரிக்காவின் 34வது ஜனாதிபதியாக பதவியேற்றார். எலிசபெத், மகாராணியாக 1953 ஜூன் 02ஆம் திகதி முடிசூடிக் கொண்டார். எனினும் நெருங்கிய தோழமை இருந்தும் கூட ஐசநோவர் எலிசபெத் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ளவில்லை!

எனினும் தனது முதல் உத்தியோகபூர்வ விஜயமாக 1957 இல் அவர் சென்ற இடம் அமெரிக்கா! அதேபோல, இரண்டு ஆண்டுகளின் பின்னர் தன் குடும்பத்துடன் லண்டன் சென்ற ஐசநோவர் அரசியின் விருந்தினராக பெல்மோரல் மாளிகையில் தங்கியிருந்தார். எலிசபெத் மகாராணியார் தன் பதவிக் காலத்தில் 14 அமெரிக்க ஜனாதிபதிகளைப் பார்த்துள்ளார். 13 ஜனாதிபதிகளை சந்தித்து பேசியுள்ளார். அவர்களின் மூவர் அரசுமுறைப் பயணமாக லண்டன் வந்தனர். எலிசபெத் தன் பதவிக் காலத்தில் நான்கு தடவைகள் வொஷிங்டன் பயணமாகியுள்ளார்.

உறவுகள் இவ்வளவு நெருக்கமாக இருந்தாலும் முடிசூடல் என வரும்போது மட்டும் அமெரிக்க ஜனாதிபதிகள் அதில் கலந்து கொள்வதைத் தவிர்த்தே வந்துள்ளனர்.

அமெரிக்கா எப்போதுமே குடிமக்களை மையப்படுத்திய ஒரு சுதந்திர ஜனநாயக நாடு. அங்கே மன்னராட்சி இருந்ததில்லை. பாரம்பரியம் மிக்க உயர் சம்பிரதாயங்களும் கிடையாது. மேலும் அமெரிக்க சரித்திரத்தில் புரட்சியுத்தம் என அழைக்கப்படும் பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான அமெரிக்க குடியேற்றவாசிகள் நடத்திய யுத்தம் 1775 இல் ஆரம்பித்து 1783இல் முடிவுக்கு வந்தது. பிரித்தானியா தன் ஆதிக்கத்தை கைவிட, அமெரிக்கர்கள் சுதந்திரம் பெற்றனர்.

பிரித்தானியா, ஒரு சுதந்திர நாடாக அமெரிக்கா தலைதூக்குவதை விரும்பாமல் பல முட்டுக் கட்டைகளை ஏற்படுத்தி இருந்தது. இவற்றை எல்லாம் கடந்தே அமெரிக்கா ஒரு சுதந்திரநாடாக தன் வழியில் வளர்ச்சி அடைந்தது.

இந்தப் பழைய பிரிட்டிஷ் வெறுப்பையே பிரித்தானிய மன்னர் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்வதை அமெரிக்க அதிபர்கள் தவிர்ப்பதற்கான காரணமாகக் கொள்ளலாம்.

மூன்றாவது சார்ள்ஸ் மன்னரின் இந்த முடிசூட்டு விழாவில் மகன் ஹெரி கலந்து கொள்கிறார். கலிபோர்னிய மாநிலத்தில் பிறந்து வளர்ந்த அவரது மனைவி ராகேல் மேகன் மார்க்கல் இவ்விழாவில் கலந்து கொள்ளவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இவ் வைபவத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் கலந்து கொள்ளவில்லை. பதிலாக மனைவி ஜில் பைடன் கலந்து கொண்டார். மேலும் பைடனின் மூதாதையர் அயர்லாந்தில் இருந்து வந்தவர்கள் என்பதால் அவரது அயர்லாந்து பெருமையும் விழாத் தவிர்ப்புக்குக் காரணமாக இருக்கலாம். இதேசமயம், பைடன் மன்னர் சார்ள்ஸ் அமெரிக்கா வரவேண்டும் என அழைப்பும் விடுத்துள்ளார்!

## கமிலா சார்ள்ஸ்.... (13 ஆம் பக்கத் தொடர்)

அடுத்த ஒரு வருட காலத்துக்குள் நட்பு காதலாகவும் மாறியிருந்தது. அப்போது இளவரசர் கடற்படையில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார். அவர் எட்டு மாதங்கள் பிரிட்டனுக்கு வெளியே இருந்த சந்தர்ப்பத்தில் 1973ம் ஆண்டு கமிலா பார்க்கர் போல்ஸ் என்பவரைத் திருமணம் செய்தார்.

திருமணத்தின் பின்னரும் இருவருக்கும் இடையிலான நட்பு நீடித்தது. இளவரசர் சார்ள்சும் பார்க்கரும் நண்பர்களானார்கள். ஒன்றாக கொல்ப், போலோ விளையாட்டுகளிலும் ஈடுபட்டார்கள். எனினும் அவர் தன் மனைவியின் காதலர் என்பது பார்க்கருக்குத் தெரியாது.

திருமணமான கமிலாவுடன் இரகசிய தொடர்பு இருந்த நிலையில்தான் 1981இல் உலகமே வியக்கும் வகையிலான ஆடம்பரத்துடன் டயானாவுடன் கைகோர்த்தார். டயானாவுக்கும் கமிலாவை நன்கு தெரியும். திருமணம் நடப்பதற்கு சில தினங்கள் இருக்கையில் டயானாவிடம் சார்ள்ஸ் தன் வசம் வைத்திருந்த தங்க வளையல் சிக்கியது. அதில் F&G எனப் பொறிக்கப்பட்டிருந்தது. இளவரசரின் வீட்டுப் பெயர் Fred. கமிலாவை குடும்பத்தினர் Gladys என அழைப்பார்கள். இந்த முதல் எழுத்துக்கள் இவ்விருவரையுமே குறிக்கின்றன என்பதை அறிந்த டயானா திருமணத்தையே நிறுத்துவதற்கு முயற்சித்தார். ஆனால் ஏற்பாடாகியிருந்த திருமணம் நடந்தது.

பின்னர் டயானா அளித்த பேட்டியில் 'அத் திருமணத்தில் நாங்கள் மூவர் இருந்தோம்' எனக் குறிப்பிட்டிருந்தார். மூன்றாம் நபர் கமிலா 1989 இல் கமிலாவும் இளவரசர் சார்ள்ஸும் இரகசிய தொலைபேசி உரையாடல்களில் ஈடுபட்டிருந்தனர்.

தன் மனைவி பெரிய இடத்து சம்பந்தத்துடன் இருக்கிறார் என ஊரெல்லாம் பேசவும் 1995 இல் பார்க்கர் போல்ஸ் மனைவி கமிலாவை விவாகரத்து செய்தார்.

சார்ள்ஸ் டயனா உறவு பிணக்குகள் நிறைந்ததாக இருக்க, இருவரும் 1996 இல் விவாகரத்து செய்தனர்.

உலகமே டாயானாவை 'வீனஸ்' எனவும் காதல் இளவரசி எனவும் போற்றிய அதே சமயம் இளவரசர் கண்களுக்கு கமிலாவே அவ்வாறு தெரிந்தார். இளவரசர் கமிலாவுடனான காதலை, தன் வாழ்க்கையில் கமிலா பேரம் பேசுதலுக்கு அப்பாற்பட்டவர் என்றும் கமிலாவின் விவாகரத்து செய்தி, நீறு பூத்திருந்த தணலை கொழுந்து விட்டெரியச் செய்தது என்றும் பின்னர் வர்ணித்திருந்தார்.

இவ் விவகாரத்தில் டயானாவுக்காக பரிதாபப்படுவதா அல்லது உண்மையாகவே காதல் வசப்பட்டிருந்த இளவரசர் சார்ள்ஸுக்காக மனம் நெகிழ்வதா?

2005ம் ஆண்டு ஏப்ரல் 19ம் திகதி இளவரசர் சார்ள்ஸ் தன் நீண்டநாள் காதலி கமிலாவை கரம் பிடித்தார்.

கமிலாவுடன் பழகிப் பார்த்த சார்ள்ஸின் மகன் ஹெரி, கமிலா ஒரு அற்புதமான பெண்மணி எனப் பின்னர் பாராட்டினார்.

எலிசபெத் மகாராணியாரும் கமிலாவை தன் மருமகளாக ஏற்றுக் கொண்டு 'டச்சஸ் ஒப் குரோம்வெல்' என்ற பட்டத்தை அளித்தார்.

இனிமேல் அவர் பிரிட்டனின் ராணி என்றே அறியப்படுவார்.

யாருக்கோ போய்ச்சேர வேண்டிய ராணி பட்டம் யாருக்கோ போய்ச் சேர்ந்திருக்கிறது!

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழக்கிழமை 2023.05.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5106
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,332,305.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 2 6 4 8 3 8

ராசி சுப பலன் / හඳහන Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 415
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 09 27 34 61
விசேட இலக்கினம் தனுசு

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1136
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,967,594.80
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 31 62 72 79

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1561
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,638,628.40
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 0 8 5 4 9 4

கொவிசெத / Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3348
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,185,928.64
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 15 22 53 74

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1454
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 319,215,814.00
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கங்கள் 03 37 52 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**சுகாதார அமைச்சு**

**இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)**

SPMC

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**சர்வதேச போட்டி ரீதியான விலை கோரல் - (ICB)**

**கேள்வி இல: SPMC/02/2023 - 2023 ஜூன் 20ஆம் திகதி முடிவுறுத்தப்படும்**

**மருந்தாக்கல் மூலப்பொருட்களுக்கான பெறுகை**

1. இலங்கை, இரத்மலானை, கந்தவ எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்களால் 2023 ஜூன் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை மருந்தாக்கல் மூலப்பொருட்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | அளவு (KG) | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| 1 | Amoxicillin Trihydrate BP (Compacted) | 36,000.00 | 50,000.00 |
| 2 | Atorvastatin Calcium IP | 1,500.00 | 14,000.00 |
| 3 | Carbamazepine BP | 1,500.00 | 8,000.00 |
| 4 | Cetirizine Dihydrochloride BP | 100.00 | 500.00 |
| 5 | Cloxacillin Sodium BP | 4,500.00 | 13,000.00 |
| 6 | Clarithromycin USP | 1,500.00 | 18,000.00 |
| 7 | Gliclazide BP | 18,000.00 | 40,000.00 |
| 8 | Losartan Potassium BP | 5,000.00 | 18,000.00 |
| 9 | Prednisolone BP | 500.00 | 14,000.00 |
| 10 | Trifluoperazine Hydrochloride BP | 50.00 | 4,000.00 |
| 11 | Di Basic Calcium Phosphate (Dihydrate) BP/USP | 2,000.00 | 500.00 |
| 12 | Colloidal Silicon Dioxide USP/USNF | 180.00 | 500.00 |
| 13 | Magnesium Stearate BP | 1,000.00 | 500.00 |
| 14 | Maize Starch BP/ USNF | 9,000.00 | 1,000.00 |
| 15 | Povidone K-30 (Polyvinyl Pyrrolidone K-30 ) USP/ BP | 500.00 | 500.00 |
| 16 | Sodium Starch Glycolate BP/USNF | 2,000.00 | 1,000.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2023 மே 08ஆம் திகதி முதல் 2023 ஜூன் 19ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேலே கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெறலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீள் செலுத்தப்படாத மேற்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுத் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தந்த விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 2623298)

**''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். (www.spmc.gov.lk)**

வெளிநாட்டு முதன்மையாளர்கள் விலைமனு ஆவணங்களை எமது இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். (உள்நாட்டு முகவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படாதவர்கள், அத்தகைய விலைக்கோரல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணத்திற்கான கட்டணங்களை நிகரான ஐ.அமெரிக்க டொலர் (US$) பெறுமதி/பெறுமதிகளில் வங்கி வரைவாக விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை.**
**தொலைபேசி இல.** : (00)94-11-2635353/ (00)94-11-2637574/ (00)-94-11-2623298
**மின்னஞ்சல்** : chairman@spmc.gov.lk
**இணையத்தளம்** : www.spmc.gov.lk
**தொலைநகல் இல.** : (00) 94-11-2634771, 2626621

# INTREPID இலங்கையில் மேலும் முதலீடு

உலகின் மா பெரும் சாகச பிரயாண ஏற்பாட்டு நிறுவனமான Intrepid Travel, இலங்கையில் தனது செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்க முன்வந்துள்ளது. அதன் பிரகாரம், கொழும்பிலுள்ள தனது செயலணியை இரட்டிப்பாக அதிகரித்துள்ளதுடன், சர்வதேச ரீதியில் காணப்படும் மாபெரும் செயலணியையும் கொண்டுள்ளது. 230க்கும் அதிகமான ஊழியர்களையும், பிரயாண தலைவர்களையும் கொழும்பில் கொண்டுள்ளது.

அண்மையில் நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் நிறைந்த சூழல் காரணமாக, சில பல்தேசிய நிறுவனங்கள் அண்மையில் மேற்கொண்டிருந்த செயற்பாடுகளுடன் ஒப்பிடுகையில், இது முற்றிலும் மாறுபட்டதாக இது அமைந்துள்ளது.

கொழும்பில் தனது வளர்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கு Intrepid தன்னை அர்ப்பணித்துள்ளது. அதற்காக மேலும் 30 பணி நிலைகளுக்காக இந்த ஆண்டில் இலங்கையில் நபர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். Intrepid கொழும்பின் சிறப்பு நிலையத்தினூடாக, சர்வதேச நிறுவனத்துக்கு பல்வேறு பணி நிலைகளினூடாக ஆதரவளிக்கப்படுவதுடன், அவற்றில் பொறியியல், தொழில்நுட்ப கட்டமைப்பாளர்கள், மனித வளங்கள், நிதியியல் மற்றும் வாடிக்கையாளர் சேவை போன்றன அடங்குகின்றன.




இலங்கைக்கான தனது மேலதிக அர்ப்பணிப்பினூடாக, 2023 ஆம் ஆண்டில் புதிய கட்டணம் செலுத்தப்படும் பட்டதாரிகள் பயிலுநர் இணைப்பு திட்டத்தையும் அறிமுகம் செய்ய Intrepid திட்டமிட்டுள்ளது. Intrepid கொழும்பின் எதிர்கால தலைவர்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் 15 பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டு, ஆறு மாத காலப்பகுதிக்கு பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுவர்.

# SLT–MOBITEL இனால் 'SmartHERNation' நிகழ்வு முன்னெடுப்பு



புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றினூடாக பெண்களுக்கு வலுவூட்டும் SLTMOBITEL, சர்வதேச மகளிர் தினம் 2023 (IWD) ஐ முன்னிட்டு 'SmartHERNation' எனும் நிகழ்வை முன்னெடுத்திருந்தது. தமது தொழில் நிலையில் சிறப்பாக சாதனைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், தேசத்தின் பொருளாதாரம் மற்றும் சமூகங்களில் அதிகளவு நேர்த்தியான பங்களிப்பை ஏற்படுத்துவதில் பங்களிப்பு வழங்கியிருந்தவர்களை ஒன்றுதிரட்டும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இணையத்தினூடாக அனைவருக்கும் சமமான, அணுகக்கூடிய மற்றும் பாதுகாப்பான களம் ஏற்படுத்திக் கொடுப்பதை உறுதி செய்யும் SLTMOBITEL இன் செயற்பாடுகளின் ஒரு அங்கமாக இந்த IWD நிகழ்வு அமைந்திருந்தது. இலங்கையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே காணப்படும் டிஜிட்டல் இடைவெளியை குறைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட முன்னெடுப்பாக 'SmartHERNation' அமைந்திருப்பதுடன், அதனூடாக அவளுக்கு வலுவூட்டி, அவளை டிஜிட்டல் செயற்படுத்தப்பட்ட மதிநுட்பமான தேசத்துக்கு பங்களிப்புச் செய்ய தயார்ப்படுத்துவதாக அமைந்துள்ளது.

# Lovely Professional University உடன் கைகோர்த்துள்ள சிங்கர் ஃபெஷன் அக்கடமி

சிங்கர் ஃபெஷன் அக்கடமி தனது மாணவர்களுக்கு பட்டப்படிப்பை வழங்குவதற்காக இந்தியாவின் Lovely Professional University (LPU) பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்தியுள்ள தனது கூட்டாண்மை தொடர்பில் அறிவித்துள்ளது. சிங்கர் ஃபெஷன் அக்கடமி மாணவர்கள், சிங்கர் ஃபெஷன் அக்கடமியில் இரண்டரை வருட கால நவநாகரிக ஆடை வடிவமைப்பு கற்கைநெறியை நிறைவு செய்த பின்னர் LPU இடமிருந்து நவநாகரிக ஆடை வடிவமைப்பில் இளங்கலைப் பட்டப்படிப்பைத் தொடர இந்த கூட்டாண்மை இடமளிக்கும்.

இத்துறையில் 60 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள சிங்கர் ஃபெஷன் அக்கடமியானது தையல் மற்றும் நவநாகரிக ஆடை வடிவமைப்பில் எண்ணுக்கணக்கற்ற தொழில்முயற்சியாளர்களை உருவாக்கியுள்ளது.



ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பட்டய ஆடை வடிவமைப்பாளர் சங்கத்திடமிருந்து (Chartered Society of Designers CSD) கற்கைநெறி உறுதிப்படுத்தல் அங்கீகார அந்தஸ்தை இந்நாட்டில் முதன்முதலாகப் பெற்ற மற்றும் ஒரேயொரு நிறுவனம் இந்த அக்கடமி ஆகும். அதாவது, Certificate in Fashion Design, Diploma In fashion Designing, Advance diploma in fashion Designing, Diploma in Drees Making மற்றும் Diploma in Machine Embroidery போன்ற கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்கள், சிங்கர் ஃபெஷன் அக்கடமியால் வழங்கப்படும் சான்றிதழுக்குப் புறம்பாக, CSD இடமிருந்து உலகளாவிய அங்கீகாரம் பெற்ற சான்றிதழைப் பெற்றுக்கொள்வார்கள்.

தொழில்துறையின் சந்தைப் போக்குகள் மற்றும் விசேட நிபுணத்துவத்தின் அவசியத்தை உணர்ந்து, சிங்கர் ஃபெஷன் அக்கடமியானது, மாணவர்களுக்கு மதிப்புமிக்க தொழில் துறை சார்ந்த சான்று அங்கீகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற எண்ணமே Lovely Professional University பல்கலைக்கழகத்துடன் ஒரு சிறந்த கூட்டாண்மையை ஏற்படுத்துவதைத் தூண்டியது. LPU ஆனது இந்தியாவின் மிகப்பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்று என்பதுடன், இது நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது.

# நிதிச் சேவைகள் மற்றும் காப்புறுதி பிரிவில் வெற்றியீட்டிய CDB

நிலைபேறான அறிக்கையிடலில் சிறப்பை கௌரவிக்கும் வகையில், சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB), அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலைபேறான அறிக்கையிடல் விருதுகள் வழங்கும் நிகழ்வில், பெருமைக்குரிய விருதை சுவீகரித்திருந்தது. இலங்கை பட்டைய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சம்மேளனத்தினால் 19 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்த ACCA ஸ்ரீ லங்கா நிலைபேறான அறிக்கையிடல் விருதுகள் வழங்கும் நிகழ்வில், நிதிச் சேவைகள் மற்றும் காப்புறுதிப் பிரிவில் இந்த கௌரவிப்பை CDB பெற்றுக் கொண்டது. அதனூடாக வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நம்பிக்கையான செயற்பாடுகளுக்கான தனது அர்ப்பணிப்பு ஆகியன மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளன.



கடந்த காலங்களிலும் அடிக்கடி இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் CDB பிரசன்னத்தைக் கொண்டிருந்ததுடன், இந்தப் பிரிவில் இணைந்த வெற்றியாளராகவும், இரண்டாமிடத்தை நான்கு தடவைகளும் வெற்றியீட்டியிருந்தமை அடங்கலாக ஐந்து தடவைகள் வெற்றியீட்டியுள்ளது. நிலைபேறாண்மைக்கு நிறுவனத்தின் அர்ப்பணிப்பு என்பது மக்கள், புவி, இலாபம் ஆகிய மூன்று கோட்பாடுகளில் தங்கியுள்ளதுடன், வர்த்தக சம்மேளனத்தினால் சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலைபேறாண்மை விருதுகள் வழங்கல் நிகழ்வில் தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாகவும், சிறந்த பத்து கூட்டாண்மை குடிமகன் விருதுகள் வழங்கலில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

CDB சார்பாக இந்த விருதை ஏற்றுக் கொண்ட பணிப்பாளர்/பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி/பிரதம நிதி அதிகாரி தமித் தென்னகோன் கருத்துத் தெரிவிக்கையில், "நிலைபேறான அறிக்கையிடல் என்பது, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) செயற்படுத்தும் காரணியாக அமைந்துள்ளதுடன், இதற்கு CDB தன்னை அர்ப்பணித்துள்ளது. எமது வியாபார மாதிரியில் நிலைபேறாண்மை என்பது பெருமளவில் உள்வாங்கப்பட்டுள்ளது. எமது உலகும், தேசமும் சமூகபொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், முன்னரை விட SDGகள் தற்போது அதிகளவு பொருத்தமானதாக அமைந்துள்ளது. என்றார்.

# இலங்கையில் முதலீட்டுக்கான உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் Unilever

கடந்த 85 வருடங்களாக இலங்கையில் ஆழமாக வேரூன்றிய யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனம், தேசத்திற்கான தனது அர்ப்பணிப்பை வலுப்படுத்தும் வகையில், அதன் மோல்ட் உணவு பானங்களின் உற்பத்தியை உள்ளூர்மயமாக்கும் பயணத்தை ஆரம்பித்துள்ளது. அந்த வகையில் அதன் முதலாவது மோல்ட் பான தொழிற்சாலையை சபுகஸ்கந்தவில் லங்கா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் லிமிடெட் (LINDEL) வலயத்தில் அமைக்க திட்டமிட்டுள்ளது. தற்போது நிறுவனம் 97% ஆன அனைத்து தயாரிப்புகளையும் இலங்கையில் உற்பத்தி செய்கிறது. அந்த வகையில் இப்புதிய திட்டம் யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தயாரிப்புகளை மேலும் மேம்படுத்துகிறது. இது ரூ. 4 பில்லியன் முதலீட்டின் மூலமானது என்பதோடு, ஒரு மில்லியன் இலங்கையர்களின் வாழ்வாதாரத்திற்கான பயணத்தின் ஒரு பகுதியாக Viva மற்றும் Horlicks ஆகியவற்றை இந்த தொழிற்சாலை உற்பத்தி செய்யும்.



அதிநவீன தொழில்நுட்பத்தை கொண்ட இந்த தொழிற்சாலையில் Vacuum Bran Dryer (உலர்த்தி) தொழில்நுட்பம் இணைக்கப்பட்டுள்ளது. இது தயாரிப்புகளின் தரம் மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த உதவுகிறது.

இலங்கையிலுள்ள குடும்பங்களை நாள் முழுவதும் சுறுசுறுப்பாக வைத்திருக்கத் தேவையான சக்தியுடன் தங்கள் நாளைத் தொடங்குவதற்கு, மோல்ட் மற்றும் பார்லியின் நற்குணத்தால் செறிவூட்டப்பட்ட உயர்தர Viva மற்றும் Horlicks தயாரிப்புகளின் நிலையான விநியோகத்தை இது உறுதி செய்கிறது.

# உலகளாவிய விற்பனை சந்தையில் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ள Samsung Soundbar

ஆராய்ச்சி நிறுவனமான FutureSource Consulting படி, Samsung Electronics உலகளாவிய Soundbar சந்தையில் முன்னணியில் மதிப்பிடப்பட்டுள்ளது. பெப்ரவரியில் வெளியிடப்பட்ட ஒரு புதிய அறிக்கையின்படி, Samsung 20.2% சந்தைப் பங்கைக் கொண்டு தொடர்ச்சியாக 9வது ஆண்டாக Soundbar சந்தையில் முதலிடத்தில் உள்ளதுடன் 2022 இல் இந்தத் துறையில் 18.4% விற்பனையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் என்றும் காட்டுகிறது.

பிரதான வரிசையில் பிரீமியம் Qseries உட்பட Samsung Soundbars சக்திவாய்ந்தவை மற்றும் தொழில்நுட்ப ரீதியாக உயர்தர ஒலியுடன் மேம்பட்டவை, தொலைக்காட்சிகளுக்கு உகந்தவை மற்றும் நேர்த்தியாகவும் நவீனமாகவும் இருக்கும். SpaceFit Sound போன்ற அம்சங்கள் அதன் தனித்துவமான ஒலி அனுபவத்திற்காக பாவனையாளர்கள் மற்றும் ஆய்வாளர்களால் பாராட்டப்பட்டுள்ளன.

9
YEARS
Global No.1
Soundbar

உண்மையில், Samsung Soundbars தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்களின் இதயங்களை வென்றுள்ளன. HWQ990B ஆனது AVForums போன்ற விற்பனை நிலையங்களால் 2022 ஆம் ஆண்டின் "Best in Class" வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, HWS800B ஈர்க்கக்கூடிய ஒலியை வழங்குவதாக விமர்சகர்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்த ஆண்டு, Samsung வாடிக்கையாளர் மற்றும் Home Theater ஆர்வலர்களை ஒரே மாதிரியாக ஈர்க்கும் வகையில் மிகவும் அதிவேக சினிமா ஒலியை அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் முதன்மை ஓடியோ அம்சங்களுடன் அதன் Soundbar வரிசையை புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்கிறது.

# SDB வங்கியின் தங்க அடகுச் சேவையினூடாக வாடிக்கையாளர்களுக்கு உயரிய முற்பணம்

பொருளாதார ரீதியில் வாழ்க்கை சவால்களுக்கும் மத்தியில் நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கும் காலப்பகுதியில், எந்தவொரு நபரும் அந்தப் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கு தமக்கு நெருக்கமான மற்றும் இலகுவான வழிமுறைகளைப் பின்பற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதன் போது, அவர்கள் பெருமளவில் தம்வசம் காணப்படும் தங்க நகைகள் மற்றும் சொத்துக்களை அடைமானம் வைத்து, தமது நிதி நெருக்கடிகளுக்கு தீர்வு காண முயற்சிக்கின்றனர். அடைமானச் செயற்பாடுகளின் போது சௌகரியம் மற்றும் நட்பாக செயலாற்றுகின்றமை போன்றன தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்துகையில், அவர்கள் நம்பிக்கை தொடர்பில் கவனம் செலுத்துவது பெருமளவில் தவறவிடப்படுகின்றது. அதன் பிரகாரம், பெருமளவானோர், இலங்கை மத்திய வங்கியின் அனுமதியைப் பெற்ற வங்கி மற்றும் நிதி நிறுவனங்களை நாடுவதற்கு பதிலாக, பெருமளவில் அங்கீகாரமளிக்கப்படாத அடகுச் சேவை வழங்குநர்களை நாடுவதை காண முடிகின்றது.



SDB வங்கியின் கிளைச் செயற்பாடுகள் பிரதான அதிகாரி ரஜித தோரதெனிய கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் பெருமளவானோர் அடகுச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு, சட்ட ரீதியில் அனுமதி பெறப்படாத நபர்கள் மற்றும் நிறுவனங்களை நாடுகின்றனர். அதற்கு பிரதான காரணம், அங்கீகாரமளிக்கப்பட்ட நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் போதியளவு விழிப்புணர்வு இன்மையாகும்." என்றார்.

இலங்கையின் வங்கித் துறையில் வேகமான முன்னேற்றத்தைப் பதிவு செய்திருந்த SDB வங்கியிடம் இது வரையில், 156 பில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் காணப்படுகின்றன.

# பின்தங்கிய பாடசாலை மாணவியர் 100,000 பேருக்கு சுகாதார அணையாடைகள், ஈவா அனுசரணை

1987 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் முன்னணி சுகாதார அணையாடை வர்த்தகநாமமாகத் திகழும் ஈவா, நாடு முழுவதிலும் உள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கிய பாடசாலை மாணவிகள் 100,000 பேருக்கு சுகாதார அணையாடை வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தன்று ஆரம்பிக்கப்பட்ட இம்முயற்சி, பாடசாலை மாணவிகளின் மாதவிடாய்க் கால வறுமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், மாதவிடாய் சார்ந்த சுகாதாரப் பொருட்கள் கிடைக்காததால் எந்தவொரு மாணவியும் பாடசாலைக்குச் செல்வதைத் தவறவிடாமல் இருக்கவும் ஈவா கொண்டுள்ள உறுதிப்பாட்டின் ஒரு அங்கமாகும்.



கொழும்பிலுள்ள இதற்குத் தக்க இரண்டு பாடசாலைகளுக்கு ஈவாவின், சுகாதார அணையாடைகளின் முதல் தொகுதி நன்கொடை வழங்கப்பட்டது. சுகாதார அணையாடை நன்கொடை முயற்சியானது, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்கள் முழுவதும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன், கிராமப் புறங்களில் உள்ள பாடசாலை மாணவிகள் தங்களுடைய கல்வியைத் தடையின்றி மற்றும் பாடசாலை செல்லும் நாட்களை இழக்காமல் தொடர உதவி தேவைப்படுகின்ற பாடசாலைகளை உள்ளடக்கும்.

கடந்த 35 ஆண்டுகளாக, வலுவூட்டப்பட்ட ஈவா நுகர்வோரின் விசுவாசமான ஆதரவு, மாதவிடாய் வறுமையை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் நிவர்த்தி செய்யும் இத்தகைய நன்கொடை முயற்சிகளை வர்த்தகநாமம் வெற்றிகரமாக முன்னெடுக்க வழிவகுத்தது.

# தாஜ் சமுத்திராவில் சிறப்பாக நடைபெற்ற Business World International விருது விழா

ஐக்கிய அமெரிக்காவின் அமைப்பு ஏற்பாடு செய்த Business World International விருதுவிழா கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

விருது விழாவின் தொனிப்பொருள் 2030ஆம் ஆண்டுக்கு ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான அர்ப்பணிப்பு என்பதாகும். Business World International Organization (BWIO) எனப்படுவது உலக தொழில்முயற்சி துறையில் வெற்றிகள் மற்றும் ஆற்றல்களை இனங்காணும் நோக்கத்துடன் ஐக்கிய அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்ட அமைப்பாகும்.

இவ்விருதுகள் மூலம் தொழில் முயற்சி நிறுவனங்களின் தனித்துவ திறன்களை அடையாளம் கண்டு அவை ஊக்குவிக்கப்படுவதோடு துறை சார்ந்த சவால்களை வெற்றி கொள்வதற்கும் அவர்களின் திறன்களை உலகிற்கு காண்பிப்பதற்குமாக தொழில் முயற்சியாளர்களும் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.



30 பிரிவுகளின் கீழ் நடைபெற்ற மேற்படி விருது விழாவில் புதிய தொழில் முயற்சிகள், வர்த்தக உலகின் ஜாம்பவான்கள், சமூகத்தை மாற்றுவதற்கு பங்களித்தோர், நிலைதகு பேண் ஆலோசகர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்துகின்ற தொழில் வல்லுனர்கள் என பல்வேறு குழுக்களுக்குரிய ஆட்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றன.

விருது விழாவின் இணை பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த மற்றும் AGSEP Research & Advisory நிறுவனத்தின் ஸ்தாபகரும் BWIO USA பணிப்பாளர் சபை அங்கத்தவருமான பேராசிரியர் Dietmar Doering ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# ரணிலின் மடியிலுள்ள ராஜ யோகம்..!

மன்னர் சாள்ஸின் முடிசூட்டு விழாவில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைக்கப்பட்டமை அவரது சர்வதேச செல்வாக்கை நிரூபித்திருக்கிறது. இதற்கு முன்னரும் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவுக்கு 1953இல், அப்போதைய அரச தலைவரான டட்லியுடன் ரணிலின் தந்தையான எட்மன் விக்கிரமசிங்க சென்றிருந்தார்.

நாட்டுக்கு அவசரமாகத் தேவையாகவிருந்த நிதி நிவாரணங்களைப் பெற்றுவந்த பெருமையிலிருந்த ரணிலுக்கு கிடைத்த அடுத்த மவுசு இது. மேலைத்தேய நாடுகளின் அரசியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் செல்வாக்குச் செலுத்துவதாக பெருமை பேசப்படும் சூழலில், இவ்வாறான நிதியுதவிகள் கிடைக்குமா? இதில் பலருக்கும் சந்தேகம் இருந்தது. பொறுப்புக்கூறல், போர்க்குற்றம் இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் அரசுக்கு நிதியுதவி கிடைக்க புலம்பெயர் அமைப்புக்கள் விடப்போவதில்லை. இவ்வாறுதான் எதிர்பார்க்கப்பட்டது. இவையனைத்தையும் தகர்த்து நிவாரணத்தைக் கொண்டுவந்து நிம்மதிப்பெருமூச்சு விடவைத்தார் ஜனாதிபதி.

அரசாங்கத்தை பொறுப்பேற்றது ஆட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கல்ல. இந்தப்போக்கில் செயற்படும் ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி இதை நிரூபித்து வருகிறார். ஜனாதிபதியின் மே தின உரையிலும் இது சுட்டிக்காட்டப்பட்டது. குறுகிய அரசியலுக்கு முன்னிலையில்லை, 2048 இல் முழுமையான இலங்கை என்ற இலக்கில் பயணிக்கவே அழைப்பு விடுத்தார்.

வழங்கிய கடனுக்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளால், வாங்கிய கடனை மீளச்செலுத்தும் நிர்ப்பந்தனையிலுள்ளது நாடு. எனவே, இதற்காக பேதங்களின்றி ஒன்றுபட்டுழைப்பது அவசியப்பட்டுள்ளது. இதற்காகவே, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்துக்கு பாராளுமன்ற அங்கீகாரமும் கோரப்பட்டது. இதையும் 120 வாக்குகளால் வென்றெடுத்த ரணில் விக்கிரமசிங்க, உலகத் தலைவர்களே ஒன்றுகூடும் "வெஸ்ட்மினிஸ்டர் அபே" ஆலயத்துக்குச் சென்றுள்ளார்.

பிரிட்டனில் 39ஆவது தடவையாக நடைபெறும் முடிசூட்டு விழா இது. 1953இல் நடந்த இதுபோன்ற விழாவுக்கு 8200 பேர் அழைக்கப்பட்டனர். இம்முறை 2200 பேருக்கே இந்த அழைப்பு. அனுமதிக்கப்பட்டவர்களில் ஒரு அரச தலைவராகச் செல்கிறார் அவர். ஐக்கிய இராச்சியம் மிகப் பெரிய விசால இராச்சியமாக இருந்த தேசமது. இப்படிப்பட்ட ஒரு தேசத்தின் நிகழ்ச்சிக்கு ஜனாதிபதி ரணில் செல்வது நாட்டுக்கு கிடைத்த கீர்த்தியே! இது அவரது அரசியல் ஆணிவேரையும் பலப்படுத்தலாம். பாராளுமன்றம் தனது திட்டங்களுக்கு வழங்கிய அனுமதியின் ஆதாரத்துடன் அடுத்த கட்ட நகர்வுகள் ஆரம்பமாகலாம்.

இவைதான் எதிரணிக்கு எரிச்சலை ஏற்படுத்துகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்று முன்னேற முடியாமல் தடுமாறும் தேசங்களுக்குள், நமது நாடு இல்லாதிருக்க உழைப்பது தான் தேசப்பற்று. தன்சானியா, கிறீஸ்லாந்து மற்றும் ஆர்ஜன்டீனா என்பவை 'இவ்வுதவிகளை ஏன் பெற்றோம்?' எனத் திணறுமளவுக்கு பொருளாதாரம் வீழ்ந்துள்ளது. இதுபோன்று, வீழவா இந்த எதிரணிகள் விரும்புகின்றன? அவ்வாறு விரும்பினால் அதில் அரசியல் உள்ளது. எனவே, இவ்விருப்பம் தேசப்பற்றிலிருக்கட்டும். ஆனால், எதிரணிகள் சொல்லும் சில விடயங்களுக்கு தலைசாய்க்கும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் நழுவ முடியாத நிலையும் உள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படக்கூடாது என்கின்றன எதிரணிகள். வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த வரிச்சலுகைகளில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

இதனால், வருடாந்தம் இந்த நிறுவனங்கள் நாற்பது மில்லியன் டொலரை வருமானமாக ஈட்டுவதாக கூறப்படுகின்றது. உள்நாட்டு நிறுவனங்களால் பாரிய நிதியை முதலீடு செய்து இவ்வருமானத்தை ஈட்ட முடியாது. இதற்காகவே, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இதன் செயற்பாடுகளை குத்தகைக்கு வழங்கியதாகக் கூறுகிறது அரசு.

பொதுவாக நோக்கினால், கடந்த காலங்களிலிருந்து விடுபட்டு புதிய பொருளாதாரக் கொள்கைக்கான குறிக்கோளில் இணைய எல்லோரும் இணைவதென்பது அரசியலுக்கு அப்பால் சாத்தியமானதே!

**சுஹைப் எம். காசிம்**

# இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அடுத்த அத்தியாயம்

பாரிய பொருளாதார பேரழிவிலிருந்து இலங்கை தற்போது படிப்படியாக மீண்டெழுந்து வருவதனை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்காக அரசாங்கம் மற்றும் மத்தியவங்கி பல்வேறுபட்ட கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி, அதன் வாயிலாக பணவீக்கம் மேலும் அதிகரிக்கா வண்ணம் கண்காணித்து, பணவீக்கத்தினை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு இனிவரும் காலங்களில் மேலும் குறைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கின்றது. இதுபோன்ற பல உடனடி நடவடிக்கைகளின் காரணமாக சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் சரியான போக்கினை கவனத்திலெடுத்து 17வது தடவையாக முன்வைக்கப்பட்ட "பெயில் அவுட்" (Bailout) கோரிக்கையினை கடும் நிபந்தனைகளுக்கமைய ஏற்றுக் கொண்டு முதற்கட்ட உதவித்தொகையினையும் வழங்கியுள்ளது.

முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக அரசு தனது "வரி வருமானத்தினை அதிகரிக்க வேண்டும்" என்பது முன் வைக்கப்பட்டுள்ளது. ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையினால் கடந்த காலங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட வரிவருமானம் மிகவும் குறைவாக காணப்பட்டு வந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது மொத்த தேசிய உற்பத்திக்கு 7.4% ஆகக் குறைந்த வரிவருமானத்தினை பெற்றுவருவது புள்ளிவிபரங்கள் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. அதே சமயம் உலக வங்கியின் கூற்றுப்படி, ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 15%க்கும் அதிகமான வரி வருவாய் பொருளாதார வளர்ச்சிக்கும், இறுதியில் வறுமையைக் குறைப்பதற்கும் முக்கியமாக அமைகின்றது. இதனைக் கவனத்தில் எடுத்த இலங்கை அரசாங்கம், பலதரப்பட்ட வரிசார்ந்த மாற்றங்களை முன்வைத்து பல்வகையான நேரடி மற்றும் மறைமுக வரிகளை தற்போது அமுல்படுத்தியுள்ளது. எவ்வாறிருப்பினும் தற்போது இலங்கையில் அண்ணளவாக 4 சதவீதமான மக்கள் மாத்திரமே வரி செலுத்துகின்றார்கள். இதனை நோக்குமிடத்து உண்மையாக வரி செலுத்துபவர்கள் கடந்த காலங்களில் வரிசெலுத்தாமல் வரி ஏய்ப்பவர்களாக (Tax Evaders) பலவகையில் வரிஏய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருப்பதை அரசாங்கம் இனங்கண்டுகொண்டுள்ளது. எனவே சரியான மற்றும் சிறந்த தரவுகளை பலவழிகளில் பெற்றுக்கொண்டு, அதன் மூலம் வரிசெலுத்துனர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அரசின் வரிவருமானத்தினை உரியமுறையில் அதிகரிக்க வேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் காரணமாக தற்பொழுது புதிதாக ஒரு நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது என்னவென்றால்,

"வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் –

பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் பதிவாளர் தலைமையதிபதி;


கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதி;

மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி;

பண்டங்கள், வேலைகள் அல்லது ஆலோசனை மற்றும் ஆலோசனைசாராச் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தங்களை அளிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள வேறேதேனும் அரசாங்க நிறுவனத்தின் அலுவலரொருவர்;

ஒரு நிதிநிறுவனம்;

ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அல்லது ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வேறெவரேனுமாள், நிதிசார் கொடுக்கல்வாங்கல் பற்றிய தகவல்களுட்பட்ட அத்தகைய தகவல்களை இலத்திரனியற் படிவத்தில் கிரமமானவோர்அடிப்படையில் அல்லது விதித்துரைக்கப்படக் கூடியவாறாக அத்தகைய எவரேனுமாளின் அல்லது நிறுவனத்தின் கட்டுக்கோப்பிலுள்ள அத்தகைய பதிவேடுகளுக்கான அணுகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும்."



இந்த புதிய முறையின் முக்கியத்துவம் என்னவென்றால் இனிவரும் காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (Inland Revenue Department) காலத்திற்கு காலம் பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள் செய்கின்ற சகலவிதமான கொடுக்கல் வாங்கல்களின் தரவுகளை பெற்றுக்கொள்ளப் போகின்றது. இந்தப் புதிய முறைமையினை அமுலாக்குவதற்கு முன்பாக இவ்வாறான தரவுகளை உள்நாட்டு இறைவரித்திணைக்களம் பலவித நிபந்தனைகளின் அடிப்படையில் மாத்திரமே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. தரவுகளை தேடிச்சென்று பெற்றுக் கொள்ள வேண்டிய செயல்முறை மற்றும் பொறிமுறை, வளங்கள் குறிப்பாக நிதிவளம் மற்றும் ஆளணி பற்றாக்குறை போன்றனவை காரணமாக உள்நாட்டு இறைவரித்திணைக்களம் முழுமையாக செயற்பட முடியாமல் இருந்துவந்தது. இந்த குறைபாடுகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளிவைக்கும் முகமாக, உள்நாட்டு இறைவரித்திணைக்களம் பெறவேண்டிய தரவுகள் யாவும், காலத்திற்கு காலம் அவர்களுக்கு வேண்டிய வடிவத்தில் இலத்திரனியற் படிவத்தில் முறைப்படி மிக இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக புதிய வரி செலுத்துனர்கள் இனங்காணப்படுவார்கள், ஏற்கனவே வரி செலுத்துவோரின் சரியான விபரங்கள் உரிய முறையில் கிடைக்கப்பெறுதல், அரசின் நேரடி மற்றும் மறைமுக வரி வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு, சரியான பலதரப்பட்ட புள்ளிவிபரங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய முறைமை, அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றுத்திறன் அதிகரிப்பு, அந்தந்த அரச நிறுவனங்களின் சேவையினை மிகச் சிறந்த முறையில் வழங்கக்கூடிய வாய்ப்பு, சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் படிப்படியாக குறைக்கப்பட்டு வருங்காலத்தில் அவ்வாறான நடவடிக்கைகள் இல்லாதொழிக்கப்படக்கூடிய வாய்ப்பு, வெளிநாடுகளுடன், வெளிநாட்டு நிதிநிறுவனங்களுடன் மற்றும் ஏனைய வெளிநாட்டு தகவல் பரிமாற்ற நிறுவனங்களுடன் சிறந்த தகவல் பரிமாற்று முறைமை உருவாக்கப்படுகின்ற தன்மை மற்றும் நாட்டின் சமூக பாதுகாப்பு சிறந்த முறையில் பேணக் கூடிய பொறிமுறை உருவாகுதல் போன்ற பலதரப்பட்ட நன்மைகளை இந்த முறையின் வாயிலாக அரசாங்கம் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே இனிவரும் காலத்தில் கொடுக்கல் வாங்கல்களை உரிய முறையில் பேணி முறையாக கணக்கினை தயார்ப்படுத்தி, பட்டயக்கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டு, அவற்றினை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு (Inland Revenue Department) உரிய ஆவணங்களுடன் உரிய காலத்திற்குள் சமர்ப்பித்து அவற்றிற்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தினையும் செலுத்தும்போது பொதுமக்களாகிய நாம் பின்வருவனவற்றினை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தனியார் வியாபாரத்தில் பங்குகளை (Shares) வாங்குவதற்காக முதலீடு செய்யப்படுகின்ற பணத்திற்கான கணக்கினை சரியான முறையில் தெரியப்படுத்தல் வேண்டும். மற்றும் முதலீடு செய்து வைத்திருக்கும் பங்கினை விற்பதன் மூலமாக வருகின்ற பணத்தினையும் மேலும் மூலதன இலாபத்தினையும் சரியான முறையில் தெரியப்படுத்தி அதற்குரிய வரியினை முறையாக செலுத்துதல் வேண்டும்.

வாகனங்களை கொள்வனவு செய்யும் பொழுது, அதற்கு மேற்கொள்ளப்படுகின்ற மூலதன செலவினம் மற்றும் அதனை விற்கும்பொழுதும் முறையாக விபரங்கள் தெரியப்படுத்தக்கப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களுடன் வியாபார கொடுக்கல் வாங்கல்களை செய்யும் பொழுது முழுமையான விபரத்தினை தெரியப்படுத்தல் வேண்டும். உதாரணமாக ஒப்பந்தம் (Tender) மூலமாக செய்யப்படுகின்ற கட்டட நிர்மாண வேலைகள், பாதுகாப்பு சேவைகள் (Security Services), ஆலோசனை சாராச் சேவைகள், அத்தியாவசிய பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்கல் போன்ற வியாபார நடவடிக்கைகள் தெரியப்படுத்த வேண்டும்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்

நிதி நிறுவனங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற நிலையான வைப்புகள், சேமிப்பு கணக்குகள் மற்றும் வங்கி நடைமுறைக்கணக்கு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் உள்வாங்கப்படுதல் வேண்டும். எவ்வாறு பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு நிதிநிறுவனக் கணக்கில் வைப்பில் இடப்படுகின்றது?, எந்த தேவைக்காக வைப்பிலிருந்து பணம் எடுக்கப்படுகின்றது?, உள்நாட்டிலா அல்லது வெளிநாட்டிலா அத்தகைய பணம் செலவழிக்கப்படுகின்றது? அல்லது வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகின்றதா?, போன்ற அனைத்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை கொடுக்கல் வாங்கல் மூலமாக ஈட்டக்கூடிய இலாபத்துக்கு தற்போது வரி விதிவிலக்களிக்கப்பட்டிருப்பினும் பங்குகளை வாங்குவதற்கு எவ்வாறு நிதி கொண்டு வரப்பட்டது, முதலீடு செய்துவைத்திருக்கும் பங்கு விற்பனை மூலம் வெளியே எடுக்கப்படுகின்ற நிதி எங்கே செல்கின்றது, மற்றும் "பங்கிலாபத்தை" (Dividend) முறையாக வருமான வரித் திரட்டில் (Income Tax Return) தெரியப்படுத்தி அதற்கான வருமான வரியினை செலுத்துவது கடமையாகும்.

அரசாங்கத்தினால் வருங்காலத்தில் "சொத்து வரி" (Wealth Tax) அமுல்படுத்தப்படவுள்ள காரணத்தினால் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் விபரங்கள் முழுமைப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் இந்த புதியமுறைமையின் மூலம் பலவகைகளில் தகவல் பெறக்கூடிய தன்மை இருப்பதனால் தனி ஒருவர் மற்றும் நிறுவனங்கள் யாவும் முழுமையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்து விபரங்களை உரிய முறையில் கிரமமாக சமர்ப்பிப்பது கடமையாகும்.

இதை நோக்கும்பொழுது, தனி ஒருவர் மற்றும் நிறுவனங்கள் சார்ந்த கொடுக்கல்வாங்கல் பற்றிய முழுவிபரங்கள் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு பலவகைகளில் உடனுக்குடன் தெரிவிக்கப்படப் போகின்றது. இதை அனைவரும் கவனத்திற்கொண்டு மிகவும் நுட்பமான முறையில் திட்டமிட்டு தங்களுடைய சகலவிதமான கொடுக்கல் வாங்கல்களையும் சட்டத்திற்கு உட்பட்டு செய்வது அவசியமாகும். இல்லையென்றால் உண்மையான செலவினங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் அதனால் வரி வருமான மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதிகமான வரி, தண்டப்பணம் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும்.

எனவே காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற புதிய சட்டங்களை பொதுமக்கள் தெரிந்துவைத்து அதன்படி செயல்படுதல் ஒவ்வொரு பிரஜையின் கடமையாகும். அந்த வகையில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மேற்கூறிய புதிய முறைமையினையும் மற்றும் இனிவரும் காலங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய சட்டங்களையும் அறிந்து அதன்படி செயல்பட்டு நாட்டினதும், நிறுவனத்தினதும் மற்றும் தனிமனிதனதும் இலக்குகளை வெற்றி அடைவோம்.

# அறிவித்தல்

## மொறட்டுவை பல்கலைக்கழகம்

### கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல் — 2023

கீழ்க்காணும் கழிக்கப்பட்ட பொருட்கள் தொகையை விற்பனை செய்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

- டெஸ்க்டொப் கணனி, லெப்டொப் கணனி, கணனி துணைப் பாகங்கள், மல்டிமீடியா உபகரணங்கள், பிரிண்டர், போட்டோப் பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம் மற்றும் அவற்றின் பாகங்கள்.
- ஆய்வுகூட உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள்.
- மரம் மற்றும் உலோக வீட்டுத் தளபாடங்கள் (கதிரை, மேசை, கபோட்), பிளாஸ்டிக் கதிரை, குசன் கதிரை மற்றும் அவற்றின் பாகங்கள்.
- இரும்புப் பாகங்கள்
- டயர், டியூப், பாவிக்கப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள்.

2023.05.08 முதல் 2023.05.19 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர்/ பொது நிர்வாகப் பிரிவிற்கு எழுத்துமூல வேண்டுதலை மேற்கொண்ட பின்னர் மொறட்டுவை பல்கலைக்கழக வளாகத்தில் இக் கழிக்கப்பட்ட பொருட்கள் தொகையை பரீட்சித்துப் பார்க்கலாம். ஆர்வம் காட்டுகின்ற கேள்வி வைப்பாளர்களுக்கு இது பற்றிய மேலதிக விபரங்களை பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் (011-2650301, Ext. 1207) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

2023.05.08 முதல் 2023.05.19 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கழிக்கப்பட்ட பொருட்களுக்காக ரூ. 500.00 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு விலைமனுக் கோரல் கேள்விப் பத்திரங்களை பொது நிர்வாக பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023.05.22 பி.ப. 2.00 வரை ஏற்கப்படும். கேள்விப் பத்திரங்களை பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள, கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் பிரதிப் பதிவாளர்/ பொது நிர்வாகப் பிரிவு, மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டுபெத்த, மொறட்டுவ என்ற முகவரிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடையும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்யலாம். பூர்த்தியற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் விலைமனுப் பத்திரங்கள் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**பதிவாளர்,**
**மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.**

## காய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட... (02 ஆம் பக்கத் தொடர்)

அதனால் வீட்டுக்கு வெளியில் செல்லும் போது இத்தொற்று தவிர்ப்புக்கான பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும். தற்போது இத்தொற்று பரவும் அபாயம் இல்லை. மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்படுகிறது. ஆனாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, சுவாசத் தொகுதியைப் பாதிக்கக்கூடிய இன்புளுவென்ஸா நோய்க்கும் நாட்டில் பலர் உள்ளாகி இருப்பதையும் அவர் குறிப்பிடவும் தவறவில்லை.

### சிறுவர்கள் மத்தியிலும் காய்ச்சல்

இதேவேளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா, 'காய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட நோய் அறிகுறிகளுடனான உபாதைகளுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பை அவதானிக்க முடிவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மழைக் காலநிலையுடன் சேர்த்து எலிக் காய்ச்சலும் தீவிரமடையக்கூடிய அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. எலி, நாய், பூனை உள்ளிட்ட வீட்டு வளர்ப்பு பிராணிகளது சிறுநீரில் காணப்படும் லெப்டோபைரோஸிஸ் என்கிற பக்றீரியா சேறு சகதி கொண்ட இடங்களில் சேரும். உடலில் சிராய்ப்பு காயங்களைக் கொண்டிருப்பவர்கள் அவ்வாறான இடங்களில் நடமாடும் போதும் பணிகளில் ஈடும்படும்போதும் இந்நோய்க் காரணி தொற்றுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம். அதன் ஊடாகத் தோற்றுவிக்கப்படக்கூடிய நோயும் உயிராபத்து மிக்க அச்சுறுத்தல் கொண்டவையே. ஆனால் இந்நோயை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் கண்டு உரிய சிகிச்சை அளித்தால் முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம். அதனால் 'தற்போதைய சூழலில் காய்ச்சல், கண்கள் சிவப்பாதல், தசை வலி, சிறுநீர் கடும் நிறமாக வெளிப்படல் போன்றவான அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் தாமதமின்றி உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு' இலங்கை மருத்துவர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாறு காய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட நோயறிகுறிகளுடன் பல நோய்கள் நாட்டில் காணப்படுவதையே மருத்துவர்களதும் பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவரதும் கருத்துகளும் ஆலோசனைகளும் தெரிவிக்கின்றன. அதனால் காய்ச்சலுடனான அறிகுறிகள் குறித்து கவனயீனமாகவோ அசிரத்தையாகவோ நடந்துகொள்ளவே கூடாது. அதற்கான நேர காலம் இதுவல்ல.

ஆகவே காய்ச்சலுடன் கூடிய நோயறிகுறிகள் குறித்து விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

# அரச ஈட்டு, முதலீட்டு வங்கி

## ஜெனிட்டோரியல் சேவையினை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

**SMIB/TD/2023/04/03**

நம்பகமான நிறுவனங்களுக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட அனுபவத்தைக்கொண்டுள்ள நம்பகமான சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

கொழும்பு 03, காலி வீதி, இல. - 269, அரச ஈட்டு, முதலீட்டு வங்கி 4ம் மாடி, பிரதம முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் பொருட்கள்) இற்கு ஓர் எழுத்துமூல வேண்டுதலை மேற்கொண்டு மற்றும் ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் இ. ரூபா 2000.00 செலுத்துவதன் பேரில் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை ஆர்வமுள்ள மற்றும் தகைமையான விலைமனுதாரர் பெற்றுக் கொள்ளலாம். எனினும், மேலே குறிப்பிடப்பட்ட அமைவிடத்தில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.

| | |
|---|---|
| **விலைமனு சமர்ப்பித்தல் மூடப்படும் திகதி மற்றும் நேரம்** | **2023.05.24 பி.ப. 3.00** |
| **விலைமனு திறத்தல்** | **மூடப்பட்டவுடன் உடனடியாக** |

எந்தக் காரணமும் கூறாமலேயே எந்த அல்லது எல்லா விலைமனுவையும் நிராகரிக்கும் மற்றும், ஓர் விலைமனுவின் எந்தப் பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை வங்கி கொண்டிருக்கும்.

மேலதிக தகவல்களுக்கு - 011-7722789/ 011-7722876

**பெறுகைக் குழு,**
**அரச ஈட்டு, முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு-03**

## உலக நாடுகளின் பாராட்டை...
(08ஆம் பக்கத் தொடர்)

மின்சார ம் உபயோகிப்பவர்களின் எண்ணிக்கையும் சமீப காலத்தில் அதிகரித்திருக்கிறது. 1995 ஆம் ஆண்டு இந்தியாவில் 50 வீத மக்கள் மட்டுமே மின்சாரத்தை உபயோகிப்பவர்களாக இருந்து வந்தார்கள். இது 2010 ஆம் ஆண்டு 76 சதவீதமாகவும், இப்போது 97 சதவீதமாகவும் அதிகரித்திருக்கிறது. மத்திய அரசின் 'ஜன் தன்' திட்டத்தின் கீழ் சுமார் 40 கோடி பேர் புதிதாக வங்கிக் கணக்கை ஆரம்பித்திருக்கிறார்கள்.

உலக அளவில் பல துறைகளில் இந்தியா தலைமைத்துவ நிலையை அடைந்திருக்கிறது. குறிப்பாக, மென்பொருள் மற்றும் வணிகச் செயல்முறை அயலாக்கம் (Business Process Outsourcing) ஆகிய தொழில் துறைகளில் இந்தியா நன்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, இன்று உலக அளவில் பெரும் நிறுவனங்களாக இருக்கும் மைக்ரோ சொஃப்ட், ட்விட்டர் போன்றவற்றின் தலைமைப் பொறுப்பில் இந்திய இளையதலைமுறையினரே இருந்து வருகிறார்கள். இதுவும் இந்தியாவுக்கு ஒரு பெருமையாகும்.

அனைவராலும் வாங்கக்கூடிய அளவுக்கு பொதுமருந்துகள் (generic pharmaceuticals) தயாரிப்பில் இந்தியா உலக அளவில் முன்னணியில் இருந்து வருகிறது. கொவிட் பெருந்தொற்றின்போது தடுப்பூசி தயாரிப்பிலும் இந்தியா தனது தலைமைத்துவத்தை நிரூபித்தோடு, உலகெங்கிலும் தேவைப்பட்ட தடுப்பூசிகளில் சுமார் 50 சதவீதத்தை விநியோகித்து இலட்சக்கணக்கான மனித உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இது மட்டுமல்லாமல் அடக்கமான கார்கள் (compact cars), இரு சக்கர வாகனங்கள் தயாரிப்பிலும் உலக அளவில் இந்தியா முன்னணியில் இருந்து வருகிறது. பால் உற்பத்தியில் இந்தியா முதலிடமும், அரிசி, கோதுமை, கரும்பு, நிலக்கடலை, காய்கறிகள். பழங்கள், பருத்தி உற்பத்தியில் இரண்டாவது மிகப் பெரிய உற்பத்தியாளராகவும் இந்தியா இருக்கிறது.

இந்தியா அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. அறிவியல், பொருளாதார அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு சிறப்பாக நடந்து வருகின்றன.

இந்தியாவுக்கு இப்போது வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுடன் தொழில்துறையிலான வளர்ச்சி, பருவநிலை மாற்றம் ஆகிய சவால்களும் சேர்ந்து கொண்டிருக்கின்றன. இனிவரும் ஆண்டுகளில் 'அனைவருக்கும் அனைத்தும்' என்கிற இலக்கை அடைவதில் சிரமம் இருக்காது என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம்

## சுகாதார சுத்திகரிப்பு சேவை வழங்கல் (2023/2024)

01. பின்வரும் இடப்பரப்புகளுக்கு சுகாதார சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | விளக்கம் | இல. 3(ii) இற்கான தகைமை (ரூபாவில்) | விலைமனுப் பிணை (ரூபாவில்) | ஆவணக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| UVPA/CW/01/CS/2023/01 | அல்பேர்ட் கிறசென்ட் இடப்பரப்பிற்கான சுகாதார சுத்திகரிப்பு சேவைகள் | 11,000,000.00 | 121,000.00 | 4,000.00 |
| UVPA/CW/01/CS/2023/02 | ஹோட்டன் பிளேஸ் இடப்பரப்பிற்கான சுகாதார சுக்திகரிப்பு சேவைகள் | 6,600,000 | 66,000.00 | 2,500.00 |
| UVPA/CW/01/CS/2023/03 | தெஹிவளை பீட கட்டிடத்திற்கான சுகாதார சுத்திகரிப்பு சேவைகள் | 4,400,000 | 44,000.00 | 1,500.00 |
| UVPA/CW/01/CS/2023/04 | இராஜகிரிய பெண்கள் விடுதிக்கான சுகாதார சுத்திகரிப்பு சேவைகள் | 6,600,000 | 66,000.00 | 2,500.00 |
| UVPA/CW/01/CS/2023/05 | தெஹிவளை ஆண்கள் விடுதி மற்றும் தெஹிவளை பெண்கள் விடுதிக்கும் சுகாதார சுத்திகரிப்பு சேவைகள் | 6,600,000 | 66,000.00 | 2,500.00 |

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
    i. இலங்கையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள உரித்தான வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    ii. கடந்த ஐந்து வருடங்களில் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (பெசேவ நீங்கலாக) ஒப்பந்தமொன்றின் தொகைக்காக அல்லது அதற்கு மேலானதிற்காக அரசாங்க நிறுவனமொன்றில் திருப்திகரமான சுகாதார சுத்திகரிப்பு சேவையை வருடமொன்றிற்கு ஒரு ஒப்பந்தத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
    iii. ஒரு வருட கால எல்லைக்கு ஆகக் குறைந்தது 25 சுகாதார சுத்திகரிப்பு ஆளணியருக்கு மாதாந்த ஊசேநி மற்றும் ஊசேநநி ஆகியவற்றை சீரான முறையில் செலுத்தியதற்கான சான்று.

04. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் பிரதான வேலைகள் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

05. 2023.05.08 ஆம் திகதியிலிருந்து 2023.05.29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் பிரதான வேலைகள் பிரிவின் பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

06. 2023.05.29 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பூர்த்தியாக்கப்பட்ட விலைமனுக்கள் தலைவர், பெறுகைக் குழு, பதிவாளர் மே/பா., கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம், இல. 21, அல்பேர்ட் கிறசென்ட், கொழும்பு-07 என முகவரியிடப்பட்டு நிருவாக கட்டிடம், 2 ஆம் மாடி, பொது நிருவாக கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் (தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.)

07. தாமதமான/ பூர்த்தியாக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

08. விலைமனுக்கள் 2023.08.28 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

09. ஒவ்வொரு விலைமனுவும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தொகைக்கு சமமான தொகையுள்ள விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2023.09.25 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

10. 2023.05.23 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு பல்கலைக்கழக நிருவாக கட்டிடத்தின் 5 ஆம் மாடியின் நலன்புரி சபை அறையில் விலைமனு முன்னோடிக்கூட்டம் நடைபெறும்.

11. திணைக்கள பெறுகைக் குழுவினால் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

12. நாட்டில் தற்போது நிலவும் தொழிலாளர் சட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குனர்கள் அமைந்தொழுகுதல் வேண்டும்.

**பதில் கடமையாற்றும் பதிவாளர்,**
**கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம்,**
**இல. 21, அல்பேர்ட் கிறசென்ட்,**
**கொழும்பு-07.**

# மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை

## துணைவேந்தர் பதவி

## விண்ணப்பங்கள் கோரல்

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பேரவையினால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34 (1) பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தினது ஏற்பாடுகளின் பிரகாரம், துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தர் ஆவார். துணைவேந்தர் அவர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் மற்றும் பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். அவர் பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை ஆகிய இரண்டினதும் பதவிவழி உறுப்பினரும் தலைவரும் ஆவார்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் திருத்தங்களுக்கு அமைய, துணைவேந்தர் குறித்த பதவிக் காலத்திற்கு முன்னதாக அவர் பதவியிலிருந்து வெளியேறாவிடின் அல்லது நீக்கப்படாவிடின், மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது அறுபத்தைந்து வயதைப் பூர்த்தி செய்யும் தினம், இவ் இரண்டில் எது முன்வருகின்றதோ அதுவரை பதவி வகிப்பார்.

துணைவேந்தர் கல்விசார் தலைமைத்துவத்தினை வழங்குதல், முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல் மற்றும் பேரவையின் முடிவுகளை அமுல்படுத்துதல் ஆகியவற்றுடன் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர் என்பதனால் சிறந்த கல்விக் கொள்கை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சனநாயக முகாமைத்துவம், பாரபட்சமற்ற சிறந்த தலைமைத்துவம் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

திருப்திகரமான விண்ணப்பதாரிகள் வலுவான ஆய்வு தோற்றவிவரம், தலைமைத்துவத்தினை நிரூபிக்கும் தகுதிகள், பரந்துபட்ட தொடர்புடையவர்களுடன் சிறந்த தொடர்பாடல் திறன், கொள்கை விடயங்கள் தொடர்பாக சிறந்த தெளிவான புரிந்துணர்வு மற்றும் தீர்மானங்களை செயற்றிறன்மிக்க முறையில் அமுல்படுத்தும் திறமைகளுடன் உயர் கல்விசார் அடைவுகளின் பின்புலத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். அவர் சமூகத்திற்கான பொறுப்புணர்வு உட்பட பல்கலைக்கழகத்தின் செயல்நோக்கு மற்றும் செயற்பணி தொடர்பாக ஆழமான புரிந்துணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும். (விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ளவர்கள் பல்கலைக்கழகத்தினது http:www.uom.lk எனும் வலைத்தளத்தின் ஊடாக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.)

துணைவேந்தர் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் சம்பளத்தைப் பெற உரித்துடையவர் ஆவார் என்பதுடன், அடிப்படைச் சம்பளத்தின் 15% உபசரணைக் கொடுப்பனவாகப் பதவிக்குரிய பிற கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராவார்.

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள 2023.04.10 ஆம் திகதியும் 03/2023 இலக்கமும் கொண்ட ஆணைக்குழு சுற்றறிக்கையை தயவுசெய்து பார்க்குமாறு வேண்டிக்கொள்ளப்படுவதுடன், நியமனம் சார்பான நடைமுறைகளுக்காக https://www.ugc.lk/attachments/2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf எனும் வலைத்தளத்திற்கு பிரவேசிப்பதன் ஊடாக பார்வையிடலாம்.

விண்ணப்பதாரி, இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்ப முடிவு திகதியன்று 63 வயதுக்கு குறைவானவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் எனினும் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாத சமர்ப்பித்தலொன்றை பல்கலைக்கழக பேரவைக்கு வழங்குமாறு வேண்டிக்கொள்ளப்படுவீர்கள்.

1. விண்ணப்பதாரியின் பிறந்த திகதி உள்ளடங்கிய முழுமையான சுயவிபரப்பட்டியல்.
2. அவர் துணைவேந்தர் பதவிக்காக நியமிக்கப்படின் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான நோக்கு பற்றிய கூற்றுடன் விண்ணப்பதாரியால் அடைய முன்மொழியப்படும் குறுகிய விளக்கமொன்றையும் வழங்குதல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி தற்போதைய துணைவேந்தர் எனின் அல்லது முன்னர் துணைவேந்தர் பதவியினை வகித்தவர் எனின், அவரது முன்னைய பதவிக் காலத்தின்போது சாதித்த சாதனைகள் பற்றி குறிப்பிடும் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி அரச பொதுச்சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் ஏதாவதொன்றில் சேவை புரிபவராயின், அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியுமா என்பதனை தெரியப்படுத்தும் தொழில்தருநரின் கடிதம்.

சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் விண்ணப்பங்களை, பதிவாளர், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டுபெத்தை, மொறட்டுவை, 10400 என முகவரியிடப்பட்டு, 2023.06.06 அன்று பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலமாக அனுப்புதல் அல்லது நேரடியாக கையளித்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, மேற்படி ஆவணங்களுடன் ஏனைய ஆதரவளிக்கும் ஆவணங்களினதும் மென் (soft) பிரதியொன்று PDF வடிவத்தில் registrar@uom.lk எனும் மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பமும் ஏனைய ஆவணங்களையும் உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''துணைவேந்தர் பதவி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

**திருமதி கே.சி.எஸ். பெரேரா**
**பதில் பதிவாளரும் பேரவையின் செயலாளரும் மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.**
**2023.05.07**




# மீண்டும் களைகட்டிய 'சம்பத் தரு'

சம்பத் வங்கி ஊழியர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் மாபெரும் அனுபவமான 'சம்பத் தரு' பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) சம்பத் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் நந்தா பெர்னாண்டோ தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சி தொடர்பாக நந்தா பெர்னாண்டோவுடன் நடத்திய கலந்துரையாடலின் சில பகுதிகள் பின்வருமாறு.

**'சம்பத் தரு' நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லுங்கள்?**

2001ஆம் ஆண்டு இந்த பிரம்மாண்டமான நிகழ்ச்சியைத் தொடங்கினோம், நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்த வேண்டும் என்று திட்டமிட்டோம். இருப்பினும், இந்த நிகழ்ச்சியை எங்களால் தொடர்ந்து நடத்த முடிந்தாலும், சமீப காலங்களில் கொவிட்னால் மிகவும் மோசமான காலகட்டத்தை சந்தித்தோம். பொருளாதார நெருக்கடியை அடுத்து மீண்டும் இந்த நிகழ்ச்சியை நடத்தத் தொடங்கியுள்ளோம் இது எங்களின் ஆறாவது நிகழ்ச்சி. இந்த ஆண்டு, 3,000 க்கும் மேற்பட்டவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர், இரண்டு நிகழ்ச்சிகளாக இதை நடத்த வேண்டியிருந்தது, ஒன்று பிற்பகல் 2.00 மணிக்கு மற்றும் மற்றொன்று இரவு 7.00 மணிக்கு, நிகழ்ச்சியின் சிறப்பு அம்சம், நடனம், பாட்டு, இசை, அறிவிப்பு என அனைத்தும் சம்பத் வங்கி ஊழியர்களையும் இணைத்து நடத்தப்பட்டது.

**இதுபோன்ற நிகழ்ச்சியின் மூலம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?**

ஒரு வங்கியாளரின் வாழ்க்கை நிறைய அழுத்தங்களை உள்ளடக்கியது, இதுபோன்ற நிகழ்ச்சி அவர்களின் வாழ்க்கையை எளிதாக்கும், மேலும் அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடனும் மற்றவர்களுடனும் நேரத்தை செலவிட அனுமதிக்கும், மேலும் அவர்களுக்கு மன அமைதியையும், சிறப்பாக செயல்படுவதற்கான உற்சாகத்தையும் அளிக்கும். அவர்களில் பெரும்பாலோர் தங்கள் குழந்தைப் பருவம் மற்றும் பள்ளி நாட்களில் தங்கள் கலைத் திறமைகளை சிறப்பாகக் காண்பித்து வந்திருக்கின்றார்கள், ஆனால் வேலையின் அழுத்தம் காரணமாக வங்கிச் சேவையில் சேர்ந்த பிறகு அவற்றை நிறுத்த வேண்டியிருந்தது . இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் அரங்கேறும்போது, அவர்களின் மறைந்திருக்கும் திறமைகள் வெளிவருவதை நாம் எளிதாகப் பார்க்கலாம். அந்த மகிழ்ச்சியைத்தான் அவர்கள் ஒரு பெரிய மேடையில் தங்கள் பெற்றோர் மற்றும் உறவினர்களுடன் மேடையேற்றுகின்றார்கள். இந்த வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளராக, இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

**இது போன்ற நிகழ்ச்சியால் வங்கி பெறும் நன்மைகள் என்ன?**

இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் ஊழியர்களின் முன்னேற்றத்தையும் நலனையும் எதிர்பார்க்கிறோம். இத்தகைய நிகழ்ச்சிகள் மூலம் திறமைகள் மற்றும் திறன்கள் வெளிப்பட்ட ஊழியர்களின் பங்களிப்பு மற்றும் திறன் அதிகரிப்பதை நாங்கள் கண்டுள்ளோம். மேலும், இது ஒற்றுமையைக் கட்டமைக்கவும், குழுப்பணி செய்யவும், ஊழியர்களிடையே ஒன்றாகப் பணியாற்றுவதில் அனுபவத்தைப் பெறவும், மனநிலையை மேம்படுத்தவும், ஊழியர்களின் மன உறுதியை உயர்த்தவும் உதவுகிறது. ஊழியர்களிடையே சமநிலை இருக்க வேண்டும் என்று சம்பத் வங்கி நம்புகிறது. இந்த வகையான அனுபவம் அத்தகைய நிரூபிக்கக்கூடிய பண்புகளை பராமரிக்க உதவுகிறது. வங்கிகளைப் பற்றிய மக்களின் எண்ணம் கூட மாறத் தொடங்குகிறது, அவர்கள் அதை நேர்மறையாகப் பார்க்கத் தொடங்குகிறார்கள். அத்தகைய சிந்தனை வங்கிக்கு மிகவும் முக்கியமானது. இதன்மூலம் வங்கிகள் மீதான மக்களின் பங்களிப்பு நேர்மறையானதாக மாறும். இது போன்ற செயல்களில் இருந்து எங்கள் ஊழியர்கள் பெறும் அனுபவம் வங்கி வணிகத்திற்கு மிகவும் முக்கியமானது. எங்கள் ஊழியர்களின் கூட்டு முயற்சி பற்றிய செய்திகள் பொது மக்களை சென்றடையும் போது, அத்தகைய நிகழ்ச்சியை அவர்கள் அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கும் போது, வங்கி மற்றும் அதன் ஊழியர்களின் மீதான நம்பிக்கை அதிகரிக்கிறது. வணிக இலக்குகளை அடைய உதவுகிறது.

**இந்நிகழ்ச்சிக்காக கலைஞர்களை எப்படி தேர்ந்தெடுத்தீர்கள்?**

நாங்கள் இதுபற்றிய அறிவிப்பை வெளியிட்டபோது, எங்கள் ஊழியர்களில் ஏறக்குறைய 1.500 பேர் பங்குகொள்ள ஆர்வம் காட்டினர். அவர்கள் சுயாதீனமான நிபுணர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இசை மற்றும் அறிவிப்பு துறையில் சாந்தனி செனவிரத்ன, கௌசல்யா பெர்னாண்டோ மற்றும் சம்பத் ஜயவீர போன்ற பிரபல நடிகர்கள் நாடகக் கலைஞர்கள் நடுவர்களாகவும், பாடல் மற்றும் இசைப் போட்டிகளில் நடுவர்களாக கலாநிதி ரோஹன வீரசிங்க, நவரத்ன கமகே, மஹிந்த பண்டார மற்றும் சுசில் அமரசிங்க ஆகியோரும் இருந்தனர். பிரபல அறிவிப்பாளர்களான அருண் டயஸ் பண்டாரநாயக்க, கெலும் விஜேசூரிய மற்றும் ரஞ்சனி ராஜ்மோகன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் அமைக்கப்பட்டது. பிரபல நடனக் கலைஞர்களான புத்திக ரணவீர, உத்பலா சூரியராச்சி மற்றும் கயான் ருப்பேகொட ஆகியோர் நடனப் பிரிவில் நடுவர்களாக இருந்தனர். சம்பத் வங்கியின் ஊழியர் திலக் அபேசிங்க இந்த நிகழ்ச்சியின் புத்தாக்க இயக்குநராக உதவினார். நல்ல கலைத்திறன் கொண்டவர்.
















# ஷாப்டரின் மரணம்: தொடர்ச்சியாகப் பெறப்படும் DNA மாதிரிகளால் மர்மம் துலங்குமா?



ஜனசக்தி குழுமத்தின் நிறைவேற்று பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணைகள் புதிய திருப்பத்தை நோக்கிச் செல்வதை தற்போது அவதானிக்க முடிகின்றது. அவரது மரணம் தொடர்பில் ஆரம்பம் முதல் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், ஷாப்டர் தற்கொலை செய்து கொண்டதாக பலமாக சந்தேகித்தனர். ஏறக்குறைய நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் கூட அதை நிரூபிக்கக் கூடியவையாகவே இருந்தன. எனினும் தினேஷ் ஷாப்டரின் குடும்பத்தினர் அவரது மரணம் திட்டமிட்ட கொலை என்பதை உறுதியாக நம்பினர். அதன்படியே, இலங்கையின் பிரபல சட்டத்தரணியான அனுஜா பிரேமரத்ன இவ்வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகினர். அதனால்தான் தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்போது புதிய திசையை நோக்கி நகர்கின்றது.

ஷாப்டரின் மரணம் தற்கொலை என குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்த போதும், அதனையும் தாண்டி பல உண்மைகள் வெளிவருவதற்கான சந்தர்ப்பத்தை ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜா பிரேதமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

தினேஷ் ஷாப்டர் டிசம்பர் 15ஆம் திகதி தனது மனைவியுடன் பிரித்தானியா செல்வதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் பொரளை மயானத்தில் காருக்குள் கைகள் பெல்ட்டால் கட்டப்பட்டு கழுத்து வயர் கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராடிக் கொண்டிருந்த அவரை நெருங்கிய நண்பரொருவர் மீட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் அன்றிரவே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு மயானத்தில் பணியாற்றிய இருவர் உதவி செய்திருந்தனர்.

இதனையடுத்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். தினேஷ் ஷாப்டரின் கைகள் கட்டப்பட்டிருந்த பெல்ட், கழுத்திலிருந்த வயர்கள், அவரது காரிலும் வீட்டிலும் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவித்த குற்றப்புலனாய்வு பிரிவினர், அவரது மரணத்தை ஒரு தற்கொலையாக நிரூபிக்கும் வகையிலேயே நீதிமன்றத்தில் சாட்சியங்களை சமர்ப்பித்தனர். அதேபோன்று சட்ட வைத்தியத் திணைக்களத்தினரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் அவரது உடலில் ஒருவித விஷம் கலந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்ட அதேநேரம், தினேஷ் ஷாப்டரின் கையடக்கத் தொலைபேசியின் தரவுகளை பகுப்பாய்வு செய்ததில், இந்த வகை விஷம் தொடர்பான விடயங்களை ஷாப்டர் ஆராய்ந்து பார்த்துள்ளமை தெரியவந்ததாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது. அந்தவகையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தினேஷ் ஷாப்டர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூற முற்பட்டனர்.

எனினும் மாறுப்பட்ட பிரேதப் பரிசோதனை அறிக்கைகள் காரணமாக தினேஷ் ஷாஃப்டரின் மரணத்திற்கான காரணத்தைக் கண்டறியும் வகையில் நீதிமன்றால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவில் பேராசிரியர் அசேல மெண்டிஸ், பேராசிரியர் டி.சி.ஆர். பெரேரா, பேராசிரியர் டி.என்.பி. பெர்னாண்டோ, கலாநிதி சிவசுப்ரமணியம் மற்றும் கலாநிதி ரொஹான் ருவன்புர ஆகியோர் தற்சமயம் இக்குழுவில் செயற்பட்டு வருகின்றனர். அதற்கமைய தினேஷ் ஷாப்டர் தற்கொலைக்கு பயன்படுத்தியதாக கூறப்பட்ட வயர்கள், தண்ணீர் போத்தல், கைகள் கட்டப்பட்டிருந்த பெல்ட் என்பன பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன்போது அதிர்ச்சியளிக்கக்கூடிய வகையில் அவற்றில் இரண்டு DNA மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது தினேஷ் ஷாப்டரின் DNA மாதிரியுடன் பொருந்தவில்லை. அப்படியானால், இந்த இரண்டு மாதிரிகளும் யாருடையவை? என்ற கேள்வி எழுந்தது. அதற்கமைய முதலில் பொரளை மயானத்திலிருந்து தினேஷ் ஷாப்டரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல உதவிய மயானத் தொழிலாளர்கள் இருவரின் DNA மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. எனினும் அவை பொருந்தவில்லை. இதனையடுத்து தினேஷ் ஷாப்டரின் மரணத்திற்கு பிறகு பெரிதும் சந்தேகிக்கப்பட்ட அவரது நெருங்கிய நண்பராகவிருந்த பிரையன் தோமஸ் மீது கவனம் திரும்பியது. எனவே, அவரது DNA மாதிரியை பரிசோதிக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதுதவிர குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைவாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் புலனாய்வு குழுவில் ஈடுபட்டுள்ள ஐந்து அதிகாரிகள் மற்றும் பொரளை பொலிஸ் அதிகாரிகள் இருவரின் DNA மாதிரிகளை பரிசோதிக்கவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இது தவிர, மருத்துவமனையில் தினேஷ் ஷாப்டரை அனுமதித்த நபர் மற்றும் மருத்துவமனையில் தினேஷ் ஷாப்டரின் கைகள் கட்டியிருந்த பெல்ட்டை கழற்றிய ஊழியர் மற்றும் அவரைப் பராமரித்த 10 செவிலியர்கள் ஆகியோரின் DNA மாதிரிகளை பரிசோதிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த முயற்சி தோல்வியுற்றால், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புலனாய்வாளர்கள், தினேஷ் ஷாப்டரின் காருக்கு அருகில் நின்றதாகக் கூறப்படும் நபரை அடையாளம் காண வேண்டும். இதுவரை அந்தத் தரப்பில் விசாரணை நடத்தப்பட்டதா, என்பது தொடர்பில் தகவல்கள் வெளியிடவில்லை. தினேஷ் ஷாப்டர் தனது காரை மயானத்திற்கு தனியாக ஓட்டிச் செல்வதே பாதுகாப்பு கேமராவில் பதிவாகியுள்ளதாக கூறும் குற்றப்புலனாய்வுத் துறை விசாரணை அதிகாரிகள், மயானத்தில் தினேஷ் ஷாப்டரின் கார் அருகே ஒருவர் நிற்பதாகவோ அல்லது அதன் அருகே ஒருவர் நடந்து செல்வதாகவோ கூறவில்லை. எனினும் மயானத் தொழிலாளியான நிலாமிய பொலிஸாரிடம் உயரமான மெல்லிய காற்சட்டையும் மேற்சட்டையும் அணிந்திருந்த நபரொருவர் தினேஷின் கார் அருகே நின்றுகொண்டிருந்ததாகவும் பின்னர் அவர் மயானத்தின் பின்புறமாகவுள்ள சுடுகாட்டை நோக்கி வேகமாக நடந்து செல்வதை அவதானித்ததாகவும் தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமின்றி மீண்டும் ஒருமுறை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமெனவும் கூறியிருந்தார். எனினும் நிலாமிய சொல்லிய விபரங்களின்படி, அந்த நபரின் படம் பொலிஸ் கலைஞரால் கூட இதுவரை வரையப்படவில்லை.

அடுத்தது, தினேஷ் ஷாப்டர் அணிந்திருந்த ஆடையில் படிந்திருந்த சளித்தன்மையுடன் கூடிய வாந்தியை பரிசோதித்த போது, அதில் அதிகளவில் விஷம் கலந்திருப்பதாக நீதிமன்றத்தில் கூறப்பட்டது. அதன்படி, தினேஷ் ஷாப்டரின் உடலில் விஷம் கலந்திருப்பது தெளிவாகியுள்ளது. ஆனால் அவரது உடலில் விஷம் எப்படி புகுந்தது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

தினேஷ் ஷாப்டர் விஷம் அருந்தினாலோ அல்லது சிற்றுண்டி வாங்கி விஷம் கலந்து சாப்பிட்டாலோ அவர் கொண்டு வந்த அந்த உணவுப் பொதியிருந்த பையிலும் அதே வகையான விஷம் இருக்க வேண்டும். இதுவரை, தினேஷ் ஷாப்டரின் காரிலோ அல்லது மயானத்தில் கார் நிறுத்தப்பட்ட இடத்தைச் சுற்றியோ இதுபோன்ற பொதிகள் எதுவும் கிடைக்கவில்லை. அன்றைய தினம், குற்றவியல் ஆய்வக அதிகாரிகள் அந்த இடத்தில் தீவிர சோதனை நடத்தினர்.

அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் எதுவும் இருப்பதாகவும் கூறப்படவில்லை. அதன்படி தினேஷ் ஷாப்டரின் மரணத்தின் மர்மம், அடையாளம் தெரியாத இரு DNA மாதிரிகளை அடையாளம் காண்பதன் மூலம் பெரும்பாலும் தீர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது, அந்த DNA மாதிரிகளுடன் பொருந்தக்கூடிய நபர்களைக் கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வசந்தா அருள்ரட்ணம்





# படித்ததும் பகர்வதும் 141



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

குடும்பமும் குதூகலமும்

ஒவ்வொருவரது வாழ்விலும் மிக முக்கிய அங்கமாக இருப்பது அவரது "குடும்பம்" என்றால் மிகையல்ல. ஒருவரது இன்பம், துன்பம், மகிழ்ச்சி, சோதனை, வேதனை, கஷ்டம், கவலை, வெற்றி, தோல்வி உட்பட சகல சந்தர்ப்பங்களிலும் அவரோடு சேர்ந்திருக்கும் முதல் அங்கத்தவர்கள் குடும்பத்தவர்களே ஆவர்.

இதனால் குடும்ப விடயங்களில் ஒவ்வொருவரும் கூடிய அக்கறையும் கரிசனையும் எடுத்தல் அவசியமாகும். ஒவ்வொருவரதும் அடுத்த நாள் பணிகளுக்கான சக்தியையும், உற்சாகத்தையும், ஆர்வத்தையும் தருகின்ற இடமாகவும் அவரது குடும்பமே திகழ்கிறது. இன்று தனது குடும்பத்தோடு எத்த அளவு மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் இருக்கின்றாரோ அதற்கேற்பவே அவரது அடுத்த நாளுக்கான செயற்பாடுகளுக்குரிய உத்வேகமும், உற்சாகமும் கிடைக்கிறது. இதனை ஒவ்வொருவரும் தமது வாழ்வில் உணர்ந்து அனுபவித்துக் கொண்டே இருக்கின்றனர் என்பதை மறுக்க முடியாது..

தமக்கு எத்தகைய வேலைகள் இருந்தாலும், பொறுப்புகள், கடமைகள் இருந்தாலும், தமது குடும்ப உறுப்பினர்களான மனைவி, பிள்ளைகள், அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள் போன்றவர்களுடன் சேர்ந்திருந்து, பேசி, கலந்துரையாடி மகிழ்ந்திட நேரம் ஒதுக்கிக் கொள்வது ஒவ்வொருவர் மீதுமுள்ள கட்டாயப் பணியாகும். பெரும்பாலானோர் இவ்விடயத்தில் தவறிழைத்து விடுகின்றனர். அல்லது பொறுப்பற்று நடந்து கொள்கின்றனர். அல்லது கவனயீனமாக, உதாசீனமாக நடந்து கொள்கின்றனர் இது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்.

ஒருவர் எத்தகைய உயர் பதவியை வகித்தாலும் அல்லது சாதாரண தொழில் ஒன்றை செய்தாலும்' அவர்கள் அவரவர்களது குடும்பங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகவே இருக்கின்றனர். அவர்களோடு நேரத்தை செலவிட, பேசி மகிழ்ந்திட, கருத்துரைகள் பெற்றுக்கொள்ள, கலந்தாலோசனைகள் செய்ய, குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் பெரிதும் எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றனர். இதனை புரிந்துகொண்டு, அத்தகைய எதிர்பார்ப்புகளை ஏமாற்றங்களாக்கி விடாமல் இயன்ற அளவில் அவற்றைப் பூர்த்தி செய்து அவர்களை மகிழ்விக்க முயலவேண்டும்.

இவற்றை உணர்ந்து, தமது தொழில் சார்ந்த விடயங்களுக்கு, எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ, அதேயளவு, அல்லது அதனையும்விட அதிகமாக, தமது குடும்பத்துக்காக கால நேரத்தை ஒதுக்கிட ஒவ்வொருவரும் முயற்சித்தல் கட்டாயமாகும்.

குடும்பத்துக்கு முக்கியத்துவம் கொடுப்போம்! குதூகலமாய் இருப்போம்!!

## நெஞ்சுக்கு நீதி

குடும்பம் தான் சமூகத்தின் அதிமூல அங்கம்
குதூகலம் அங்குதான் நிச்சயமாய்வெல்லும்
குடும்பத்தில் இருந்தால் மகிழ்ச்சி வெள்ளம்
கரைபுரண்டோடுமே புத்துணர்வும் பிறக்கும்

## நீத்தார் நினைவு

கலைஞர் கே. சந்திரசேகரன்

இலங்கையின் பிரபல நாடக, சினிமா, தொலைக்காட்சி, வானொலி நடிகரும், ஒலிபரப்பாளருமான கலைஞர் கே. சந்திரசேகரன் கடந்த ஏப்ரல் 29ம் திகதி (2023.04.29) தனது 74ஆவது வயதில் காலமானார். உலக அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீதோடு 1960களின் ஆரம்பத்தில் வானொலி நிகழ்சிகளில் பங்குபற்றி, கலைத்துறையில் பிரவேசித்தார். அன்று முதல் இறக்கும் வரை கலைத்துறையில் பல்வேறு துறைகளிலும் பங்களிப்புகளை வழங்கி புகழ் பெற்றார்.

அரச கலாபூஷண விருது உட்பட பல்வேறு உயர் விருதுகளால் கௌரவம் பெற்ற, அகில இலங்கை சமாதான நீதவான் கே. சந்திரசேகரன் எந்தவித பந்தாவும் இல்லாமல் எல்லோரோடும் நட்போடு பழகியவர். 1980களின் இறுதிப் பகுதியில் கலைஞர்கள் பீ.எச். அப்துல் ஹமீத், 'மரிக்கார்' எஸ். ராம்தாஸ், 'உபாலி' செல்வசேகரன் ஆகியோர் பங்கு பற்றிய வானொலி விளம்பரமொன்றின் ஒலிப்பதிவுக்காக நான் இலங்கை வானொலிக்கு சென்ற போதுதான் முதன் முதலாக கே. சந்திரசேகரனை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்து வானொலி நிகழ்சிகளுக்கு நான் செல்லும் போதும், மற்றும் பொது நிகழ்வுகளின் போதும் சந்தித்து உரையாடி நட்போடு தொடர்பிலிருந்தமை பசுமையான நிகழ்வுகளாகும்.



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான "பாரம்பரியம்" நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றி முஸ்லிம் வானொலி கலைஞர்கள் பற்றியும், முஸ்லிம் சேவை நிருவாகிகள் பற்றியும் மிகத் தெளிவான, விளக்கமான விடயங்களை இவர் தெரிவித்தமை, முஸ்லிம் கலைஞர்களோடு இவருக்கிருந்த நெருங்கிய தொடர்பையும் அவர்களைப் பற்றி இவர் நன்கு அறிந்து வைத்திருந்தமையையும் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டியது.

இலங்கையின் மிகப் பிரபலமான ஒரு கலைஞராக இவர் திகழ்ந்த போதிலும் இணையத்தில் இவரைப்பற்றிய சரியான, விளக்கமான போதிய தகவல்கள் இடம் பெறாதிருப்பது கவலைக்குரியது அவற்றை கூடிய விரைவில் இணையத்தில் இணைப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கலைஞர் கே. சந்திரசேகரனின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்கள், நண்பர்கள், கலைஞர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

## புது வரவு

எஸ். பொன்னுத்துரை – முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்

மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் ஏ. பீர் முகம்மது எழுதி, 'பேஜஸ் புத்தக இல்லம்' வெளியிட்டுள்ள நூல் "எஸ். பொன்னுத்துரை, முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்",

"எஸ். பொன்னுத்துரை என்ற கியாதி பெற்ற ஒரு எழுத்தாளனின் வாழ்வியலில் பேசப்படாத பக்கமொன்றை வெளிச்சம் போட்டுக் காட்டும் எத்தனமே இந்நூல். எல்லோரும் கண்ட அவரின் எழுத்து வல்லபங்களுக்கு அப்பால் இது வேறுபட்ட முயற்சி.



மேலும் சென்ற நூற்றாண்டின் அறுபது எழுபதுகளில் எஸ். பொ வின் பிரமாண்டத்தை இல்லாதொழித்து விட அக்கால "இலக்கிய சமாஜம்" முயன்றது. எஸ். பொவுக்கு ஒத்தாசை வழங்கிய ஒரே காரணத்துக்காக எம். ஏ. ரஹ்மானின் இலக்கிய முன்னெடுப்புகளும் இளம்பிறை சஞ்சிகையின் சடைத்தெழுந்த பங்களிப்பும் அந்த சமாஜத்தால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டன. அதனை இந்நூல் அத்தாட்சிப்படுத்துகின்றது. அத்தகைய புறக்கணிப்புகளுக்கான நிவாரணம் என்ன? புதிதான கருத்துகள் எழுதிப் பீய்ச்சி எழுந்து வர வேண்டும் என்பது எதிர்பார்ப்பு."

இவ்வாறு, இந்நூல் எழுதப்பட்டதற்கான தனது நோக்கத்தினை தெளிவுபடுத்தியுள்ளார் நூலாசிரியர் ஏ. பீர் முஹம்மது. பிறப்பும் திறப்பும், வழியும் மொழியும், பறப்பும் கறுப்பும், களிப்பும் கழிப்பும், கட்சியும் காட்சியும், உறைப்பும் முடிப்பும் போன்ற அழகிய 17 தலைப்புகளில் 'எஸ். பொ.' பற்றிய இந்நூல் அமைந்துள்ளது.

"எஸ். பொன்னுத்துரையின் எழுத்துக்களில் ஈடுபாடுள்ள, இரு சமூகங்களுக்கிடையிலான நல்லுறவில் அக்கறையுள்ள அனைவரும் இந்நூலினை வரவேற்று மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை." என்று பேராசிரியர் எஸ். யோகராசா குறிப்பிட்டுள்ளார்.

"எஸ். பொ வுக்கும் இளம்பிறை ரஹ்மானுக்கும் இடையில் மலர்ந்த இலக்கிய உறவு சிலாகித்துச் சொல்லத்தக்கது. அந்த உறவு இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இன்னொரு வகையான தடத்தைப் பதித்தது.

இப்படிப்பட்ட ஒரு இலக்கிய ஆளுமைக்கும் முஸ்லிம் சமூகத்தின் எழுத்தாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான நட்புறவின் வெவ்வேறு பரிமாணங்களை இந்த நூல் மிகச் சிறப்பாக முன்வைக்கிறது." என்று பேஜஸ் புத்தக இல்ல நிறைவேற்றுப் பணிப்பாளர், சிராஜ் மஷ்ஹூர், இந்நூல் பற்றி பதிவு செய்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லுறவின் அக்கறையோடு, 'எஸ். பொ.' வை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்க்கும் நூல் இது எனலாம்.

நூல்: எஸ். பொன்னுத்துரை முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும், ஆசிரியர்: கலாபூஷணம் ஏ. பீர் முகம்மது, பக்கங்கள்: 137, விலை: ரூபா. 350/=, வெளியீடு: பேஜஸ் புத்தக இல்லம். தொடர்புகளுக்கு: 0767498887

## வாசித்ததில் வசீகரித்தது

"டால்பின்"

"டால்பின்" என்றதும் அது நீருக்கு மேல் துள்ளி பந்து விளையாடும் காட்சி தான் நினைவுக்கு வரும். டொல்பின்" அதிசயமான, அதி புத்திசாலித்தனமான ஒரு விலங்காகும். இதன் மூக்கில் மூடி போன்ற அமைப்பு உள்ளது. இதை பயன்படுத்தி கடலினுள் நீருக்கடியில் இருக்கும் போதும், நீர் மட்டத்திற்கு மேல் இருக்கும் போதும் இடத்திற்கு தக்கவாறு மாறிக்கொள்கிறது.

ஏழு கிலோ எடையுள்ள மூளையைப் பெற்ற டொல்பின் மனிதன் பழக்கும் படி பழகக்கூடியது. பந்து விளையாட, தாவிக் குதிக்க, தீ வளையத்தில் புகுந்து விளையாட என இப்படிப் பல.

அவுஸ்திரேலியக் கடற்கரையில் ஒரு பெண் டொல்பின் அங்கு வரக்கூடிய சிறுவர்களிடமும் மற்றவர்களிடமும் நட்புக் கொண்டது. அவர்கள் அதன் பெயரை சொல்லி அழைத்தால் ஓடி வந்து விளையாடியது. அவர்களை ஏற்றிச் செல்லும் படகாகக் கூட மாறியது.

"டஃபி" என்ற ஒரு டொல்பினை கடலியல் நிபுணர்கள் தங்களின் கடலடி ஆய்வின் போது தபால்காரராக பயன்படுத்தியுள்ளனர். அதனுடைய திறமையான செயலாற்றும் திறன் வியப்பில் ஆழ்த்தியது.



அமெரிக்காவின் சில கடலடித்தலங்களைப் பாதுகாக்கும் பாதுகாவாலர்களாகவும் சில டொல்பின்கள் பொறுப்பேற்றுக் கொண்டன. பாதுகாவல் புரிந்த டொல்பின் ஒன்று ஆபத்தில் சிக்கி அபாயக் குரல் எழுப்ப மற்ற டொல்பின்கள் உடனடியாக வந்து காப்பாற்றி அழைத்துச் சென்றன.

இவ்வாறு டொல்பின்களின் ஆற்றல்கள் அளப்பரியன அதிசயிக்க வைப்பன. சிந்தனையை தூண்டி, "எந்த உயிரினத்தையும் இறைவன் வீணாகப் படைத்திடவில்லை" என்ற அல்குர்ஆனின் வரிகளை வலுப்படுத்துகின்றன.

பேராசிரியை ஆனந்தவல்லி மதுரை வானொலியில், "விநோத விலங்குகள்" எனும் தலைப்பில் ஆற்றிய உரையிலிருந்து 'சமரசம்' சஞ்சிகை பதிவு செய்ததை அனுப்பியவர், ஹெம்மாத்தகம 'அபூ முஜாஹித்'.

## நலமே வாழ்வோம்

"சுவையூட்டிகள்"!?!?

சில 'சுவையூட்டிகள்' என்பது ஒரு முறை உண்டால், மீண்டும் மீண்டும் சுவைக்க தூண்டும் போதை பொருள் போன்றவை. இன்றைய அவசர உலகில் சமையலில் இதனை பயன்படுத்தாத நாடுகளே இல்லை எனலாம். நாம் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் இது நாவை அடிமைப்படுத்தும் ஒன்றாக இருக்கிறது,



சிப்ஸ், கிரீம் பிஸ்கட், சாதாரண பிஸ்கட், நூடுல்ஸ், இன்ஸ்டன்ட் சூப், மசாலா ஐட்டங்கள், டின்னில் வரும் மீன், சிக்கன், ரெடிமேட் சப்பாத்தி, பரோட்டா, சமோசா, பப்ஸ், சாஸ் வகைகள், சோயா பொருட்கள், சாக்லேட்கள், மற்றும் சில குளிர்பானங்கள் என பலவற்றிலும் தடைசெய்யப்பட்ட சுவையூட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

'தடைசெய்யப்பட்ட சுவையூட்டிகளை' உண்பதால் வரும் பக்க விளைவுகள் மிக மோசமானவை என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் பாவனை, ஆணோ பெண்ணோ இருபாலருக்கும் தலைமயிரை உதிரச் செய்கிறது.

இரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகப்படுத்துவதால், அதிகமான பசி எடுக்கிறது. இதனால் உணவை அடிக்கடி உண்பதால் ஊளைச்சதை போடுகிறது, உடல் எடை கூடினால், நீரிழிவு நோயும் இதய நோயும் வரும் வாய்ப்புகள் அதிகம்.

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு, அஜினோமோட்டோ கொடிய விஷம் போன்றது. ஐந்து வயது குழந்தைக்கும் தீராத தலைவலியை உருவாக்கும் தன்மை கொண்டது.

நரம்பு மண்டலத்தில் அதீத உற்சாகத்தை உருவாக்கி, பிறகு பயங்கரமான பலவீனத்தை உண்டாக்கி விடும்.

இதனை தொடச்சியாகப் பாவிப்போரில் சிலர், முகத்தில் ஒருவித எரிச்சல் இருப்பது போல உணருவார்கள், அரிப்பும் தோன்றும், சிலரது முகம் கறுத்திருக்கும்.

வழக்கமாக இரத்த கொதிப்பு, தைராய்டு, நீரிழிவு, ஆஸ்துமா, உணவு ஒவ்வாமை, அதீத வியர்வை, நீர்ச்சத்து குறைதல், கண்களில் ரெட்டினா குறைபாடு என்பன உருவாகவும் இது காரணியாக கூறப்படுகிறது. இவை போன்ற இன்னும் பல பக்க விளைவுகளும் தெரிவிக்கப்படுகின்றன.

இவற்றைத் தவிர்ப்பது உடல் நலனுக்கு சிறந்தது எனலாம்..

# போலி ஆவணங்கள் ஊடாக பாடசாலைக்கு ஆட்சேர்ப்பு

கண்டியிலுள்ள பெண்கள் பாடசாலையொன்றுக்கு கல்வி அமைச்சிலுள்ள உயரதிகாரியொருவரின் கையொப்பத்தையும் கடிதத் தலைப்பையும் பயன்படுத்தி தவறான போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 17 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு போலி ஆவணங்களை தயார் செய்து வகுப்புகளுக்கு மாணவர்களை உள்வாங்கப் பட்டுள்ளமை தொடர்பாக கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட இலக்கம் (ii) கொண்ட 27.03.2023 திகதியிடப்பட்ட அறிக்கையின் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2018 தொடக்கம் 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பாடசாலையில் 2,3,4,7,8 மற்றும் 9ஆம் வகுப்புகளுக்கு மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதோடு, இதற்காக வழங்கப்பட்டுள்ள அனைத்து கடிதங்களும் நேரடியாக அதிபருக்கு வழங்கப்பட்டிருக்கின்றமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேரடியாக பாடசாலையின் அதிபருக்கு இந்த கடிதங்கள் எவ்வாறு கிடைக்கப்பெற்றன என்பது தொடர்பாக ஏற்பட்ட சந்தேகத்தின் பேரிலும், பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையிலுமே கல்வி அமைச்சுக்கு இது தொடர்பாக பாரிய சங்தேகம் ஏற்பட்டதாக கல்வி அமைச்சின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் குறிப்பிடுகின்றார்.

மேலும் பாடசாலைக்கு மாணவர்களை உள்வாங்குவது தொடர்பாக பல நடைமுறைகள் இருக்கின்றன. அந்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டியது பாடசாலை அதிபருடைய பொறுப்பாகும். பாடசாலை அதிபர்களுக்கு சுற்று நிருபம் மூலமாக இந்த அனைத்து விடயங்களும் தெளிவாக குறிப்பிடப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


ஆனால் இந்த விடயங்கள் அனைத்தும் 2018 முதல் 2021ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இடம்பெற்றிருப்பதால் கொரோனா காலத்தை சரியாக திட்டமிட்ட அடிப்படையில் பயன்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தையும் தமக்கு ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்த பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். அதேநேரம் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் கையொப்பத்தை போலியாக பயன்படுத்தி போலியான ஆவணங்களை தயார் செய்து கையொப்பமிட்டு நேரடியாக அதிபருக்கு அந்த கடிதங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக பாடசாலையின் அதிபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை மேற்கொள்ள வேண்டுமென மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்.

இதேநேரம் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ள 27.03.2023 திகதியிடப்பட்ட கடிதத்தில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனது போலியான கடிதத் தலைப்பையும், முத்திரையையும் கையொப்பத்தையும் பயன்படுத்தி கடிதங்கள் தயாரிக்கப்பட்டு கண்டியிலுள்ள பெண்கள் பாடசாலை ஒன்றுக்கு மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை தொடர்பாக உரிய விசாரணை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'எனது பெயரையும் கையெழுத்தையும் கடிதங்களையும் பயன்படுத்தி மாணவர்கள் உள்வாங்கப்பட்டிருப்பது தவறான விடயம் என்றும் தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாடசாலைக்கு மாணவர்களை உள்வாங்குவது தொடர்பாக கடிதங்கள் வழங்கவில்லை என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இது எனது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியிருப்பதோடு இது தொடர்பாக விரிவான ஆய்வொன்றை மேற்கொண்டு உண்மை நிலைமையை வெளிக்கொண்டு வர வேண்டும்' என்றும் கோரியுள்ளர்.



போலியான கையெழுத்தையும் போலியான ஆவணங்களையும் பயன்படுத்தி குறித்த பாடசாலைக்கு உள்வாங்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் விபரக் கோவையின் அடிப்படையிலும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரின் முறைப்பாட்டின் அடிப்படையிலும் விரிவான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். எனினும் அவர்கள் விசாரணை விபரங்களை வெளியிட முடியாது என்றும் கூறியுள்ளனர்.

இதேநேரம் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தை மீறிய வகையில் 180 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ள விடயமும் தொடர்ச்சியான கணக்காய்வின் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணையொன்றை முன்னெடுக்கும் முகமாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் ஊடாக ஐவர் கொண்ட விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வு பிரிவைச் சேர்ந்த இருவரும் மற்றும் மத்திய மாகாண சபை கணக்காய்வு பிரிவு அதிகாரிகள் இருவரும் ஒரு மேலதிக அதிகாரியுமாக ஐவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அறிக்கையும் விரைவில் கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட மாகாண கல்வி அமைச்சிற்கும் அனுப்பப்படவுள்ளது.

இதேநேரம், தற்போதைய கணக்காய்வு அறிக்கையில் வெளிக்கொண்டுவரப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட விடயங்களாக,

**1.** கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் குறித்த பாடசாலை அதிபருக்கு நேரடியாக அனுப்பி வைத்துள்ள கடிதங்கள் காரணமாக வகுப்புகளுக்கு மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதோடு கண்டி முன்னாள் மாகாண கல்வி பணிப்பாளர் குறித்த கடிதங்களை அங்கீகரித்துள்ளார்.

**2.** தன்னால் தனது கையொப்பத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள கடிதங்கள் அனைத்தும் போலியானவை என்பதை கணக்காய்வின் பொழுது இந்த கடிதத்தில் கையொப்பம் பெற்றுள்ளதாக கூறப்படுகின்ற ஏமந்த பிரேமத்திலக்க மறுப்பு தெரிவித்துள்ளதோடு தான் இவ்வாறான கடிதங்களை எந்த காரணம் கொண்டும் வழங்கவில்லை என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார். தான் குறித்த விடயங்கள் தொடர்பாக ஏற்கனவே மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**3.** எழுந்த மானமாக உள்வாங்கப்பட்ட மாணவர்களின் தகவல்களை ஆராய்ந்து பார்த்த பொழுது வழங்கப்பட்டுள்ள கடிதங்கள் போலியானவை என்பது விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**4.** முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும் போலியானது என அவரது கையெழுத்தை ஆய்வு செய்த கணக்காய்வு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

**5.** இவ்வாறு போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 2018 முதல் 2021 வரை 17 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

**6.** போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக உரிய அதிகாரிகளை இனம் கண்டு அவர்களுக்கு எதிராக முறையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் விசாரணைக் குழு பரிந்துரை செய்கிறது.

**7.** அதேநேரம் இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையை தேசிய கணக்காய்வு திணைக்களம் முன்வைப்பதுடன் விசாரணைகள் தொடர்ந்தும் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் பாடசாலையின் அதிபர் தொடர்ந்தும் இந்த பாடசாலையில் கடமையாற்றுகின்றமையானது பல தகவல்களை மறைப்பதற்கும் அவற்றை இல்லாமல் செய்வதற்குமான சந்தர்ப்பங்களை அதிகரிக்கும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**8.** மேலும் 180 மாணவர்கள் சுற்று நிருபத்திற்கு புறம்பாக உள்வாங்கப்பட்டுள்ளமை தொடர்பாக உடனடியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அந்த கோப்புகளிலும் பல பிழையான தகவல்கள் இருப்பதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாகவும் கணக்காய்வு அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பரிந்துரைகள் வழங்கப்பட்ட போதிலும் குறித்த அதிபரே தொடர்ந்தும் அதிபராக செயற்பட்டு வருகின்றமை தொடர்பாக பல தரப்பினரும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். பாடசாலைக்கு மாணவர்களை உள்வாங்குவது தொடர்பாக பல முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக தொடர்ந்தும் குற்றம்சாட்டப்படுகின்ற போதும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு யாரும் இதுவரையில் தண்டிக்கப்பட்டதாக எந்தவிதமான தகவலும் இல்லை என்று பாதிக்கப்பட்ட பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகவே பாதிக்கப்பட்ட தமக்கு நீதியைப் பெற்றுத் தருவதற்காக இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சு மாகாண கல்வி அமைச்சு என்பன முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியல்வாதிகளின் சொத்துக்களில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வரும் நிலையில் அரச அதிகாரிகளின் சொத்துக்கள் தொடர்பிலும் வெளிப்படைத்தன்மையை பின்பற்றுவதற்கான பொறிமுறையொன்று அவசியமாகின்றது என்றும் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அவ்வாறாக வெளிப்படைத்தன்மை காணப்பட்டால் இஞ்சம், ஊழல்,மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகளை எடுக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

நுவரெலியா நிருபர் எஸ்.தியாகு

# சிறுவர் உலகம்

சுகந்தி




**உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.**

***தெளிவுரை :***

*அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.*

## வெள்ளிக்கிண்ணம் புகட்டிய பாடம்



ஓர் ஊரில் தனவந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு ஆசை, துறவி ஒருவருக்கு வயிறார உணவு வழங்கி அவரை மகிழ்வித்து, அவரின் நல்லாசியை பெற வேண்டும் என்பதாகும்.

ஒரு நாள் அந்த தனவந்தர், உண்மையான இறை பக்தி கொண்ட துறவி ஒருவரை தேடி பல இடங்களுக்குச் சென்றார். இறுதியாக ஊரின் எல்லையில் உள்ள ஒரு சத்திரத்தில் துறவி ஒருவர் இருப்பதாக கேள்விப்பட்டு அங்கு சென்றார். சிறிது நேரம் மறைந்திருந்து அந்த துறவியின் செயற்பாடுகளை அவதானித்தார். தனவந்தருக்கு அந்த துறவியின் மேல் பக்தியும், மரியாதையும் ஏற்பட்டது.

தனவந்தர், துறவியை அணுகி, அவரை வணங்கி தனது விருப்பத்தை தெரிவித்தார். பிறர் மனதை என்றும் வருத்தாத துறவி தனவந்தரின் அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

குறிப்பிட்ட நாளில் அவரும் தனவந்தரின் வீட்டை அடைந்தார். பக்தியுடனும் மரியாதையுடனும் வரவேற்கப்பட்டார். சிறிது நேரம் துறவி அங்கிருந்த எல்லோருக்கும் நற்போதனை வழங்கினார். பின்னர் உணவு பரிமாறப்பட்டது.

விலை உயர்ந்த வெள்ளிக் கிண்ணம், வெள்ளித் தட்டுக்களில் பல்சுவை உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. தனவந்தரின் அன்புத் தொல்லையின் காரணமாக துறவி எல்லா உணவுகளையும் சுவைத்துண்டார். சிறிது ஓய்வின் பின் துறவி தனவந்தரின் குடும்பத்திற்காக பிரார்த்தனை செய்து விட்டு விடை பெற்றுச் சென்றார்.

அன் றி ர வு து ற வி தூங்குவதற்காக ஆயத்தமானார். தனது துணிப்பையில் ஏதோ பொருளொன்றை எடுக்க கையை விட்டார். என்ன ஆச்சரியம்! தனவந்தரின் வீட்டிலிருந்த வெள்ளிக் கிண்ணமொன்று அதற்குள் இருந்தது.

துறவி உடனடியாக கிண்ணத்தை எடுத்துக் கொண்டு தனவந்தரின் வீட்டிற்குச் சென்றார். நடந்தவற்றைக் கூறி வெள்ளிக் கிண்ணத்தை கொடுத்தார். தனவந்தரும் துறவிக்கு மிகுந்த நன்றி கூறினார்.

துறவி தனவந்தரைப் பார்த்து 'உங்களுக்கு இந்த பணம், சொத்து, செல்வங்கள் எல்லாம் எப்படி கிடைத்தது?' என்று கேட்டார். தனவந்தரும் துறவியிடம் உண்மையைக் கூற தயங்கவில்லை.

"சுமார் பத்து வருடங்களுக்கு முன் ஒருவரின் பணத்தை திருட வேண்டி ஏற்பட்டது. அந்த பணத்தில் நான் பல வியாபாரங்கள் செய்தே இந்த சொத்துக்களை சேர்த்தேன்" என்றார். அதனைக் கேட்ட துறவி மௌனமாக அவ்விடத்தை விட்டு அகன்றார். "ஒரு திருடனின் வீட்டில் உணவு உண்டதாலே எனக்கும் அதன் பிரதிபலிப்பைக் காட்டி விட்டதே" என மனம் நொந்தார்.

திருட்டு ஒரு பாவமான செயலாகும். அதனால் சிறுவயதில் இருந்தே இதற்கு பழக்கப்படாது, திருட்டை ஒழித்து, அதிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வோமாக.

என். மொஹமட் லாபீர்,
பதுளை... ✍

## இவ்வார மழலை



Kimatra

தினேஷ்/ அபிராமி
நீர்க

## சிறுவர்களுக்கான மூன்று நூல்கள் வெளியீடு

இலங்கையில் சிறுவர் இலக்கியம், சிறுவர் நூல்களுக்கான பஞ்சம் நிலவுவது என்னவோ உண்மை தான். எம்மவரின் சிறுவர் இலக்கியங்களுக்கு கைகொடுத்து தூக்கிவிடும் சந்தர்ப்பங்கள் குறைவென்றாலும் ஞானம் பதிப்பகம் இந்த இக்கட்டான நிலையில் மூன்று புத்தகங்களை வெளியிட்டுள்ள நிகழ்வு பாராட்டுக்குரியது.

இவ் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் (29) சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. இதில் பத்மா இளங்கோவனினால் 'சிறுவர் தமிழ் அமுதம்', 'சிறுவர் இலக்கிய நுட்பங்கள்', 'கொரோனாவின் தடங்களில்' ஆகிய மூன்று நூல்களே வெளியிட்டு வைக்கப்பட்டன.

கொரோனா தாக்கத்தின் பின்னர் சிறுவர்களுக்கு தவிர்க்கப்பட்ட கையடக்க தொலைபேசி அவர்களின் கல்வி தேவைகளுக்கு கட்டாய பொருளாகி விட்டதில் வாசிப்பின் நோக்கம் மங்க தொடங்கி புத்தகங்களின் தேவையும் படிப்படியாக குறைவடைந்து செல்லும் சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகையால், வாசிப்பின் நன்மையை சிறுவர்களுக்கு ஊட்டும் ஒரு நன்முயற்சியை எடுத்த பத்மா இளங்கோவன் ஒரு அடி மேலே நிற்கிறார். இன்றைய பொருளாதார நெருக்கடியில் புத்தகங்களை வாங்கி படிப்பது சாத்தியப்படாத காரியம் என்பது அறிந்த விடயமானாலும் 'அறிவீர் அறியப்படுவீர்' அதனால் அறிவு தேடலுக்கான செலவு மூலதனமாகும்.

பெற்றோர்களே, பிள்ளைகளின் அறிவு தேடலுக்காக நீங்கள் செலவழிப்பதை மூலதனமாக கருதினால், உங்கள் பிள்ளைகளுக்கு புத்தகங்களை வாங்கி கொடுத்து சிறந்த சிந்தனைகளை உருவாக்கும் தலைமுறைகளை வழிப்படுத்துவோம்.



ஸ்ரீ... ✍

## நில நடுக்கம்

*நில நடுக்கம் என்பது பூமிக்கடியில் அழுத்தம் அதிகமாகி அதனால் சக்தி வெளியேற்றப்பட்டு, புவித்தட்டுகள் (Tectonic plates) நகர்வதனால் இடம்பெறும் அதிர்வை குறிப்பதே நிலநடுக்கமாகும். இந்த அதிர்வு நிலநடுக்கமானியினால் (Seismometer) ரிக்டர் அளவை மூலம் அளக்கப்படுகிறது. 3 ரிக்டருக்கும் குறைவான நிலநடுக்கங்களை உணர்வது கடினமாகும். அதேவேளை, 7 ரிக்டருக்கும் கூடுதலான அதிர்வுகள் பலத்த சேதத்தை ஏற்படுத்த வல்லன. நீருக்கடியில் நிலநடுக்கம் ஏற்படும் போது பெரும் அலைகளை உருவாக்கி சுனாமியாக உருவெடுக்கிறது.*



## சிறகடிக்கும் சிட்டுக்கள்....!



சின்னஞ் சிறிய சிட்டுகள் நாம்.
சிறகடிக்கும் சிட்டுக்கள் நாம்
எண்ணத்திலே களங்கமில்லை
இனமத பேதம் எமக்கு இல்லை.
(சின்னஞ்....)

பூவாய் சிரிப்போம் நாமழகாய்
புன்ன கையாலே நாமிணைவோம்
அன்பே எங்கள் மொழியாகும்
அகிலமெல்லாம் நமதாகும்.
( சின்னஞ்....)

கல்வியோடு கலை பலவும்
கற்றுத் தேறி நாமு யாவோம்
சொல்லும் செயலும் ஒன்றெனவே
என்றும் வாழ்வோம் இவ்வுலகில்.
(சின்னஞ்....)

பள்ளிக் காலம் சில நாளில்
பறந்தே ஓடி ஒழிந்து விடும்
இளமைக் கல்வி சிலையெழுத்து –அதை
எண்ணிக் கல்வி நாம் பயில்வோம்.
(சின்னஞ்....)

ஷெல்லிதாசன்,
திருகோணமலை... ✍

## வினோத வரலாறு

*ஹேலி, 75 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும் வால் நட்சத்திரம் ஆகும். 1935 நவம்பர் 30ஆம் திகதி*



*அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்வெய்ன் பிறந்த அன்று வானில் ஹேலி நட்சத்திரம் தோன்றியது. பிறகு மார்க் ட்வெய்ன் எழுத்தாளர் ஆனபின் "அடுத்த முறை ஹேலி வால்நட்சத்திரம் வரும்போது நான் சென்றுவிட வேண்டும்" என எழுதினார். அவர் கூறியது போலவே 75 ஆண்டுகளுக்கு பிறகு 1910 ஏப்ரல் 21ஆம் திகதி மீண்டும் ஹேலி தோன்றியபோது ட்வெய்ன் காலமானார்.*

## வாரம் ஒரு பெரியார்

## ஒலிபரப்புக்கலை ஆசான் சோ. சிவபாதசுந்தரம்



*யாழ்ப்பாண மாவட்டம், ஊர்காவற்றுறையில் கரம்பொன் என்ற கிராமத்தில் சோமு உடையார் பேரன் என்றழைக்கப்பட்ட சோமசுந்தரம்பிள்ளை என்பவருக்கு, 1912ஆம் ஆண்டில் பிறந்தவர் சிவபாதசுந்தரம்.*

*யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்ற இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். ஆங்கிலம், தமிழ் மற்றும் சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் நல்ல தேர்ச்சி பெற்ற இவர் கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டமும் படித்தார்.*

*1930களில் குரும்பசிட்டி பொன்னையாவால் ஆரம்பிக்கப்பட்ட ஈழகேசரி பத்திரிகையில் ஆசிரியரானார். ஐந்தாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் 1941ஆம் ஆண்டளவில் கொழும்பு வானொலியில் பணியில் சேர்ந்தார்.*

*1941ஆம் ஆண்டு லண்டன் பிபிசி நிறுவனத்தில் தமிழ் ஒலிபரப்பு தொடங்கப்பட்டது. இலங்கை கடிதம் என்ற பெயரில் ஒலிபரப்பான அந்த நிகழ்ச்சியை வழங்கியவர் தம்பு என்பவராவர். இலங்கையரான இவர் இந்திய சிவில் சர்விஸ் சேவையில் சென்னையில் கலெக்டராக பணியாற்றியவர். இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் ஒலிபரப்பை விரிவுபடுத்தும் நோக்குடன் பிபிசி நிறுவனம் சிவபாதசுந்தரத்தை அழைத்தது. 1947 செப்டெம்பரில் இவர் அங்கு சென்று பணியில் சேர்ந்தார். 1948இல் தமிழ் ஒலிபரப்பை ஒரு சஞ்சிகை நிகழ்ச்சியாக நடத்த முடிவு செய்யப்பட்டது. லண்டனில் இலங்கை தூதரகத்திலிருந்த குமாரசுவாமி, இந்திய தூதரகத்திலிருந்த பார்த்தசாரதி ஆகியோருடன் ஆலோசனை நடத்தி சஞ்சிகை நிகழ்ச்சியாக விரிவுபடுத்தப்பட்டது. அப்போது (1948இல்) பாரதியாரின் "தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாடலை வைத்து தமிழ் ஒலிபரப்புக்கு தமிழோசை என பெயர் சூட்டினார்.*

***ஒலிபரப்புக் கலை நூல்***

*பிபிசி தமிழோசை எனப் பெயரிட்டு தமிழ் நிகழ்ச்சியை பிபிசியில் ஆரம்பித்தவர்களில் இவரும் ஒருவர். பிபிசியில் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு "ஒலிபரப்புக் கலை" என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூல் அமுத நிலையத்தாரால் 1954ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலிற்கு ராஜாஜி ஆசியுரை எழுதியிருந்தார்.*

*சென்னை வானொலி நிலையம், காமராஜர், அண்ணாதுரை போன்ற பிரமுகர்கள் காலமானபோது இறுதி ஊர்வலத்தின் நேர்முக வர்ணனையாளராக சிவபாதசுந்தரத்தை அழைத்திருந்தது. சிட்டி பெ.கோ சுந்தரராஜனும் சிவபாதசுந்தரமும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தொடர் உரையாற்றலுக்கு அழைக்கப்பட்டனர். இவ்விருவரும் அண்ணாமலை, பாண்டிச்சேரி சென்னைப் பல்கலைக்கழகங்களில் வருகை தரும் பேராசிரியர்களாகவும் பணியாற்றினர்.*

***சமூகப் பணிகள்***

*சிவபாதசுந்தரம், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்து செயல்பட்டார். சென்னையில் 1959ஆம் ஆண்டில் நடந்த அனைத்திந்திய எழுத்தாளர் மகாநாட்டின் அமைப்பாளர்களில் ஒருவராகவும் பணியாற்றினார். 1972இல் ராஜமய்யரின் நூற்றாண்டு விழாக் குழுவின் பொருளாளராகவும் பணியாற்றியிருந்தார்.*

***இவரது நூல்கள்***

*மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் (1947)*
*ஒலிபரப்புக்கலை (1954)*
*கௌதமபுத்தர் அடிச்சுவட்டில் (1960)*
*தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் (1977)*
*சேக்கிழார் அடிச்சுவட்டில் (1978)*

***மறைவு***

*சிவபாதசுந்தரம் 2000ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி லண்டனில் காலமானார்.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 61

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | 05 |
| | 06 | 07 | 08 | | 09 |
| 10 | | 11 | | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | | 18 |
| | | 19 | | 20 | |
| 21 | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) புவியைச் சூழ குறிப்பிட்டதொரு உயரம் வரை பரந்திருப்பது இது. கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் திணிவும், இடத்தை அடைக்கும் இயல்பும் கொண்ட சடப்பொருள். மெதுவாக அசைந்தால் காற்று, ஆக்ரோஷமாக அசைந்தால் அனர்த்தம்.

(3) இரவில் உணவு தேடும் பறவை. இதன் அலகும் கண்களும் அச்சம் தருபவை. இப்பறவை இரவு வேளையில் எங்காவது மரத்தில் அமர்ந்தவாறு ஒலி எழுப்பி (அலறும்) கொண்டேயிருக்கும்.

(6) உள்ளதை உள்ளபடி உரைப்பதை இவ்வாறு கூறலாம். காந்தி மகான் தனது வாழ்வில் கடைப்பிடித்த சத்தியம்.

(12) பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற வியாபார நிலையம். (தலைகீழான சொல்)

(14) மா, பலா, வாழை ஆகிய பழங்களைக் குறிக்கும் பொதுச்சொல். (தலைகீழான சொல்)

(21) தேநீருக்கும் உணவுப் பொருட்களுக்கும் சுவையும் மணமும் தருவது இது. தாவரமொன்றின் வேர்த்தண்டுக் கிழங்குப் பகுதி. (தலைகீழான சொல்)

(24) மரங்களின் கொப்புகளை இவ்வாறும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(2) சிற்பம் வடித்தல், மரச்செதுக்கல் வேலைகளில் பயன்படுத்தப்படுகின்ற உபகரணம். (தலைகீழான சொல்)

(3) தனது உடலின் மீது வன்மையான ஓடு போன்ற கவசத்தைக் கொண்டுள்ள உயிரினம். மிகவும் மெதுவாகவே நகர்ந்து செல்லும்.

(5) ஆணவம், கர்வம், அகங்காரம், மமதை போன்று மற்றொரு சொல் இதுவாகும். (தலைகீழான சொல்)

(7) அல்லல், துன்பம், மிடி, துன்பம் என்பதெல்லாம் ஒரேபொருள் தருகின்ற சொற்கள் ஆகும். அந்த அர்த்தம் தருகின்ற மற்றொரு சொல் இது. (தலைகீழான சொல்)

(10) சூரியக் குடும்பத்தில் கவர்ச்சியான கிரகமாகக் கூறப்படுவது இந்தக் கோள்.

(20) இளைஞன், எருது ஆகிய அர்த்தங்கள் தருகின்ற சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 60

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சித்திரை 08. கலை 10. கனா 12. மாதம்
18. வான் 21. சேவல் 24. தேன்

**மேலிருந்து கீழ்**

01. சிங்கம் 03. திரு 05. நகம் 08. முதலை
16. வெளவால் 20 தேரை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 59

### பாராட்டு பெறுவோர்

**1. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி.

**2. பரீட் பாத்திமா ஆஷா**
தரம் 11, சர்வதேச பாடசாலை, இறக்காமம்.

**3. தி. சயந்தவி,**
தரம் 05, மட்/ வின்சன் ம.உ.பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

**4. எம்.எம்.எம். அஜ்மல்,**
தரம் 06, மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**5. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரி

**6. பஹ்மா**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி, கம்பளை,
இளவதுறை,

**7. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, வெலிப்பன்னை ரஹ்மானிய்யா ம.வி,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**8. எம்.எம்.எம். அப்ராஸ்**
மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை
இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**9. நவாப் பாத்திமா ரிப்தியா**
தரம் 06, அல் - அமான் மு.ம.வித்தியாலயம்,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 61
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# விளையாட்டு




# முயன்றால் முடியாததில்லை

ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்சிப்பின் 2021–202 3 இரண்டு ஆண்டுகளுக்கான சுழற்சியில் இப்போது இறுதிப் போட்டி மாத்திரமே எஞ்சியிருக்கிறது. டெஸ்டில் உலக சம்பியனாவதற்கு இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணியில் மோதும். எதிர்வரும் ஜூன் 7–11 ஆம் திகதி வரை லண்டன், ஓவலில் அந்த இறுதிப் போட்டி நடைபெறும்.

டெஸ்ட் கிரிக்கெட்டின் உலகக் கிண்ணமாக நடைபெறும் உலக டெஸ்ட் சம்பியன்சிப் தொடர் என்பது விறுவிறுப்பு இல்லாமல் காலத்தோடு சேர்ந்து பயணிப்பதால் யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதாக இல்லை. ஆனால், கிரிக்கெட்டில் முழு அணியாக காட்டிக் கொள்ள இந்த உலகக் கிண்ணத்தில் வெல்வது பெரும் கௌரவமாக கருத முடியும்.

எனவே, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை டெஸ்ட் ஆடும் அணிகள் தமது அணியை புதுப்பித்துக் கொள்வதற்கும், தயார்படுத்திக் கொள்வதற்கும் இந்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் உதவும். இதன்படி, அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவம் வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகும் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான சம்பிரதாயமான ஆஷஸ் தொடருடன் தொடங்கவுள்ளது.

இரண்டு ஆண்டுகள் நீடிக்கும் அந்த டெஸ்ட் சம்பியன்சிப் பருவம் 2025 ஜூன் மாதத்தில் லோட்ஸில் நடைபெறும் இறுதிப் போட்டியோடு முடிவடையும். இந்த இறுதிப் போட்டிக்கு முன்னேற ஒன்பது டெஸ்ட் அணிகள் போட்டியிடவுள்ளன. அண்மையில் டெஸ்ட் வரம் பெற்ற ஆப்கான், அயர்லாந்துடன் சிம்பாப்வேயும் உலக டெஸ்ட் சம்பியன்சிப் போட்டியின் இல்லை.

ஒட்டுமொத்தமாக அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் இரண்டு ஆண்டுகளில் லீக் அடிப்படையில் 27 தொடர்களில் 68 போட்டிகள் நடைபெறும். ஒவ்வொரு போட்டிகளுக்கும் வழங்கப்படும் புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களை பெறும் அணிகளே இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

ஒவ்வொரு அணியும் மூன்று உள்நாடு மற்றும் மூன்று வெளிநாடு என மொத்தம் ஆறு தொடர்களில் ஆடும். ஒவ்வொரு தொடரும் இரண்டு தொடக்கம் ஐந்து போட்டிகளைக் கொண்டதாக இருக்கும்.

அடிப்படையில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் மோதும் வகையில் ரவுண்ட் ரொபின் சுற்றுகளாக போட்டிகள் நடத்தப்பட்டிருந்தால் சுவாரஸ்யமாக இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு நடத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. குறிப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இரு தரப்பு தொடர்களில் ஆடும் அளவுக்கு அரசியல் சூழல் இன்னும் ஏற்படவில்லை என்பது இந்த முட்டுக்கட்டைக்கு பிரதான காரணியாக இருக்கிறது. இதனால் ஒரு அணி மற்ற எட்டு அணிகளில் ஆறு அணிகளுடன் இந்த இரண்டு ஆண்டுகளில் மோதவிருக்கிறது. அதேபோன்று அனைத்து அணிகளும் சரிசமமான போட்டிகளில் ஆடுவதும் இல்லை. அடுத்த டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் இங்கிலாந்து அணி அதிகபட்சமாக 21 போட்டிகளில் ஆடவிருப்பதோடு அடுத்ததாக அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகள் தலா 19 போட்டிகளில் ஆடும்.

இதில் குறைந்த போட்டிகளில் ஆடும் வரிசையிலேயே இலங்கை உள்ளது. டெஸ்ட் சம்பியன்சிப் தொடரின் இரண்டு ஆண்டுகளிலும் பங்களாதேஷ், தென்னாபிரிக்காவுடன் இலங்கையும் தலா 12 போட்டிகளிலேயே ஆடும்.

கடந்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திலும் இலங்கை அணி மொத்தம் 12 போட்டிகளிலேயே ஆடியது. அதில் 5 வெற்றி, 6 தோல்வி மற்றும் ஒரு சமநிலை என மொத்தம் 64 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்தையே பிடித்தது.

எனவே கடந்த பருவத்தில் இலங்கை அணியின் ஆட்டம் என்பது சொல்லும்படி மோசமாகவும் இல்லை, நன்றாகவும் இல்லை என்ற அளவிலேயே இருந்தது.

சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடர்களை தலா 1–1 என சமநிலை செய்த இலங்கை மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரை 2–0 என முழுமையாக கைப்பற்றியது. மறுபுறம் வெளிநாட்டில் ஆடிய பங்களாதேஷுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1–0 என கைப்பற்றிய இலங்கை அணி இந்தியா மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான தொடர்களை தலா 0–2 என முழுமையாக இழந்தது.



அடுத்த டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திலும் இலங்கை அணி மொத்தம் ஆறு அணிகளோடு மோதவிருக்கிறது. எனினும் இப்போது ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்தியா மற்றும் இலங்கைக்கு அடுத்து எட்டாவது இடத்தில் இருக்கும் மேற்கிந்திய தீவுகளுடன் போட்டிகள் இல்லை என்பது ஒரு சமநிலை போக்கானதாகப் பார்க்கலாம்.

**அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவம் வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகும் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான சம்பிரதாயமான ஆஷஸ் தொடருடன் தொடங்கவுள்ளது.**

அதன்படி அடுத்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அணி சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுடன் தலா இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடவிருப்பதோடு வெளிநாட்டில் பங்களாதேஷ், இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவுடன் தலா 2 போட்டிகளில் ஆடும்.

இதில் உள்நாட்டில் நடைபெறும் மூன்று டெஸ்ட் தொடர்களையும் இலங்கை அணியால் கைப்பற்ற முடிந்தால் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கான புள்ளிப்பட்டியலில் போதுமான அளவு தாக்கம் செலுத்த முடியும்.

வெளிநாட்டு மண்ணில் நடைபெறும் போட்டிகளைப் பொறுத்தவரை பங்களாதேஷில் நடைபெறும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை கைப்பற்றுவதற்கான வாய்ப்பை தவறவிட்டால் பெரும் இழப்பாகிவிடும். அதேபோன்று தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரிலும் ஆதிக்கம் செலுத்துவது முயன்றால் முடியுமானதே. இங்கிலாந்து மண்ணில் இங்கிலாந்தை எதிர்கொள்வது சவாலானது என்றாலும் அதற்கு சரியான தயார்படுத்தல் தேவை.

இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணம் 2024 ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களிலேயே நடைபெறவுள்ளது. எனவே அதற்கு போதுமான காலம் இருக்கிறது.

அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தை ஆரம்பித்து இலங்கை அணி முதலில் பாகிஸ்தான் அணியுடனேயே மோதவுள்ளது. இந்தப் போட்டி எதிர்வரும் ஜுலை மாதம் சொந்த மண்ணில் நடைபெறும்.

இந்தத் தொடருக்கு முன்னர் இலங்கை அணி தீர்க்க வேண்டி முக்கிய ஒரு விடயம் பாக்கி இருக்கிறது. அது தான் டெஸ்ட் அணித் தலைமை. அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் தொடருக்கு புதிய தலைவர் ஒருவருக்கு இடம்விடும் வகையில் தலைமை பொறுப்பை இராஜினாமா செய்யப்போவதாக திமுத் கருணாரத்ன நியூசிலாந்து சுற்றுப்பயணத்தின் பின்னர் அறிவித்தார்.

என்றாலும் அது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. தேர்வுக் குழுவினரின் கோரிக்கையை அடுத்து திமுத் தனது முடிவை மீள் பரிசீலனை செய்ய தீர்மானித்திருக்கிறார். அதாவது 35 வயதான திமுத் மற்றொரு டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திற்காக இரண்டு ஆண்டுகள் இலங்கை அணியின் தலைமையை ஏற்பார் போல் தெரிகிறது.

“அடுத்த சில வாரங்களில் தேர்வாளர்களுடன் நான் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு இறுதி முடிவை எடுப்பேன்” என்று அண்மையில் நடந்த அயர்லாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் ஊடகங்களுக்கு திமுத் குறிப்பிட்டிருந்தார்.

“அயர்லாந்து தொடரின்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோதும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை” என்றும் அவர் கூறியிருந்தார்.

2019 ஆம் ஆண்டு இலங்கை டெஸ்ட் அணியை பொறுப்பேற்ற திமுத் கருணாரத்னவின் தலைமையில் இலங்கை டெஸ்ட் அணி ஒருநாள் மற்றும் டி20 அணிகளை விட ஸ்திரமான நிலையிலேயே உள்ளது. எனவே அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் அவரிடமே தலைமை பொறுப்பை வழங்க அதிக வாய்ப்பு இருக்கிறது.

இல்லாவிட்டால் தலைமை பொறுப்புக்கான அடுத்த வேட்பாளர் பட்டியலில் உப தலைவர் தனஞ்சய டி சில்வா மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் முன்னணியில் இருக்கிறார்கள்.



அதேபோன்று, இலங்கை டெஸ்ட் அணியில் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா, தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ் போன்ற அனுபவ துடுப்பாட்ட வீரர்களுடன் நிஷான் மதுஷ்க போன்ற இளம் வீரர்களும் சோபித்து வருகிறார்கள்.

இடது கை சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரிய தொடர்ச்சியாக விக்கெட்டுகளை வீழ்த்துபவராக உள்ளார். அவரைச் சுற்றி பந்து வீச்சு குழாம் செயற்படுவது வலுச்சேர்ப்பதாக உள்ளது.

எனவே, அடுத்த டெஸ்ட் சம்பியன்சிப்பை வெல்வதற்கான அடிப்படை தகுதி இருக்கும் இலங்கை அணிக்கு முயன்றால் முடியாதது இல்லை.

**எஸ்.பிர்தௌஸ்...**

# குறிப்புகள்



## அதிகம் பெற்றும் இன்னிங்ஸ் தோல்வி

இலங்கைக்கு எதிராக அண்மையில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அயர்லாந்து அணி 492 ஓட்டங்களை பெற்றது தனிப்பட்ட முறையில் அந்த அணிக்கு பெரிய சாதனைதான்.

ஆனால், இந்த ஓட்டங்கள் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இன்னிங்ஸ் ஒன்றில் அதிக ஓட்டங்கள் பெற்றும் அந்த டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸால் தோற்ற புதிய சாதனையை படைத்திருக்கிறது. அயர்லாந்து அணி அந்த டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 10 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

முன்னதாக 2016 டிசம்பரில் சென்னையில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் இங்கிலாந்து அணி 477 ஓட்டங்களை பெற்ற நிலையில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 759 ஓட்டங்களை குவித்து இங்கிலாந்தை இரண்டாவது இன்னிங்ஸில் 207 ஓட்டங்களால் சுருட்டியது. இதன்மூலம் அந்தப் போட்டியில் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 75 ஓட்டங்களால் தோற்றதே மோசமாக இருந்தது.

முதல்தர போட்டிகளில் இதனை விடவும் ஓட்டங்கள் பெற்றும் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க போதுமாக அமையாத இரண்டு சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன. 1995ஆம் ஆண்டு நோர்தம்டனில் நடந்த போட்டியில் நொட்டிங்ஹம்ஷயர் 527 ஓட்டங்களை பெற்றபோதும் நோதம்டன்ஷயர் 781 ஓட்டங்களை பெற்றதால் நொட்டிங்ஹம்ஷயர் இரண்டாவது இன்னிங்ஸில் 157 ஓட்டங்களுக்கு சுருண்டு இன்னிங்ஸ் தோல்வியை சந்தித்தது.

ஆனால் இந்த சாதனை கடந்த ஆண்டு ஜூலை மாதம் முறியடிக்கப்பட்டது. கிராஸ் ரோட்டில் நடந்த போட்டியில் லெய்செஸ்டர்ஷயர் அணி முதல் இன்னிங்ஸில் 584 ஓட்டங்களை பெற்றபோதும் அந்த அணி கிளமோர்கன் அணியிடம் இன்னிங்ஸ் மற்றும் 28 ஓட்டங்களால் தோற்பதை தவிர்க்க முடியவில்லை.

## ஆரம்ப வீரர்களுக்கு மாத்திரமா முடியும்?



ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இதுவரை ஆடவர் மற்றும் மகளிர் என மொத்தம் 12 இரட்டைச் சதங்கள் பெறப்பட்டுள்ளன. ஆடவர் கிரிக்கெட்டில் பத்து இரட்டைச் சதங்களிலும் மகளிர் கிரிக்கெட்டில் இரண்டு இரட்டைச் சதங்களும் இதில் அடங்கும்.

ஆனால் எல்லா சதங்களிலும் பொது அம்சமாக அனைத்துச் சதங்களும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாலேயே பெறப்பட்டிருக்கிறது. இதற்கு அப்பால் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அல்லாத ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாக சிம்பாப்வே அணியின் சார்ல்ஸ் கொவன்ட்ரி ஆட்டமிழக்காது பெற்ற 194 ஓட்டங்களும் உள்ளது. 2009 இல் புலவாயோவில் நடந்த போட்டியில் 3 ஆவது துடுப்பாட்ட வீரராக களமிறங்கியே அவர் இந்த ஓட்டங்களை பெற்றார்.

அதேபோன்று மகளிர் கிரிக்கெட்டில் ஆரம்ப வீராங்கனை ஒருவர் அல்லாது இலங்கையின் சாமரி அத்தபத்து ஆட்டமிழக்காது 178 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். 2017 உலகக் கிண்ணத்தில் பிரிஸ்டலில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியிலேயே அவர் இந்த ஓட்டங்களை பெற்றார். என்றாலும் கொவன்ட்ரி மற்றும் அத்தபத்து இருவருமே அத்தனை ஓட்டங்கள் பெற்றாலும் அவர்கள் தோல்வி அடைந்த பக்கமே இருந்தார்கள்.

## அறிமுகம் இன்றி டெஸ்ட் ஆடியவர்கள்




கடந்த மாதம் அயர்லாந்து அணி பங்களாதேஷுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் ஆடியபோது அதில் தனது கன்னி டெஸ்டில் விளையாடிய பென் வைட்டின் அறிமுகம் அரிதாக இருந்தது. அதாவது அவர் முதல்தர கிரிக்கெட்டின் அறிமுகமாகவே டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடினார்.

இப்படி மொத்தம் 35 வீரர்கள் தமது முதல்தர கிரிக்கெட்டில் ஆடாமல் டெஸ்டில் ஆடியிருக்கிறார்கள். ஆனால் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டிலேயே இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்திருக்கின்றன. 1900 தொடக்கம் இவ்வாறு ஆறு வீரர்களே முதலாவது முதல்தர போட்டியாக டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடியுள்ளார்.

இதற்கு முன்னர் மிக அண்மையில் 2018 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர் முஜீபுர் ரஹ்மான் சத்ரான் முதல்தர போட்டி இன்றி தனது கன்னி டெஸ்டில் ஆடினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2023 மே 7 ஞாயிற்றுக்கிழமை





04 பத்மா இளங்கோவனின் மூன்று நூல்கள் வெளியீடு



06 பெண்களின் இலக்கிய மேம்பாட்டிற்காக பணியாற்றி வரும் இலக்கிய வித்தகர் சம்மாந்துறை மஷூறா



09 கவர்ச்சியால் குஜால்படுத்தும் நடிகை



# கென்யாவில் 'பட்டினி' பயங்கரம்!

கென்ய நாட்டுப் போதகர் பௌல் நெதங் மக்கன்சி தற்போது சிறையில் இருக்கிறார். தொலைதூர காடு ஒன்றில் இருந்து நூற்றுக்கும் அதிகமான சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே அவர் பொலிஸாரிடம் சிக்கினார். உண்ணாவிரம் இருந்து பட்டினியால் இறப்பதற்கு தம்மை பின்பற்றுபவர்களுக்கு வழிகாட்டியதாக மக்கன்சி மீது குற்றம் சாட்டப்படுகிறது.

உலகம் 2023 ஜூன் மாதத்தில் அழியப்போவதாக நற்செய்தி சர்வதேச தேவாலயத்தின் தலைவரான போதகர் மக்கன்சி கூறியபோது, ஸ்டீபன் மவிட்டியின் மனைவியும் அவரை நம்பினார்.

தனது மனைவியும் ஆறு குழந்தைகளும் உண்ணாவிரம் இருந்து உயிரிழந்திருக்கலாம் என்று அவர் இப்போது நம்புகிறார். வறுத்த ரொட்டி விற்று பிழைப்பு நடத்தும் 45 வயதான மவிட்டி, தனது மனைவி குழந்தைகளின் புகைப்படத்தை வைத்துக் கொண்டு அவர்களை தேடி வருகிறார்.

தனது மனைவி, குழந்தைகள் கடந்த ஒகஸ்டில் காணாமல் போனது தொடக்கம் இதேவேளையாகத்தான் அவர் ஊர் சுற்றி வருகிறார்.

கடைசியில் மக்கன்சியின் தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள் தம்மை தனிமைப்படுத்திக் கொண்ட ஷகஹோலா காட்டுப் பகுதிக்கு மவிட்டி விரைந்தார். மனைவி பஹாட்டி ஜோன் குழந்தைகளுடன் தம்மை விட்டு வெளியேறிச் செல்லும்போது அவர் கர்ப்பமாக இருந்தார்.

சிறுவர்கள், பெரியவர்கள் என நூற்றுக்கும் அதிகமான சடலங்களை அந்தக் காட்டுப் பகுதியில் தோண்டி எடுத்து வரும் நிலையில் மவிட்டி தனது மனைவி, குழந்தைகளை உயிருடன் பார்க்கும் எதிர்பார்ப்பை இழந்துவிட்டார்.

கண்டெடுக்கப்பட்ட சடலங்களில் அவர்கள் இருக்கிறார்களா, என்று அடையாளம் காணும் வரை இப்போது அவர் காத்திருக்கிறார்.

ஷகஹோலா என்ற சொல்லுக்கு ஸ்வாஹிலி மொழியில் “கவலைகள் நீங்கும் இடம்” என்று பொருள் கொள்ளலாம். கிலிபி கடலோர மாவட்டத்தில் உள்ள அந்தக் காட்டுப் பகுதி 50,000 ஏக்கர்கள் வரை பரந்து விரிந்தது.

போதகர் மக்கன்சிக்கு இந்தக் காட்டுப் பகுதியில் 800 ஏக்கர் நிலம் சொந்தம் என கூறப்படுகிறது. பிரதான வீதியில் இருந்து ஒரு கரடு முரடான பாதை வழியாகத் தான் அந்தக் காட்டுப் பகுதிக்குள் நுழைய முடியும். அருகில் இருக்கும் பிரதான நகரான மிலின்டியில் இருந்து இந்தக் காட்டை அடைய இரண்டு மணி நேரம் பயணிக்க வேண்டும்.

புதர்கள், முற்கள் கொண்ட அந்தக் காட்டுக்குள் செல்வது கடினமானது. கடும் வெப்பம் மற்றும் யானைகள் உலாவித் திரிவதும் அங்கு மனிதர்கள் நடமாட்டத்தை தடுப்பதாக இருக்கிறது.

ஆனால் அந்தக் காட்டை போதகர் மக்கன்சி தனது வழிபாட்டாளர்களுக்கு புனிதமாக்கினார். பைபலில் வரும் பெத்லஹாம், நசரேத், ஜெரூசலம் போன்ற புனித பெயர்களால் அழைத்தார். அவரை பின்பற்றுபவர்களும் குருட்டுத்தனமாக அதனை நம்பினார்கள்.

இந்தக் காட்டில் இதுவரை 65 புதைகுழிகள் இருக்கும் இடங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் தோண்டத் தோண்ட உடல்கள் கிடைக்கின்றன.

இதுவரை 110 சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த இறுதி மரியாதையும் இன்றி அவர்கள் கூட்டாக புதைக்கப்பட்டிருக்கிறார்கள். காட்டில் இன்னும் தேடுதல் தொடரும் நிலையில் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.






இடம்பெற்றிருக்கும் பிரேத பரிசோதனையில் பலர் பட்டினியில் உயிரிழந்திருப்பதோடு சிலர் மூச்சுத் திணற வைத்தும், தாக்கியும் கொல்லப்பட்டிருப்பது உறுதியாகிறது.

தம்மை வலுக்கட்டாயமாக பட்டினி இருக்கச் செய்ததாக நற்செய்தி சர்வதேச தேவாலயத்தின் முன்னாள் உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த சமயக் குழுவில் இருந்து தப்பிச் செல்ல முயன்றால் நயவஞ்சகர்களாக பட்டம் சூட்டி கடுமையாக தாக்கப்படுகிறார்கள் என்று அவ்வாறு தப்பி வந்த டிடுஸ் கடானா என்பவர் குறிப்பிடுகிறார்.

உலக அழிவை முன்னிட்டு மரணிப்பதற்கு வழிபாட்டாளர்களுக்கு போதனை செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

“முதலில் சிறுவர்கள் இறப்பார்கள், அதனைத் தொடர்ந்து திருமணம் புரியாதவர்கள் இறப்பார்கள். அதன் பின்னர் தாய்மார்கள் மற்றும் வயதானவர் வரிசையில் இறப்பார்கள்” என்று கடானா கூறுகிறார்.

கடைசியாகவே தேவாலயத்தின் தலைவர் மரணிப்பார் என்று கூறிப்பிடப்பட்டிருக்கிறது.

போதகர் மக்கன்சியுடன் தொடர்புபட்ட 227 சிறுவர்கள் உட்பட 410 பேர் பற்றி கென்ய செஞ்சிலுவை சங்கம் கடந்த வாரம் குறிப்பிட்டது. இப்படி காணாமல்போனவர்களை தேடும் அவர்களின் உறவினர்கள் இப்போது சடலங்கள் வைக்கப்பட்டிருக்கும் மலின்சி மருத்துவமனை மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு வெளியில் காத்துக் கிடக்கிறார்கள்.

இவ்வாறு காத்திருப்பவர்களில் பட்ரிக் நிகுபாவுவும் அடங்குவார். அவரது தாய் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல்போனார். அவரைத் தேடி ஷகஹோலா காட்டுக்குச் சென்று தனது தாயை அவர் கண்டுபிடித்தபோது, தம்முடன் வர அவர் மறுத்துவிட்டார்.

“வீட்டுக்கு வரும்படி நான் அவரைக் கேட்டேன். இயேசுவை காண்பது மாத்திரமே தமது ஒரே நோக்கம் என்ற அவர் குறிப்பிட்டார்” என்கிறார் நிகுபாவு.

போதகர் மக்கன்சி தொலைக்காட்சி மற்றும் இணையத்தளத்தில் செய்த பிரசாரங்கள் பலரையும் கவர்ந்தது. சம்பிரதாயக் கல்வி முறை மற்றும் நவீன மருத்துவத்திற்கு எதிராகவும் பிரசாரம் செய்தார். அவரை கடுமையாகப் பின்பற்றியவர்கள் கல்விச் சான்றிதழ்களை கிழித்து எறிந்தார்கள், வேலைகளை துறந்தார்கள், தமது குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்குவதையும் நிறுத்தினார்கள். இவர்களில் பட்டம் பெற்றவர்கள், உயர்நிலை பொலிஸ் அதிகாரிகள் கூட இருக்கிறார்கள்.

ஷகஹோலாவில் இரு குழந்தைகள் இறந்த சம்பவத்தை அடுத்து போதகர் மக்கன்சி கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டார். அந்தப் போதகர் மற்றும் குழந்தைகளின் பெற்றோர் அந்தக் குழந்தைகளை பட்டினியில் வைத்துக் கொன்று புதைத்ததாக குற்றம்சாட்டப்பட்டது.

என்றாலும் போதிய ஆதாரங்கள் இல்லாததால் அப்போது அவர் விடுதலை செய்யப்பட்டார்.

மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கும் அந்தப் போதகர் மீது கொலை, தீவிரமயமாக்கல் மற்றும் பொது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அரசு ஆணைக்குழு ஒன்றை அமைத்து என்ன நடந்தது என்பது பற்றி விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது. என்றாலும் இத்தனை கொடூரங்கள் நிகழ்ந்தபோதும் அது குறித்து எதுவும் தெரியாமல் இருந்தது பற்றி அரசு மீதே கடும் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.





நண்பர் 1 : சீக்கரமே பணத்தை பெருக்க என்ன வழி?
நண்பர் 2 : கீழே போட்டுட்டு விளக்குமாறு எடுத்து பெருக்க வேண்டியதுதான்

கோபு : ஒட்டப்பந்தயத்துல தங்க மெடல் வாங்கினா "ஊக்க மருந்து"ன்னு சொல்லி தடை செஞ்சிடுறாங்க. சரி கடைசில வந்தவங்களையும் ஏன் செக் பண்றாங்க?
பாபு : இவங்க ஏதாவது "தூக்க மருந்து" சாப்பிட்டு இருப்பாங்களோன்னுதான்.





ஒருவர் : டாக்டர் எழுதிக் கொடுத்ததுல மேல உள்ள மருந்து மட்டும் இல்ல.
மற்றொருவர் : மேல உள்ளது மருந்து இல்ல என்னோட பேரு.

பாபு : அவர் ஏன் காரை ரிவர்ஸ்லயே ஓட்டிட்டு போறார்.
கோபு : காரை விக்கும் போது கி.மீ. குறைவா காண்பிக்கணுமாம்.





நண்பர் 1 : பரவாயில்லையே நாங்க எவ்வளவு அடிச்சும் உங்க பையனுக்கு "ழ" வரவே இல்லை. இன்னிக்கு கரெக்டா சொல்றானே. என்ன செஞ்சீங்க?
நண்பர் 2 : நீங்க எவ்வளவு அடிச்சும் வராத "ழ" அவன் தண்ணியடிச்சதும் தானா வந்துடுச்சு.

ஒருவர் : லோகோ எதுவும் சட்டைல போடக்கூடாதுன்னு ரூல்ஸ் இருக்கு தெரியுமில்ல?
மற்றொருவர் : டிரிங்க்ஸ் குடிக்கறப்ப ஜூஸ் சிந்திடுச்சி சார்!





டாக்டர் : உங்க கணவர் உங்ககிட்ட பயங்கரமா நடிப்பார் போலிருக்கே?
நோயாளியின் மனைவி : எப்படி சொல்றீங்க?
டாக்டர் : ஓபன் ஹார்ட் சர்ஜரி பண்ணும்போது இதயத்துல இருக்கற என் மனைவிக்கு காயம்படாம பண்ணுங்கன்னு சொன்னாரே!

மகன் : அப்பா பைத்தியம்னா என்னப்பா?
தந்தை : சம்பந்தா சம்பந்தமில்லாம நீளமா எதையாவது உளறிகிட்டே இருப்பாங்க பேசறது எதுவுமே புரியாது என்ன புரிஞ்சுதா?
மகன் : சுத்தமா புரியலையேப்பா . . .



# பதுளை ஹுமைரா அல் அமீன் எழுதிய செம்பனிச் சிதறல்கள் நூல் வெளியீடு இன்று



பதுளை ஹுமைரா அல் அமீன் எழுதிய செம்பனிச் சிதறல்கள் எனும் சிறுகதைத்தொகுதியின் வெளியீட்டு விழா சட்டத்தரணி ஜீ.சேனாதிராஜாவின் (இணைச் செயலர் மலைநாட்டு தமிழ் இலக்கிய மன்றம்) தலைமையில் இன்று (2023.05.07ஆம் திகதி) காலை 8.30 மணிக்கு பதுளை தர்மதூத வீதியிலுள்ள சைமன் பீரிஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'தமிழ்மணி' 'தேசத்தின்கண்' 'வாழ் நாள் சாதனையாளர் மானா மக்கீன், 'இலக்கிய மாமணி' பதுளை சாரணா கையூம், மொஹமட் எஸ் முகுசீன், கல்ஹின்னை ஃபஹ்மி ஹலீம்டீன், கவிஞர் கலைக்கமல், பன்னூலாசிரியர் ரிம்ஸா மொஹமட், பன்னூலாசிரியர் திருமதி.எச்.எப்.ரிஸ்னா, உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.யோகேஸ்வரன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.





விஜய் டீவி (Vijai tv) இல் பாக்கியலஷ்மி நாடகத்தில் ஓர் சிறிய காட்சியில் மலையக ஹட்டன் பெண் துவாணிக்கா (நடைப்பயிற்சியில் ஓர் சிறிய காட்சியில் நடித்திருக்கிறார்)














மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தால், (2006 க.பொ.த) இவ்வாண்டு 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கோடு மாதிரி வினாத்தாள்கள் மற்றும் புத்தகங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

















கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் (29.04.2023) சனிக்கிழமை மாலை பத்மா இளங்கோவனின் மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன. 'சிறுவர் தமிழ் அமுதம், சிறுவர் இலக்கிய நுட்பங்கள், கொரோனாவின் தடங்களில்... ஆகிய நூல்களே வெளியிடப்பட்டன. திருமதி வானதி காண்டீபன் தலைமையில் நடைபெறற இந்நிகழ்வில் மூத்த பத்திரிகையாளர் வீ. தனபாலசிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.

'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் மருத்துவர் தி. ஞானசேகரன் வெளியீட்டுரை வழங்கினார். நூல் அறிமுகவுரையை வி. ரி. இளங்கோவன் வழங்கினார்.

மருத்துவர் ரஞ்ஜினி சுப்ரமணியம், ராணி சின்னத்தம்பி, சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, காரைக்கவி க. பத்மானந்தன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். நூல்களின் முதல்பிரதிகளை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் இளங்கோவனிடமிருந்து பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதியை திருமதி விநோதன் பெற்றுக்கொண்டார். தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்புப் பிரதிகளை வழங்கினார்.

மழை கொட்டியபோதும் இலக்கிய ஆர்வலர்கள், நண்பர்கள் இந்நிகழ்வில் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது..!











தினகரன் வாரமஞ்சரி
ஊடக அனுசரணை





*தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையில் சிரேஷ்ட அறிவிப்பாளர் அபுஉபைதா மவ்ஜூட் தென்றல் fmஇல் நேரலை இசைநிகழ்ச்சியாக மாதாந்தம் தயாரித்து வழங்கும் இசைத்தென்றல் அண்மையில் வானொலியில் ஒலிபரப்பாகியதுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் மண்டபத்தில் மேடை நிகழ்ச்சியாகவும் மேடையேற்றப்பட்டது.*

*(படங்கள்: ஏ.கே. விஜேபாலன்)*





# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றிய அறநெறி புத்தாண்டு விழா



தினகரன் வாரமஞ்சரி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன் சனிக் கிழமை மட்டக்குளி, காக்கைதீவு கடற்கரை பூங்காவில் அறநெறி பாடசாலை மாணவ மாணவிகளுக்காக நடத்திய தமிழ், சிங்கள புத்தாண்டு விழா. **படங்கள் எம். நஸார்**













# பெண்களின் இலக்கிய மேம்பாட்டிற்காக பணியாற்றி வரும் இலக்கிய வித்தகர்

## சம்மாந்துறை மஷூறா

நேர்காணல் இக்பால் அலி

**உங்கள் எழுத்துலகப் பிரவேசம் பற்றி கூற முடியுமா?**

1979 ல் வானொலி மூலம் எழுத்துலகிற்கு அறிமுகமானவள் நான். எனி னும் அதற்கு முன்பே பாடசாலை கையெழுத்து சஞ்சிகைகளில் இலக்கியப் பயணத்தை ஆரம்பித்துவிட் டேன். வானொலி ஒலி மஞ்சரி, வாலிப வட்டம், பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி, இளஞ்சுடர், கவிதைக் கலசம், முஸ்லிம் நிகழ்ச்சி போன்ற பல நிகழ்ச்சிகளில் கவிதை, சிறுகதை, நாடகம் என எழுதி என்னை வளர்த்துக் கொண்டேன். எனது முதலாவது கவிதை தினகரன் வாரமஞ்சரியில் 1981 ம் ஆண்டு பிரசுரமானது. இலங்கையின் தேசியப் பத்திரிகைளில் மட் டுமன்றி நிறைய சஞ்சிகைகளிலும் எழுதினேன். வாசிப்பு பழக்கம்தான் எனக்கு எழுத்தாற்றலை ஊக்குவித்தது எனலாம். எங்கள் வீட்டில் பத்திரிகைகள் சஞ் சிகைகள் மட்டுமன்றி இஸ்லாமிய இலக்கிய நூல்களும் ஏராளமாக இருந்ததன.

**உங்கள் துறைகள் பற்றி சிறு அறிமுகம் தாருங்களேன்?**

நான் கவிதைகள் எழுதி வருவது வெளிப்படையான விசயம்.ஆயினும் எனக்கு சிறுகதை எழுதுவதிலேயே ஈடுபாடு அதிகம். இருபத்தாறு சிறுகதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. சிறுகதை எழுத அதிக நேரம் எடுப்பதால் கடந்து செல்ல வேண்டி ஏற்படுகிறது.

எனது பன்னிரெண்டு நாடகங்கள் மாவட்ட மாகாண தேசிய ரீதியில் வெற்றி பெற்றுள்ளன. மூன்று நாடகங்கள் தேசிய ரீதியில் இரண்டாம் மூன்றாம் இடங்களை பெற்றுள்ளன. நாடகத் தயாரிப்பிற்கான தேசிய விருது பெற்றுள்ளேன். ஸ்கிரிப்ட் தொடக்கம் ஆடையலங்காரம் நெறியாள்கை பயிற்றுவிப்பு இயக்கம் யாவும் நானே செய்வதால் சாத்தியமாகிறது. பாடசாலை மாணவர்களுக் காகவே நாடகத்துறையை தேர்வு செய்தேன்.

தாளலயம் வில்லுப்பாட்டு பாடல் பேச்சு கவிதை என்பனவற்றிலும் மாணவர்களை பயிற்றுவித்து தேசிய மட்டம் வரை வெற்றிபெற்றுள்ளனர். சஞ்சிகைத் துறையிலே மிகுந்த ஈடுபாடுண்டு. முப்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகளை ஆக்கியிருக்கிறேன்.

அதிகமானவை பாடசாலையை களமாய் கொண்டவை. அவை மாகாணமட்டம் வரை வெற்றியும் பெற்றுள்ளன. கையெழுத்து ரோணியோ கல்லச்சு அச்சு என பல்தரப் பட்டவை.

தற்போதும் எமது sri Lanka pen club வெளியீ டாக அவரி காலாண்டு சஞ்சிகையை வெளிக் கொணர்கிறேன். அதன் ஆறாவது வெளியீடு தயாராகிறது. பாடலாக்கத் துறைகளில் மட்டுமன்றி பாடுவதிலும் ஈடுபாடுண்டு. சில விமர்சனங்களும் எழுதியுமிருக்கிறேன்.

சில நூல் விமர்சனங்களும் நிகழ்த்தியுள்ளேன்.



வரையும் ஆற்றல் கைவினைப் பொருட்கள் செய்தல் போன்றவற்றிலும் அதீத ஈடுபாடுண்டு.

**எவ்வாறான பாடு பொருள்களைத் தேர்ந்தெடுக்கிறீர்கள்?**

எழுத ஆரம்பித்த காலங்க ளில் இப்படித்தான் எழுத வேண்டுமென்ற ஒரு கொள்கை இருக்கவில்லை தான்.ஆயினும் வளர்ச்சியின் ஒரு காலகட்டத்திற்கு பின் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை பாடுவதையே நோக்கமாக்கிக் கொண்டேன். எனினும் பெரும்பாலும் பெண்களின் சமூகப் பிரச்சினைகளே பாடுபொருளாகி விடுகிறது.

**உங்கள் கவிதைத் தொகுதிகள் பற்றி...?**

நான் எழுத ஆரம்பித்து நாற்பத்திரண்டு வருடங்களின் பின்தான் எனது "நதிகளின் தேசிய கீதம்" கவிதைத் தொகுதியை 2021 ல் வெளியிட்டேன். இதே ஆண்டு sri Lanka pen club வெளியீடாக அறுபத்து மூன்று முஸ்லிம் பெண்களின் கவிதைகளைத் தொகுத்து "சுட்டு விரல்" தொகுதியை வெளியிட்டேன். இனனொரு கவிதைத் தொகுதி தயாராயிருக்கிறது.

சிறுகதை தொகுதியொன் றையும் வெளியிடும் அவா உண்டு. srilanka pen club இன் இனனொரு கவிதைத் தொகுதி வெளிவரவுள்ளது. இலங்கை இந்தியா உட்பட பத்து கூட்டுக் கவிதைத் தொகுதிகளில் எனது கவிதைகள் வெளி வந்துள்ளன.

**பெற்றுள்ள விருதுகள் பற்றி.............**

கல்வியமைச்சு சுற்றாடல் அமைச்சு வழங்கிய விருதுகளுட்பட பதினெட்டு விருதுகள் கிடைத்திருக்கின்றன. ஆயினும் எனது பெயருக்கு முன்னால் நான் எந்த விருது அடைச் சொற்களையும்









பயன்படுத்திக் கொள்ள விரும்புவதில்லை. 2021 ல் கிழக்கு மாகாண கலாசார திணைக்களம் வழங்கிய இலக்கிய வித்தகர் விருது ஒன்றே என்னைப் பெருமைப்படுத்துவதாக உணர்கிறேன்.

**அவசியம் உங்களிடம் கேட்க வேண்டிய வினா உங்களால் ஸ்தாபிக்கப்பட்டு வளர்ச்சி கண்டிருக்கும் sri Lanka pen club பற்றியதாகும். sri Lanka pen club பற்றி சொல்லுங்களேன்.**

பாடசாலைப் படிப்பு முடிந்து வீட்டிலிருந்த காலத்தில் sri Lanka pen club உருவாக்கம் பெற்றது. எனினும் சரியான இயக்கமின்றி கைவிடப்பட்டிருந்தது. கொரோனாக் கால பாடசாலை விடுமுறையினைப் பயன்படுத்தி மீளுருவாக்கம் செய்து கொண்டேன். எமது அமைப்பிற்கான sri Lanka pen club என்ற பெயரை எனக்கு பரிந்துரைத்தவர் அமரர் வீ.ஆனந்தன். எனது இலக்கிய செயற்பாடுகளிலும் உந்து சக்தியாய் இருந் தவர். எனவே அப்பெயரை தவிர்க்காமல் அவர் ஞாபகமாக பயன்படுத்திக் கொண்டேன். தற்போது உள்நாட்டிலும் நாட்டிற்கு வெளியேயுமாக நூற்றைம்பதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களிருக்கிறார்கள். ஒரே குடும்பமாக ஒருத்தருக்கொருத்தர் அனுசரணையாக இலக்கிய செயற்பாடுக ளில் திளைத்திருப்பது சிறப்பம்சம்.

**SLPC யின் நோக்கங்கள் என்ன? இதுவரை பெற்ற அடைவு–கள் என்ன சொல்ல முடியுமா?**

ஆற்றலுள்ள பெண்களின் ஆற்றல்களை மேம்படுத்துவது. அங்கத்தவர்களின் படைப் புகளை தொகுத்து வெளியி டுவது. அங்கத்தவர்களது படைப்பிலக்கிய மற்றும் ஆற்றல்களுக்கான களங்களை வியாபித்துக் கொள்ள வழிகாட்டுவது. கலாசாரத்தினூடாக கலைகளை கட்டி எழுப்புவதும் இலைமறைகாயாக இருக்கும் பெண் எழுத்தாளர்களையும் ஒதுங்கியிருக்கும் சிரேஷ்ட பெண் எழுத்தாளர்களையும் படைப்புலகில் சஞ்சரிக்கச் செய்வதும் அங்கத்தவர்கள் இஸ்லாத்தில் பெண்ணுரிமை பற்றியும் பெண்களின் கடமைகள் பற்றியும் தெளிவடையச் செய்வது. எங்கள் இலக்கு கணிசமான அடைவினை தந்திருக்கிறது. ஒரு பெண் முதலில் தன்னையறிய வேண்டும். தன் உரிமைகளை மட்டும் தெரிந்து கொள்வதால் ஒரு முழுமையான வாழ்வை பெறவும் முடியாது. எனவே தன் கடமைகளையும் உணர வேண்டும்.எந்த ஒரு படைப்பாளியும் குடும்பக் கட்டமைப்பு சிதையாத வண்ணம் கலாசார மீறல்களற்ற படைப்பாளியாக தன்னை செதுக்கிக் கொள்ளும் போது அது ஒரு சமூகத்திற்கான வெற்றியுமாகும்.

# காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் நடத்திய 138வது உலக தொழிலாளர் தின சிறப்புக் கவியரங்கு





















காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் ஏற்பாடு செய்த சர்வதேச மேதின சிறப்புக் கவியரங்கு கழகத்தின் தலைவர் கவிமாமணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் காத்தான்குடி கலாநிதி அலவி ஷரிபுத்தீன் முன்னோடிகள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி கவிஞர் மர்ஹூம் ஷபாஜி இஸ்மாயில் அரங்கில் கவிஞர் கலாபூசணம் காத்தான்குடி பௌஸ் தலைமையில் கவிஞர்களான கிண்ணியா அமீர்அலி, ஏ.எல்.சப்ரி, எம்.ஏ.ஸி ரபாய்தீன், ஏ.எல்.றஹீம், உசனார் ஜாபிர், ஏ.ரி.எம். றியாஸ, இல்மி அஹ்மத் லெப்பை., எம்.ஆர்.எப்.றிஸ்லா, எம்.ஐ.எம்.முஸ்தபா, மௌலவி எம் எச்.எம்.இக்பால், பதியதளாவ பாறூக்,


எம்.எம்.ஷாஹிர் ஹுசைன் ஆகியோர் மேதின சிறப்புக் கவிமழை பொழிந்தனர். மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ.ஜி.எம்.ஹக்கீம், காத்தான்குடி பிரதேச உதவி கல்வி பணிப்பாளர் எம்.ஹலாவுதீன்,காத்தான்குடி அதிபர்கள் சங்க தலைவர் ஏபீஏ.றசூல், முன்னாள் அதிபர் எ.ஏ.சீ.சத்தார், ஜாமியுழ்ழாபிரின் வித்தியாலாய அதிபர் ஏ.எல்.பாறூக் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

**படங்களும், தகவலும் ரீ.எல்.ஜவ்பர்கான்
மட்டக்களப்பு குறுப் நிருபர்)**



# அஜித்தின் 'விடாமுயற்சி'

நடிகர் அஜித் நடிப்பில் பிரம்மாண்டமாக உருவாக உள்ள புதிய திரைப்படமான ஏகே 62 படத்தின் அதிகாரபூர்வ அப்டேட் குறித்த தகவல் கசிந்துள்ளது.




மகிழ்த்திருமேனி இயக்கத்தில் அஜித் நடிக்கும் படத்திற்கு 'விடாமுயற்சி' என பெயர் வைக்கப்பட்டுள்ளதாக தயாரிப்பு நிறுவனம் லைகா அறிவிப்பு. நடிகர் அஜித்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு நள்ளிரவு 12 மணிக்கு இந்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டது. முதலில் விக்னேஷ் சிவன் இயக்குவதாக இருந்த படம் பின்னர் மகிழ் திருமேனி வசம் சென்றது.

விடாமுயற்சியின் கீழ் 'முயற்சிகள் ஒருபோதும் தோல்வியடையாது' என குறிப்பிடபட்டு உள்ளது. படத்தின் கதை மற்றும் நடிகர்கள் பற்றிய மற்ற விவரங்கள் விரைவில் வெளியாகும். இப்படத்தை லைகா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கிறது.

இப்படத்தின் தயாரிப்பு செலவு 220 கோடி என தகவல் வெளியாகியுள்ளது. இசையமைப்பாளர் அனிருத், விடமுயற்சிக்கு இசையமைக்கிறார். லைகா புரொடக்ஷன் நிறுவனம் மகிழ திருமேனிக்கு இதுவரை ஒரு படத்திற்கு வாங்கிய சம்பளத்தை விட இரண்டு மடங்கு அதிக தொகையை இந்த படத்திற்காக கொடுப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான 'கலக தலைவன்' படம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

# ஒப்பனை செய்து கொள்ள வேண்டிய அவசியமே இல்லை

சாய் பல்லவி



பெண்கள் அழகுக்காக ஒப்பனை செய்துகொள்ள வேண்டிய அவசியமே இல்லை என்கிறார் நடிகை சாய் பல்லவி. மாறாக பெண்கள் தங்கள் இயற்கையா ன அழகுடன் வலம் வந்தாலே போதும் என்றும் அந்த அழகு அனைவராலும் வசீகரிக்கப்படும் என்றும் அண்மைய பேட்டி ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்ல; இயற்கையான அழகுக்கு கிடைக்கும் அங்கீகாரமானது பெண்களுக்கு தன்னம்பிக்கை கொடுக்கும் என்றும் இதற்கு 'பிரேமம்' படத்தில்தான் ஏற்று நடித்த கதாபாத்திரம் நல்ல உதாரணமாக இருந்தது என்றும் கூறுகிறார் சாய் பல்லவி. 'பிரேமம்' படத்தில் நடித்தபோது இவருக்கு ஏராளமான முகப்பருக்கள் இருந்தன. அவற்றை நீக்கிவிட்டு நடிக்க விரும்பியபோது, அப்படத்தின் இயக்குநர் அல்போன்சா 'அதெல்லாம் தேவையில்லை' என்று கூறிவிட்டாராம். மேலும் அறவே ஒப்பனை தேவையில்லை என்றும் கூறியிருக்கிறார். சாய் பல்லவியும் இதற்கு எதிர்ப்போ மறுப்போ தெரிவிக்கவில்லை. "படம் வெளியாகி பெரிய வெற்றி பெற்றது. எனது முகப்பருக்கள் முகத்துக்கு அழகு கொடுத்ததாக படம் பார்த்த பலரும் பாராட்டினார்கள். பெண்கள் ஒப்பனை செய்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. "சிறு வயதில் இருந்தே நடனத்தில் எனக்கு அதிக விருப்பம் இருந்தது. படித்துக்கொண்டே நடனம் கற்றுக் கொண்டேன். அதன்பிறகு சினிமா வில் நடிக்க ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் என் தந்தைக்கு நான் நடிக்க வருவது பிடிக்கவில்லை. மருத்துவம் படிக்க ஜார்ஜியாவுக்கு அனுப்பி விட்டார்," என்று சாய் பல்லவி தெரிவித்துள்ளார்.

# 'பெண் விஜய் சேதுபதி' என்று பெயரெடுக்க ஆசை

ஷாலி



ஓடிடி தளங்களின் வருகையால் தமிழ்த் திரையுலகில் நாள்தோறும் புதுப்புது கதாநாயகிகள், கலைஞர்கள் அறிமுகமான வண்ணம் உள்ளனர். அந்தப் புதுமுகங்களின் வரிசையில் அண்மையில் இணைந்துள்ளார் ஷாலி நிவேகாஸ்.

சின்னத்திரை நிகழ்ச்சித் தொகுப்பாளராக ரசிகர்களுக்கு அறிமுகமான ஷாலி, 'மிஸ் சென்னை' அழகிப் பட்டம் வென்றவர். அண்மையில் இவர் நடித்த 'செங்களம்' படம் ஓடிடி தளத்தில் வெளியாகி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இதையடுத்து சூட்டோடு சூடாக தேடி வந்த சில வாய்ப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனினும் இந்த வரவேற்பையும் வெற்றியையும் தன்னால் மனதாரக் கொண்டாட முடியவில்லை என சோகத்துடன் சொல்கிறார் ஷாலி.

காரணம், இவரது நெருக்கமான தோழி எதிர்பாராதவிதமாக மரணமடைந்துவிட்டாராம். அடுத்து ஷாலியின் உடன்பிறந்த சகோதரி விபத்தில் சிக்கினார். இப்படி அடுத்தடுத்து நிகழ்ந்த சில சம்பவங்கள் முடக்கிப் போட்ட நிலையில், அதிலிருந்து மெல்ல மீண்டு வருவதாகச் சொல்கிறார்.

"திரையுலகில் பணியாற்ற வேண்டும் என்பது சிறு வயது முதலே என் மனதில் ஆழமாகப் பதிவிட்ட ஆசை. நடிப்பில் சாதிக்க வேண்டும் என விரும்பினேன். அடிப்படையில் நான் ஒரு பரதக் கலைஞர். முறைப்படி நடனம் கற்றுக் கொண்டேன்.

"ஒரு நாட்டிய நாடகத்தை அரங்கேற்றி முடித்ததும், நிகழ்ச்சிக்கு வந்திருந்த ஒரு பாட்டியும் பேத்தியும் நடனத்தை வெகுவாகப் பாராட்டினர். அப்போதுதான் நடிப்பு என்பது பிறருடைய மனதில் எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது புரிந்தது. ஒருவகையில் வியப்பாகவும் இருந்தது. அன்று கிடைத்த அந்தப் பாராட்டுக்குப் பிறகு எனது நடிப்பாசை பல மடங்கு கூடியது," என்கிறார் ஷாலி. எனினும் ஆசைப்பட்டதுபோல் நடிகையாவது அவ்வளவு எளிதாக இல்லையாம். காரணம், ஷாலியின் இந்த ஆசைக்கு அவரது வீட்டில் யாருடைய ஆதரவும் கிடைக்கவில்லை.

"திரையுலகுக்கும் எனது குடும்பத்துக்கும் வெகு தூரம். மிகுந்த கட்டுப்பாடுகளுடன் வளர்க்கப்பட்டேன். எனினும் முகத்தில் அடித்தாற்போல் நடந்துகொள்ளாமல் ஒரு நிபந்தனை விதித்தனர்.

"'உன் பெயருக்குப் பின்னால் குறிப்பிடுவது போல் ஒரு பட்டப்படிப்பை முடித்துவிடு. அதன் பிறகு ஒரு வேலையில் சேர்ந்து கைநிறைய சம்பளம் வாங்கிய பிறகும் நடிகையாகும் ஆசை இருந்தால், தாராளமாக நடிக்கலாம்' என்றனர்.

"இது போதாதா, பெற்றோர் ஆசைப்படி பொறியியல் படிப்பை முடித்தேன். பிறகு பெங்களூரில் மூன்று லட்சம் ரூபாய் ஊதியத்துடன் ஒரு வேலை அமைந்தது. இதைச் சாதித்த பிறகு வீட்டில் எந்தவித தடையும் இல்லை. முந்திய நிலைக்கு நேர்மாறாக என் பெற்றோரே நான் நடிகையாக முழு ஆதரவை வழங்கினர். இப்படி காத்திருந்து சாதித்தேன்," என்று ஆஸ்கார் விருது பெற்றதற்கு இணையாக உற்சாகத்துடன் விவரிக்கிறார் ஷாலி.


இவர் தொலைக்காட்சியில் தொகுத்து வழங்கிய 'வணக்கம் தமிழா' என்ற நிகழ்ச்சிக்கு பலத்த வரவேற்பு கிடைத்தது. அதன் தொடர்ச்சியாக 'செங்களம்' பட வாய்ப்பு கிடைக்க, தயக்கமின்றி ஏற்றுக் கொண்டாராம்.

நடிப்புத் தேர்வின்போது 'அரசியலில் பழம் நழுவி விழும் எனக் காத்துக்கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது' என்ற வசனத்தைப் பேசுமாறு இயக்குநர் பிரபாகரன் கூறியுள்ளார். அந்த வசனம்தான் கதையை நகர்த்திச் செல்லும் அளவுக்கு முக்கியமானது என்பதைப் புரிந்துகொண்டதாகவும் தாம் அதைப் பேசி நடித்தது இயக்குநருக்குப் பிடித்துப்போனதாகவும் சொல்கிறார்.


"'செங்களம்' படத்தைப் பார்த்துவிட்டு பலரும் பாராட்டினர். நீண்ட வசனங்களைக் கூட சர்வ சாதாரணமாகப் பேசியிருக்கிறீர்கள் என்று கூறினர். இந்தப் பாராட்டுகள் எல்லாம் இயக்குநர் எஸ்.ஆர்.பிரபாகரன் சாருக்குத்தான் போய்ச் சேரும். அவர்தான் நான் எப்படி கதாபாத்திரத்தை உள்வாங்கிப் பேச வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுத்தார்," என்று சொல்லும் ஷாலி, அடுத்து இளையராஜா இசையில் உருவாகும் 'பேரன்பும் பெருங்கோபமும்' படத்தில் நடிக்கிறார். இது பாலு மகேந்திராவின் மாணவர் சிவப்பிரகாஷ் இயக்கத்தில் உருவாகும் படம். "தமிழகத்தில் நிகழும் ஆணவக் கொலைகளைக் கண்டிக்கும் கதைக் கருவுடன் உருவாகிறது. இதிலும் கதையை நகர்த்திச் செல்லும் அழுத்தமான கதாபாத்திரத்தில் நடிக்கிறேன். ஆனந்த் அண்ணா மலை இயக்கும் 'காகங்கள்' படத்திலும் முக்கிய கதாபாத்தி ரத்தை ஏற்றுள்ளேன்.

"என் நடிப்புத் திறமைக்கு சவால் விடக்கூடிய எத்தகைய கதாபாத்திரமாக இருந்தாலும் தயக்கமின்றி நடிப்பேன். சுருக்கமாச் சொல்வதாக இருந்தால் 'பெண் விஜய் சேதுபதி' என்று பெயரெடுக்க ஆசை," என்கிறார் ஷாலி.

# அவந்திகாவின் ஆட்டகாசம்







ஒரு காலகட்டத்தில் இளசுகளின் ஃபேவரிட் நடிகை ஆக வலம் வந்த குஷ்பூ. இப்போது சின்னத்திரை மற்றும் வெள்ளிதிரையில் கிடைக்கும் கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார். இவர் முறைமாமன் படத்தில் நடிக்கும் போது இயக்குனர் சுந்தர் சியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதியினருக்கு அனந்திகா மற்றும் அவந்திகா என இரண்டு மகள்கள் உள்ளனர். இதில் குஷ்புவின் மூத்த மகளான அவந்திகா வெளிநாட்டில் படித்து வருகிறார். இந்நிலையில் சினிமாவில் அவரும் தனது பங்களிப்பை கொடுக்க உள்ளார் என்பதை சமீபத்தில் குஷ்பூ கூறியிருந்தார். இப்போது கடந்த சில நாட்களாக அவந்திகாவின் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. குஷ்பூவை போல தாராள கவர்ச்சி காட்டி சில புகைப்படங்களை வெளியிட்டு இருந்தார். இப்போது கப்பல் கவிழ்ந்தது போல கன்னத்தில் கை வைத்து சோகமாக இருக்கும் புகைப்படம் வெளியாகியுள்ளது. குஷ்பூ போல் பார்ப்பதற்கு அச்சு அசலாக இருக்கும் அவந்திகா தற்போது வெளியிட்டுள்ள புகைப்படத்தில் அதிக கவர்ச்சி, கலரிங் செய்த முடி, உடம்பு முழுவதும் டாட்டூ என வேற லெவலில் உள்ளார். இந்த புகைப் படத்தை பார்த்தால் உங்கள் வீட்டில் அம்மா, அப்பா திட்ட மாட்டார்களா ரசிகர்கள் கிண்டலடித்த வருகி றார்கள்.

# பாழடைந்த வீட்டில் கனகாவுக்கு நடந்தது என்ன?



பல ஆண்டுகளாக வர்ணம் பூசப்படாமல் இருந்த அந்த வீட்டின் வாயிலில் கனகா மற்றும் அவரது தாயார் பெயர்கள் எழுதப்பட்டிருந்ததாக தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனகா போனில் யாரிடமோ தமிழில் பேசிக்கொண்டிருந்ததாக அந்த செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.இது குறித்து குறிப்பிட்டுள்ள செய்தியாளர், ''வீட்டில் காலிங் பெல் வேலை செய்யவில்லை. வீட்டின் ஓரத்தில் தூசி படிந்த கார்கள் மட்டுமே இருந்தன. காவலாளி என்று யாருமே இல்லை. கதவுகள் மூடப்பட்டிருந்தது. வீடும், வீட்டு வாசலும் குப்பையாக இருந்தது. சமீபத்தில் வீடு தீப்பற்றி எரிய பூஜை அறையில் பற்றிய தீயே காரணம் என பக்கத்து வீட்டுக்காரர் கூறினார். கனகாவுக்கு உதவியாளர் ஒருவர் இருப்பதாகவும், அவர் சபரிமலை சென்றபோதுதான் இந்த தீ விபத்து ஏற்பட்டதாகவும் தெரிகிறது. கனகா குறித்து பேசிய அவரது உதவியாளர், கனகா தனது நெருங்கிய உறவினர்களின் மோசமான நடத்தையால் யாருடனும் நெருங்கி பழகவில்லை. அவர் எந்த வித உதவி கேட்டாலும் நான் செய்துகொடுக்கிறேன். ஒருமுறை வீட்டிற்கு பெயின்ட் அடிக்கலாம் என்று சொன்னேன். அவர் பார்க்கலாம்' என்று பதிலளித்தார். அவரை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம். அவர் வாழ்க்கையை வாழ விடுங்கள் என்றார்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.



# கவர்ச்சியால் குஜால்படுத்தும் நடிகை



தென்னிந்திய படங்களில் முன்னணி நடிகையாக வலம் வந்த கீர்த்தி சுரேஷ் சமீப காலமாக தமிழில் எந்த பட வாய்ப்புகளும் இல்லாமல் தெலுங்கில் மிக ஆர்வமாக நடித்து வந்தார். தற்போது இவர் நடிப்பில் வெளிவந்த தெலுங்கு படமான தசரா நல்ல வரவேற்பை கொடுத்ததால் தொடர்ந்து இதை தக்க வைத்துக் கொள்வதற்காக கொஞ்சம் கவர்ச்சி நடிகையாக மாறிவிட்டார். தற்போது சோசியல் மீடியாவில் இவருடைய புகைப்படங்கள் தான் ட்ரெண்டிங் ஆகி வருகிறது. இந்த புகைப்படங்களை பார்த்தாவது அதிகமான பட வாய்ப்புகள் வரும் என்பதால் தொடர்ந்து இதே மாதிரி போஸ்களை கொடுத்து வருகிறார். இதனால் பட வாய்ப்புகளும் வரும் ரசிகர்களும் அமோகமாக இவருக்கு கிடைப்பார்கள். அதிலும் இப்பொழுது வெளிவந்த புகைப்படங்கள் ரசிகர்களை ஆச்சரியப்படுத்தும் அளவிற்கு வந்திருக்கிறது. அந்த புகைப்படங்கள் அனைத்தும் இளசுகளை சுண்டி இழுக்கும் விதமாக வெளியாகி உள்ளது. அதில் பச்சை நிற கவுனில் லேஸ் ஸ்லீலெஸ் டிரஸ் போட்டு பளபளப்பான தோற்றத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். அதிலும் அவர் கொடுக்கிற ஒவ்வொரு போஸ்க்கும் அதிக ட்ரெண்ட் ஆகி ஒரு மெல்லிய அழகான நெக்லஸ் அணிந்துள்ளார். அதில் அவருடைய பட்டர்ஃப்ளை கண்ணுக்கு ஐ லைனர் போட்டு கண்ணாலே ரசிகர்களை கவர்ந்து இழுக்கிறார். அந்த சிவந்த கண்களை பார்ப்பதற்கே மிக ரம்யமாக இருக்கிறது. மேலும் அழகிய உதட்டால் எக்ஸ்பிரஷன் கொடுத்து ரசிகர்களை குஜால் படுத்தி வருகிறார். அத்துடன் வெளிவந்த புகைப்படங்கள் அனைத்திலும் கிளாமராக அழகிய போஸ்களை கொடுத்துள்ளார். முக்கியமாக கையை தலையில் வைத்துக்கொண்டு அவர் கொடுக்கிற அந்த ஒரு போஸ் ரொம்பவே ஹாட்டான புகைப்படமாக இருக்கிறது. இப்படி கீர்த்தி சுரேஷ் வெளியான ஹாட் புகைப்படங்கள் அனைத்தையும் பார்த்தாவது இனிமேல் இயக்குனர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் இவரை வீடு தேடி வாய்ப்பைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

Senthooram செந்தூரம்

# பெற்றோருக்கும், குழந்தைக்கும் இடையே உள்ள உறவு மிகவும் தனித்துவமானது

குழந்தையைப் பெற்ற ஒவ்வொரு பெற்றோர்களின் எதிர்பார்ப்புகள் அவர்களது குழந்தைகளின் மீது அதிகமாகவே உள்ளன. தான் நினைக்கும் படி தான் தன் குழந்தை நடக்க வேண்டும். தான் சொல்வதை தான் குழந்தை கேட்க வேண்டும் என்பன போன்ற பல கட்டுப்பாடுகள் குழந்தைகளின் மீது திணிப்பதை நாம் பார்த்திருப்போம்.

பெற்றோருக்கும், குழந்தைக்கும் இடையே உள்ள உறவு மிகவும் தனித்துவமானது என்றாலும்கூட அனைத்து குழந்தைகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அவர்கள் வளரும் சூழல் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். பெற்றோர்கள் தங்களின் குழந்தைகள் மீது எதிர்பார்ப்புகளை கொண்டிருப்பது தவறு அல்ல. குழந்தைகள் செய்யும் சிறு சிறு தவறுகளை திருத்தி அவர்களை நல்வழிப்படுத்துவது பெற்றோர்களின் கடமை. பல நேரங்களில் குழந்தைகள் செய்யும் தவறுக்காக பெற்றோர்கள் அவர்களை கண்டிப்பார்கள்.

கண்டிப்பு தவறல்ல கண்டிக்கும் முறை தான் முக்கியம். உங்களின் கண்டிப்பு வரும் காலங்களில் உங்கள் குழந்தைக்கு மோசமான சிக்கல்களை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு. பெற்றோர்களின் குழந்தை வளர்ப்பு பற்றி நிபுணர்கள் சில சாதக பாதக அம்சங்களை விளக்கியுள்ளனர். அதில் குழந்தையின் வருங்காலத்தை பாதிக்கும் சிலவற்றையும் பகிர்ந்துள்ளனர். அவற்றைபற்றி தான் நாம் காணப்போகிறோம்.



மிகவும் கண்டிப்பான பெற்றோர் அல்லது சர்வாதிகார பெற்றோர் அதிக எதிர்பார்ப்புகளை குழந்தைகள் மீது திணிப்பார்கள். பெற்றோரின் கண்டிப்பு காரணமாக குழந்தைகள் தண்டனையிலிருந்து தப்பிக்க பொய்யர்களாக மாற வாய்ப்புள்ளது சில குழந்தைகள் ஆக்ரோஷமாக கூட மாறுவதுண்டு.

இந்த பழக்கவழக்கங்களால் நாளடைவில் குழந்தைகள் பெரியவர்களை மதிக்காமல் நடப்பதற்கும் அதிகமான வாய்ப்புகள் உண்டு. மேலும் பல நேரங்களில் உங்கள் குழந்தை பெற்றோரை போலவே தன்னுடன் பயிலும் சக மாணவனிடமும் சர்வாதிகார தனத்துடன் நடந்து கொள்வதற்கும் வாய்ப்பு உண்டு.

# உடல் எடையை குறைக்க

நாள்பட்ட வளர்சிதை மாற்ற நோய்க்குறிக்கு பனிப்பந்து போன்ற உடல்நலப் பிரச்சினைகளிலிருந்து உங்களைப் பின்வாங்கச் செய்யலாம். பரபரப்பான நகர்ப்புற வாழ்க்கை முறையால், நம் உணவில் பெரிய மாற்றத்தைக் காணலாம். தொடர்ந்து உடற்பயிற்சி செய்யும் பழக்கமும் குறைந்தது.



ஒவ்வொருவரும் கூடுதல் கிலோவைக் குறைக்க விரைவான மற்றும் எளிதான தீர்வை வழங்க முயற்சிக்கின்றனர். இது கேள்வியை எழுப்புகிறது – எடை இழப்பு போதுமா அல்லது கொழுப்பை குறைக்க வேண்டுமா? கொழுப்பு இழப்பு எடை இழப்பு என்று மொழிபெயர்க்குமா? என்ன வித்தியாசமானது ஏன் இரண்டையும் ஒன்றாகச் செய்ய முடியாது?எல்லாவற்றையும் புரிந்து கொள்ள, நாம் முதலில் அதன் பின்னால் உள்ள அறிவியலை அறிந்து கொள்ள வேண்டும். எடை என்பது மனித உடலில் உள்ள எல்லாவற்றின் கூட்டுத்தொகை. இது கிலோ அல்லது பவுண்டுகளில் அளவிடப்படுகிறது. உலக சுகாதார அமைப்பு மற்றும் பிற அறிவியல் சங்கங்கள் மக்கள்தொகை ஆய்வுகளின் அடிப்படையில் உயரத்திற்கு எடையை பரிந்துரைத்துள்ளன.

அதிக எடை மற்றும் உடல் பருமன் பல்வேறு நோய்களுக்கு முக்கிய பங்களிப்பாக உள்ளது என்ற உண்மையை அறிவியல் சான்றுகள் சுட்டிக்காட்டியபடி, அவர்கள் உடல் நிறை குறியீட்டை (பிஎம்ஐ) உருவாக்கினர், இது எடை மற்றும் உயரத்தின் விகிதத்தின் விகிதமாகும்.

பிஎம்ஐ அதிக எடை முதல் பருமனான உடல் பருமன் வரை பல்வேறு நிலைகளை வகைப்படுத்த உதவுகிறது. உங்கள் உயரத்திற்கு ஆரோக்கியமான எடை வரம்பிற்கு இது சிறந்த வழிகாட்டியாகும்.

எடையை குறைப்பது, அதாவது மொத்த எடை, பெரும்பாலான தனிநபர்களின் கவனம். எதிர்மறை கலோரி சமநிலையை அடையும் அளவிற்கு உங்கள் உணவு உட்கொள்ளலை கட்டுப்படுத்தும் போது, நீங்கள் எடை இழக்க நேரிடும் என்பதே அடிப்படைக் கருத்து. இங்கே பயன்படுத்தப்படும், இது வாரத்திற்கு 0.5 கிலோ ஆரோக்கியமான எடை இழப்பை அடைய தேவையான அளவு. உங்கள் உணவில் இருந்து 200300 கிலோகலோரி மற்றும் உடற்பயிற்சி மூலம் மற்றொரு 200300 கிலோகலோரி குறைப்பதன் மூலம் இந்த எதிர்மறை சமநிலையை உருவாக்க முடியும்.



# இயற்கை அழகை மேம்படுத்த




இயற்கையான அழகை மேம்படுத்துவதற்கு சில எளிய வழிகளை கடைப்பிடித்தால் போதும். அதற்கு இந்த வழிமுறைகளைப் பின்பற்றிப் பாருங்கள்.

நல்ல உணவுப் பழக்கம்: தினசரி உணவில் பழங்கள் மற்றும் காய்கறிகளை சேர்த்துக் கொள்ளுங்கள். ஆளி விதை, அக்ரூட் பருப்பு போன்ற ஒமேகா3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகள் மற்றும் ஆரஞ்சு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, பூசணி போன்ற வைட்டமின்கள் நிறைந்த உணவுகள் அவசியம். முட்டை, கோழிக்கறி, கிட்னி பீன்ஸ், பருப்பு, கொண்டைக்கடலை மற்றும் பாலாடைக்கட்டி போன்ற புரதச்சத்து அதிகம் உள்ள உணவுகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.குறைந்த பட்சம் எட்டு டம்ளர் தண்ணீர் குடிப்பது, உடலில் இருந்து நச்சுப் பொருட்களை வெளியேற்ற உதவும். நிம்மதியான தூக்கம்: இரவில் நல்ல தூக்கம் முக்கியமானது. தூங்கும்போது தோல் புதிய கொலாஜனை உற்பத்தி செய்கிறது. உங்கள் செல்போனை சார்ஜ் செய்வது போல், உடல் தானாகவே சார்ஜ் செய்ய வேண்டும். இதற்கு நல்ல உறக்கம் அவசியம். இதன் மூலம் கண்களுக்குக் கீழே உள்ள கருவளையங்கள் மறையும்.

பயன்படுத்தும் பொருட்கள்: நீங்கள் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்களில் 60 சதவீதத்தை உங்கள் சருமம் உறிஞ்சிக் கொள்கிறது. எனவே சருமப் பராமரிப்பு, முடிப் பராமரிப்புக்குப் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள், இயற்கையான மூலப் பொருட்களைக் கொண்டவையாக இருப்பது நல்லது.

சருமத்தில் எரிச்சலை ஏற்படுத்தக் கூடிய அல்லது தலைமுடியை உலர வைக்கும் பாரபென்கள், பெட்ரோகெமிக்கல்கள் மற்றும் சல்பேட்டுகள் உள்ள பொருட்களில் இருந்து விலகி இருங்கள். இயற்கை பொருட்களைக் கொண்ட தயாரிப்புகளைப் பயன்படுத்துவது நல்லது. இது ரத்த ஓட்டத்தை மேம்படுத்தும், நச்சுகளை அகற்றும், சருமத்திற்கு வழங்கப்படும் ஆக்ஸிஜனின் அளவை அதிகரிக்கும், மன அழுத்தத்தைக் குறைக்கும். முழு உடலையும் அமைதிப்படுத்தும் எண்டோர்பின்களைத் தூண்டும்






# களுத்துறையில் புத்தாண்டு விழா












களுத்துறை இந்து இளைஞர் மன்றம், இந்து மகளிர் அணி, இந்து இளைஞர் மன்ற அறநெறி பாடசாலை மற்றும் களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய நிர்வாக சபையினர் இணைந்து முதல் முறையாக ஏற்பாடு செய்த மாபெரும் சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழா கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை களுத்துறை வெட்டுமங்கட பாகிஸ்தான் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவாகமரத்னம், கிரியாக்ரம ஜோதி, ஈசான்ய சிவாச்சாரியார், கலாநிதி சிவஸ்ரீ சிவம் ஸ்ரீ சுதர்ஷன குருக்கள் தலைமையில் அவரது பூரண ஆசிர்வாதத்துடனும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின், தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை ஊடக அனுசரணையுடனும் இவ்விழா இனிதே நடைபெற்றது. இவ் விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக ஹாசிம் உமர் மன்றத் தலைவர் புரவலர் ஹாசிம் உமரும் கௌரவ அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவரும் கலந்து கொண்டார்கள். தம்ரிவி அமைப்பின் தலைவர், தேசமான்ய, வைத்தியர் ஷோபாத் விஜேரத்ன விசேட அதிதியாகவும் சிறப்பு அதிதிகளாக பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளுக்கு பெறுமதியான பல பரிசில்களை வழங்கி சிறப்பித்தனர்.

களுத்துறை சுழற்சி நிருபர் நா. ஜெயரட்ணம





இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அண்மையில் நடைபெற்ற மதுர கீதங்கள் 07வது இசை நிகழ்ச்சியின் போது அதனை ஏற்பாடு மற்றும் நெறியாள்கை செய்த பிரபல இசையமைப்பாளர், இ.ஒ. கூ ஆலோசகர் விசாரத கலாபூஷணம் A மகேந்திரனால், ஜனரஞ்சக பாடகர், எழுத்தாளர் கலைக்கமல் சிறப்பு விருதும், தங்க நாணய பரிசும் வழக்கி கௌரவிக்கப்பட்டார்.


படம் : சுதத் மலவீர, மொஹமட் நசார்



## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## இடைவெளி நிரப்புங்கள்

அ ஆ இ ஈ



___ ம்மா



___ மை



___ லை



___


## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்







## தொடர்புபடுத்துங்கள்



ஒன்று

மூன்று

இரண்டு

ஐந்து

நான்கு





# 32 வருட காலம் எழுத்து துறையில் இருந்தும் இன்னும் ஒரு நூலையாவது வெளியிடமுடியவில்லை

## எழுத்தாளர் புத்தளம் சாலிஹ் அஸீம்

ஈழத்து இலக்கியப் பரப்பில் எழுத்தாளராக, கவிஞராக கவிதை, கதை, நாவல், சிந்தனைத்துணுக்குகள், நாடகம், ஊடுறுவல், பாடலாக்கம் எனப் பல்வேறு கோணங்களில் இலத்திரனியல், அச்சு ஊடகங்களுக்கு எழுதி வருகிறார் புத்தளம் சாலிஹ் அஸீம். இவர் தொடர்பான நேர்காணல் இது.

**கே: ஈழத்து இலக்கியப் பரப்பில் எழுத்தாளராக, கவிஞராக நன்கு அறியப்பட்ட நீங்கள், உங்கள் குடும்ப நிலை, கல்வி பற்றி சொல்வீர்களா?**

வந்தாரை வாழவைக்கும் உப்பளமும் தென்னை வளமும் வயல் நிலமும் அனல் மின் நிலையம் போன்றவற்றை தன்னகத்தே கொண்ட, புத்தளம் நகரில் முஹம்மது ஸாலிஹ் பவுசுல் ஹினாயா தம்பதிகளின் ஆறு பிள்ளைகளில் இரண்டாவதாக பிறந்தவன் நான். என்னுடைய கல்வியை புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலையில் கற்றேன். எனக்கு ஒரு மகன் (அஸாம்) உள்ளார்.

**கே: அச்சு, இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஆக்கங்கள் எழுத வேண்டுமெனும் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது..? உங்களுக்கு ஊக்கம் தந்தவர்கள் யார்..?**

1990 களில் நான் படித்துக் கொண்டிருந்த போது அப்போது நம் நாட்டில் யுத்தம் நடந்துக் கொண்டிருந்த காலப்பகுதி. இதனால் யுத்தத்தின் பாதிப்பு என் மனதை ஆட்கொண்டு இருந்தது. அதனை கவியாகவும், கதையாகவும் எழுதிக் கொண்டிருந்தப் போது எனது தந்தையின் நண்பர் தபாலகத்தில் கடமையாற்றிய தர்வேஸ் என்பவர் அவ்வாக்கங்களை பத்திரிகைக்கு அனுப்புமாறு ஆலோசனை வழங்கினார். அதன்படி அனுப்பிய போதும் அவை உடனே பிரசுரமாகவில்லை. காலப்போக்கிலேயே படிப்படியாக பிரசுராமகத் தொடங்கி எல்லா பத்திரிகை, சஞ்சிகைகள், வானொலி என்று சிறுகதை, கவிதை, கட்டுரை, தொடர்கதை, உருவகம், நகைச்சுவை துணுக்கு, செய்தி என்று எல்லா பரிணாமங்களிலும் எழுதத் தொடங்கினேன். புரட்சி, சோகம் நிறைந்ததாகவே அவை அமைந்தன. அது சில விமர்சனங்களுக்கு உள்ளாகினாலும் அவைதான் இன்று வரை தொடர்கிறது.



கிடைத்த விருதுகளில்; சில

**கே: முதன் முதல் பத்திரிகையில் பிரசுரமான ஆக்கம் எது..? அப்போது உங்களது மனநிலை எவ்வாறு காணப்பட்டது.?**

பல ஆக்கம் எழுதிய போதும் என்னுடைய முதல் ஆக்கமாக பிரசுரமானது நகைச்சுவை துணுக்கு இரண்டு (1992இல்) அதற்கு பிறகுதான் மற்றவை பிரசுரமானது. அப்போது எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அது மாத்திரமில்லாமல் மனதுக்குள் புதிய நம்பிக்கையும் உருவானது.

**கே: போட்டியில் வெற்றி பெற்றும் ஏமாற்றமடைந்த நாட்களுண்டா..? அதுபற்றி வாசகர்களுடன் பகிர்ந்தளியுங்கள்..?**

நிறைய உண்டு. பல போட்டிகளில் வெற்றி பெற்றும் பரிசில்களோ, சான்றிதழ்களோ இன்றுவரை கிடைக்காத பல சம்பவம் உண்டு. அதிலும் 2019இல் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற பொன் குஞ்சு என்னும் சிறுவர் கதை புத்தகம் வடிவில் அச்சாகும் என்று ஒப்பந்தம் செய்தும் இன்றுவரை அது வெளிவரவும் இல்லை. பரிசு கிடைக்கவும் இல்லை. அது மிகவும் மன வேதனையை தந்தது.

அண்மையில் 2022 மற்றும் 2023 ஆகிய வருடத்திற்கான நூலாக்கத்திற்கான மாகாண மட்டப் போட்டிகள் அறிவித்தும் கடைசி நேரத்தில் போட்டி இரத்தாகி விட்டது. காலம், பணம், சிந்தனையை செலவழித்தும் பயனற்று போனது இது மிகவும் வேதனையானது.

**கே: எவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆக்கங்களை எழுதுவீர்கள்..? யாருடைய க(வி)தைகளை விரும்பி வாசிப்பீர்கள்..?**

மனதை பாதிக்கும் சம்பவம் நடக்கும் போதும் கேள்விபடும் போதும் மனதுக்கு கஷ்டமான நேரங்களிலும் எழுதுவேன். நல்ல கவிதைகள் யாருடையாதாக இருந்தாலும் அவற்றை வாசிப்பேன், ரசிப்பேன்.

**கே: சிறுகதை பலராலும் எழுதப்படுகின்றன. நாவல் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரால் மட்டுமே எழுதப்படுகின்றன. இது பற்றி உங்களபிப்பிராயம் என்ன..?**

உண்மைதான். கவிதை சில வரிகள் என்பதால் அதனை பலர் எழுதுகின்றனர். ஆனால் சிறுகதை கொஞ்சம் அதிகம் எழுத வேண்டி இருப்பதால் அதனை எழுதுகிறவர்களும் குறைவு. அதிலும் நாவல் என்றால் சொல்லவும் வேண்டுமா மிகவும் குறைவு. அதற்கு இன்னொரு காரணம் அதற்கான சரியான ஊக்குவிப்பும், களமும் இல்லை. அதனோடு அதற்கான வாசகர்களும் மிகவும் குறைவு.

**கே: சிறு கதைக்கும், தொடர் கதைக்குமுள்ள வேறுபாட்டை எவ்வாறு நோக்குகிறீர்கள்..?**

சிறுகதை ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லும். தொடர்கதை பல சம்பவம் நிறைந்த கதை கருவை கொண்டிருக்கும். இரண்டும் ரசிக்கத்தக்க தகவலை உணர்த்த கூடிய களமே.



**கே: இதுவரை எத்தனை நூல்கள் வெளியிட்டுள்ளீர்கள்..? அப்போது எதிர் நோக்கிய சவால்கள் எவை..?**

கவலைக்குரிய விடயம். கிட்டத்தட்ட 32 வருட காலம் எழுத்து துறையில் ஒரு நூலையாவது நான் வெளியிடவில்லை. அது என் எழுத்து துறையில் நான் சந்தித்த மிகப்பெரிய தோல்வியாகும். உண்மையில் அது ஒரு கவலையான விடயமும்தான்.

சிலர் சில அமைப்புகள் தாம் போட்டி நாடாத்தி வெற்றி பெரும் நூல்களை அச்சிட்டு தருவதாக சொல்லி பின் நாம் அதற்கு சிரமப்பட்டு செலவிட்டு செய்து அனுப்பினாலும் தமக்கு வேண்டியவர்களின் நூலை தேர்ந்தெடுத்து விட்டு நம்முடையதை குப்பையில் போட்டு விடுகிறார்கள். அவர்களுக்கு நமது சிரமம் தெரிவதில்லை.

இப்போதெல்லாம் பணத்திற்கும் காக்காப்பிடிப்பவர்க்கும்தான் காலம் என்றாகி விட்டது. என்ன செய்வது நாம் நேர்மையாக சாதிக்க நினைக்கிறோம். சோதிக்க படுகிறோம். பரவாயில்லை. பார்ப்போம். முடியும் வரை போராடிக் கொண்டே இருப்போம்.

**கே: எழுத்துத் துறையை நேசிக்கும் வாசகர்களுக்கு நீங்கள்கூறும் ஆலோசனைகள் என்ன..?**

முடியும் வரை எழுதுங்கள். இன்னும் புதியவர்களையும் எழுதத் தூண்டுங்கள். நல்ல மாற்றத்திற்காக உங்கள் எழுத்தை விதையுங்கள். புகழுக்காக, பணத்திற்காக இந்த அற்புத ஆற்றலை அடகு வைக்காதீர்கள உங்கள் எழுத்துக்களால் நல்லது ஒன்று உயிர் பெரும் என்றால் அதற்காக திருப்தி அடைந்து கொள்ளுங்கள்.

ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்
(கிண்ணியா)

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# சிங்கார நினைவு 9

முல்லையின் சிங்கார நினைவுகளில் நிற்பவர் தீபன்;. இலக்கியத்தின் தீப ஒளி பாய்ச்சும் ஆர்வலர்; முல்லையின் இலக்கிய இயங்கி முல்லைத்தீபன்.

முல்லைத்தீபன் 'என் மனசின் வரைபடம்' மற்றும் 'எஞ்சியிருக்கும் சிறகுகளால் பறத்தல்' வெளியீட்டு நிகழ்வில் கவிதை பாடினார். ஓசைத் தமிழின் குரல்காரன்;ள ஆழக்கருத்தை அழகு தமிழில் பொழிய வல்ல செதுக்கல்காரன்.

முல்லைத்தீபன், முல்லையில் பிறந்தவர். கலை இலக்கியத்தில் ஊறி தான்;படிக்கும் காலத்திலேயே துடிப்புற எழுந்த கலை ஆர்வலன்; ஆசிரியனாய் பணி செய்பவர். பிரதேச, மாவட்ட கலாசாரப் பண்பாட்டுப் பேரவையில் செயற்படுகிறார்.

கலை இலக்கிய விழாக்களைத் தன் தமிழால் நிரப்புகிறார். கூத்து, நாடகம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், கவியரங்கமென பிரதேசத்தில் கலை இலக்கியப் புத்துயிர்ப்புக்கு வேராகி நிற்கிறார்.

பேச வல்ல பண்பட்ட நண்பர் தீபன். மாவட்டக் கவி சொல்லிகளின் கவிதைத் தொகுப்பை வெளிக்கொணர்ந்தவர். அதன் வெளியீட்டு விழாவிற்கு என்னை அழைத்துக் கௌரவித்தார். தமிழ் முஸ்லிம் உறவின் பாலமாக கலையும் இலக்கியமும் அமையுமென நம்மைப்போல் நம்புபவர் முல்லைத்தீபன்.

நம்பி(க்)கை இவரது முதல் பனுவல். கடவுளிடம் சில கேள்விகள் என்ற பனுவல் அதிகம் சிலாகிக்கப்பட்டது. பழைமையான இலக்கியக் கூறுகளில் நாட்டம் கொண்ட தீபன் புதியன படைத்தலிலும் தன் ஆளுமையைப் பாய்ச்சுபவர்.

முல்லைத்தீவில் கலை இலக்கிய செயற்பாட்டாளர்கள் அரிதாகவுள்ள சூழலில் அல்லது வெளிச்சமிடப்படாத இருன்மை நிலையில் ஒருங்கிணைப்புச் சிந்தனையை மேலெடுப்பவர். இதனூடாக ஆரோக்கியமான கலை இலக்கியச் சூழலை உருவாக்குவதில் மிகுந்த உழைப்புக் கொண்டவர் தீபன்.

தமிழாசானாகவும் இருக்கிற தீபன் இளஞ் சந்ததியை உருவாக்குவதிலும் தன் உழைப்பை வழங்குகிறார். எதிர்காலத்தில் முல்லைத்தீவிலும் இலக்கியச்சுடர் பிரகாசிக்கும் போது நிச்சயம் தீபனின் ஒளியுமிருக்கும்.

முல்லையின் சிங்கார நினைவுகளில் தீபமேற்றுவோம் நண்ப.

மனஓசை

முல்லை முஸ்ரிபா

# புத்தகத்தைக் கொண்டாடுதல்

புத்தக உலகு எந்த நூற்றாண்டிலும் கொண்டாடப்பட வேண்டிய பொக்கிஷம். தமிழில் புத்தகத் திரு விழா ஈழத்தில் பேரளவில் கொண்டாடப்படுவது பல்வேறு அசாத்தியங்கள் நிறைந்த சூழலில் வடக்கிலும் கிழக்கிலும் என புத்தகத் திருவிழாக் கலாசாரம் கட்டமைவது பாராட்டுதலுக்குரியதே.

தமிழில் வாசிப்பாற்றுப்படையொன்றின் தேவை காத்திரமாக உணரப்படும் பின்புலத்தில் புத்தக உலகு வியாபிப்பது மிகுந்த கவனிப்புக்குரியது.

இந்தப் பின்புலத்தில் ஏறாவூர் புத்தகக் கண்காட்சி கவர்ச்சி பெறுகிறது.

புத்தகங்களை விற்பது வாங்குவது என்பதற்கப்பால் புத்தக வெளியீடு, இலக்கியக் கதையாடல், ஆளுமைகளின் அனுபவப்பகிர்வுகள், கலை நிகழ்தல்கள், பண்பாட்டு அரங்கங்கள், பல்லின கலாசார நிகழ்வுகள், திரையிடுதல், தமிழ் சிங்கள இலக்கியங்கள், சினிமாக்கள், கலைகள், நாடகம், ஓவியப் புகைப்படக் கண்காட்சிகள், பெண்கள் நிகழ்வுகள், ஆய்வரங்குகள், சிறுவர் கொண்டாட்டங்கள், புத்தக வெளியீடுகள், புத்தக அறிமுகங்களென படைப்பாளர்களைக் கிளர்ச்சியூட்டுவதாக ஏறாவூரில் நிகழ்வுறுகிறது. ஏறாவூர் வசிப்பு வட்டமும் நகரசபையும் இணைந்து நடாத்தும் இக்கொண்டாட்டாட்டம் வாவிக்கரையோரம் டொக்ரர் அஹமட் பரீட் விளையாட்டு மைதானத்தில் நிகழ்கிறது.

உயிர்ப்பான கலை இலக்கியச் செயற்பா




டுகளுக்கும், புத்தகப் பரிமாறலுக்குமான உந்தல் தளமாக இத்தகைய கண்காட்சி அமர்வுகள் அமைகின்றன.

இம்முறை தமிழகத்திலிருந்து பேரறிஞர், இயற்பியல் பேராசிரியர் அ.மார்க்ஸ் வந்திருக்கிறார். டானியல் குறித்த நூலும் வெளிவருகிறது.

மார்க்ஸ் எனும் ஆளுமையுடனான அனுபவப் பகிர்வு நிச்சயம் ஏறாவூர் புத்தகக் கண்காட்சியை மேலும் மெருகூட்டுமென நம்பலாம்.

முல்லை முஸ்ரிபாவின் மண் நிறத்தவன் கவிதை வெளியீடும் நிகழ்கிறது. நெற்றி மண் விருதுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இணைகிறது.

## காலத்துயர்

மெருகூட்டப்பட்ட இரவுகளில்
பெரு மகிழ்ச்சி பூப்பதாக
தெருவெங்கும் தோரணத்தையெழுதி வைத்தவரெவர்
கருமிருளின் கனம் தெறித்த பகலின்
வலியைச் சுமந்தலையும் காற்றிடமொரு
கூற்றுரைப்பவன் எவன்
முகங்கள் மூன்றுகோடி நிறங்களின் கனவில்
பொசுங்கிச் சுருண்டதாய்ச் சொல்லி வைப்பவர்
யார்
மெருகூட்டப்படாத இரவுகளின் ஓலம்
நூற்றாண்டுகளாக பகலில் கேட்கிறது
எவர் குரல்
எவர் வசம்
இழப்புகள் மீது படர்கிறது
காலத்தின் மீத்துயர்
அன்றேல்
மீத்துயரின் காலம்



ஒளவன் கவிதை

# பெயின்ட் மாஸ்டர்

பெயின்ட் மாஸ்டர் என்று பொதுவாக அழைக்கப்பட்டாலும் அவனுக்கொரு அழகான பெயரிருக்கிறது. அற்புதம். அன்றைக்கும் பெயின்ட் வாளியுடனும் றோல் பிரசுடனும் தான் சுவர் மீது பொழுதை வரையத் தொடங்கினான்.

ஆள் ஆறடி ஆறு இச்சி உயரம். ஆள் அடிக்கடி நிறம் மாறுபவன்; நிறம் மாற்றுபவன்; வெளிப்பார்வைக்கு அழகூட்டி கலர்மிக்ஸ்காரன்.

காறைபடிந்த பழைய சுவரைப் புதிதாக்கும் பொறுப்பு வழங்கப்பட்டு இருபத்து ரெண்டு மணித்தியாலம் தான். பழைய பெயின்ட் மாஸ்டர்மார் பலர் வேலை பார்த்த நெடுஞ்சுவரது மாறி மாறிக் கலரடிப்பதில் பெயின்ட மாஸ்டர்மாரின் உள்ளங்கையில் அப்பிய நிறத்தைச் சுரண்ட வேண்டிய கடினமிருக்கவில்லை. வேற வேற கலரில் புதிய கலர்க் காரர்களாய் ஆகிப்போன காலம் அற்புதனுக்குத் தெரியாமலில்லை. அவன் அதன் தொடர்ச்சி அவ்வளவு தான்.

சுவர் பழசு இடிந்து விழுந்திடும்; அத்திவாரமும் ஆட்டங்காணத் தொடங்கிற்று; வெயில் கடும் வெயில்; மழை கடும்மழையெண்டு எல்லாந்தாங்கின சுவரிது பவளவிழாவும் கண்டதாக சுவரில் ஒரு போஸ்டருமிருந்தது.

சுவரின் வெட்டுமுகத்தில் நுழைந்து பார்த்தான் அற்புதம். உள்ளேயிருந்து இரண்டேகால்கோடி முகங்கள் தெரியவில்லை, முகமூடிகளே தெரிந்திருக்க வேணும்.

பெயின்ட் மாஸ்டர் கலர்க்கண்ணாடி போடுபவன் என்பது விஷேட பண்பு. வேறு பல பண்புகள் இவ்விடத்தில் குறிப்பிடப்படவில்லை அல்லது பொருத்தமின்மை கருதித் தவிர்க்கப்படுகிறது.

பெயின்ட் மாஸ்டர் பற்றிய பல செய்திகள் முன்னம் எழுதிய பழைய புத்தகமொன்றில் கிடந்ததை தூசி தட்டி வாசித்துப் பார்த்ததில் கீழ் வரும் குறிப்புகள் தொகுக்கப்பட்டதாக மேலுமொரு பெனர் சுவரின் நடுப்பகுதியில் தொங்கிக் கொண்டிருந்தது. அது காற்றடித்த பக்கம் சாய்ந்து கொண்டும் உரசிக்கொண்டுமிருந்ததை கண்டவர்கள் யாருமில்லையென்று கூறமுடியாது; கூறாதவர்கள் வேண்டுமென்றால் இருக்கலாம். சரி இனி குறிப்புக்களுக்கு வருவோம்.

1) இந்தச்சுவரில் மிகுந்த அக்கறையுடைய பெயின்ட் மாஸ்டர்ஸ் பலர் இருந்துள்ளனர்.

2) இந்தப் பெயின்ட் மாஸ்டர் பிறவியிலேயே பெயின்ட் அடிப்பதில் ஊறிப் போனவர்.

3) முன்னமிருந்த பெயின்டர்ஸ் பற்றி எந்தக்கலவையில் எந்த பிரசில் தோய்ந்து அடித்தனர் என்பது பற்றிய கவலை இவருக்கில்லை.

4) சுவரை அல்லது அதன் பாதியை அல்லது அதன் அகவுருவை விற்றவர் பற்றியோ அல்லது சுரண்டியவர் பற்றியோ கவலை கிடையாது.

5) புதிய பெயின்ட் வாளி, புதுவகை பெயின்ட், புதிய பூச்சு முறையென்று ஒரு வகைமாதிரி மாஸ்டரிடம் உண்டு.

மாஸ்டர் எப்படி மெயின் பாஸாய் வந்தார் என்பது பற்றிய குறிப்புகள் அழிந்து அல்லது விளக்கமற்றுக் காணப்பட்டன.

பொதுவாக பெயின்ட் மாஸ்டர் சுவரில்லாமலேயே சித்திரம் வரையக்கூடிய வல்லபம் மிகுந்தவரென பலரும் பேசிய செய்திகள் காற்றெங்கும் நிரம்பி வழிந்தது. இன்னும் இரண்டரை தசாப்தத்தில் சுவரை மட்டுமல்ல சுவருக்குள் உறைந்து கிடக்கும் கோடி முகங்களையும் புதிய வர்ணத்தில் மாற்றிவிடும் தனது விஷனை பெயின்ட் மாஸ்டர் வரையத் தொடங்கியிருக்கிறாரோ என்று பலரும் சந்தேகிக்கலாம்.

பொன்மீரா...

# இந்திய சினிமாவில் முத்திரை பதித்த முகத்திரை



வாழ்க்கையில் சாதிக்கத் துடிக்கும் ஒவ்வொருவருக்கும் சிலரது வாழ்க்கை பாடமாக அமையும்.. அப்படி சினிமாவில் ஒவ்வொருவருக்கும் பாடமாக விளங்குவது சத்யஜித் ரே வாழ்க்கை. சத்யஜித் ரே ஓர் ஓவியர், எழுத்தாளர், இசை அமைப்பாளர், இயக்குநர், தயாரிப்பாளர் என ஏகப்பட்ட முகம் கொண்ட சகலகலா வல்லவராக விளங்கியவர்.

சர்வதேச அளவில் சிறந்த இயக்குநராக தன்னை வெளிப்படுத்தி, உலகளவில் சிறந்த படங்கள் மற்றும் திரைப்படக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் புகழ்பெற்ற ஆஸ்கார் விருதை இந்தியாவுக்குப் பெற்றுத்தந்த முதல் இண்டியன் கிரியேட்டர்.

இவருடைய படைப்புகளான 'பதேர் பாஞ்சாலி', 'அபராஜிதோ', 'அபுர் சன்ஸார்' போன்றவை உலகப் புகழ்பெற்ற திரைப்படங்களாக அமைந்தன. இந்தியாவின் உயரிய விருதுகளான "பாரத் ரத்னா", "பத்ம ஸ்ரீ", "பத்ம பூஷன்", "பத்ம விபூஷன்" என மேலும் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

1921ம் ஆண்டு மே மாதம் 2ம் நாள் சுகுமார் ராய் சுமத்ரா தம்பதியினருக்கு மகனாக சத்யஜித் ரே பிறந்தார்.மிகச் சிறுவயதிலேயே தந்தையை இழந்த சத்யஜித் ரே தனது தாய்மாமன் அரவணைப்பில் வளர்ந்தார். கல்கத்தா நகரில் உள்ள மாநிலக் கல்லூரியில் இளங்கலை பொருளாதாரப் பட்டம் பெற்ற ரே சாந்திநிகேதன் பல்கலைக்கழகத்தில் ஓவியம், வரைகலை, வண்ணம் தீட்டுதல், சிலை செதுக்குதல் ஆகிய கலைகளைக் கற்றுக்கொண்டார்.

ஒரு பிரிட்டிஷ் விளம்பர நிறுவனத்தில் பணியாற்றத் தொடங்கிய ரே பின்னர் பதிப்பகம் ஒன்றில் புத்தகங்களின் அட்டை வடிவமைப்பாளராகப் பொறுப்பேற்றார். ஜிம் கார்பட் எழுதிய புத்தகங்கள், ஜவாஹர்லால் நேரு எழுதிய இந்தியாவைக் கண்டுணர்தல் (Discovery of India) போன்ற புத்தகங்களின் அட்டைப்படங்களை வடிவமைத்தார். அப்போதுதான் . இத்தாலி நாட்டுத் தயாரிப்பான 'சைக்கிள் திருடன்' என்ற திரைப்படம்தான், ரேயின் வாழ்க்கையையே மாற்றியது. ` `சைக்கிள் திருடன்'போல வாழ்க்கையில் ஒரு திரைப்படமாவது எடுத்துவிட வேண்டும்' என்ற இலக்கோடு இந்தியா திரும்பினார் ரே.

பிரபல வங்க எழுத்தாளர் விபுதி பூஷண் பந்தியோபதெயே எழுதிய 'பதேர் பாஞ்சாலி' என்ற கதையை விலைக்கு வாங்கினார். அதைப் படமாக்குவதற்காக ரே பட்டபாடு கொஞ்சநஞ்சம் அல்ல. எந்தத் தயாரிப்பாளரும் அவரது முயற்சிக்கு ஆதரவு தரவில்லை; பலர் கேலிசெய்தர். மனம் தளராத ரே, தன் நண்பர்களிடம் 15,000 ரூபாய் கடன் வாங்கி கனு பானர்ஜி, கருணா பானர்ஜி, சுபிர் பானர்ஜி, உமா தாஸ் குப்தா, சன்னிபாலா தேவி, ரேபா தேவி போன்ற கவனம் பெறாத நடிகர்களைக்கொண்டு படப்பிடிப்பைத் தொடங்கினார்.

அரைகுறையாகத் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தைப் பார்த்த பிரபல ஹாலிவுட் இயக்குநர் ஜான் ஹஸ்டன், `இந்தப் படம் நிச்சயம் வரலாற்றில் இடம் பிடிக்கும்' எனக் கூறி, நிதி உதவி செய்தார். வங்க அமைச்சர் பி.சி.ராய், படத்தின் உரிமையைப் பெற்றுக் கொள்வதாகக் கூறி, ஒன்றரை லட்சம் ரூபாய் வழங்கினார்.

1952ம் ஆண்டில் தொடங்கப்பட்ட 'பதேர் பாஞ்சாலி', 1955ம் ஆண்டில் பல்வேறு இன்னல்களுக்கிடையே முடிவடைந்தது. ஆனால், எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. ஆயினும், திரைத் துறை, எழுத்துத் துறை சார்ந்த பல ஆளுமைகள் ரேயின் முயற்சியைப் பாராட்டினர் . ஹாலிவுட் இயக்குநர் ஜான் ஹஸ்டன் ஏற்பாட்டில் அமெரிக்காவில் உள்ள 'இந்தியப் பொருட்காட்சிச் சாலை' யில் படம் திரையிடப்பட்டது. படத்தைப் பார்த்த அமெரிக்கர்கள், ரேயைக் கொண்டாடினர். கேன்ஸ் திரைப்பட விழா, சான்ஃப்ரான்சிஸ்கோ திரைப்பட விழா உள்ளிட்ட பல உலகப் பட விழாக்களில் `பதேர் பாஞ்சாலி' திரையிடப்பட்டு விருதுகளைக் குவித்தது. குறிப்பாக, கேன்ஸ் திரைப்பட விழாவில் `மனித வாழ்வின் நிறங்களை ஆவணப் படுத்தியுள்ள சிறந்த படைப்பு' என அறிவித்து விருது வழங்கப்பட்டது. இந்தப் படம் நியூயார்க் நகரில் உள்ள ஒரு திரையரங்கில் ஒன்பது மாதங்கள் தொடர்ந்து ஓடி, புதிய சாதனையைப் பதிவுசெய்தது.

திரைப்படங்களைத் தாண்டி, வங்காள மொழியின் சிறுவர் இலக்கியத்திற்கும் ரே பெரும் பங்காற்றியுள்ளார். ப்ரொதோஷ் சந்திரா மித்ரா என்ற துப்பறிவாளர், பேராசிரியர் ஷான்கோ என்ற அறிவியலாளர் என்ற பாத்திரங்களை உருவாக்கி பல சிறுவர் கதைகளையும் இவர் எழுதி உள்ளார். வங்காள மொழியில் எழுத்துருவங்களை உருவாக்குவதிலும் ரே தலைசிறந்து விளங்கினார்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் திரைப்படத்துறையில் ரேயின் பங்களிப்புக்காக இந்திய அரசு இவருக்கு பாரத்ரத்னா விருது வழங்கி கௌரவித்தது. வாழ்நாள் சாதனையாளர் என்று இவருக்கு ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது. லண்டன் பல்கலைக்கழகமும், டெல்லிப் பல்கலைக்கழகமும் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கின. இதுபோக இந்திய அரசின் திரைப்பட விருதுகளும், உலக அளவின் சிறந்த சினிமாவுக்கான பல்வேறு விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஒரு வார்த்தையில் சொல்வதானால் உலகளவில் இந்திய சினிமாவின் முகம் சத்யஜித் ரே என்றால் அது மிகையல்ல.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

## மெதகெகில ஸ்ரேன்ஜர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் மாபெரும் கிரிக்கெட் திருவிழா - 2023











தெல்தோட்டை, மெதகெகில ஸ்ரேன்ஜர்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் வருடாந்தம் நோன்பு பெருநாளை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற கழக உறுப்பினர்களுக்கு இடையிலான MPL 2023 கிரிக்கெட் தொடர் இம்முறையும் மெதகெகில ஸ்ரேன்ஜர்ஸ் விளையாட்டுக் கழக பொது மைதானத்தில் கடந்த 23 மற்றும் 24ம் திகதிகளில் இடம்பெற்றது. லீக் முறையில் இடம்பெற்ற இந்த கிரிக்கெட் தொடரில் சம்பியனாக மனாப்பின் தலைமையிலான ரோயல் செலேன்ஜர்ஸ் அணி பெற்றுக்கொண்டது. இரண்டாம் இடத்தை சிபான் தலைமையிலான நைட் ரைடர்ஸ் அணி சுவீகரித்துக் கொண்டது. இந்த தொடரில் சிறந்த துடுப்பாட்ட வீரராக ரெட் பெக்ஸ் அணியின் தலைவர் சியாம் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த பந்து வீச்சாளராக வெஸ்டர்ன் வொரியர்ஸ் அணியின் சப்ராத் தெரிவு செய்யப்பட்டார். இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக ரோயல் செலேன்ஜர்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நிப்லான் தெரிவானார்.

(பவாஸ் தகவல் அதிகாரி அரசாங்க தகவல் திணைக்களம்)

ஊடக அனுசரணை
தினகரன்
தினகரன் வாரமஞ்சரி

# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றிய அறநெறி புத்தாண்டு விழா



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன் சனிக்கிழமை மட்டக்குளி, காக்கைதீவு கடற்கரை பூங்காவில் அறநெறி பாடசாலை மாணவ மாணவிகளுக்காக நடத்திய தமிழ், சிங்கள புத்தாண்டு விழா.
(படம்: எம். நஸார்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.